காபுலின் கன்னிகை

18 MAY 1933

காபுலில் நடந்த
ருசிகரமான சம்பவம்

ஆக்கியோன்
மௌலவி அஹ்மத் ஸயீத் சாஹிபு
"ஸைபுல் இஸ்லாம்" ஆசிரியர்

சென்னை

"ஸைபுல் இஸ்லாம்" பிரஸில் அச்சிடப்பட்டது.

செய்தது] 1932 [விலை அணா 10.

0-,3mm3.k
N32
67:66

அயோத்திய குப்ரிஸ்தானில்
ஒரு நற்பாக்கிய ஆத்மா (அல்லது)

சாவித்திரியும் பரிசுத்த குர்ஆன...
தெய்வீக சக்தியும்

இஃதொரு நாவலின் போக்கில் வரையப்...
பினும் இதர மதவாதிகள் இஸ்லாம் மதக்கோட்ப...
திட்டம் ஆபாசம் ஆகியவைகள்மீது எத்துணை...
கேள்விகளைக் கேட்கத் துணிவரோ அத்துணை...
யும் இதில் கேட்கப்பட்டு அக்கேள்விகட்கு புத...
யுக்திக்கும் சுருதிக்கும் ஏற்றவாறு சரியான விடைகள்
அளிக்கப்பட்டு, கேள்வி கேட்டவர்கள் திருப்திய...
ளனர். தமிழ் தெரிந்த ஒவ்வொரு முஸ்லிமும் ...
மற்றோரும் இப்புத்தகத்தை அவசியம் வாங்கிப்...
களேயாயின், ஹிந்து நண்பர்கட்கு இஸ்லாம்மத...
உதிக்கும் எல்லாவித சந்தேகமும் நிவர்த்தி...
முஸ்லிம் சகோதரர்கள் இதை வாசிப்பதின் பய...
மதவாதிகளால் நம் சத்திய இஸ்லாத்தின் ப...
ஆன் கட்டளைகள் மீதும் ஷரீஅத்தின் மீதும் ...
விவாதங்களுக்கு ஆணித்தரமான பதில் கூறி...
திருப்தியடையச் செய்துவிடத் தக்க ஆற்றலை...
விடுவார்கள்.

இதன் கிரயம் ரூ. 1—0—0 வி. பி. சார்...

மானேஜர்:—ஸைபுல் இஸ்லாம் புக்...
47, செம்புதாஸ் தெரு, சென்...

காபுலின் கன்னிகை

காபுலில் நடந்த
ருசிகரமான சம்பவம்

ஆக்கியோன்

மௌலவி அஹ்மத் ஸயீத் சாஹிபு
"ஸைபுல் இஸ்லாம்" ஆசிரியர்

சென்னை.

"ஸைபுல் இஸ்லாம்" பிரஸில் அச்சிடப்பட்டது.

ரிஜிஸ்தர் செய்தது]   1932.   [விலை அணா 10.



ஆப்கானிஸ்தான், குகை, கணவாய்கள் அடர்ந்த மலைப் பிரதேசமென்பதை இப்படத்தால் நன்கறியலாம்.

அத்தேசத்தின் அமைப்பு சுருக்க விவரம் கீழ்வருமாறு:—

அகலம் நீளம் பரப்பு

ஆப்கானிஸ்தானத்தின் அகலம் வடகிழக்கிலிருந்து தென் மேற்கில் 700 மைல். நீளம் ஹீரத்திலிருந்து கைபர் கணவாய் வரை 600 மைல். ஆப்கானிஸ்தானின் பரப்பு 2,45,000 முதல் 2,70,000 சதுர மைல் என்று மதிப்பிடப் படுகின்றது.

ஜனத் தொகை

ஜனத் தொகை 80 லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆப்கானிஸ்தானத்தின் முக்கிய பட்டணங்க்ளில் ஜனத் தொகை பின்வருமாறு:—காபல் 1,00,000 கந்தஹார் 60,000 மிஜாரெ ஷரீப் 46,200 ஹீரத் 1,21,000.

பிரதமப் பாஷை

ஆப்கானிஸ்தானத்தில் வழங்கும் பிரதமப் பாஷை பார்ஸி, புஷ்தோ பாஷைகளாகும். துருக்கிஸ்தான பகுதியிலும் பதக்ஷான் பகுதியிலும் துருக்கி பாஷையும் பேசப்பட்டு வருகிறது.

கல்வி யபிவிருத்தி

ஆப்கானிஸ்தானத்தில் ஹர்பியா காலேஜ் (இராணுவக் கலாசாலே) ஹபீபியா காலேஜ் (பட்டப் பரீட்சைகளுக்குப் போதிக்கும் கலாசாலே) இவ்விரு கலாசாலேகள் தவிர ஆரம்பக் கல்வி பள்ளிக்கூடங்களும், செகண்டரி பாடசாலேகளும் அந்நாடெங்கும் நிறைந்திருக்கின்றன.

ஆப்கானிஸ்தானத்தில் ஆரம்பக் கல்வி, கட்டாயமாகவும் இலவசமாகவும் செய்யப்பட்டிருக்கின்றது.

விவசாயம்

நாட்டில் பெரும்பாகம் மலேப்பிரதேசமாக இருக்கின்றது. தவிர இதர பகுதிகளும் கல்லுங் கரடுமாக இருப்பதுடன் நீர் பாசன வசதிகளில்லாமலும் இருக்கின்றன. நாட்டில் நடைபெறும் விவசாயம் யாவும் கிணறுகளேக் கொண்டும், நாட்டிலுள்ள சிற்சில நதிகளின் ஜலத்தைக் கொண்டுமே தான் நடைபெறுகின்றன. பழ வகைகளும், தானிய வகைகளும், எண்ணெய் வித்துக்களுந்தான் முக்கியமாக விவசாயஞ் செய்யப்படுகின்றன.

விளைபொருள்கள்

கோதுமை, வாற்கோதுமை, பட்டாணி, அரிசி, தினே, சாமையும் விளேகின்றன. பெருங்காயச் செடிகளும் கொட்டை முத்துச் செடிகளும் ஏராளமாக நாட்டில் காணப்படுகின்றன.

மாதுளே, வாதங் கொட்டை, ஆப்பிள், திராட்சை, சீமை அத்தி, அக்ரோட், பிஸ்தா முதலிய பழ வகைகள் நாட்டில் ஏராளம்.

அகலமான தடித்த வால்களுடைய ஆடுகள் ஆப்கானிஸ்தானத்தில் அதிகம். இவ்வாடுகளின் மாமிசம் உணவாகவும், வாலில் இருக்கும் கொழுப்பு நெய்யாகவும், ஆட்டு ரோமம் கம்பளங்களாகவும் மிகப் பிரயோசனப்படுகின்றன.

உலோகங்கள்

வட ஆப்கானிஸ்தானத்தில் செம்பு, ஈயம், இரும்பு முதலிய உலோகங்களும் கோர்பந்து பகுதியிலும் குரித்திலும் காபல் கணவாய் பகுதியிலும் நிலக்கரியும் காணப்படுகின்றது. லுக்மான் மலேப் பகுதியிலும், கூனர்பகுதியிலும் தங்கமும் காணப்படுகின்றது.

கைத்தொழில்

நாட்டின் பிரதமக் கைத்தொழில் கம்பளங்கள் நெய்தல். பட்டு வகைகள் தயார் செய்தல், முதலியவைகளாகும். பூட்ஸ்கள் செய்தல், ஸோப்புகள் செய்தல், துணி வகைகள் நெய்தல் முதலிய கைத்தொழில்சாலேகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இத்தொழில் சாலேகளில் தயாராகும் சாமான்கள் முக்கியமாக இராணுவத்திற்கே செலவாகி விடுகின்றன.

ஏற்றுமதி இறக்குமதி

இந்தியாவிலிருந்து ஆப்கானிஸ்தானத்திற்கு ஏற்றுமதியாகும் சரக்குகள்:—பருத்தி, துணிகள், அவுரிசாயம், இதர சாய வகைகள், சர்க்கரை, இரும்பு சாமான்கள். ஆப்கானிஸ்தானத்திலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதியாகும் சரக்குகள்:—பழ வகைகள், காய்கறிகள், பெருங்காயம், வாசனைத்திரவியங்கள், புகையிலே, பட்டு நினுசுகள், கம்பளங்கள், ஆட்டு உரோமம், தோல், கால் நடை வகைகள்.

மேற்கண்ட விவரம் முன்புள்ள நிலைமையாகும். தற்கால அரசராய்த்திகழும் ஷாஹ் நாதிர்ஷா அவர்களது ஆட்சியில் கல்வி, கைத்தொழில் விவசாயம், இராணுவப் பயிற்சி ஆகாய விமான நிலயம் வியாபாரம் போக்குவரத்து சாதனம் முதலிய சகல துறைகளும் ஏராளமாக அபிவிருத்திச் செய்யப்பட்டு இது காலே ஆப்கன் செழிப்புற்று விளங்குகின்றது.

முன்னுரை

் தேச அரசாங்கத்தை 1929-ம் ஆண்டில் அநீத அதிக்கிரம அட்டூழிய கொடுங்கோலாட் பச்சா ஸக்கூவின் காலத்தில் நடந்த அபூர்வ நாவலின் தோரணையில் இனிய செந்தமிழ் வரையப்பட்டு இதற்கு "காபுலின் கன்னிகை" ம் சூட்டப்பட்டுள்ளது.

கதா நாயகியான சுந்தரி குல்செஹ்றா தன்மட் லங்காத கற்பலங்காரியாய் கற்புடைய காரிகை ழ்ந்ததும், சிகப்பு முகமூடி யணிந்தவனின் வீர ரம அபூர்வசெயல்களும் துப்பறிபவர்களின் சா கஞம் வாசகர்களுக்கு ஆச்சரியத்தையும் ஆனந் ம் உண்டாக்கு மென்பதிலையமில்லை.

இவ்வரிய நூலைப்படிப்பதால் பெண்களுக்கு கற்பே உயர்வையும். கண்ணியத்தையும் கொடுக்கு மென்பதும், அவர்களுக்கு கற்பே உயிர் நிலையாமென்பதும் சத்தியத்திற் குப் பாடுபடும் வீர தீர பராக்கிரமமுள்ள வாலிபர்கள் முடிவில் ஜெயமே அடைவார்களென்பதும், அநீத அட்டூ ழிய கொடுங்கோலாட்சிப் புரிபவன் இறுதியில் நாசமடைந் தேதீருவான் என்பதும் நன்கு விளங்கும்.

இந்நோக்கத்தைக் கொண்டே நாம் இந்நூலை வரைந் துள்ளோம். இதனை வாங்கிப் படித்து பயனடைவார்களாக!

இங்ஙனம்:—

(மௌலவி) அஹ்மத் ஸயீத்,

(ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர்) சென்னை.

அத்தியாயம் நே.	உள்ளடக்கம்	
1.	சிகப்பு முக மூடியணிந்த வாலிபனது வீரச் செயல்	
2.	குல்செஹ்ராவைப் பிடிக்க பச்சா ஸக்கூ முயற்சி	
3.	முக மூடியணிந்த வாலிபன் யார்	
4.	குல்செஹ்ராவின் அன்னையார் விடுதலை	
5.	பச்சா ஸக்கூவின் அட்டகாசம்	
6.	சிகப்புமுகமூடியும் பச்சைமுகமூடியும்	
7.	பச்சா ஸக்கூவின் மூர்க்க சிப்பாய்கள் ஏமாற்றம்	
8.	குல்செஹ்ரா அன்னையார் கொலை .	
9.	சதியாலோசனைக்காரர் சூழ்ச்சி பலிக்கவில்லை	
10.	பச்சா ஸக்கூ மீது வெடிகுண்டு போட முடிவு	86
11.	அஞ்சா நெஞ்சம் படைத்த மாணவன்....	93
12.	பச்சா ஸக்கூ தர்பாரில் பீதி	98
13.	இளஞ்சுந்தரி குல்செஹ்ராவின்வியப்பு....	106
14.	சிகப்பு முகமூடி கைதியானன்	116
15.	பச்சா ஸக்கூவின் ஏமாற்றம்	124
16.	பச்சா ஸக்கூ தர்பாரில் 'துப்பாக்கி வெடி	136
17.	சிகப்பு முக மூடியின் சொல்லொண வெற்றி	146
18.	கொடுங்கோனாட்சி அழிவு	156

காபுலின் கன்னிகை

அத்தியாயம் 1.

சிகப்பு முகமூடியணிந்த வாலிபனது வீரச் செயல்

காபுல் நகரின் ஓர் அழகிய மாளிகையின் இரண்டாவது மேற்றளத்தின் வெளிப்புற தாழ்வாரத்தில், ஆப்கானிஸ்தான் இள நங்கை யொருவள் தன் சந்திரத்தை யொத்த முகார விந்தத்தின் மீது மெல்லிய புர்காவை போர்த்தியவண்ணம் குழம்பிய மனத்தினளாய் அங்குமிங்குமாய் உலாவிக் கொண்டிருந்தாள். பொதுவாய் பார்ப்பதற்கு அவ்விளங்கொடியாள் ஏதோ ஆழ்ந்த யோசனையில் மூழ்கியவளே போலும் காணப்பட்டாள். திடீராய் அவளது கூரிய பார்வையானது அந்நகர் ராஜபாட்டையின் மத்திய பகுதியில் சென்றது. அக்காலை அவள் என்ன கண்டாள்? ஆஜானுபாகுவான கட்டழகுள்ள ஆப்கான் வாலிப வீரனொருவன் உற்சாகமான குதிரை யொன்றின் மீது ஆரோகணித்தவனாய் வெகு விரைவாய் தன் இல்லத்தை நோக்கியே ஓடி வருபவனைக் கண்டு கொண்டாள். புர்கா போட்ட இவ்விளமாது மீண்டும் அந்தக் குதிரை வீரனையே நிமைக்கொட்டாது ஆழ்ந்த உள்ளத்தோடு ஒரு கண நேரம் பார்த்துக் கொண்டு நின்றாள். அதற்குள் அவ் வாலிபன் நங்கையின் வீட்டருகே வந்து தன் அசுவத்தை நிறுத்தி கீழே இறங்கி வாயற்படிக்குள் நுழைந்தான். வெளிக் கதவு கபாடமிட்டிருந்தமையால் கதவை தட்டினான். அடுத்த நிமிஷம் வேலைக்காரி யொருவள் அக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். நம் இவ் வாலிப வீரன் அத்தோழியை நோக்கி "உனது எஜமாட்டி 'குல்செஹ்ரா'

எங்கே இருக்கின்றாள்?" என்று வெகு அவசரத்தே வினவி நின்றான். "அந்த அம்மாள் இம் மாடியின் இரண்டாவது மேற்றளத்தில் இருக்கின்றார்" என்று தோழி பதில் கூறினாள். அவ் வாலிபன் இம் மறு மொழியை செவியிலேற்றுக் கொண்டு வேலைக்காரியின் அனுமதியின்றியே மெத்தைப் படிக்கட்டை ஏறிச் சென்று இரண்டாவது மாடியின் வாயற்படியை அடைந்தான்.

(குல்செஹ்ரா, வென்பது மேன்மாடியின் புர்கா போர்த்திய வண்ணம் வீதியைப் பார்த்து உலாவிக்கொண்டிருந்த கன்னிகையின் பெயராகும். 'குல் செஹ்ரா'வென்பது பார்ஸீ பாஷை பதம். இதன் பொருள் "ரோஜா முகத்தழகி" என்பதாம்.)

வாலிபன் வருகையை மேற்றளத்தினின்று கவனித்த குல்செஹ்ரா கீழே இறங்கி வரத்துணிந்தாள். அதற்குள் அவ்வாலிப வீரனும் தன்னை நோக்கி மேலே விரைவாய் வருவதை கண்டுக் கொண்டாள். வாலிபன் வாயற்படியை கடந்து உள்ளே பிரவேசிக்கவே இளநங்கை சற்றே நாணியவளாய் பின்னிடைந்து சென்றாள். அச்சம் அதிகம் அவளை பிடித்ததால் வேறொரு மார்க்கமாய் ஓடிவிடலாமாவென்றுங் கருதினாள். ஆனால் வீரமுள்ள அந்த ஆப்கன் கன்னிகை அவ்வாறுச் செய்துவிடவில்லை. இவள் அஞ்சுவதை இவளது முகக்குறிப்பால் கண்டுணர்ந்த வாலிபன் நங்கையை நோக்கி, உத்தமீ; பயப்படாதே. நான் உனது சத்துருவல்ல. உனது நேசனே யாவேன், என்று கூறிக்கொண்டே அவ்விடத்தில் கிடந்த ஆசனமொன்றில் அமர்ந்துகொண்டான். குதிரை சவாரிப்புரிந்த பிரயாசையால் அவன் முகத்தில் காணப்பட்ட வியர்வையை துடைத்துக் கொண்டான்.

நிற்க, இவனது விபரீதப்போக்கை யுணர்ந்த இளநங்கையாம் குல்செஹ்ரா, அவ்வீரனை நோக்கி, "நீர் இங்கு

ன் வந்தீர்? எவர் அனுமதியின்பேரில் உள் நுழைந்தீர்?" என்று வினவினள்.

அதற்கவ்வாலிபன், நான் உனக்கொரு ஆப்த நண்பனாக வந்திருக்குங்கால் எனக்கனுமதி ஏன்? நங்காய்! கூடிய சீக்கிரம் உனக்கு நிகழப்போகும் ஒரு பேராபத்தைப்பற்றி உனக்கு முன்னெச்சரிக்கை செய்யவே இங்கு வந்தேன் என்று புகன்றான்.

(இதற்குள் பெண்ணின் தாயும் இருவேலைக்காரிகளும் மேலே வந்து அவ்வாலிபனை சூழ்ந்து நின்றுக்கொண்டனர்.)

குல்செஹ்ரா:—(வாலிபனை நோக்கி) என்ன! ஆபத்தா எனக்கா? என்ன ஆபத்து?

வாலிபன்:—(வாலிபன் சாவதானமாய் வியர்வையை துடைத்துக் கொண்டே) ஆம். உனக்கொரு ஆபத்து நிகழப்போகிறது. அநியாயக்காரனான கொடிய பச்சாஸக்கூ இன்று உன்னை சிறைச்செய்து தனது தர்பாருக்குக் கொண்டு வருமாறு தன் சிப்பாய்களுக்கு கட்டளை யிட்டு விட்டான். இன்னுஞ் சிறிது நேரத்திற்குள் அந்த முரட்டுச் சிப்பாய்களும் நிச்சயமாய் வந்து சேர்ந்து விடுவர்.

குல்செஹ்ரா:—என்னை சிறையிடுவதற்கா? என்ன குற்றத்தை முன்னிட்டு என்னை சிறையிடுவார்கள்?

வாலிபன்:—நீ பல முறை பேசி யிருக்கும் பேச்சுகளிலிருந்து அரசர் காஜி அமானுல்லாகானவர்களை ஆதரித்து அவருக்குடந்தையாக யிருப்பது புலனாகிறதாம்.

குல்செஹ்ரா:—அந்தப் புண்ணிய சீலருக்கு நன்றி செலுத்தி உடந்தையாயிருப்பதும் ஒரு குற்றமா?

வாலிபன்:—ஆம்! நமது இந்த துரதிருஷ்டவசமான காலம் அப்படித்தான் இருக்கிறது. இந்த விபரீத காலப் புரட்சியானது எவனோ ஒரு கொள்ளைக்காரனை காபுல் சிம்மாசனத்துக்கொரு அரசனாய் செய்து விட்டது. அப்ப

டிப்பட்டவன் முன்னிலையில் அமானுல்லாவிற்கு ந௳ செலுத்துவதும் மகா குற்றமாகவே கருதப்படுகிறது.

இளநங்கை குல்செஹ்ரா வாலிபனுடன் இன்னும் ஏதோ விவாதிப்பதற்காக வா யெடுத்தாள். அதற்குள் அவ்வாலிப வீரன் வெகு அவசரத்தோடு எழுந்து வீதி வழியே ஆழ்ந்துநோக்கினன். நங்கையும் அப்புறமே எறிட்டுப் பார்த்தாள். ஆப்கானிய கொடிய மூன்று மூர்க்க சிப்பாய்கள் தாங்களிருக்கும் வீட்டை நோக்கி தம்குதிரைகளை வெகுவேகமாய் ஓட்டிக் கொண்டுவருவதைக் கண்டு கொண்டார்கள். நம் வாலிபவீரன்குல் செஹ்ராவைநோக்கி "மாதே! பார்த்தாயா! அதோவரும் மூன்று மூர்க்கர்களும் உன்னை சிறைபிட்டுச் செல்வதற்கே இத்துணை துரிதமாய் வருகிறார்கள். எனினும் நீங்களெல்லோரும் ஒரு சிறிதும் பதற்ற மடையாமல் நிம்மதியாகவே இருங்கள். அம்மூன்று தடியர்களையும் நான்ஒருவனே சரி பார்த்து விடுகின்றேன்" என்றான்.

இதை மாத்திரம் அந்த வாலிபன் கூறிவிட்டு தன் முகத்தில் சிகப்பு முக மூடியொன்றை போட்டு முகத்தை மறைத்துக் கொண்டே, தாழ்வாரத்துக்கருகே சென்று தன் பழகிய குதிரையை ஒருவித நூதன குரலால் கூவி அழைத்தான். அக்குதிரை இவன் சப்தத்தைக் கேட்டு மாளிகையின் சுவற்றோரம் வந்து நின்றது. அடுத்த நிமிஷம் அவ்வாலிப வீரன் குதிரையின் முதுகை நோக்கி மேலிருந்து கீழே குதித்தான். அங்ஙனமே குதிரை மீதமர்ந்து விட்டான். உடனே குதிரைக்கு சமிக்ஞை செய்யவே அவ்வசுவம் ஒரு நொடிக்குள் ஓடி எங்கேயோ மறைந்து விட்டது. அவனும் காணோம்.

இளங் கன்னிகையான நம் குல்செஹ்ரா அறிமுகமில்லா அவ்வாலிபனின் விபரீதச் செயல்களைக்கண்டு வியப்படைந்தாள். வியப்புக்குரிய அவனது பல செயல்களில், பச்சா சக்கூவின் சிப்பாய்களை எதிர்த்துத் தங்களை பாது

காப்பதாய் வாக்குறுதிச்செய்துவிட்டு பயங் கொள்ளியைப் போல் எங்கோ ஓடி ஒளிந்து விட்டதுதான் அவளுக்குப் பெரும் கிலேசத்தைத் தந்தது. இவ்வாறே சிறிது நேரம் அவனது செயல்களைப்பற்றி அச்சிறு நங்கை யோசித்துக் கொண்டிருந்தாள். அதற்குள் அவளது தாயார், தன் மகளின் கரத்தைப் பிடித்துக் கொண்டே "கண்ணே! அந்தக் காதகர்கள் உன்னைப் பிடித்துச் செல்ல அதோ வந்து விட்டார்கள். புறப்படு! சீக்கிரம் நாம் எங்கே னும் சென்று ஒளிந்து கொள்ளலாம். என்ன யோசிக் கின்றாய்?" என்று வேண்டினாள்.

குல்செஹ்ரா:—ஒன்று மில்லை. அந்த வாலிபன் வாயால் வீரத்தை மொழிந்து விட்டு செயலில் பேடித் தனத்தைக் காட்டினானே என்று தான் சிந்திக்கின்றேன். ஆ! அவன் எத்துணை மோசக்காரனாகப் போய் விட்டான். இல்லை! ஒருகால் அவன் சுத்த வீரனாகவே இருத்தல்கூடும். எல்லாம் விபரீதமே. ஒன்றும் முடிவு செய்ய இயலவில்லை.

கன்னியின் தாய்:—சரி! போகட்டும். அந்த சிந்தனை நமக்கேன். இக்காலத்தில் எவனும் உண்மையில் எவர்க் கும் உதவ மாட்டான். அவ்வாறே அவ்வாலிபனும் செய் தான். அவனொரு பொய்யனாக ஏன் இருத்தல் கூடாது? ஆயினும் அவன் ஒரு விஷயத்தில் நல்லவனே. ஏனெனின் அவன் நமக்கு நேரப்போகும் ஆபத்தைப்பற்றி முன்னெச் சரிக்கை செய்தது போற்றத்தக்கதே.

குல்செஹ்ரா:—அவ்வாலிபன் தன்னுயிரே பிரதான மெனக் கருதிப் பயந்தோடி ஒளிந்தான் போலிருக்கிறது.

அதற்குள் அவர்களின் இரு வேலைக்காரிகளும் குல் செஹ்ராவின் கரத்தைப்பற்றி "அம்மா! சிப்பாய்கள் நெருங்கி வந்து விட்டார்கள் சீக்கிரம் நாம் போய் ஒளிந்து விடுவோம். இன்றேல் அகப்பட்டுக் கொள்வோம்" என்று வேண்டி அழைத்தனர். வீரம் செறிந்த அவ்விளமகள் சிப்பாய்களுக்கோ வேறெவருக்கோ சிறிதும் அஞ்சியவ

ளாய் காணப்படவில்லை. எனவே தோழிகளிட மிருந்து தன் கரத்தை உதறிக் கொண்டு, "தூர விலகுங்கள். அந்த சிப்பாய் நாய்களுக்கு நான் ஒரு சிறிதும் அஞ்சப்போவ தில்லை. ஆண்டவன் விட்ட வழியாகட்டும்" என்று கூறி விட்டு ஆக்ரோஷங் கொண்டு சீரிய சிறுத்தைப்போல் வாயற்படியருகே செல்லலானுள்.

பச்சா ஸக்கூவின் மூர்க்க சிப்பாய்கள் வந்து கதவைப் பெருத்த இடி யோசையைப்போல் தாக்குவதையும் அவள் பொருட்படுத்தவில்லை. ஒரு சிறு போதுக்குள் அந்தச் சிப்பாய்கள் துராகிருதமாய் கதவை உடைத்துக் கொண்டு வீட்டின் உள்ளே நுழைந்து வந்து விட்டனர். தங்கள் எதிரே ஒரு இளங்கன்னிகை சற்றேனும் அஞ்சாது வீறு கொண்டு நிற்பதையுங் கண்டனர். அக் காரிகையாள் அரச தூதர்களை விளித்து ஏ! போக்கிரிகளே! பத்மாஷ் களே! நீங்கள் யார்? இங்கேன் துராகிருதமாய்க் கதவை யுடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தீர்கள்? என்று அதட்டினுள்.

சிப்பாய்கள்:—(அலக்ஷியமாய் சிரித்து) நாங்களா பத் மாஷ்கள்? ஆமாம்.......

குல் செஹ்ரா:—ஏ! துஷ்டர்காள்! இங்கு வீண் தர்க்கம் புரியாதீர்கள்! உடனே வீட்டை விட்டு வெளியே போய்விடுங்கள். ஜாக்கிரதை!

சிப்பாய்கள்:—"ஏ மாதே! உனது மிரட்டலுக்கு நாங் கள் மிரளமாட்டோம். எங்கள் புதிய அரசர் காஜி ஹபீ புல்லா அவர்கள் உன்னை சிறைப்பிடித்து வருமாறு ஆக்ஞை யிட்டுள்ளார்கள். இதோ சர்க்காரின் உத்திரவு" (என்று ஒரு கடிதத்தை நீட்டினுர்கள்.)

குல் செஹ்ரா:—(வெடுக்கென்று அக் காகிதத்தைப் பிடுங்கி பல துணுக்குகளாய் கிழித்தெறிந்து விட்டு)"உங் கள் அரசர் யார்? அந்த நிம்மக் ஹராம்! அயோக்கிய பச்சா ஸக்கூவா? அவனை அரசன் என்று அழைப்பாரு

முண்டா? மரியாதையாக வீட்டைவிட்டு வெளியேசென்று விடுங்கள். நான் அந்த சர்க்கார் உத்திரவை ஒரு சிறிதும் மதிக்க மாட்டேன்."

சிப்பாய்கள்:—"ஏ பெண்ணே! போதும் உன் நாவை யடக்கு. இங்ஙனம் எங்கள் அரசர் காஜீ அபீபுல்லாவை நீ வீணே அவதூறுப் படுத்துவதை நாங்கள் ஒரு சிறிதும் சகிக்க மாட்டோம். இதோ உன்னை சிறையிடுகின்றோம். பார்!"

என்று சிப்பாய்கள் கர்ண கடூரமாய்க் கூறிக் கொண்டே குல் செஹ்ராவைக் கட்டிப் பிடித்துப் பிணைத்துச் சிறையிலிட கைகளை நீட்டினார்கள். அதற்குள் கன்னிகையின் தாயும், அடிமைப் பெண்களும் குறுக்கே வந்து சிப்பாய்களைத் தடுத்து நின்றார்கள். அம் முரட்டுக் காலிகளான மூன்று சிப்பாய்களில் ஒருவன் குல் செஹ்ராவின் தாயை நெட்டித் தள்ளி கீழே வீழ்த்தி விட்டான். மற்றிரு முரடர்களும் இரு அடிமைப் பெண்களையும் தடுத்துதறி அப்பால் தள்ளி விட்டனர். தன்னையீன்றெடுத்து வளர்த்தத் தாயை கீழே வீழ்த்தியதை கண்ணுற்ற வீர இளமங்கையான குல்செஹ்ரா மூர்க்கங் கொண்ட சிறுப் புலியைப்போல் சிப்பாய்களை எதிர்த்தாள். ஏற்கெனவே ஜாக்கிரதையாய்த் தன் மடியில் ஆயத்தப் படுத்தி வைத்துக் கொண்ட நீண்ட முரட்டுத் தோல் சாட்டையை கையிலெடுத்துக் கொண்டு அம்மூன்று சிப்பாய்களின் மீதும் வீசி பல அடிகளை பலமாகக் கொடுத்து விட்டாள். அடியைப் பொறுக்கமாட்டாது இருவர் சற்றே பின்னடைந்து விட்டனர். ஆனால் மற்றொருவன் துணிந்து தன் உடைவாளை யுறுவி சாட்டையின் தோல் வாரைப் பிடித்துத் துண்டித்து விட்டான். எனவே, குல்செஹ்ரா சற்றே வீரம் குன்றியவளானாள். உடனே சிப்பாய்கள் மூவரும் எலிமீது பூனைகள் பாய்வதேபோல் வீழ்ந்து ஒரு மிக்க அந்த ஆப்கான் இளநங்கையை வரிந்துப் பிடித்துக் கொண்டனர். அக்காரிகையாள் எத்தனையோ தன் கால்

கரங்களை உதறித் தப்பிக்க முயன்றும் அந்தப் பேயர்களின் பிடியினின்றும் முற்றும் விடுபடுவதற்கு இயலாமற் போனாள். அந்தோ! பரிதாபம்! மூன்று மூர்க்கச் சிப்பாய்களின் முன் ஒரு வனிதாமணி என்ன செய்ய முடியும்? இறுதியாய் பிடிபட்டுப் போனாள். சிப்பாய்கள் அந்த மிருது தேகியாளை பிணைத்துக் கட்டித் தூக்கிக் கொண்டு துராகிருதமாய் வீட்டு வெளிக் கதவு வரைக்கும் வந்து விட்டனர். ஆனால் அதற்கப்புறம் காலெடுத்து வைக்க அந்த முரடர்களாலும் முடியாமற் போயிற்று. ஏனெனின், அந்த க்ஷணமே ஒரு வீர வாலிபன் முகத்தை சிகப்பு மூடியால் மறைத்துக் கொண்டு எதிர்ப்பட்டு கரத்திலொரு சிறு கைத் துப்பாக்கியை நீட்டியவண்ணம் அம்மூவர்களை மடக்கிக் கொண்டான். சற்றேனும் மஞ்சாத அந்த வீர வாலிபன் துப்பாக்கியை சிப்பாய்களின் மார்புக்கு நேரே பிடித்து மகா கடுங்கோபத்தோடு அதிகாரக் குரலில் கூறலானான்:—

முகமூடிய வாலிபன்:—"அடே தூர்த்தர்காள்! ஆண்டவன்மீது சத்தியமாய்க் கூறுகின்றேன். சற்றேனும் இந்தப் பக்கம் முன்னேக்கி வருவீர்களாயின் அந்த க்ஷணமே காட்டு மிருகங்களைப்போல் உங்களை சுட்டு வீழ்த்துவேனென்பது திண்ணம். வீணே என் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகாதீர்கள். குல்செஹ்ராவின் கட்டுகளை அவிழ்த்து அம்மாதை யதேச்சையாய் விட்டுவிடுங்கள். பிறகு அப்பால் விலகிப்போய் கைகட்டி நில்லுங்கள்."

கைத்துப்பாக்கிக்குப் பயந்துபோன அந்தக் கோழை சிப்பாய்கள் வாலிபன் கட்டளைப்படி மங்கையின் கட்டுகளை அவிழ்த்துவிட்டு அப்பால் நின்றனர்.

"முகமூடிய வாலிபன்:—(குல்செஹ்ராவை நோக்கி) அன்புள்ள நங்காய்! அந்த சிப்பாய்க் காதகர்களுடைய இடுப்பிலுள்ள கத்திகளையெல்லாம் பிடுங்கிக்கொள். அவர்களிடம் ஒரு சிறு ஆயுதத்தையும் விடாதே."

அப்படியே அந்த வீரமாதும் அஞ்சாது சிப்பாய்களின் உடைவாட்களை யெல்லாம் கழற்றித் தன் வயப்படுத்திக்கொண்டு அவர்களை வெறுங் கையர்களாக்கிவிட்டாள்.

இங்ஙனம் தங்களாற்ற மாட்டாத்தன்மையால் ஒரு இள வாலிபனிடம் சிக்குண்டுபோன அந்த மூன்றுசிப்பாய்களுள் ஒருவன் சற்று தைரியங்கொண்டு வாலிபனை வினவலானான்:—

சிப்பாய்:—"எங்களை இப்படித் தடுப்பவன் நீ யார்?"

வாலிபன்:—நானொரு "செகப்புமுகமூடியுடையவன்."

சிப்பாய்:—"உண்மைப் பெயரை சொல்ல மாட்டீர் போலும்! சரி! நாங்கள் எமது அரசரின் உத்திரவுப்படி இக்காரியத்தைப்புரிகின்றோம். இதை நீர் தடை செய்வீரானால் உமக்கு இதனால் பெரும் தீங்கு நேரிடுமென்பதை மனதில் வைத்துக்கொள்வீராக."

வாலிபன்:—"என்ன சொன்னாய்! அரசர் உத்திரவா? எந்த அரசன்? ஓ ஹோ! அந்த கொள்ளைக்கார நிம்மக் ஹராம் (நன்றி கொன்ற பதர்) உடைய அரசா? பேஷ்!"

சிப்பாய்.—"ஓய்! இப்போதிய அரசர் விஷயத்தில் நீ அவ்வாறு விஷமத்தனமாய் பேசுவாயாயின் உனக்கு கேடு காலம் நெருங்கி வந்து விட்டதென்றெண்ணு."

வாலிபன்:—"ஏ கூலிகளே! உங்களுக்கோ உங்களது அயோக்கிய அரசனுக்கோ நான் ஒரு சிறிதும் அஞ்ச மாட்டேன். இன்னும் நீங்களெல்லாம் நன்றிகெட்ட பச்சா ஸக்கூவினிடம் சென்று, நான் குல்செஹ்ராவை கவர்ந்து சென்று விட்டேனென்றுச் சொல்லி விடுங்கள். அதன் பின் இந்தப் பெண்ணையேனும் என்னையேனும் நீங்களும் அந்த அரசனும் தேடிப் பிடிக்க முற்படுவீர்களாயின் உங்கள் கதி அதோகதியாகு மென்பது திண்ணம். ஜாக்கிரதை!"

என்று அந்த சிகப்பு முகமூடிய வாலிப வீரன் வெகு கெம்பீரமாய் மொழிந்து விட்டு அழகிய வனிதாமணியான அந்தக் காபுல் கன்னிகையின் செவியில் ஏதோ சில மொழிகளை வெகு இரகசியமாக மொழிந்தான் அக் கன்னிகை உடனேவாலிபன் இஷ்டப்படி நடந்து கொள்ள சித்தமாய் விட்டாள். வாலிபன் தன் வலது கரத்தால் துப்பாக்கியை சிப்பாய்களின் முகத்துக்கெதிரே நீட்டிய வண்ணம் இடது கரத்தால் நங்கையை அழைத்துக் கொண்டு சென்று தன் குதிரையின் மீது நங்கையோடு ஏறி அமர்ந்து கொண்டான். அடுத்த நிமிஷத்தில் அந்தத் துணிச்சலான குதிரை காற்றாய் பறந்தோடி எங்கோ மறைந்து விட்டது. திருட்டு ஆந்தைகளைப் போல் விழித்துக் கொண்டிருந்த மூன்று சிப்பாய்களும் அவ்வாலிபனை பின் தொடர்ந்து சிறையிடக் கருதி தங்களின் குதிரைகளைத் தாங்கள் கட்டி வைத்து வந்த இடத்திற் சென்று பார்த்தார்கள். அங்கு தங்களின் மூன்று குதிரைகளில் ஒன்றையும் காணாமை யுணர்ந்து திக்பிரமை கொண்டனர். பின்னர் மூலை முடுக்குகளிலெல்லாம் தேடி யலைந்தார்கள். இறுதியாய் அவர்களது குதிரைகள் அம்மாளிகையின் புழக்கடையண்டை யிருந்த குட்டிச் சுவற்றருகே ஒரு மொட்டை மரத்தடியில் இறுகக் கட்டப்பட்டிருந்தன. இந்த சிப்பாய்களுக்கு இச்சமயத்தில் அந்த வாலிப வீரன் மீது உண்டான ஆக்ரோஷம் சொல்லத்தரமன்று. பற்களை நறநற வென்று கடித்துக் கொண்டு வாய்க்கு வந்தவாறெல்லாம் அந்த வாலிபனை ஆபாசமாய் திட்டினார்கள். இதற்குள் அந்த வாலிபன் எங்கு சென்று விட்டானோ என்பது அவர்களால் யூகிக்க முடியவில்லை யாதலால் மேல் கொண்டு நடக்க வேண்டியதற்குரிய யோசனையை பின்வருமாறு புரியலானார்கள்.

முதல் சிப்பாய்:—“அந்த அயோக்கிய அநாமதேயப் பேர்வழி நம் வலையில்பட்ட மானை கவர்ந்து சென்று விட்டான். இதனால் நம் பிழைப்பிலும் மண் விழும்போலிருக்

கிறதே! இப்போது அப்பெண் நம்வசம் கிடைக்கப் போவ தில்லை. வெறுமனே நாம் அமீரிடம் செல்வோமாயின் நம் கதி அதோகதியாகும். இதற்கென்ன செய்வது?"

2-வது சிப்பாய்:—"ஏன் தயங்குகின்றீர்? இப்போது நம் வயம் சிக்குண்டு கிடக்கும் இம் மூன்று ஸ்திரீகளையே னும் தர்பாருக்குச் சிறையிட்டுச் செல்வோம். துணியுங் கள். இம் மூவரில் ஒருவள் குல் செஹ்ராவின் தாயாராக யிருப்பது நமததிருஷ்டமே."

3-வது சிப்பாய்:—"ஆம்! சரிதான்! வெறுங்கையோடு செல்வதைக் காட்டிலும் இம் மூன்றுப் பெண்களையேனும் பிடித்துச் செல்வோமாயின், அப்போது நமது அமீர் நம்மை க்ஷமிப்பதற்கு அனுகூலமாகும். புறப்படுங்கள்."

இவ்வாறு இந்தத் திரி மூர்த்திகளும் சதியாலோ சனைசெய்து கொண்டு மாளிகையுட் சென்று குல் செஹ்ராவின் அன்னையையும் அவர்களது இரு வேலைக்கார அடிமைப் பெண்களையும் துராகிருதமாய் சிறையிட்டு தர் பாருக்கு நடத்தி சென்று விட்டனர். மேலும் இம் மூன்று குற்றமற்றஸ்திரீகளைப்பச்சாஸக்கூமுன்னிலையில் இழுத்துச் சென்று நிறுத்தினர். பாபம்! இவர்களது நிலைமை கைதி களின் நிலைமையைவிட மிகப் பரிதாபகரமாயிருந்தது.

இந்தச் சமயம் பச்சா ஸக்கூ தனது தர்பாரில் (அற்ப னுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப் பான் என்பதைப்போல்) இனியில்லா கெம்பீரத்தோடு வீற் றிருந்து தம் சகாக்களுக்குப் பல கட்டளைகளை யிட்டுக் கொண்டிருந்தார். ஞான சூன்னியர்களான அவரது மந்தி ரிப் பிரதானிகள் பச்சா ஸக்கூவின் மொழிகளுக்கெல்லாம் 'ஜீஹுஜூர்' என்பதை உச்சரித்துக் கொண்டு, பேச்சுக் கேற்ற தாளங் கொட்டிக் கொண்டிருந்தனர். இக்காலை அந்த நம் மூன்று சிப்பாய்களும் சிறையிட்டுச் சென்ற மூன்று பெண் கைதிகளுள் தான் கோரிய அழகை மங்கை குல் செஹ்ரா இல்லாதிருத்தலைக் கண்ட பச்சா ஸக்கூவுக்

குக் கோபம் தலைக்கு மேல் பொங்கியெழுந்தது. எனவே சிப்பாய்களை நோக்கி கடினமாய் வினவலானார்.

பச்சா சக்கூ—"ஏ அற்பர்காள்! எனது வேட்டைக்குரிய அழகிய மான் குல்செஹ்ரா எங்கே?"

சிப்பாய்கள்:—(நடுநடுங்கிக்கொண்டு) "கருணை யங்கடலான அரசே! அமீரே! மன்னித்தருளவேண்டும், நாங்கள்"....

"பச்சா சக்கூ:—அடே! முழு மூடத்தடியர்காள்! சீக்கிரம் கூறுங்கள். உண்மையை ஒரு சிறிதேனும் மறைத்தீர்களாயின் உங்கள் உடலங்களை கழுகுக் கிரையாக்கி விடுவேன். ஹுஷார்!"

சிப்பாய்கள், பச்சா ஸக்கூவின் மூர்க்க கர்ஜனைக்கு முன்னர் நடுக்குற்ற சுண்டெலிகளாகி, தாங்கள் குல்செஹ்ராவின் வீட்டை யடைந்தது முதல் அந்த சிகப்பு முகமூடி போட்ட வாலிபன் அக்காரிகையாளை கவர்ந்து சென்றது வரை சர்வ விஷயத்தையும் தலைமுதல் கடைவரை கூறி முடித்தனர். இவ்வசனங்களெல்லாம் பச்சா ஸக்கூவின் செவியில் நாராசம் காய்ச்சிவிட்டதேபோல் அவரது பேராத்திரத்தைக் கிளப்பிவிட்டன.

எனவே பச்சா ஸக்கூ தனது சர்வசுதந்திர யதேச்சாதிகாரத்தால் அம்மூன்று சிப்பாய்களுக்குச் சரியான கொடிய தண்டனைகளை இழைப்பதோடு, அந்தப் பேதை சிப்பாய்களின் மூக்குகளையும் காதுகளையும் அறுத்து தர்பாரைவிட்டும் அப்பால் துரத்திவிடுமாறும் ஆக்ஞாபித்துவிட்டார். சிப்பாய்கள் போக்கற்று எத்துணையோ கெஞ்சிக் கூத்தாடியும் பயன்பெறாது போயினர். பச்சா ஸக்கூவின் கட்டளைப்படி கொடிய தண்டனைகள்ஏழை சிப்பாய்களுக்கு விதிக்கப்பட்டு அவர்கள் துரத்தவும் பட்டனர்.

அதன் பிறகு பச்சா ஸக்கூ, குல்செஹ்ராவின் அன்னையையும் இரு அடிமைப் பெண்களையும் காவற்கூடத்தில் போட்டுப் பூட்டுமாறு தனது இதர சிப்பாய்களுக்கு உத்தி

ரவுச்செய்ய, அவ்வாறே சேவகர்கள் செய்துவிட்டனர். குல்செஹ்ராவை பிடித்துக்கொணர்ந்து ஒப்படைப்பதாக பொறுப்பேற்றுக்கொண்ட பிரதம மந்திரியை அழைத்து "இனியேனும் நீர் ஜாக்கிரதையாக நடந்து கொள்வீரென நம்புகின்றேன். மந்திரி! அந்தத் துஷ்ட வாலிபனையும் பெண்ணையும் பிடித்து வர இன்றே ஏற்பாடு செய்து விடு. காபுல் எல்லையைச் சேர்ந்த எல்லாச் சுற்றுப்புறங்களுக்கும் பல வேவுகாரர்களை விடுத்து அந்த சிகப்பு முகமூடியவனின் நடத்தைகளையும் தகவல்களையும் தெரிந்து வரும்படி ஏற்பாடு செய். அந்தப் போக்கிரிப் பயல் யாரென்பது முதலில் தெரிய வேண்டும். அத்துடன் சீக்கிரம் அந்தச் சிறுக்கி குல்செஹ்ராவும் என் முன் கொண்டுவரப்படல் வேண்டுமென்று கட்டளை யிட்டார்.

அவ்வாறே அந்தப் பிரதம மந்திரி பல துப்பறியும் சிப்பாய்களை அழைத்து வாலிபனையும்பெண்ணையும்பிடித்து வருமாறு பல திக்குகளுக்கும் அனுப்பி வைத்தார்.

அத்தியாயம் 2.

குல்சேஹ்ராவைப் பிடிக்க பச்சா ஸக்கூ முயற்சி

இவ்வுத்திரவுக்குச் சற்று நேரத்திற்குப் பின் எவனோ ஒரு ஆப்கானிய வாலிபன் பச்சா ஸக்கூவுக்குமுன்னிலையில் சில சிப்பாய்களால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். அதைப்பற்றி புதிய அமீரான பச்சா ஸக்கூ பின்வருமாறு விசாரித்தார்.

பச்சா ஸக்கூ:—இவன் யார்? என்ன குற்றம் செய்தான்?

சிப்பாய்த் தலைவன்:—அரசே! இத்துர்த்தன் தங்களை அவதூறுகத் தூஷித்தான். அந்த காபிரான அமானுல்லாவைப்புகழ்ந்தான். இன்னமும் அந்தக் காபிர்மீது சிறப்பு பாட்டுகளைப் பாடினன்.

அந்த வாலிபன்:—(மகா ஆக்ரோஷத்தோடு சிப்பாய் தலைவன் மீது புலிபோல் பாய்ந்து அவன் முகத்தில் தன் இறுகிய முஷ்டியால் பத்துக் குத்துகளைவிட்டு, ஒரு பல்லை உடைத்து மீண்டும் கூறலானான்.) அடே மடையா! எங்கள் அன்பான அரசர், அமீர் காஜி, ஷாஅமானுல்லாகானவர்களை இன்னொருமுறை காபிரென்று கூறுவாயாயின் உன் உயிரை கணத்தில் போக்கி விடுவேன். அமானுல்லாவின் கண்ணியத்தைக் காக்க என் உயிரையும் விடுவேன்.

(இதற்குள் பச்சா ஸக்கூவும் மற்றும் தூர்மந்திரிப் பிரதானிகளும் "ஏ! அந்தப் போக்கிரியை பிடித்து கட்டுங்கள், விலங்கிடுங்கள்" என்று கூச்சல் போட்டனர்.

பச்சாஸக்கூ:—(மிகுந்த கோபத்தோடு அவ்வாலிபனை நோக்கி) அடே துஷ்டா! நான் யார் என்பதை நீ இன்னும் உணரவில்லையா?

அந்த வாலிபன்:—நீர்தானே! உன்னை நான் நல்லவிதமாகவே உணர்ந்திருக்கின்றேனே!

பச்சா ஸக்கூ:—ஏ! அதனப் பிரசங்கி! என்னை என்னவென்று உணர்ந்திருக்கின்றாய்?

அந்த வாலிபன்:—(மிகவும் பரிகாசமாய்) என்னவென்றா? நீயொரு தண்ணீர்க்காரன் மகனென்றும் கொள்ளைக்கார னென்றும், பத்மாவ்ஷ என்றும், மோசக்கார னென்றும், கலகக்காரனென்றும் நல்ல விதமாய் உணர்வேன்.

பச்சா ஸக்கூ:—ஊசியால் குத்தப்பட்ட பைத்தியக்காரனைப்போல் தட்டுக்கெட்டு) ஆ! என்ன சொன்னாய்" தறுதலையே! நாசகாலா! விஷமத் துரும்பே! இதோ உன் ஆவியைப் போக்குகிறேன். இந்தத் தண்டனையைப் பெற ஆயத்தமாகு.

அந்த வாலிபன்:—எங்கள் காருண்ய அமீர் அமானுல்லாவுக்காக என் ஆவியையும் தியாகம் செய்ய இதோ ஆயத்தமாகவே இருக்கின்றேன்.

பச்சா ஸக்கூ:—(வெட்கத்தால் ரோஷம் பூண்டு சிப்பாய்களை அழைத்து) சேவகர்காள்! இந்த அயோக்கிய அற்பப் பதருடைய சிரஸை இந்த க்ஷணமே என் முன்னே வெட்டி வீழ்த்துங்கள். தாமதியாதீர்கள்.

பச்சா ஸக்கூவின் உத்திரவுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் சேவகர்கள் பலர் ஒன்றுகூடி பிரயாசையோடு அவ்விளைஞனைப் பிடித்து இரும்புச் சங்கிலிகளால் இறுக்கிப் பிணைத்து விட்டனர். அடுத்த நிமிஷம் கொலைப் புரியும் சேவகன் அகன்ற உருவிய நீண்ட கூர்வாளாயுதந் தாங்கியவனாய் முன் வந்து ஆயத்தமாய் நின்றான்.

பச்சா ஸக்கூ:—(மீண்டுமொருமுறை அவ்விளைஞனை ஏறிட்டு) ஏ! இளங்காளையே! நீ மடியப் போகின்றாய். இறுதியாக என்பால் ஏதேனும் முறையிட்டுக் கொள்ள வேண்டுமானால் கூறு.

அந்த வாலிபன்:—கொடுங் கோலனான உன்னிடம் நான் எதையும் வேண்டிக்கொள்ள சிறிதும் தயாராகயில்லை. எனது உயிரினுமுயரிய அரசர் அமானுல்லாவுக்காக உயிரை திரஸ்கரிக்க இதோ ஆயத்தமாய் நிற்கின்றேன். உன்னாலானது ஆகட்டும்.

பச்சா ஸக்கூ:—வாலிபா! அப்படியல்ல. இறக்குந் தருவாயில் நீ என்ன கூறுகின்றாய் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். நீ எனக்குக் கட்டுப்பட்டு நடப்பதாயின் உன் குற்றத்தை க்ஷமித்தருளவும் முற்படுகின்றேன்.

அந்த வாலிபன்:—எங்கள் அரசனை வஞ்சித்த நயவஞ்சகனாகிய உன்னிடம் உயிர் பிச்சை வேண்ட எனக்கு விருப்பமில்லை. இந்த நெருக்கடியான சமயத்தில் நீபுரியும் மிரட்டலுக்கெல்லாம் ஒரு சிறிதும் நான் அஞ்சேன். ஆகட்டும், உன் இஷ்டப்படி என்னைக்கொல்ல உத்தரவிடு. என் ஆவியை அர்ப்பணம் செய்து காஜி, ஷா அமானுல்லா அவர்களுக்கு நானொரு பக்தனாகவும் நன்றியுள்ளவனாகவும் இறக்

கவே ஆசைப்படுகின்றேன். இதுவே எனது இறுதிப் பிராப்தம்.

பச்சா ஸக்கூ:—(ஆத்திரம் அதிகங்கொண்டு) ஏ கொலேச் சேவகா! வெட்டு அவன் கழுத்தை. அவன் தலே உருளட்டும்,

இவ்வுத்திரவை எதிர்பார்த்த கொலேஞன் தனது வாளே ஓங்கினுன். நமது வீர இளேஞன் சர்வமும்வல்ல அல்லாஹுத்த ஆலாவை திரிகரணசுத்தியோடு பஜித்தான். "ஆண்டவா! உனது உண்மை பக்தரான அமானுல்லாவின் கண்ணியத்துக்காகவும், என் தாய்நாட்டின் நன்மைக்காகவும், இவ்வக்கிரம அரசனின் அயோக்கியத்தனம் உலகமுற்றும் தெரிவதற்காகவும், நான் என் உயிரை உன்பாதையில் குர்பானீ செய்கின்றேன். என்னே ஷஹீதுகளில் சேர்த்து கொள்வாயாக" என்று வாலிபன் கூறிமுடித்தான். சற்றேனும் இரக்கமென்பதில்லாத மூர்க்கச் சிப்பாய் வாலிபனின் கழுத்தை நோக்கித்தன் கத்தியை வீசினுன். ஆப்கன் நற்புத்திரர்களில் ஒருவனுன நம் வாலிபன் உடல் வேருயும் சிரம்வேருயும் ஆவி நீங்கி மண்மீது வீழ்ந்து மாண்டான். இம்மண்ணுலகைவிட்டு விண்ணுற்ருன் (இன்னுலில்லாஹிவ இன்னு இலேஹிராஜிஊன்) அந்தோ!

மேற்குறித்த அகோரச் சம்பவங்கள் நிகழ்வுற்று பதினேந்து நாட்கள் கழிந்து விட்டன. சிறைக்கூடத்தில் கன்னிகையின் அன்னேயும் அவர்கள் இல்லத்தின் கண் இருந்த வேலேக்காரிகளும் சிறைவாச மனுபவித்து வருகின்றனர். குல்செஹ்ராவையும் இவளேக் கவர்ந்து போந்த வீர வாலிபனேயும் தேடிப் பிடிக்கச் சென்ற சிப்பாய்களால் யாதொரு தகவலும் தெரியவில்லே. இவற்றை யுணர்ந்த பச்சா ஸக்கூ தனது பிரதம மந்திரியை அழைத்து வினவலானுன்.

"பச்சா சக்கூ:—"வஜீர்! சிகப்புமுகமூடிபோட்ட அந்த காதகனின் தகவலும் குல்செஹ்ராவின் சமாச்சாரமும் ஏதேனும் தெரிய வரவில்லையா?"

பிரதம மந்திரி:—"ஆலி ஜனப்! இதுகாறும் ஒரு உள வாளியாலேனும் சிப்பாயியாலேனும் இங்கபர்களில் எவர் களின் தகவலும் கிடைக்கவில்லை."

பச்சா ஸக்கூ:—"என்ன சொன்னாய்! தகவல் ஒன்றும் இதுவரைக் கிடைக்க வில்லையா? இதற்கெல்லாம் நீயே ஜவாப்தாரியாவாய்."

பிரதம மந்திரி:—"கனவானேகோபிக்காதீர்கள்!என்னா லனுப்பப்பட்ட உளவாளிகளும் சிப்பாய்களும்எங்கெங்கோ சுற்றியலைந்து பார்த்து விட்டார்கள். ஒருவரும் காணப் படவே இல்லையாம்."

பச்சா ஸக்கூ:—"ஹேய்! நீயும் என்னை ஏமாற்றவா பார்க்கின்றாய். இன்று பதினைந்து நாட்களாகியும் தகவல் கிடைக்க வில்லையானால் உங்கள் திறமையைஎன்சொல்வது?"

பிரதம மந்திரி:—"ஹஜரத்தவர்களே! இன்னும்இரண் டொரு தினம் மாத்திரம் பொறுத்துக் கொள்ளுங்கள். எப்படியேனும் அவ்வயோக்கியர்களை உங்கள்முன்கொண்டு வந்து சேர்த்து விடுகின்றேன்."

பச்சா ஸக்கூ:—"அது முடியாது. இனி ஒருபோதும் உன் வார்த்தைக்குச் செவி கொடேன். (சிறிது நேரம் யோசித்து விட்டு) சரி! போகட்டும் தேடிச் சென்ற சேவகர் களையேனும் என்முன் கொண்டு வா."

பிரதம மந்திரி:—"சரி! அப்படியே ஆகட்டும். இதோ அழைக்கிறேன்."

அவ்வாறே சிறிது நேரத்துக்கெல்லாம் சில உளவறி யும் சேவகர்கள் பச்சா ஸக்கூவின் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்கள்.

பச்சா ஸக்கூ:—(சிப்பாய்களை நோக்கி) "ஏ! சிப்பாய்காள்! அந்தச் சேவகர்களைப் பிடித்துச் சிறையிடுங்கள். இன்னுமிவர்களைக் கட்டி கழுதை மேல் ஏற்றி ஊரை வலம் சுற்றி இழுத்து வாருங்கள். கேவலம் இந்த அயோக்கியர்களைக் கண்டேனும் பிறர் புத்திக் கற்றுக் கொள்ளட்டும்."

பிரதம மந்திரி:—"கருணையுள்ள வேந்தே! இம்முறை இவர்களது குற்றத்தை க்ஷமித்தருளக் கோருகின்றேன். இனிமேல் இவர்கள் ஒழுங்காய் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளுவார்கள்."

பச்சா ஸக்கூ:—"ஏ அதனப்பிரசங்கி! உனக்கொன்றும் தெரியாது பேசாதிரு. எனது இராஜ உத்திரவில் குறுக்கிட்டு விவாதிக்க உனக்கு இத்துணைத் துணிபா? (சிப்பாய்களை நோக்கி) ஏ ஏவலர்காள்! உங்கள் காரியம் ஆகட்டும். அவர்களைப் பிணைத்து கழுதை மேலேற்றி ஊர்சுற்றி சிறைக்கூடத்தி லடையுங்கள்."

பச்சா ஸக்கூவின் கொடுங்கோன்மைக் கிணங்கி சிப்பாய்கள், குல்செஹ்ராவையும் சிகப்பு முகமூடி யணிந்த துணிச்சலான இளைஞனையும் பிடித்து வருவதாய் சென்று வெறுங் கையராய் திரும்பி வந்த வேவுகாரர்களை யெல்லாம் கட்டிப் பிணைத்து கழுதை மேலேற்றி வீதி வழிநெடுக அவர்களைத் தூஷித்து கைகொட்டி நகைத்து அவர்கள் மானத்தைப் போக்கி இறுதியாய் சிறைக்களத்தில்கொண்டு வந்து அடைத்து விட்டார்கள்.

பச்சா ஸக்கூ:—(மீண்டும் பிரதம மந்திரியை நோக்கி) "ஏ தலைவ! இன்னும் பதினைந்தே நாட்களுக்குள் எவ்வாறேனும் பிரயத்தனப்பட்டு கன்னிகை குல்செஹ்ராவையும், சிகப்பு முக மூடியவனையும் பிடித்து வந்து என் முன் விட்டீரானல் நீரும் தப்பித்தீர். இன்றேல் நீவிர் பிரதம மந்திரிப் பதவியினின்று விரட்டப்படுவதோடு உன்னை...........

பிரதம மந்திரி:—"வேண்டாம்! அடியேன் தங்களை விட்டக ன். அந்த அதமர்களான குல் செஹ்ராவை

சிறையிடுவதற்கு ஒரு அருமையான யோசனையை சொல்லு கின்றேன். இதில் நாம் முற்றும் வெற்றிப் பெறுவோ மென்பது திண்ணம்."

பச்சா ஸக்கூ:—"பேச்சை வளர்க்காதே. அந்த அரிய யோசனை யென்ன? அதை முதலில் கூறி முடி."

பிரதம மந்திரி:—"சிறையிடப்பட்டுக் கிடக்கும் குல் செஹ்ராவின் தாயை அடுத்த எட்டாவது நாள் கொலை செய்துவிடப்படும். அதற்குள் இவளது மகள் குல்செஹ் ராதானே ராஜ தர்பாருக்குவந்து தாயின் உயிரை மீட்டுக் கொள்ள விரும்புவாளாயின், அவள் உடனே வரக்கடவள். அப்படி தானே வருவாளாயின் தாயின் உயிர் ரக்ஷிக்கப்படு வதோடு, அக்கன்னியும் அரசரால் மன்னிக்கப்படுவாள். இன்றேல் இருவரும் மடிவது திண்ணம்" என்று காபுல் நகர் முழுவதும், இதைச்சேர்ந்த சுற்றுப் புறங்களெல்லா வற்றிலும் முரசடித்து விளம்பரம் செய்துவிட்டால், அவ சியம் அந்த குல்செஹ்ரா நம் வசம் அகப்பட்டு விடுவாள். அதன் பிறகு அந்தத் துஷ்டவாலிபனை பிடித்துவிடுவது சிரமமல்ல."

பச்சா ஸக்கூ:—"இப்படிச் செய்துவிடுவதால் நம் கோரிக்கை நிறைவேறி விடுமென்பதற்கு என்ன அத்தாக்ஷி யுண்டு?"

பிரதம மந்திரி:—"அன்புள்ள அரசே! அந்த நங்கை குல்செஹ்ராவுக்குத் தன் தாயிடம் அதிகமான அன்பும் ஆர்வமு முண்டு. ஆதலின் தாயின் உயிர்போய் விடுமென் பதை உணர்வாளாயின், கட்டாயம் தன் தாயின் உயிரை பாதுகாக்க அவள் நம் தர்பாருக்கு வந்தே தீருவாள்."

பச்சா ஸக்கூ:—"அப்படியானால் பறையடிப்போர்களை யழைத்து முரசடித்து விளம்பரஞ் செய்துவிடும்படி உத் திரவிட்டு விடு."

பிரதம மந்திரி:—"அப்படியே ஆகட்டும்."

தனது உத்தியோகம் நிலைத்து, பச்சா ஸக்கூவின் கருணை சற்றுக் கிடைத்ததே போதுமென்றெண்ணிய பிரதம மந்திரி மெத்தக் குதூகலங் கொண்டவனாய் வெளியே வந்து பறையர் (பறையடிப்பவர்)களை அழைத்து மேற்படி விஷயத்தை ஊர் சுற்றுப்புறமெங்கும் பிரகடனப்படுத்தி விடும்படி கட்டளையிட்டு விட்டான். அதன்படி மறுநாள் பல முரசர்களால் முரசொலிக்கப்பட்டு நாலு பக்கங்களிலும் செய்தி பரப்பப்பட்டது.

ரோஜா முகத்தழகியான மங்கையர் திலகம் குல்செஹ்ராவை கவர்ந்து சென்ற சிகப்பு முகமூடியணிந்த வாலிபன் அப் பெண்பாலை நேரே தனது கிரஹத்துக்கு அழைத்துச் சென்றான். இவ் விளைஞனின் விடுதி காபுல் தலை நகருக்கு இரண்டுமைல்களுக்கப்பால் தனிப்பிரதேசத்தில் ஏகாந்தமா இருந்தது. இவ்வில்லத்தினுள் குல் செஹ்ராவை வாலிபன் பூரண சம்மதத்தோடு அழைத்துக் கொண்டு உட்பிரவேசித்தலும் தனது சிகப்பு மூடியை நீக்கிக் கொண்டு புன்முறுவலோடு மங்கையை உபசரித்தான்:—

"அன்புக்குரியாய்! இவண் நீவிர் ஒரு சிறிதும் சஞ்சலப்பட வேண்டாம். இவ்வில்லம் தங்கள் சுயபதியைப் போன்றேநினைத்துஅன்னியோன்னியமாயிருப்பீராக. உம்முடன் அன்போடு சம்பாஷித்து சந்தோஷகரமாய் பொழுது போக்க என் ஆருயிர்த்தங்கை இங்கு இருக்கின்றாள். அவள் உமது சஞ்சலத்தைப் போக்குவள். அவளை இதோ அழைக்கின்றேன்" என்று அன்புத் தவழ்ந்து மொழிந்து விட்டு "பரீபானு! பரீபானு!!" என்று உரக்க சப்தமிட்டு அழைத்தான். அடுத்த நிமிஷத்தில் "என் அண்ணா! இதோ வந்தேன்" என்று குயிலினுமினிய தீங்குரலில் கூறிக்கொண்ட வண்ணம் இளம் பருவத்தினளான ஆப்கான் கட்டழகி யொருவள் இள மான் போல ஓடி வந்து இருவர்க்கு முன்னிலையில் நின்றனள்.

வாலிபன்:—(தன் இளஞ்சோதரியை நோக்கி) "தங்காய்! இப்பெண்மணியை உனது சொந்தச் சகோதரியைப் போலப் பாவித்துக் கொள். இந்த யுவதி நம் உண்மை அரசர் காஜி அமானுல்லாகானவர்களுடன் விசுவாசம் பூண்டவளாவள். ஆகவே பச்சா ஸக்கூ இப்பெண் பால் கொடிய விரோதங் கொண்டுள்ளான். இவ் வனிதையை சிறையிட்டு வருமாறு மூன்று கொடிய சிப்பாய்களை இவ்வனிதையினில்லத்துக்கு அனுப்பியும் வைத்தான். நல்ல காலமாய் நான் இதை உணர்ந்து எச்சரிக்கையோடு இம் மங்கையைக் காப்பாற்றி இங்கு கொண்டு வந்திருக்கின்றேன். நாம் தான் இப்பெண்ணை இனி பாதுகாத்தல் வேண்டும்."

பரீபானு:—"அப்படியா! வெகுசந்தோஷம்." (குல்செஹ்ராவின்அழகியகரத்தை அன்போடுபற்றிக்கோர்த்துகொண்டு)"சோதரீ! தாங்கள் எதற்கும்மனங்குலையவேண்டாம். உங்கட்கு வேண்டிய எல்லாவித சௌகரியங்களையும் ஊழியங்களையும் செய்து தர நான் முழு சம்மதத்தோடு காத்து கொண்டிருக்கின்றேன். இன்னும் தாங்கள் எங்களிடம் விருந்தினர்போலவும் இருக்கக் கோருகின்றனம்."

வாலிபன்:—(பரீபானுவை நோக்கி) "தங்காய்! உபசரணைப் பேச்சுகளெல்லாம் அப்புறமாகட்டும். வெய்யில் கொடுமை அதிகமாயிருப்பதால், உடனே குளிர்ந்த ஷர்பத்து கொண்டு வந்து உனது (இந்த) சகோதரிக்கு அளிப்பாயாக!" என்று கூறினன்.

பரீபானு தமையனின் இஷ்டப்படி ஷர்பத் கொண்டு வருவதற்கு மற்ருேர் அறைக்குட் சென்று விட்டாள். தான் இதுகாறும் கண்டறியாதவர்கள் தனக்குஇத்துணைப் பேருதவியும் உபசரணைகளும் புரிவதைக் கண்டு வியப்படைந்தாள் நம் குல்செஹ்ரா. பிறகு சற்று ஆழ்ந்து ஆலோசனையிலிருந்து விட்டு தன்னை பாதுகாத்த அவ்விளவாலிபனை நோக்கி வினவலானுள்.

அத்தியாயம் 3.

முகமூடி யணிந்த வாலிபன் யார் ?

குல்செஹ்ரா:—"உண்மையாகவே என் உயிரை தாங்கள் காப்பாற்றினீர்கள். நம் அரசனுய் வந்து வாய்த்த பச்சா ஸக்கூவின் கொடுமையை விட்டும், அவரது சிப்பாய்களின் அட்டூழியங்களை விட்டும் நான் சுயமே தப்பி விடுவதென்பது அசாத்தியமாகவே காணப்பட்டது. நல்ல சந்தர்ப்பத்தில் தாங்கள் கடவுட் கருணை போல் வந்து என்னை காத்தீர்கள். ஆனால் தாங்கள்"............(என்று கூறி வாயை மூடிக்கொண்டாள்.)

வாலிபன்:—"நங்காய்! நீ எதற்கும் அஞ்ச வேண்டாம்' என்னிடம் எதைப்பற்றி வேண்டுமாயினும் வினவலாம். பதில் கூற நான் தயாராக யிருக்கின்றேன்."

குல்செஹ்ரா:—"அப்படியானல், எனக்கு இணையற்ற உதவி புரிந்த "தாங்கள் யார்" என்பதை நான் உணர்ந்து கொள்ள விரும்புகின்றேன். தெரிவிப்பீர்களாயின் அதிக நன்மையாகும்."

வாலிபன்:—"காரிகையே! இந்த ஒரு விஷயத்துக்கு மாத்திரம் இப்போது பதில் கொடேனுகையால் வருந்துகிறேன். இதற்குரிய காலம் சமீபித்தவுடன் நான் யார்? உனக்கு ஏன் உதவி புரிகின்றேன். என்பதை நீயே நன்குணர்ந்து கொள்வாய்."

இதைக் கூறி முடித்தவுடன் வாலிபன் உள்ளத்தில் ஏதோ ஓர் அவசிய யோசனை திடுமென உதித்தது. சற்று நேரம் மௌனித்தாலோசித்து முடிவு செய்தான். பிறகு குல்செஹ்ராவை நோக்கி, "நங்காய்! நாம் உனது வீட்டை விட்டு வந்த பின்னர் உனது அன்னைக்கு என்ன சம்பவித்ததென்பதை இதோ இரண்டொரு நிமிஷங்களுக்குள் தெரிந்து வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு வாலிபன்

வெகு அவசரமாய் வெளி ஓடி வந்து தனது சுறுசுறுப்பான குதிரையின் மீது பாய்ந்து ஒரே தாவில் ஏறி உட்கார்ந்தான். அக்குதிரை அடுத்த விநாடி அவன் சமிக்ஞைப்படி கோரிய திசையை நோக்கிச் சென்று மறைந்தது.

மீண்டும் அவ்விள வாலிபன் ஐந்து நிமிஷத்துக்குப் பின் திரும்பி வந்து வெகு உக்கிரத்தோடு, குல்செஹ்ராவின் முன் வந்து "நங்காய்! பச்சா ஸக்கூவின் அந்த அயோக்கிய சிப்பாய்கள் உனது அன்னையையும் இரு வேலைக்காரிகளையுங்கூட விடாது சிறையிட்டுச் சென்று விட்டார்கள். எனினும் நீ ஒருசிறிதும் மனங் குழைய வேண்டாம். **"இன்ஷா அல்லாஹ்"** ஆண்டவன் கருணையால் கூடிய சீக்கிரத்தில் அம்மூவர்களையும் சிறைச்சாலையிலிருந்து தப்ப வைத்து இங்கு உன்பால் கொண்டு வந்து சேர்த்து விடுகின்றேன். இது நிச்சயம்" என்று தைரியமூட்டினான்.

வாலிபன் கூறிய மெய்யான ஆறுதல் மொழிகளால் குல்செஹ்ராவின் மனமானது ஒருவாறு நிம்மதி யடைந்தது. ஆனால் அவள் பசுவைப் பிரிந்த கன்றைப்போல் ஏங்கினாள். தன்னை யீன்று வளர்த்தத் தாயை க்ஷேமமாய் தன்னருகே காண பேராசைக் கொண்டு வாடினாள். ஆயினும்வாலிபனின் உறுதி மொழியில் அவளுக்குப்பூரண நம்பிக்கை யிருந்தது.

பிறகு அன்று மாலை அவ்விளைஞன் மீண்டும் குல்செஹ்ராவினிடம் வந்து "நங்காய்! ஓர் அவசியக் காரியத்தை முன்னிட்டு நான் வெளியே செல்ல வேண்டியவனாயிருக்கின்றேன். துணையில்லையென்று நீவிர் ஒரு சிறிதும் அஞ்சாது என் தங்கை பரீபானுவுடன் சந்தோஷமாயிருப்பாயாக. நான் செல்லும் நம் கோரிக்கைக்கவசியமான காரியத்தில் அல்லாஹுதஆலா எனக்கு வெற்றியை அளிக்க வேண்டுமென்று ஐங்காலத் தொழுகையின் பின்னும் பிரார்த்தனைப் புரிவாயாக. நான் போய் வருகின்றேன். அஸ்ஸலாமு அலைக்கும்."

என்று கூறிவிட்டு வெளிவந்து வழக்கப்படி அதி இலேசாகப் பாய்ந்து தன் குதிரை மீதாரோகணித்துக் கொண்டு அசுவத்தை தூண்டி விட்டான். அடுத்த விஞடியில் குதிரை மாருதம்போல் பறந்தோடி ஒரு பக்கல் மறைந்தது. வாலிப வீரன் இங்ஙனம் சென்று விட்டபின் நமது குல்செஹ்ரா அதிகமான சஞ்சலத்துளாழ்ந்திருந்தனள். அவளது துக்கமேலீட்டால் அவளது கருநிறக்கண்களினின்று பலநீர்த்துளிகள் முத்துசரம்போல்தொடர்ந்து சிந்தின. இந்நேத்திரப் பாஷ்பமானது வாலிபனை இரு வாரங்கள் மட்டும் பிரிந்தமைக்காகவென்று உதிர்ந்ததோ! அல்லது சிறையிலடைபட்டுக் கிடக்கும் அன்னையின் பிரிவாற்றுமைக்காக உதிர்ந்ததோ! வென்னும் ரகஸ்யங்கள் இச்சந்தர்ப்பத்தில் எவருக்கும் புலனுகாததாயிருந்தன. இத்தகைய இருவித சஞ்சலங்களுள் மூழ்கி பட்டுத்தேறியவர்களே இதன் தன்மையை உணரவல்லார்கள். கண்ணீர் சொரிந்த காரணத்தை பரீபானு பல முறை வினவியும் குல்செஹ்ரா விளக்கமான உண்மை பதிலே கூறவில்லே.

இவ்வாறே குல்செஹ்ராவின் மாபெரும் ஏக்கக் குன்றுகளே யெல்லாம் கடந்து கொண்டு பதினைந்து நாட்கள் கழிந்து விட்டன. அடுத்த பதினாறும் நாட்டதிகாலேயில் வெளிக்கதவு தட்டப்பட்டது. நமதிளங்கொடியாள் குல்செஹ்ரா எழுந்தேகி கதவைத் திறந்தனள். சிகப்பு முக மூடியணியும் வீர இளைஞன் குல்செஹ்ராவுக்கு வந்தனே நமஸ்காரம் புரிந்தவனுய் உள்ளே பிரவேசித்தான். தன் முக மூடியை விலக்கித் தன் முகத்தைக் குல்செஹ்ராவுக்குக் காண்பித்தான். அவனது முகாரவிந்தம் புன்முறுவல் பூத்து நகை மலர்ந்து கொண்டிருந்ததைக் கண்ணுற்று நம் காரிகையாள் குல்செஹ்ரா மனம் பூரித்துக் களிபேறுவகைக்கொண்டாள். எனவே வாலிபனை விளித்து 'நண்பீர்! தாங்கள் கோரிச் சென்ற கைங்கரியம் வெற்றியுடன் பூர்த்திப் பெற்றதா?' என்று வினவி நின்ருள்.

அதற்கு அக்காளைப் புருஷன் தன் மல்லியரும்பு போன்ற தந்த வரிசைகளை ஒரு சிறிதே வெளிக்குக் காட்டியவனாக குறுநகைப் பூண்டு, "ஆம்! கருணை மிக்க அல்லாஹ்வினருளால் என் முயற்சி யெல்லாம் பயனடைந்தது. எனது பிராப்தமும் ஒருவாறு சித்தி யடைந்தது." என்று பொதுப் படையாய் பதில் கூறினன்.

அதன் கருத்தை ஐயமற உணர ஆவல் கொண்டவளாய் நம் குல்செஹ்ரா, "அப்படியாயின் சந்தோஷமே, ஆனால் தாங்கள் கோரிச் சென்ற காரியம் யாதென எனக்குத் தெரிவித்தல் கூடாதா?" என்று மீண்டும் வினவினள்.

அதற்கு நம் இளைஞன், கன்னிகையைப் புன்சிரிப்புடன் நோக்கி, "அதை அவசியம் தெரிந்துகொள்ள வேண்டுமா? அப்படியாயின் என்னுடன் வா." என்று நங்கையை அவ்வில்லத்தின் வெளிப்புறப் பலகணி யருகே யழைத்துச் சென்று அந்த ஜன்னலைத் திறந்து தெருவிலொரு காட்சியைக் காட்டினன். குல்செஹ்ரா அங்கு யாது கண்டாளெனின்? ஆஜானுபாகுகளாயும் போருக்குரிய உடை பூண்டவர்களாயும் சகல ஆயுதங்களையும் ஆயத்தமாய்ப் பெற்றவர்களாயும் எழுபது சுத்த வீரர்கள் குதிரை மீதேறியவர்களாய் வீட்டெதிரே வரிசைப்பட நின்றிருந்தனர். நம் வாலிபனின் முகத்தில் இருப்பது போன்ற சிகப்பு நிற முகமூடி அவர்களெல்லோர் முகத்தின் முன்னும் தொங்கிக்கொண்டிருந்தன. இந் நூதனக் காக்ஷியை கண்ட குல்செஹ்ரா வியப்படைந்தாளாயினும், தன் அன்னையின் ரக்ஷிப்புக்கும், வேலைக்காரிகளின் விடுதலைக்கும் கதிமோக்ஷம் கிடைத்து விட்டதென்றே மனப்பால் குடித்து பூரித்தனள்.

இங்ஙனம் ஒரு யுவனும் யுவதியும் ராணுவத்தைபார்த்துக்கொண்டிருக்குங்கால், மற்றொரு யுவதியான பரீபானு வெகு அவசரத்தோடு ஓட்டோடியும் வந்து நின்றாள். ஆத்திரத்தோடு நாக்குழறிய வண்ணம். "அண்ணா! நாம் என்ன

செய்வது? நம் சகோதரி குல்செஹ்ராவுக்கு இன்னும் மேன்மேலும் துன்பமே சம்பவிக்கிறதே. நமது குல்செஹ்ரா தானே பச்சா ஸக்கூ தர்பாருக்குவந்து சேர்ந்து விட வேண்டுமென்றும், ஒரு வாரத்துக்குள் அங்ஙனம் வரத்தவறினல் குல்செஹ்ராவின் தாயை சித்திரவதைச் செய்து கொன்று விடுவார்களென்று இன்றுடன் தண்டோரா அடித்து ஏழு நாட்கள் கழிந்துவிட்டனவென்றும், நாளைக்கு அந்த அன்னையாரை கொன்று விடுவார்களென்றும், உடனே குல்செஹ்ராவை எங்கிருந்த போதிலும் மீண்டும் பிடித்துவர பல சிப்பாய்கள் அனுப்பி வைக்கப்படுவார்களென்றும் எனக்குத் தெரிந்த பலர் கூற நான் இன்று கேள்விப்பட்டேன். அந்தோ!” என்றுபிதற்றினள்

இளமகள் குல்செஹ்ராவின் நெஞ்சத்தை இக் கடிவசனங்கள் பிளந்துவிட்டன. அவள் பதறினள். கண்ணீர் வடிந்துப் பிரலாபித்தாள்.

நம் வாலிப வீரன் மனங்குழைந்த காரிகையாளை நோக்கி, “மங்கை நல்லாள்! இதற்காக நீ அஞ்சி விடாதே. இன்றிரவிற்கே நான் எனது வீர சகாக்களோடு சிறைக்கூடம் சென்று உனது அரும் அன்னையையும், இரு தாதிமார்களையும் நிச்சயம் விடுவித்துக் கொணர்ந்து உன் சமுகத்தில் விட்டு விடுகின்றேன். இதை உறுதியென நீ நம்பு” என்று தேற்றினன்.

இங்ஙனம் அன்றெல்லாம் பன்முறை குல்செஹ்ராவுக்கு தைரியத்தை கூறிக்கொண்டிருந்தான். பகற்போது சென்று மாலை நேரம் வந்தது. சிறுகச் சிறுக இராக் காலமும் நெருங்கிற்று. நிசியின் அந்தகாரத்தை எதிர்பார்த்திருந்த நம் யௌவன வீரன் துணிந்தெழுந்தான். தன் முகத்தில் சிகப்பு முகமூடியை போட்டுக் கொண்டான். குல்செஹ்ராவினிடமும், தன் தங்கை பரீபானுவினிடமும் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வெளிப்புறம் வந்து தன் துணிச்சலான குதிரை மீது

ஆரோகணித்துக் கொண்டான். போர்க்களத்துத் தலைவனே போல் மத்தியத்தில் நின்றுக் கொண்டு சிறு ஊதுகுழலொன்றை யெடுத்து விசில் ஊதினன். இக் கீச்சொலியைக் கேட்ட எழுபது குதிரை வீரர்களும் மறைவிடங்களிலிருந்து புற்றீச்சல்களே போல் வெளிவந்து வாலிபன் முன் வீரஞ் செறிய வரிசைப்பட நின்றனர். இக் காக்ஷிகளையெல்லாம் வீட்டினுள்ளிருந்து பலகணிவழியே இரு யுவதிகளும் வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றனர். வாலிபன் தன் சிறுகைகுட்டையை குதூகலத்தோடு அவர்களுக்குக்காட்டி ஆட்டி, சமிக்ஞையால் சென்றுவர விடை கேட்டனன். இரு மங்கை நல்லாரும் தங்கள் கரங்களையாட்டி விடை தந்ததோடு சுகமே சென்று வெற்றியோடு திரும்பி வருமாறு அல்லாஹ்வினிடம் பிரார்த்தனையும் புரிந்தனர்.

அடுத்த நிமிஷம் வாலிபனின் உத்திரவுப்படி எழுபது குதிரை வீரர்களும் ஒரு மிக்க தம் குதிரைகளை துரிதமாய் நடத்திச் சென்றனர். இவர்கள் செய்கையை பார்வைக் கெட்டியவரை இரு நங்கையரும் பார்த்து நின்றனர். காட்சி மறைந்ததும், நமது குல்செஹ்ரா தொழுகைக்குரிய விரிப்பை (முஸல்லாவை) யெடுத்து விரித்து கிப்லாத்திசையை நோக்கி அல்லாவுக்காக இருரக்கஅத் தொழுது முடித்து இரு கரங்களையும் மார்புக்கு நேரேந்தி "சர்வபுகழுக்கு முரிய ஆண்டவனே! பாபிகள் ரக்ஷகனே! ஏழைகட் தயாபரனே! ரஹ்மானே! ரஹீமே! நீயே எங்களுக்கு நேர்ந்துள்ள வில்லங்கனங்களை தீர்க்கவல்லாய். உனது திருச்சன்னிதானத்திலேயே எங்கள் சென்னியின் வணக்கம் உரித்தானதாகும். ஆபத்பாந்தவன் நீயே! ஆதலின் எமது வாலிப நண்பர் என்தாயையும் அடிமைப் பெண்களையும் விடுவிக்கச் செல்லும் காரியத்தை முடித்தளிப்பாயாக. ஆமீன்!" என்று வேண்டி முடித்தாள்.

இரவு மணி பத்திருக்கும். எங்கும் காரிருள் சூழ்ந்திருந்தது. சிகப்பு முகமூடி யணிந்த வாலிப வீரன் தன்னைப்

போன்ற எழுபது வீர சகாக்களோடு காபுல் நகர் அரசியல் சிறைச்சாலைக்கு அருகே தன் குதிரையை நிறுத்தினர். சிறைக்கூட்டத்துள் சிறிது சந்தடி காணப்பட்டமையால் எல்லீரும் இன்னு மிரண்டுமணி நேரம்மட்டும் இருட்டிடங் களில் மறைந்து நின்று,புரியவேண்டிய காரியாதிகளையுன்னி ஆலோசித்துக் கொண்டிருந்தனர்.

மீண்டும் அரண்மனைக் கடிகாரத்தில் மணி பன்னிரண் டடித்தது சிறைக்காவலரெல்லோரும் சந்தடி யற்றுக் காணப்பட்டனர். சிறை வாயற்படிகளில் இரண்டொரு வரைத் தவிர்த்து ஏனைய காவலரெல்லோரும் மூலைக்கொரு வராக குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தனர்.

இவற்றை யெல்லாம் நம் வாலிபன் மாறு வேடத் தோடு சிறைக்கூடத்துட் சென்று முன் ஜாக்கிரதையாகவே பார்த்து வந்து விட்டான். எனவே எல்லா வீரர்களையும் சிறைக்கூடத்தைச் சூழ்ந்து நிற்குமாறு ஆக்ஞையிட்டான். ஒரு சில பராக்கிரமசாலிகளை மட்டும் உடன் அழைத்துக் கொண்டு உட்பிரவேசிக்கத் துணிந்தான். காவற்கூடத்தின் பாராக்காரன் வாயற்படிக்குக் குறுக்கே படுத்துக் கொண்டு சிறு தூக்கத்துளாழ்ந்து கிடந்தான். அவனிடுப்புக் கச்சை யில் சிறையறைகளின் திறவுகோல்களின் கொத்து தொங் கிக் கொண்டிருந்தது. தந்திரத்தல் மிகைத்தவனான நம் வாலிப வீரன் அக்காவற்காரனின் இடுப்பிலிருந்து அந்தச் சாவிக்கொத்தை மெதுவாக உருவிக் கொண்டு, அவற்றி னின்றொரு திறவுகோல் கொண்டு சிறை வாயற்கதவின் பூட்டில் நுழைத்து திருகத் தொடங்கினான். அதற்குள் வேறொரு பகுதியில் பாராக் கொடுத்துக் கொண்டிருந்த காவற்காரனொருவன் இதை கண்டு கொண்டு "திருடன்! திருடன்! பிடியுங்கள்! எழுங்கள்!" என்று பெருத்தக் கூச்சல் போட்டுவிட்டான். உடனே உறங்கிக்கொண்டிருந்த காவற்காரர்களெல்லோரும் விழித்தெழுந்து கொண்டார் கள். தங்கள் உடைவாட்களை ஒருமிக்க உருவிக் கொண்டு

வாலிபனை நோக்கி ஓடி வந்தார்கள். சிறைக்கூட முழுதும் பெருங் குழப்பமும் இரைச்சலுமாய் விட்டன.

எதற்கும் அஞ்சாத சுத்த வீரனாகிய முக மூடிய வாலிபன் சாவியை அப்படியே கதவுடன் விட்டு விட்டுத் தன் வலக் கரத்தால் தன் கூரிய நெளிந்த உடைவாளை எடுத்துக் கொண்டான். இடக் கரத்தால் ஊதுங் குழலை எடுத்து சீட்டி யடித்தான். அதற்குள் காவற்காரர்களும் வாலிபனை மிகவும் நெருங்கினர். இளைஞன் ஒரு கரத்தில் கத்தியையும் மறுகரத்தில் கைத் துப்பாக்கியையும் நீட்டிப் பிடித்துக் கொண்டு, காவற்காரர்களை மிரட்டி கடிய குரலில் (ஏளனமாய் சிரித்துக் கொண்டு) "ஏ அதமர்களே! நீங்கள் உங்களுங்கள் உயிர்களை பாதுகாத்துக் கொள்ள விரும்புவீர்களாயின் உங்கள் கரங்களிலுள்ள கத்தியை என்முன் கீழே பேட்டுவிட்டு, அப்பால் விலகி நில்லுங்கள்! அஃதின்றி ஒரு அணுவளவேனும் மாறுபட நடக்கத் துணிவீர்களாயின், இந்த க்ஷணமே உங்களெல்லோரையும் ஆவியுலகமனுப்புவேனென்பது திண்ணம். நாங்க்ள் ஒரு சிலர் தான் இருக்கின்றோமென மமதை கொள்ளாதீர்கள். அதோ! அந்தப் பக்கம் திரும்பிப் பாருங்கள்." என்று ஒரு பக்கப் கரத்தை சுட்டிக் காட்டினான்.

காவற்காரர்கள் தம் சிரத்தைத் திருப்பி முப்பக்கமும் நோக்கினர். பயந்து நடுக்குற்றுப் போயினர். ஏனெனின் வாலிபனின் ஊதுங் குழலோசையை கேட்டதும் எழுபதில் எஞ்சிய வீரர்களெல்லோரும் ஆளுக்கொரு கைத் துப்பாக்கியையும் கத்தியையும் கையிற் தாங்கியவர்களாய் காவற்காரர்களைச் சூழ்ந்து வளைந்து நின்றுக்கொண்டனர். எனவே காபுல் சிறைச்சாலை சேவகர்களெல்லாம் இருதலைக்கொள்ளி எறும்புகளே போல் போக்கிடமற்று தட்டுக்கெட்டுத்தயங்கி நின்றனர். வாலிபனின் ஏளனச் சிரிப்பும் மிரட்டல் மொழிகளும் அவர்களையெல்லாம் உயிருள்ள நடைபிணங்களாக்கின. ஆயினும் வாலிபனை யெதிர்க்க அவர்களுக்குத் தைரியம் பிறக்கவில்லை.

கத்திகளைக் கீழே போட்டுவிடும்படி இரண்டு மூன்று முறை வாலிபன் கூறிப் பார்த்தான். காவற்காரர்கள் சற்றுத் தயங்கினர். உடனே செம்முகமூடிய நம் இளைஞன் தமதாட்களை நோக்கி, "வீரச்சோதரர்காள்! துணியுங்கள்! அவ்வதமர்களுடைய கத்திகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டு அவர்களை அப்புறம் நகரவொட்டாமல் இறுகச் சூழ்ந்துக் கொள்ளுங்கள் உங்களை யெதிர்க்கத் துணிவார்களாயின், வெறிக்கொண்ட நாய்களைக் கொல்வது போன்று சுட்டு வீழ்த்துங்கள்." எனக் கட்டளையிட்டான்.

இதைச் செவியுறவே காவற்கூடச் சேவகர்கள் துப்பாக்கிப் பயத்தால் வாய்பேசாது தங்கள் தங்கள் கத்தியாயுதங்களை கீழே போட்டுவிட்டனர். முகமூடிய வீரர்கள் அவர்களைச் சூழ்ந்து நெருங்கிக்கொண்டனர்.

பிறகு உடனே நம் வாலிபன் தமதாட்களை நோக்கி "அன்பீர்! அங்ஙனமே சற்று நேரம் சூழ்ந்திருங்கள். அதற்குள் சாலையைத் திறந்து கைதிகளை விடுவிக்கின்றேன்" என்று கூறிவிட்டு அஞ்சா நெஞ்சத்தோடு தனியே சிறைவாயலை யடைந்து பல கதவுகளையும் திறந்து எல்லாக் கைதிகளையும் வெளியே அழைத்து யதேச்சையாய் செல்லுமாறு உத்திரவிட்டான். இன்றே தங்கட்கு பரலோக சாம்ராஜ்ஜியமும் மோக்ஷமும் கிடைக்கப் பெற்றவர்களேபோல் அடைபட்டுக் கிடந்த எளியோர்களெல்லோரும் ஒருமிக்க வெளியே வந்தார்கள். வாலிபன் ஒவ்வொருவர் அங்க அடையாளங்களையும் பார்த்துப் பார்த்து வெளியே விட்டான். தான் அத்தியாவசியமாய் வேண்டி வந்த மூன்று நபர்களில் குல்செஹ்ராவின் வீட்டு வேலைக்காரிகளான இருவர் மாத்திரமே காணப்பட்டனர். ஆனால் குல்செஹ்ராவின் உயிர்ப் பொருளான அன்னை அந்தச் சிறைகூடத்தி லெல்லாம் காணக்கிடக்கவேயில்லை. எனவே இளங் காளையனான நம் வாலிப வீரனுக்கு கோபச் செந்தணல் மூண்டெழுந்தது. தலைமைக் காவற்காரனை பிடித்

திமூத்து முன் நிறுத்திக்கொண்டு கடுமையாய் வினவலானன்:—

வாலிபன்:—"சேவகரே! மரியாதையாக உண்மையைக் கூறிவிடு! குல்செஹ்ரா வந்து சேராவிட்டால் சித்திர வதைச் செய்துக் கொன்று போடுவதாய் கூறப்பட்ட அந்தப் பெரியம்மை எங்கே? எங்கே கொண்டு ஒளித்து வைத்திருக்கின்றீர்?"

தலைமை காவலன்:—(தட்டுக் கெட்டுத் தடுமாறி) "அந்த விஷயம் எனக்குச் சிறிதும் தெரியாது."

வாலிபன்:—"ஏ அதமா! நீ என்னை ஏமாற்றப்பார்க்கின்றாய். நிச்சயத்தைக் கூறிவிடு. இன்றேல் இந்த க்ஷணமே உன் உயிரை"...............

தலைமை காவலன்:—"வேண்டாம்! எப்போதும் நான் பொய்பேசுவதில்லை."

வாலிபன்:—"ஆம்! எப்போதும் பொய் பேசுவதில்லை! ஆனால் இப்போது மட்டும் பேசுகிறாயா? மடையா மரியாதையாகக் கேட்டால் நீ உண்மை கூறமாட்டாய். இரு இதோ வருகின்றேன்."

என்று கூறிவிட்டு, வாலிபன் தான் விடுவித்த கைதிகளை யெல்லாம் பார்த்து "சகோதரர்காள்! நீங்களெல்லாம் சிறையை விட்டும் விடுவிக்கப்பட்டு விட்டீர்கள். எங்கு வேண்டுமானாலும் இனி யதேச்சையாய்செல்லலாம்" என்று அன்பு நிறைந்த மொழிகளால் கூறினன். அதில் சில கைதிகள் வாலிபனை நோக்கி, 'கருணைப் புருஷரே! தாங்கள் யாரென்று தயைகூர்ந்து தெரிவிக்கக் கோருகின்றோம்' என்று வினவினர். அதற்கு வாலிபன் "நான் சிகப்பு முகமூடி யணிந்தவன்" என்று மட்டும் பதில் கூறி முடித்தான். இளைஞன் ஆக்ஞைப்படி இரு அடிமைப் பெண்களைத் தவிர்த்து மற்றெல்லாக் கைதிகளும் வெளியேறிச் சென்று விட்டனர்.

அதன் பின் நம் செந்நிற முகமூடி யணிந்த வாலிபன் குல்செஹ்ராவின் இரு வேலைக்காரிகளையும் நோக்கி, "உங்கள் எஜமாட்டியை எங்கே சிறையிட்டு வைத்திருக்கிறார்களென்பது உங்களுக்கேனும் தெரியுமா?" என்று வினவினன்.

வேலைக்காரிகள்:—"அன்பரே! அந்த அம்மாள் இப்போது வைக்கப்பட்டிருக்கும் இடம் தெரியாது. இத்தனை நாள் எங்களுடன் தான் சிறைவைக்கப்பட்டிருந்தார். ஆனால் இன்று மாலை சரியாக ஆறுமணிக்கு சேவகரில் ஒருவன் வந்து அந்த அம்மாளை பலாத்காரமாய் அழைத்துச் சென்று வேறோர் சிறையறையில் அடைத்துவிட்டனனாம்."

வாலிபன்:—"பெண்மணிகாள்! அந்த சிறையறை எங்கு இருக்கிறதென்பது உங்களுக்குத் தெயுமா?"

வேலைக்காரிகள்:—"தெரியாது."

வாலிபன்:—"சரி! போகட்டும் அப்படியானால் உங்கள் தலைவியை பிடித்துச் சென்ற சேவகனையேனும் அறிந்துச் சொல்ல முடியுமல்லவா?"

வேலைக்காரிகள்:—"ஓ! இன்னொரு முறை அவன் எங்கள் கண்முன் காணப்பட்டால் இவன்தான் என்று நிச்சயமாய் சொல்லி விடுவோம்."

வாலிபன்:—"அப்படியானால் என்னுடன் வாருங்கள்!" (என்று அவ்விரு அடிமை பெண்களையும் அழைத்துச் சென்று, தன் சகாக்களால் சூழப்பட்டு நிறுத்தப்பட்டுள்ள சிறைக்கூட காவற்காரக்குழுவை காண்பித்து) "இவர்களில் எவன் என்பதை கண்டுபிடித்துக் காட்டுங்கள்."

வேலைக்காரிகள் காவற்காரர்கள் எல்லோரையும் ஒவ்வொருவராக ஆழ்ந்த நோக்கத்தோடு பார்த்துவந்தனர். வேறொருவன் முதுகுக்கு பின் ஒளிந்துகொள்ள முயன்று கொண்டிருந்த ஒருவனை இப்பெண்கள் திடுமென சுட்டிக் காட்டி, "இவன் தான்! இவனே தான்! எங்கள் தலைவியை இழுத்துச் சென்று வேறெங்கோ சிறையிட்டவன்" என்று கூறினர்.

வாலிபன் அந்த காவற்கார அயோக்கியனை இடக்கரத்தால் பூனைக் குட்டியைப்போல் பற்றியிழுத்து முன் நிறுத்திக்கொண்டு வினவலானான்.

வாலிபன்:—"அடே! விஷமி! நான் யார் என்பதை நீ தெரிந்துகொண்டிருந்தால் என்னை ஏய்க்கத் துணிந்திராய். இன்னும் கூறுகிறேன் கேள், "சிகப்பு முக மூடியணிந்தவனை" என்னிடம் பொய் சொல்வதை உபயோகப்படுத்துவாயாயின், உன் கதி அதோகதியாகுமென்பதை நம்பு. அந்தப் பெரிய மனுஷியை எந்த இடத்தில் சிறையிட்டிருக்கின்றாய்?"

காவற்காரன்:—"அய்யா! இந்தப் பெண்கள் பொய் சொல்லுகிறார்கள். நான் அந்தக் காரியத்தைச் செய்யவேயில்லை."

வேலைக்காரிகள்:—(குறுக்கிட்டு) "அவன் அயோக்கியன்! அவன் நாசமாய்ப்போக. பொய்ச் சொல்லுகிறான். இவன் தான் இழுத்துச் சென்றான்."

வாலிபன்:—(சேவகன் கன்னத்தில் பளீரென ஓர் அறைவிட்டு) "போக்கிரிப்பயலே! அந்த அன்னையை எங்கே கொண்டு போய் சிறையிட்டாய்! சொல்லுகின்றாயா? உதைப்பட்டு சாகின்றாயா?"

காவற்காரன்:—"வேண்டாமய்யா! அதைப்பற்றி எனக்கொன்றுமே தெரியாது' (என்று மழுப்பினான்.)

கன்னத்தில் அறை விழுந்துங்கூட உண்மையைசொல்லாமல் சாதிக்கின்றானே என்றொரு பக்கல் சிரிப்பும், அக்காவற்காரனின் விஷமத்தனத்தையுன்னி கடுங் கோபமும் வாலிபன் மனதில் உதித்தன. இளைஞன் கண்களில் தீப்பொறி பறந்தன. மெல்லிய அரும்பு போன்ற அவனது சிறிய வீர மீசை துடித்தது. அவனால் தனக்குண்டான ஆத்திரத்தைத் தாங்க முடியவில்லை. எனவே, வாலிபன் இடது கரத்தால் அந்தச் சேவகனை பிடித்திழுத்து

முகத்தில் ஒரு குத்தும், இடுப்பில் ஒரு உதையும் பலமாக விட்டான். உடனே அவன் வேரற்ற மரம் போல் மண் மீது சாய்ந்தான். அந்த க்ஷணமே வாலிபன் அவன் மார்பில் தன் வலது முழங்காலை ஊன்றி அவன் கழுத்தண்டை கையால் அழுத்திக் கொண்டு "அயோக்கியப் பயலே! உண்மையைக் கூறிவிடுகின்றாயா? அல்லது உன் கழுத்தை நெறித்து உன் உயிரைப் போக்கட்டுமா?" என்று கடிந்து மொழிந்தான்.

தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதென்றால் எல்லோருக்கும்பிரியமே.எனவே வாலிபனுடைய கொடிய தண்டனைக்கஞ்சிவிட்ட காவற்காரன் மூச்சுத் திணறிக் கொண்டு "அய்யா! அய்யா! என்னைக் கொல்லவேண்டாம்! கழுத்தினின்று கையை எடுங்கள் நெஞ்சினின்று காலை யெடுங்கள். சத்தியமாக" உண்மையைக் கூறி விடுகின்றேன்." என்று தணிந்த குரலில் உயிருக்கு மன்றாடினன்.

வாலிபனுக்கு அவன் மீது இரக்க முண்டானது. எனவே அவனைவிட்டு எழுந்து நின்றான். மீண்டும் வாலிபன் சேவகனைக் கடிந்து, "எழுந்திரு! நட. அந்தம்மாளை நீ சிறைப்பிட்ட இடத்தை காட்டு" என்று கடுத்தக் குரலில் வெடுக்கென்று வினவினன்.

இளைஞனின் வீரத்தைக் கண்டு நடுக்குற்றுப் போன காவற் சேவகன், தப்பிக்க வேறு வழியற்றவனாகி வாலிபன் ஆக்ஞைக்குட்பட்டான். எனவே அவன் வாலிபனை அழைத்துக் கொண்டு ஆங்கு சுவற்றுடன் சுவராக யொட்டிக் காணப்பட்ட கதவொன்றைத் திறந்து கொண்டு, அதன் இரகசியப் பாதை வழியே சிறிது தூரம் அழைத்துச் சென்றனன். இவ்விருள் கம்மிய பாதையைக் கடந்ததும் அங்கோர் அறைக் காணப்பட்டது. இதுதான் குல்செஹ்ராவின் அன்னையை அடைத்து வைத்திருக்கும் கொடிய காவற்கூடமாகும். வாலிபனை அழைத்துச் சென்ற காவர்காரன் அங்கு தரையில் கிடத்தப்பட்டிருந்த பரப்புக்

கல்லொன்றை பெயர்த்தெடுத்தான். அதற்குள் குழியி லொன்றில் அச்சிறைக் கூடத்துக்குரிய திறவுகோல் காணப் பட்டது. அதைக் கொண்டு காவற்கூடத்தின் இறுகிய கதவைத் திறந்தனன். வாலிபனும் சேவகனும் உள்ளே நுழைந்தனர்.

அத்தியாயம் 4.

குல்சேஹ்ராவின் அன்னையார் விடுதலை

குல்செஹ்ராவின் அன்னையார் சென்ற பதினைந்து நாட்களாக சிறைவாசத்தில் நல்லுணவும், சுத்த ஜலமும், ஆரோக்கியக்காற்று மில்லாக் காரணத்தாலும், சிறைவாசக் கொடுமையாலும் பெரிதும் நலினமடைந்து, தோலும் எலும்புக்கூடுமாய் விட்டார். அதனினும் அந்தம்மாளை அதிகமாய் வறுத்தியது அந்த அம்மணியை, குல்செஹ்ரா தர்பாருக்குவந்து சோவில்லையானல் சித்திரவதை செய்து விடப்படும் என்று பிரகடனப்படுத்திய கொடிய விஷமே யாகும். இன்னமும் நாளைக் காலையில் தன்னைக்கொல்லக் காவற்காரர்கள் பிடித்துச் செல்லவருவார்களென்று அந்த பெரியம்மாள் நினைத்திருந்தார். எனவே நம் வாலிப வீர னும் காவற்கூடச் சேவகனும் அவ்வறைக்குள் நுழைந்து வரவே, தன்னைக்கொல்லப் பிடித்துச்செல்லவே வேவுகாரர் கள் வருகின்றனரென்று கருதி அப்பெரியம்மை திகில டைந்து விட்டார்.

நம் இளைஞன் அந்தப் பெண்பாலருகே சென்று அங்கு எரிந்துகொண்டிருந்த சிறிய விளக்கினொளியைக் கொண்டு கவனித்தான். அப்பெண்மணி தீராச் சஞ்சலத் தால் குன்றி துரும்புபோல் தேகம் காய்ந்திருந்தமையால் உடனே இன்னவரென்று பழகிய நம் வாலிபனாலும் கண் டுக்கொள்ள முடியவில்லை. உய்த்துணர்ந்து இரண்டாவது

கிமிடத்தில் குல்செஹ்ராவின் அன்னையென்பதை வாலிபன் நிச்சயித்துக்கொண்டான். இஸ்லாமிய சம்பிரதாயப்படி அந்த பெண்மணிக்கு நம் இளைஞன் 'ஸலாம்' செய்தான். தங்களைக் கண்டு நடுங்கிய அந்த அம்மணியாரை நம் வாலிபன் நோக்கி. "அம்மணி! நீங்கள் அஞ்சற்க, நான் தங்களை விடுவித்துச் செல்வதற்கென்றே இங்கு வந்துள்ளேன். உனது யுவமகள் குல்செஹ்ரா எனது இல்லத்தில் அடைக்கலமாயுள்ளாள். அவள் தங்கள் சந்திர வதனத்தைக்காண ஆவற்கொண்டு ஏங்கிக் கிடக்கின்றாள். தாங்களும் தயை கூர்ந்து தாமதியாதுஎன்னுடன் எனதில்லம்ஏகுவீர்களாக!" என்று கேட்டுக்கொண்டான்.

தானடைப்பட்டுள்ள காவற்கூடத்துள் வந்தவன் தமக்கனுகூலம் புரியும் வாலிப வீரனென்பதை யுணர்ந்த அந்த பெரியம்மாள், கதிமோட்சம் கிடைக்கப் பெற்றவரைப் போல் களிப்பெறுவகை கொண்டார். வியப்பும் களிப்பும் அடைந்தவராய் அந்தப் பெண்மணி வாலிபனுடன் சிறைக் கூடத்தை விட்டு வெளியே வந்தார்.

வாலிபன், பச்சை முகமூடிகளணிந்த தனது வீர சகாக்களில் சிலரைநோக்கி. "நண்பர்காள்! நாம் கோரிவந்த காரியம் ஒருவாறு சித்தியடைந்ததென்றேகூறலாம். (சிறை கூடச் சிப்பாய்களையும் காவற்காரர்களையும் சுட்டிக் காட்டி) முதலில் இவர்களை யெல்லாம் பின் கட்டாய் கட்டிப் பிணைத்து விடுங்கள். அப்படியே அந்தக்காதகர்களை யெல்லாம் அவர்கள் காத்து வந்த சிறைக்கூடத்துள் போட்டு அடைத்து விடுங்கள். சிறிதும் அஞ்சாதீர்கள்" என்று கடுமையான ஆக்ஞையிட்டான்.

அவ்வாறே சில நிமிஷங்களுக்குள் வாலிபனின் வீர சகாக்கள் அந்தச் சேவகர்களையும் காவல்காரர்களையும் கடுமையாய்ப் பிணைத்து சிறைக்கூடத்துள் பிடித்துத் தள்ளி விட்டனர். நம் வீர இளைஞன் சிறிதும் அஞ்சாது துணிச்சலுடன் அவர்கள் கன்னங்களிலெல்லாம் ஒவ்வோர் அறை

களை விட்டு விட்டு, வெளியே வந்து பூட்டை யெடுத்துப் பூட்டி விட்டு, அதன் சாவிக் கொத்துகளை தன் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான். தனது சகாக்களை யெல்லாம் வெளியேறிச் செல்லுமாறு ஆக்ஞையிட்டுக் கொண்டே இவ் வாலிபனும் வெளிப் போந்த ஆரம்பித்தான். உள் அடைபட்டுப்போன சேவகர்களும், சிறைக்கூட சிப்பாய்களும் திக்பிரமை கொண்டு பிரலாபித்தனர். கெஞ்சிக் கூத்தாடினர். இவர்களது ஜெபம் ஒரு சிறிதும் நம் வீர வாலிபனிடம் பலிக்கவில்லை. காவற்கூடத் தலைவனும் நம் இளைஞனைக் கெஞ்சி தங்களைத் திறந்து விடாமற் போயினும், திறவு கோல்களையேனும் கொடுத்து விட்டுச் செல்லுமாறு வேண்டினன். காரியமாகு மட்டும் காலைப் பிடிப்பவர்களும் காரியம் முடிந்தபின் கழுத்தைப் பிடிப்பவர்களுமான இவ்வதமச் சிப்பாய்களின் கூப்பாட்டை நம் இளைஞன் செவியில் ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் பிறகும் அச்சிறைக்கூடத் தலைவன் வாலிபனை நோக்கி, "அப்பா! சரி போகட்டும் தங்கள் பெயரையேனும் இன்னதென்று கூறிவிட்டுச் செல்ல மாட்டீர்களா? என்று கெஞ்சினன்.

அதற்கு வாலிபன் "என் நாமமா? எனது நாமம் சிகப்பு முகமூடி யணிந்தவன்—என்பதே." என்று ஒரே வார்த்தையில் மட்டும் பதில் கூறி முடித்துவிட்டான்.

அதன்பின் உடனே நம் வீர இளைஞன் குல்செஹ்ராவின் அன்னையையும் இரு வேலைக்காரிகளையும் வெவ்வேறாய் குதிரைகள் மீது அமர்த்திக்கொண்டு தன் பசுமைநிற முகமூடியசகாக்களையெல்லாரையும் அழைத்துக் கொண்டு தன் னிருப்பிடத்தை நோக்கிச் சென்று விட்டான். (இத்துணைத் தடபுடலும் விபரீதங்களும் சிறைச்சாலையில் மட்டும் நிகழ்வுற்றன. ஊரிலோ வேறு இடங்களிலோ வாலிபனோ அவனது சகாக்களோ எத்தகைய சிறு அனர்த்தமும் புரியவில்லை. சிறைச்சாலைக்கும் அரச அரண்மனைக்கும் சிறிது

தூரமிருப்பதால் இந்த இரைச்சல் வேறு இலாக்காக்காரர் களுக்குத் தெரியவில்லை.)

நிற்க, மெய்யொளிச் சந்தியின் தருணம், அதாவது விடியுங்காலை சுமார் நான்கு மணிக்கு நமது வாலிபன் தன் படை சூழ தனது இல்லத்தை யடைந்து விட்டான். வெளி வாயிற்படியில் நின்றுகொண்டு, பசு நிற முகமூடிய தன் சகாக்களை, எல்லோரும் கலைந்து அவரவரிருப்பிடம் சென்று விடுமாறு கட்டளைப் பிறப்பித்து விட்டான். அடுத்த வினாடியில் எல்லோரும் மறைந்தனர். நம் வாலி பன் மாத்திரம் குல்செஹ்ராவின் தாயையும் இரு அடிமைப் பெண்களையும் தனதில்லத்துக்குள் உபசரித்தழைத்துட் பிரவேசித்தான்.

தன் அன்னையின் பிரிவாற்றாமை யாலும், தங்கட்கு நேர்ந்த வில்லங்கனங்களுக்காகவும் கிலேசமடைந்திருந்த இளநங்கை குல்செஹ்ரா அன்றிரவெல்லாம் துயில்கொள் ளாது விழித்துக்கொண்டே பகவானை ஜபித்துக்கொண் டும், பிரார்த்தித்துக்கொண்டு மிருந்தாள். அடிக்கடி வாயற் படியண்டைவந்து, அன்னையை விடுவித்துக்கொண்டு வரு வதாய் சென்ற செம்முக மூடி யணிந்த யௌவன வீரர் வருகின்றாராவென ஆவலோடு ஓடிவந்து பார்ப்பாள். பன் முறை வராமைகண்டு திரும்பிச்செல்வாள்.

வாலிபன் கதவைத்தட்டவே அவ்விளங்கொடியாள் வெகு ஆவலோடு ஓடிவந்து கபாடத்தைத்திறந்தனள். தனது உள்ளக்கமலமானதாயும், இரு கரங்களான வேலைக் காரிகளும், அதனினும் அரும்பொருளான வாலிப வீரனை யுங்கண்டு பூரித்துப் புளகாங்கிதமெய்தினள். முதலில் இள வீரன் உள்ளே வந்து இளங்கோதையாம் குல்செஹ்ராவை புன்முறுவலோடு ஏறிட்டுப்பார்த்து, "புண்ணிய யுவதி! உனது ஆசீர்வாதத்தாலும், பகவத் பக்தப்பிரார்த்தனைப் பயனினாலுமே சகலமும் வல்ல அல்லாஹுதஆலா எனது இக்காரியத்தில் வெற்றியை அருளினன். இதோ! என்

வாக்குறுதிப்படி உனது அன்னையையும் தோழிகளையும் அழைத்து வந்துவிட்டேன்." என்று கூறி வேறொரு பக்கம் ஒதுங்கி நின்றுகொண்டான்.

கன்றைக் காணாது பன்னாள் அலைந்து திரிந்த பசு கன்றைக் கண்டதும் கிட்ட அணைத்துக் கொள்வதேபோல் சிறைக் கூடத்தில் கிடந்துழன்ற அன்னையார் தன்மகள் குல்சேஹ்ராவை வெகு வாஞ்சையோடு அழைத்தணைத்து நெற்றியை முத்தமிட்டு ஆநந்தபாஷ்பம் சொரிந்தாள். இரு வேலைக்காரிகளும் குல்சேஹ்ராவுக்கு வந்தனம் புரிந்து அவள் பாதந்தொட்டு முத்தமிட்டனர். பிரிந்தவர்கள் ஒன்று சேர்ந்தால் சந்தோஷம் அணைக் கடந்து வழியுமென்பதை சொல்லவும் வேண்டுமா? நால்வரும் ஒரு கண நேரம் இணையில்லாத ஆனந்தமெய்தினர்.

அதன்பின் பூரண அன்புடனும் மரியாதையுடனும் குல்சேஹ்ராவின் அன்னை, நம் வீர இளவாலிபனை நோக்கி, "அன்பரே! தாங்கள் எங்களுக்கு மதிப்பில்லாத பெருத்தப் பரோபகாரம் புரிந்தீர்கள். இந்நன்றியை எங்களாயுட் பரியந்தம் மறக்கவே மாட்டோம். என்னே தங்களின் பராக்கிரமம்! முதலில் எங்களில்லத்தில் மூன்று சிப்பாய்கள் மீதும் வெற்றிக்கொண்டு என் புத்திரியைக் காப்பாற்றினீர். இப்போது அதனினும் அதிகமான வீரத் தனத்தைக் காட்டி எங்கள் இம்மூவர்களையும் வெளியேற்றி பேருதவிப் புரிந்தீர். ஆண்டவன் தங்களுக்கு நற்பாக்கியத்தை யருள்வானாக" என்று அளவுகடந்து போற்றிப் புகழ்ந்தார்.

வாலிபன்:—"அப்படி யொன்றும் நான் விசேஷமாய் பெருங் காரியத்தைச் சாதித்து விடவில்லையே. தம் சமூக சகோதர சகோதரிகளுக் கேற்படும் இன்னல்களை போக்கி அனுகூலம் புரிவது ஒவ்வொரு முஸ்லிமுடைய மதக் கடமையாகும். அதன்படியே என்னாலான இச் சிறு ஊழியத்தைத் தங்களுக்காகப் புரிய முன் வந்தேன். தாங்கள் என்

ஊழியத்தை ஏற்றுக் கொள்வீர்களேல், அதுவே தாங்கள் எனக்களிக்கும் பெருஞ் சன்மானமாம்."

குல்செஹ்ராவின் தாய்:—"மெய்யன்பீர்! தங்களுக்கு இதற்காக நாங்கள்என்றென்றும் அதிகம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இன்னமும் தங்கள் சீரிய நாம தேயத்தைப்பற்றி எங்களுக்குத் தெரிவிக்காமலிருக்கின்றீர். ஆதலின் அதை தெரிவிக்கக் கோருகின்றோம்."

வாலிபன்:—"இவ்விஷயத்தில் மாத்திரம் நீங்கள் இன்னும் சின்னாள் மட்டும் அவசரமடையாதிருக்க வேண்டுகின்றேன். அதன் பின் நான் நீங்களே யாரென்பதை நன்குணர்வீர்கள். இன்றிரவு நீங்கள் அதிகம் சிரமப்பட்டிருப்பதால் சற்று நேரம் துயில் கொண்டு ஓய்வு பெறுங்கள்."

என்று நம் வாலிப இள வீரன் அவர்களுக்குரைத்துவிட்டு, "பரீபானு! பரீபானு!" என்று வீட்டின் பின் கட்டிலிருந்த தன் தங்கையை அன்புக் குரலால் கூவியழைத்தான். இதோ வந்து விட்டேன் என்று கூறிக் கொண்டே இளைஞனின் தங்கை ஓடி வந்தாள். குல்செஹ்ராவின் அன்னையைக் கண்டு "ஸலாம்" செய்து பணிந்தாள். பிறகு வாலிபனை நோக்கி, "ஏன் அழைத்தீர்கள்" என்று வினவி நின்றாள்.

அதற்கு வாலிபன் "தங்காய்" இதோ நிற்கும் இம் மூவர்களும் நமது உண்மை விருந்தினர்களாவர். இவர்களில் எவருக்கும்ஒருசிறியகுறையும்நிகழா வண்ணம் நடந்து கொண்டு உபசரிப்பாய் என்று நம்புகின்றேன். அன்னார் விரும்புவதை யெல்லாம் தடையின்றி அளிப்பாயாக. நான் மீண்டு மொருகாரியமாய் வெளியே செல்ல வேண்டியவனாயிருக்கின்றேன்" என்று கூறிமுடித்து ஆங்குள்ள விருந்தினரெல்லோர்களிடமும் அனுமதிப் பெற்றுக் கொண்டு

வெளி வந்து தன் குதிரை மீதேறிக் கொண்டு ஒரு பக்கல் சென்று மறைந்தான்.

அதன் பின் காபுல் நகர் அணங்கு மணியான குல் செஹ்ராவென்பாள் தன் புதிய ஸ்நேகியான பரீபானுவை நோக்கி, வாலிபனைப்பற்றிப் புகழ்ந்து பேசலானுள்:— "நண்பி! உமது சகோதரர் எக்காலும் அநேகமாய் வெளியில் தானே சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றுர். அப்படியானுல் அவர் இரவு காலம்களில் கூட வீட்டில் சயனிப்பதில்லையோ? அவருக்கு இருப்பிடம் வேறெங்கணுமுண்டா? இன்னும் அவரொரு மகா தீரப் புருஷராய் விளங்குகின்றுர். எங்களுக்காக வென்று தமதுயிரையும் திரணுகமதித்து வீரத்தோடு உபகாரம் புரிந்தார். ஆகவே அவரொரு உத்தமோத்மராவர். ஆண்டவன் அவருக்கு இகபரத்தில் என்றென்றும் மெய்யருள் பாலிப்பானுக. ஆமீன்."

குல்செஹ்ரா விடுத்த வினுக்களுக்குப் பரீபானு பதிலொன்றும் விடுக்க ஒருப்படாது தனது குறுநகை முணங்குதலால் மழுப்பிவிட்டாள். தன் சகோதரனைப்பற்றியோ தன்னைப்பற்றியோ எத்தகைய விருத்தாந்தத்தையும் அவள் கூற சம்மதிக்காதவளேபோல் நடித்துக்கொண்டாள். இவளது மனப்பான்மை முகத்தோற்றத்தால் அனுமானித்துக் கொண்ட குல்செஹ்ரா அவர்களைபற்றி மீண்டும் எதையும் கேட்காமல் அதை விடுத்து, தமது பேச்சுப் போக்கை வேறுத் துறையில் திருப்பிக் கொண்டாள். இங்ஙனம் அன்று நடுநிசிவரை இரு மங்கையரும் சம்பாஷித்துக் கொண்டு, வெளியிற் சென்றிருந்த வாலிப வீரனின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அதன் பின் அவர்களை நித்திராதிக்கம் ஆகூஷித்துக்கொண்டமையால் சயனித்துறங்கி விட்டனர்.

அத்தியாயம் 5.

பச்சா ஸக்கூவின் அட்டகாசம்

மறுநாட் அதிகாலைப் பொழுதுப் புலர்ந்தது. காபுல் நகர் மக்கள் பாலெல்லாம் பரபரப்புக் காணப்பட்டது. அன்று அதி சீக்கிரமாக தர்பாரும் கூடிற்று. பச்சா ஸக்கூ தமது அமீர் ஆனசத்தில் வீற்றுக்கொண்டிருந்தார், அவரருகே மந்திரிப் பிரதானிகள் புடை சூழ்ந்திருந்தார்கள். இடையிடையே பச்சா ஸக்கூவின் அதிகாரத்வனி மற்றையோர் சப்தங்களை காட்டினும் கடுமையாயிருந்து வந்தது. இந்நிலைமையில் ஸகூவின் அரசாங்கத்தைச் சேர்ந்த சிப்பாய் ஒருவன் துண்டுக் கடிதமொன்றை கையிலேந்திகொண்டு தர்பாருக்குள் ஓடிவந்து பச்சா ஸக்கூவுக்கு மிகப் பணிவான சலாம் செய்து சிம்மாஸனக்காலை முத்தமிட்டு நின்றான். மிகவும் குழறிய வண்ணம் மேலும் கூறலானான்:-

சிப்பாய்:—அமீர் ஹுஜூர் அவர்களே! இன்று அதிகாலை நம் காபுல் நகரத்தின்மீது ஆகாய விமானமொன்று வட்டமிட்டுக்கொண்டு வெகு வேகமாய் பறந்துகொண்டிருந்தது. அந்த விமானத்திலிருந்து பல எண்ணற்ற துண்டுப் பிரசுரங்கள் காபுல் நகர் பிரஜைகள்பால் எடுத்தெறியப்பட்டன. அப்படிப்பட்ட நோட்டீஸ்களில் இது ஒன்றாகும். (என்று கூறி தான் கொண்டு வந்த துண்டுப் பிரசுரத்தை சமர்ப்பித்தான்.)

பச்சா ஸக்கூ:—"ஆமாம்! ஆகாய விமானமொன்றும் நம் ஊர்மீது பறந்து போன பேரொலியை யானும் கேட்டேன். இந்த விளம்பரக் கடிதம் அதினின்று கீழே போடப்பட்டது? அப்படியானால் அந்த விமானம் யாருடையது? அந்தப் பிரகடனத்தில் என்ன வரையப்பட்டிருக்கின்றது?"

சிப்பாய்:—“பெரியீரே! அந்த விமானம் காபிர் அமானுல்லாவுடையதாம். அதினின்று கொட்டப்பட்ட விளம்பரத்தில் காபுல் வாசிகள் மீது படை யெடுத்து யுத்தத்துக்கு வரப் போவதாக அந்த அமானுல்லாவின் தரப்பிலிருந்து அறிக்கை யிடப்பட்டிருக்கிறது.”

பச்சா ஸக்கூ:—(வெகு ஏளனமாய் சிரித்து) “அப்படியா! அந்த காபிரா நம் மீது படை எடுத்து வரப் போகின்றார்? அவருக்குக் கெடுங்காலம் நெருங்கி வந்து விட்டது போலும்!”

சிப்பாய்:—“அமீர் பெருமானே! இன்னொருச் செய்தி. இந்தத் துண்டுப் பிரசுரங்களைப் படித்துணர்ந்த நம் நகர் ஜனங்களில் அநேகர் காபுலைவிட்டு வெளி நாட்டுக்குச் செல்ல ஆரம்பித்து விட்டார்கள்.”

பச்சா ஸக்கூ:—(மூர்க்கத்துடன்) “என்ன! என்ன!! நம் ஜனங்களா இங்கிருந்து பயந்தோடுகிறார்கள். வேண்டாம் அவர்களை எல்லாம் வெளியேறச் செல்லவிடாது தடுத்து விடுங்கள். நம்மை விட்டுப் போகத் துணிவோரெல்லோரையும் பிடித்து சிறையிட்டு காவற் கூடத்திலடையுங்கள்.”

சிப்பாய்:—பெரியீர்! அப்படியே யாகட்டும். நான் போகட்டுமா? உத்திரவு அருளவேண்டும்.”

பச்சா ஸக்கூ:—“சற்றுத்தாமதி! நீ உத்தமன். அமானுல்லாவை காபிர் என்று நீ கூறியதற்காகவும், உண்மை சமாச்சாரத்தை என்பால் நீ வந்து ஒளியாமல் சொன்னதற்காகவும் உனக்கு சன்மான மளிக்க விரும்புகிறேன். ஆகவே இனிமேல் நீ எல்லாச் சிப்பாய்களுக்கும் தலைமை ஸ்தானத்தை வகித்து வருவாயாக.”

சிப்பாய்:—“(களிபேறு வகைப்பூண்டு) என் அன்புக்குரிய அமீரவர்களே! நீவிர் நீடூழி வாழ்க! தங்கள் அரசக்

கருணையால் எனது ஏழேழு தலைமுறைக்கும் எனக்கும் இணையற்ற பேருபகாரம் புரிந்துவிட்டீர்கள்."

என்று அந்தச் சிப்பாய் அளவுக்கதிகமாய் அயோக்கிய பச்சா ஸக்கூவை ஸ்துதிப்புரிந்து முடித்து, பச்சா ஸக்கூவுக்கு மீண்டும் பணிந்து சலாம் புரிந்துவிட்டுச் சென்ருன். அவன் சென்றதும் பச்சா ஸக்கூ தமது பிரதம மந்திரியை நோக்கிப் பின்வருமாறுக் கூறலானுர்.

பச்சா ஸக்கூ:—"மந்திரி! நீர் வாக்குறுதிச்செய்து இன்று ஏழுநாட்கள் பூர்த்தியாய் விட்டனவே! அந்தச் சிறுக்கி குல்செஹ்ராவையும் அவளைச் சேர்ந்தோரையும் நீவிர் இன்னும் பிடித்துவந்து என் முன் சேர்ப்பிக்காதிருக்கின்றீர், ஏன்? உமக்கு என்பால் அச்சமில்லையோ?"

பிரதம மந்திரி:—"எங்கள் தலைவரே! அப்படியொரு போதும் தங்கள் கட்டளைக்கு விரோதமாய் நடந்துகொள்ள மாட்டேன். அந்தப் பெண்பாலைப் பிடித்து வருவதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டேன். "அந்த குல்செஹ்ரா தானே நம் தர்பாருக்கு வந்துவிட்டால் தப்புவாள். இன்றேல் அவளுடைய தாயை சித்திரவதைச் செய்து விடுவதாய்" ஊரெங்கும் பறையடிக்கச் செய்து விட்டேன். இந்தச் செய்தி அவளுக்கெட்டி யிருக்கும். அந்தக் குமரிக்கு அவளன்னையின் பால் அதிகமான வாஞ்சையாதலால் அவள் அவசியம் நம் வசப்படுவாள்.

பச்சா ஸக்கூ:—"நல்ல காரியம் செய்தீர்! அப்படியாளுல் சிறைச்சாலைக்கு ஆள்விட்டனுப்பி குல்செஹ்ராவின் அன்னையை என் சமுகத்தில் தர்பாருக்குக் கொண்டு வருமாறு ஏற்பாடு செய் என்றுகூறி முடித்தான்."

பிரதம மந்திரிக்கோ, பச்சா ஸக்கூவுக்கோ அன்றிரவு சிறைக்கூடத்தில் என்ன அமர்க்களம் நடந்ததென்பது ஒரு சிறிதும் தெரியாது. எனவே பிரதம மந்திரி, ஒரு சிப்பாயை அழைத்து, சிறைச்சாலைக்குச் சென்று குல்செஹ்ரா

வின் தாயை தர்பாருக்குக் கொண்டு வருமாறு கட்டளையிட்டனுப்பினன். விஷயமொன்றும் அறியாத இச்சிப்பாயும் வெகு துரிதமாகச் சிறைச்சாலைக்குள் நுழைந்தான். வாயற் படிகளிலோ வேறெங்குமோ ஒரு காவற்காரனையுங்கூட காணவில்லை. திக்பிரமைக் கொண்டு அங்குமிங்கும் தேடினன். எவரும் காணக் கிடைக்கவில்லை.

இறுதியாய், "அய்யா! இந்தப் பக்கம் வருக. உண்மைக் கைதிகளெல்லோரும் தப்பியோடி விட்டார்கள். அவர்களுக்குப் பதிலாக அக்கிரமமாய் நாங்கள் அடைப்பட்டோம். கதவைத் திறந்து எங்களை உடனே விடுவிப்பீராக" என்று பல கூச்சல் சிறைக் கூடத்தினுள்ளிருந்து கேட்டன. சிப்பாய் திரும்பி நோக்கினன். உண்மை கைதிகளுக்குப் பதிலாய் காவற்காரர்களெல்லோரும் சிறையிலடைக்கப்பட்டுக் கிடந்துழல்வதைக் கண்டு வியப்புற்றான். கதவருகே சென்று திறக்க முயன்றான். பூட்டுகள் கடுமையாய் இறுகப் பூட்டப்பட்டிருந்தன. காவற்றலைவனிடம் நடந்த விஷயத்தை வினவினன். செம்முகமூடிய வாலிபனும் அவனது சகாக்களும் நடுநிசியில் வந்து தங்களைத் தாக்கி கைதிகளையெல்லாம் விடுதலைச் செய்துவிட்டு தங்களை அடைத்துவிட்டுச் சென்ற பூராத் தகவல்களையும் சொல்கை கேட்டுணர்ந்தான். இனி செய்யவேண்டுவது இன்னதென்பது அவனுக்கொன்றும் புலனாகவில்லை. பூட்டுகளைத் திறந்து காவலாள்களை விடுவிக்கலாமென்றாலும் பூட்டுக்குரிய திறவுகோல்களில்லை. பெரிய இரும்புத் துண்டொன்றை எடுத்துப் பூட்டை நசுக்கி உடைத்து கதவைத் திறந்து கைதிகளின் கட்டுகளை அவிழ்த்து விட்டான். யாவரும் வெளியே வந்து ஆலோசனை செய்யத் தொடங்கினர்:—

காவற்காரன்:—"(பிரதம மந்திரியாலனுப்பப்பட்ட சிப்பாயியை நோக்கி) "இனி என்ன செய்யலாம்? அமீர் நம்மைக்கடிந்து கொள்வாரே என் செய்வது?"

சிப்பாய்:—'என் செய்வதா? எல்லாம் உங்கள் அஜாக்கிரதைதானே. படுங்கள் கஷ்டத்தை, எனக்கென்ன போயிற்று?' என்று ஒரே அடியாய் கூறிவிட்டான்.

ஆற்றமாட்டாத அந்தக் காவலாளர்களெல்லோரும் திருடனுக்குத் தேள் கொட்டியதேபோல் விழிக்கலாயினர். பாபம்! அவர்களது சுயபுத்தியும் திடுக்கத்தால் மழுங்கிவிட்டது. இங்ஙனமே செய்வதின்னதென்று ஒன்றும் புலப்படாதவர்களாகி, தீயிற்பட்ட புழுப்போல் திண்டாடிக் கொண்டிருந்தனர். இது நிற்க.

தர்பாரிலோ, சிப்பாய் சிறைக்கூடத்துக்கு அனுப்பப்பட்டு வெகு நேரமாகியும், பதிலொன்றும் அவன் மூலம் வராமையைக்கண்டு பச்சா ஸக்கூவுக்கு ரௌத்திராகாரம் பொங்கி யெழுந்தது. எனவே பிரதம மந்திியை அழைத்து "ஏ! வஜீர்! என்ன? குல்செஹ்ராவின் தாய் இன்னுமேன் கொண்டுவரப்படவில்லை? என்னை ஏமாற்றவா நீர் இவ்வாறெல்லாம் நயவஞ்சகமாய் நடக்கின்றீர்?

பிரதம மந்திரி:—"இல்லை! நான் அப்படியெல்லாம் நடந்துகொள்ள மாட்டேன். தங்கள் கட்டளைப்படி அந்தக் கிழவியை அழைத்து வருமாறு சிறைச்சாலைக்கு ஒரு சிப்பாஹியை அனுப்பி வெகு நேரமாய்விட்டது. அவன் காலம் கடத்துகிறானே; அல்லது வேறேதேனும் அங்கு விபரீதம் நடந்ததோ ஒன்றுந் தெரியவில்லை."

பச்சா ஸக்கூ:—"நீர் கொஞ்சமேனும் அச்சமில்லாது பொறுப்பற்றத்தனமாய் நடந்துகொள்கின்றீர். அவனால் தாமதமானால் என் வேறொரு ஆளை அவசரமாய் அனுப்பக் கூடாது? காரியமாகட்டும். சீக்கிரம்!"

பிரதம மந்திரி:—"அமீர்! மன்னிக்க வேண்டும். இதோ இன்னொரு ஆளை அனுப்புகிறேன்."

பச்சா ஸக்கூ:—"ஏ முழு மௌட்டியனே இனி!! மேல் ஆளனுப்பி ஏற்பாடு செய்ய வேண்டாம். ராணுவத் தளகர்த்தர் எங்கே ?"

பச்சா ஸக்கூவின் ராணுவத் தளகர்த்தன்:—"அமீர் இதோ வந்தேன்" என்று முன்னால் வந்து பணிந்து நின்றான்.

பச்சா ஸக்கூ:—"ஏ சர்தரர்! ஒரு கணமும் நேரங் கடத்தாது உடனே ஐம்பது சிப்பாய்களை அழைத்துக் கொண்டு சிறைக்கூடஞ் சென்று, சிறையிலிருக்கும் அந்தக் கிழவி (குல்செஹ்ராவின் அன்னை)யையும் காவற் காக்கும் அயோக்கியர்களையும் பிடித்து இங்கு கொண்டு வந்து சேர் போ! என்று கூறினன்."

ராணுவத் தலைவனான சர்தார் "அப்படியே ஆகட்டும்" என்று பணிந்து விடைப் பெற்றுக்கொண்டு, தனது ராணு வத்திலிருந்து ஐம்பது சிப்பாய்களை அழைத்துக் கொண்டு, சிறைக்கூடத்தை யடைந்தான். அங்கு திக்பிரமை யடைந்து கொண்டு குழுமிக் கொண்டிருந்த காவற்காரர் களை யெல்லாம் பிணைத்துப் பிடித்துக் கொண்டான் சிறைக்கூடத்திலிருக்க வேண்டிய கைதிகள் ஒருவரும் காணப்படவில்லை.

அதற்குள் காவற்காரர்கள் தங்களை ராணுவர்கள் கைது செய்து கொண்டதை யுணர்ந்து நடைப் பிணங்க ளாயினர். "ஏன் எங்களை பிடித்துச் செல்கின்றீர்களென" சர்தாரைக் கேட்டனர்.

சர்தார்:—"அரசர் உத்திரவை நீங்களெல்லாம் ஜாக் கிரதையாய் நிறைவேற்றாமல் அலக்ஷியமாய் நடந்து கொண் டதற்காக கைது செய்யப்படுகிறீர்கள். சரி போகட்டும். குல்செஹ்ராவின் தாய் எங்கே? மற்ற கைதிகளும் எங்கே ?"

காவற்காரன்:—"அய்யா! அந்தக் கிழவியும் அவளது இரு வேலைக்காரிகளும் மற்றெல்லாக் கைதிகளும் நேற்றிரவே செம்முக மூடியால் விடுவிக்கப்பட்டு விட்டார்கள்."

சர்தார்:—"என்ன! ஓடிப்போய் விட்டார்களா? சரி; சரி! அந்த விஷயங்களை யெல்லாம் அமீர் அவர்களிடம் தர்பாரில் வந்து கூறிவிடுங்கள். என்னிடம் முறையிட வேண்டாம்." என்று கடுகடுத்து மொழிந்தான்.

பின்னர் சிறிது நேரத்துக்குள் சர்தாரால் காவற்காரர்களெல்லோரும் பச்சா ஸக்கூவின் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர். ராணுவத்தளகர்த்தன் பச்சா ஸக்கூவுக்குப் பணிந்து கூறலானான்.

சர்தார்:—"ஹுஜூர்! தங்கள் கட்டளைப்படி இதோ இந்தக் காவலாளர்களையும் சிப்பாயியையும் பிடித்துக் கொண்டு வந்துவிட்டேன். குல்செஹ்ராவின் தாயும் மற்றக் கைதிகளும் நேற்றிரவு ஓடிவிட்டதாக ஏதேதோ கதைகளை இந்தக் காவற்றலைவன் கூறுகின்றான்."

பச்சா ஸக்கூ:—(அளவுக்கதிகமான கோபாவேசத்தால் கண்களில் தீப்பொறி பறக்க) "என்ன சொன்னீர். அந்தக் கிழவி ஓடிவிட்டாளா? அவளுடன் மற்றக் கைதிகளும் ஓடி விட்டனரா?"

சர்தார்:—"இதன் விபரம் எனக்குத் தெரியாது. எல்லாம் காவற்றலைவன் நல்விதமாக விளக்கிக் கூறுவான்."

பச்சா ஸக்கூ:—(காவற்றலைவனை நோக்கி) "ஏ முட்டாள் பதரே! இப்படி முன்னே வந்து நில். நடந்தவற்றைச் சொல்."

காவற்றலைவன்:—(நேற்றிரவு வாலிப வீரன் செய்த அட்டகாசச் செயல்களை யெல்லாம் தலைமுதல் கடைவரை கூறி முடித்து) "ஆம்! எல்லாக் கைதிகளும் ஓடிவிட்டார்கள்."

பச்சா ஸக்கூ:—“போக்கிரி பயல்களே! உங்கள் அஜாக்கிரதைக்குரிய தண்டனையை கொடுக்கின்றேன் இருங்கள். சரி! அந்தபேஈமானி அமானுல்லாவுடைய குடும்பத்தின் ஒரு வகுப்பார் கைது செய்யப்பட்டிருந்தனரே, அவர்களுமா ஓடி விட்டனர்?”

காவற்றலைவன்:—“ஜீ ஹுஜூர்! ஆமாம்! அவர்களும் தான் தப்பியோடி விட்டனர்.”

பச்சா ஸக்கூ:—“இத்துணை அனர்த்தமும் புரிந்த அந்த போக்கிரித்தனம் மிக்க செம்முகமூடி யணிந்த வாலிபனையேனும் பிடித்தீர்களா?”

காவற்றலைவன்“இல்லை” (என்று நடுங்கிக்கொண்டே வாலிபன் தப்பிப்போனதை கூறி முடித்தான்.)

பச்சா ஸக்கூ:—நீங்களெல்லாம் அற்பப் பதர்கள். ஆற்றமாட்டாதவர்கள். பேடிகள். இதற்காகவென்று உங்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கின்றேன்.”

என்று மொழிந்து விட்டு பச்சா ஸக்கூ தனது ராணுவத் தலைவன் முன் வந்து நின்றான். பச்சா ஸக்கூ அவனை நோக்கி இன்று குல்செஹ்ராவின் தாயைச் சித்திரவதை செய்வதாக தண்டோரா அடித்திருந்தோம். அந்தக் கிழவி, தப்பியோடி விட்டாள். அவள் இன்று அகப்படமாட்டாள். தப்புதலுக்குக் காரணமாயிருந்த இந்த காவற்கூடத்தலைவனை கொன்று போடுங்கள். இழுத்துச் செல்லுங்கள்.

காவற்றலைவன்:—(நடுக்குற்று வாய்க்குழறி) கருணை வள்ளலே! என்மீது இரக்கங் கொள்ளுங்கள். நான் மனைவி மக்களுள்ளவன். எனக்கு உயிர் பிச்சை யளியுங்கள். இனி ஜாக்கிரதையாயிருக்கின்றேன்.”

பச்சா ஸக்கூ:—“பேசாதே மடையா! இரக்கமா புரிய வேண்டும்? உன் மீதா? உன்னை இதோ இறக்கச் செய்கிறேன் இரு, (ராணுவத்தலைவனை அழைத்து) ஏ சர்தார்!

இந்த பாராக்காரத்தலைவனையும் இவனுடன் சேர்ந்த இதர காவற்காரர்களையும் மற்றுஞ் சிப்பாய்களையும் இழுத்துச் சென்று சிறையிலடை. இவர்கட்கு கடுங்காவல் விதி."

சர்தார்:—"பெரியீர்! அப்படியே செய்கின்றேன்" என்று கூறி விட்டு, அவர்களையெல்லாம் இழுத்துச்சென்று சிறைக்கூடத்தி லடைத்து விட்டான். பிறகு,

பச்சா ஸக்கூ:—(பிரதம மந்திரியை அழைத்து) "ஏ. வஜீர்! உமது மந்திரித் தனத்தால் எனது அரசாங்கத்துக்கு ஒரு சிறிதும் பிரயோசனமில்லை. உனது மூடத்தனத்தால் எனக்கே அதிகமான சங்கடங்களும் இடையூறுகளும் நேரிடுகின்றன. ஆகவே உமது உத்தியோகம் அவசிய மில்லை. இன்று முதல் மந்திரி ஸ்தானத்தை விட்டும் நீர் நீங்கிப்போகக் கடவீர்."

இந்தக் கர்ண கடூரமான வசனங்கள் அந்த ஆற்ற மாட்டாதபிரதமமந்திரி யென்பவன்காதில் நாராசம்காய்ச்சி விட்டதேபோலிருந்தது. அவன்பெரிதும்அதைரியமுடைய சித்தச்சபலனுதலால் இனி பிழைப்பது எப்படி என்ற பே ரேக்கத்தால்ஹிருதயங் குழைந்து சித்தங்கலங்கி மூர்ச்சை யாகி கீழேவிழ்ந்து விட்டான். இவனது இந்தப் பரிதாப கரமானநிலைமையை கண்டுங்கூட அந்த பச்சா ஸக்கூவுக்கு சிறிதும்மனம் இரங்கவில்லை.

பச்சா ஸக்கூ:—"இந்த அயோக்கியன் இந்த கண் ணியமான தர்பாரில், அதுவும் எனது திருச் சமுகத்தில் இங்ஙனம் நிலைமை மாறி கீழே வீழ்ந்து என்னை அவ மானப்படுத்தி விட்டான். (ராணுவத் தலைவனை நோக்கி) ஏ சர்தார்! இந்தப் போக்கிரியையும் எனது கண்ணெதிரி னின்றும் இழுத்துச் செல். இவனை ஓராண்டு வரை சிறைச் சாலையிலடைத்து கடுங்காவலிடு! இப்படிச் செய்தால் தான் இவனைக் கண்டு இனிமேலேனும் மற்றையோர் அரச தர்பாரில் பெருந்தன்மையோடு நடந்து கொள்ளுவார்."

சர்தார்:—"ஜீஹு-ஜூர்! அப்படியே ஆகட்டும். தங்களாக்கினை என் சிரமேல்" என்று கூறிவிட்டு, மூர்ச்சையாய் கிடந்த அந்தப் பிரதம மந்திரியைப் பறபறவென இழுத்துச் சென்று சிறைக் கூட்டத்திலடைத்து பூட்டி விட்டான்."

பச்சா ஸக்கூ:—(தர்பாரில் தன்னைச் சூழ்ந்திருந்த மற்றும் பிரதானிகளை நோக்கி) "ஏ எனது சிப்பந்திகாள்! விஷமச் சிறுக்கியான அந்த குல்செஹ்ராவையும், அந்த அயோக்கியனை செம் முகமூடியணிந்த வாலிபனையும் ஒருமிக்கப் பிடித்து வந்து என் முன் விடும் வீரர் உங்களில் எவரேனுமுண்டா? அப்படியிருந்தால் முன்வரக் கடவாராக."

ஒரு பிரதானி:—"ஐயன்மீர்! தங்களாசீர்வாதத்தாலும் எனது கூடுமான ஆற்றலாலும் அவ் விருவர்களையும் நான் பிடித்து வருகின்றேன். இந்தக் காரியத்தை நான் செய்து முடிக்கின்றேன்" என்றான்.

பச்சா ஸக்கூ:—"மர்ஹபா! ஷாபாஷ்! நீர் தான் மகா தைரியசாலி. இப்படிப்பட்டவரை தான் நான் அதிகம் விரும்புகிறேன். ஆதலின் இன்று முதல் உம்மை எனது மந்திரியாக நியமித்துக் கொள்கிறேன்" என்றார்.

வாய் சாமர்த்தியம் பேசுவதில் கெட்டிக்காரனான அந்தப் பிரதானி தனது சிரத்தை மிகத் தாழப்பணிந்து பச்சா ஸக்கூவுக்கு நன்றி செலுத்தினன். இவன் நடிப்பது பச்சா ஸக்கூவின் மனத்தை ஆட்கொண்டது. எனவே காலியான பிரதம மந்திரியின் ஸ்தானத்தில் அமருமாறு அந்தப் பிரதானிக்கு பச்சா ஸக்கூ கட்டளையிட்டனர். இந்தப் புதிய பிரதம மந்திரி சலாம் ஒன்று மீண்டும் செய்து தனக்குக் கிடைத்த உயராசனத்தில் அமர்ந்தான்.

பச்சா ஸக்கூ:—(அந்த மந்திரியை நோக்கி) "வஜீர்! இனி நீர் வெகு ஜாக்கிரதையாகவே நடந்து கொள்ளுவீ

ரெனக் கருதுகிறேன். சரி! இன்று முதல் முயன்று எப்படியேனும் இன்னுமொரு வாரத்துக்குள் குல் செஹ்ராவையும் அந்தச் சிகப்பு முக மூடியையும் பிடித்து வந்து என் முன் சேர்த்துவிட வேண்டும்.

மந்திரி:—"அப்படியே செய்து முடிக்கிறேன்."

பச்சா ஸக்கூ:—"ஜாக்கிரதை! இந்தக் காரியத்தில் ஒரு சிறிதேனும் நழுவவிட்டு முரணாக நடந்து விடுவீராயின் எனது ராஜக்கோபமும் தண்டனையும் உம்மை நிர்மூலப்படுத்திவிடுமென்பதை மறந்து விடாதீர். உஷார்!"

இப்புதிய பிரதம மந்திரி ஆரம்பத்திலேயே பச்சா ஸக்கூவின் கோபாவேசத்தைத்தெரிந்து கொண்டான். எனவே திடுக்கங் கொண்டு மௌனமாய் விட்டான். பின்னர் சற்று நேரங்கழித்து தர்பார் கலைந்தது. புதிய மந்திரி தனது இருப்பிடத்திலிருந்து கொண்டு, குல்செஹ்ராவையும் செம்முக மூடியையும் பிடித்து வரத் தக்க ஏற்பாடுகளைப் பற்றி பலவிதமான ஆலோசனைகள் புரிந்து கொண்டிருந்தான்.

அத்தியாயம் 6.

சிகப்பு முகமூடியும், பச்சை முகமூடியும்

அன்று பிற்பகல் இரண்டு மணியிருக்கும். வெயில் உஷ்ணம் மணலை உருக்கிக் கொண்டிருந்தது. அச்சமயம் நம் இள வீர சிங்கமான செம்முக மூடி யணிந்த வாலிபன் தன் குதிரைமீது எங்கிருந்தோ ஒரு பக்கத்தினின்று வந்து தனது இல்லத்தின் வாசற்படியண்டை இறங்கினான். வீட்டினுள் இதுகாறும் பெண்டிர்களெல்லாம் வெகு ஜாக்கிரதையாகவே யிருந்தனர். பரீபானு தமது விருந்தினர்களுடன் அன்புற சம்பாஷித்துக் கொண்டிருந்தாள். வாலிபன் வீட்டினுள் நுழைந்து சென்றான். அங்கிருந்

தோர்க்கு சலாம் கூறியவண்ணம் தனது முகமூடியை கழற்றி மற்ரோர் பக்கத்தில் வைத்து, தன் ஆசனத்தில் அமர்ந்தான். தனது விருந்தினர்களுடன் பின்வருமாறு க்ஷேமத்தை விசாரிக்கலானான்:—

வாலிபன்:—"தாங்களெல்லீரும் க்ஷேமந்தானே? நான் சென்றதன் பின் ஏதும் புதுச் சம்பவமொன்றும் நிகழவில்லையே."

குல்செஹ்ராவும், தாயும்:—(ஒருமித்து) "ஆம்! ஆண்டவனருளாலும் தங்கள் பேருபகாரத்தாலும் நாங்கள் பூரண க்ஷேமமே. அதன் பின் இதுகாறும் எங்களுக்கு எப்படிப்பட்ட இடையூறும் நேரிடவில்லை. புதுச் சம்பவமும் ஒன்றும் நடக்க வில்லை. ஆனால் எங்கள் நன்மையை முன்னிட்டு தாங்கள் புரியும் பிரயாசையில் அதிகம் சிரமமடைந்திருப்பீரென்றே கருதுகின்றோம்." தங்கள் க்ஷேமம் எங்ஙனம்?

வாலிபன்:—"என்னைப்பற்றியா கேட்கின்றீர்கள்! ஆண்டவன் திருவருள் என்மீது சொரிந்து கொண்டிருக்கும் காலமெல்லாம் நான் க்ஷேமமே. பிறர்களது நன்மைக்காக வென்று நான் எத்துணை சிரமப்படுகின்றேனோ அத்துணை சந்தோஷம் எனக்கு உண்டாகிறது. ஆதலின் சிரமப்படுவதிற்றான் எனக்கதிகத் திருப்தி" என்று பதில் கூறி முடித்தான்.

இதற்குள் தனதில்லத்து வெளிவாயற்படிக் கதவை யாரோ ஒருவன் புதுவிதமாக மும்முறை தட்டிய சப்தம் கேட்டது. உடனே வாலிப வீரன் எழுந்துச் சென்று கதவைத்திறந்து நோக்கினான். பச்சை முகமூடிகளணிந்த தமதாட்களில் ஒருவன் குதிரை மீதிருப்பதைக் கண்டு என்னவென்று வினவினான்.

வந்த வீரன் வாலிபனுக்கு முதலில் ஸலாம் செய்து பிறகு கூறலானான்.

பச்சை முகமூடியவன்:—“எங்கள் தலைவரே! இப்போதிய காபுலின் அமீரெனப்படும் பச்சா ஸக்கூ, நம்மை பிடித்துவரவில்லை யென்பதற்காக முன்னைய பிரதம மந்திரியை உத்தியோகத்தை விட்டும் நீக்கி சிறையிலடைத்துவிட்டான். அதற்கு பதில் சாதாரண சிப்பந்திகளில் ஒருவனை பிரதம மந்திரியாக நியமித்துக்கொண்டான். நம்மையும் குல்செஹ்ராவையும் பிடித்து வருதற்குரிய பொறுப்பை இந்த புதிய மந்திரியே புரிந்து வருகின்றான்.”

வாலிபன்:—“(வீரத்தோடு) நண்பா! அதைப்பற்றிநாம் ஒரு சிறிதும் அஞ்சவேண்டியதில்லை. அல்லாஹுதஆலாவுடைய பெருங் கருணை நம்மீது இருக்கும்வரை எப்படிப்பட்ட மனுஷியனாலும் நமது ஒரு ரோமத்தையும் வளைக்க முடியாதென்பது திண்ணம். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.”

பச்சை முகமூடியவன்:—“ஆம்! உண்மையே! ஆனால் நாம் முன் ஜாக்கிரதையாயிருந்து கொள்வது நலமல்லவா? மேலும் இப்போது வந்துள்ள புதிய மந்திரி நம்மவர் உளவுகளை தெரிந்துவரும் பொருட்டு கணக்கற்ற துப்பறிவோர்களை நாலு பக்கங்களுக்கும் அனுப்பி வைத்திருக்கின்றான். அவர்கள் எங்கும் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.”

வாலிபன்:—“சரிதான்! அவர்கள் எத்துணை ஆராய்ந்தாலும் நம்மவர்களை பிடிக்க முடியாமல் போவார்களென்பது திண்ணமே. இவர்களுக்கு முன்னுங்கூட நியமிக்கப்பட்டிருந்த உளவாளிகள் நம்மை என்ன செய்துவிட்டார்கள்? அப்படித்தான் இவர்களுமிருப்பார்கள். வேறு ஏதேனும் விஷயமுண்டா?”

பச்சை முக மூடியவன்:—“இதை மட்டும் தான் தங்கள்பால் தெரிவிக்க வந்தேன். நான் போக விடை தாருங்கள்.”

வாலிபன்:—“வெகு சந்தோஷம். நீவிர் போகலாம். வேறு ஏதேனும் புதுச் சமாசாரம் தெரிய வந்தால் உட

னே எனக்கு அறிவித்து வையும்." என்று கூறி முடித்தான்.

பச்சை முகமூடி இறுதி வந்தனம் புரிந்துவிட்டு தன் குதிரையை தூண்டிவிட்டு வேறொரு பக்கம் சென்று மறைந்தான். நம் வாலிபன் வீட்டுக்குள் செல்லத் துணிந்தான். அதற்குள் திடுமென அவனது பார்வை சமீபத்திலுள்ள பெரிய சாலைவழியே சென்றது. ஆங்கொரு குதிரை வாகனன் மண் புழுதி வானமளாவிப் பறக்க ஓடி வருவதைக் கண்டு சற்றுநேரம் தாமதித்தான். பச்சை முகமூடி யணிந்த தனது வேறொரு வீரன் தன் குதிரையை இப் பக்கமே ஓட்டிக் கொண்டு வந்து வாலிபன் முன்னிலையில் நின்றான்.

அவ்வளவு வேகமாக வந்த அவ்வீரன் நம் வாலிபனை நோக்கி கீழ்வருமாறு கூறலானான்:—

குதிரை வீரன்:—எங்கள் கண்ணியத் தலைவரே! நமக்கு வரப்போகும் ஒரு பேராபத்தைப்பற்றி அறிவிக்க வந்தேன்."

வாலிபன்:—(சாவதானமாய்) "நமக்கு நேரப்போகும் ஆபத்தைப்பற்றியா? அதென்ன?"

குதிரை வீரன்:—"ஆம்! சின்னேரத்துக்கு முன் தங்களிடம் நமது ஆட்களில் ஒருவன் வந்து சம்பாஷித்துச் சென்றானன்றோ? அவனது செயல்களை யெல்லாம், தூரப் பார்வைக்கு பச்சா ஸக்கூவின் உளவாளிகளால் புலப்பட்ட சில வேவுகாரர்கள் இதற்குச் சற்றுத் தொலைவிலுள்ள பழம் பெருமரத்தடியின் பின் பக்கம் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். நமதாள் தங்களிடம் விடைபெற்றுச் செல்லத் தொடங்கியதும், அந்த வேவுகாரர்கள் தாங்கள் கண்டு பிடித்தவற்றை அறிவித்து வைக்க காபுல் நகரை நோக்கி வேகமாய் தங்கள் குதிரைகளை ஓட்டிக் கொண்டு சென்று விட்டார்கள். ஆகவே இந்த சம்பவத்தால் ஏதே

னும் விபரீதமும் ஆபத்தும் நமக்கு நிகழுமென ஐயமுண்டாகிறது. இதையே தங்கள்பால் தெரிவித்துச் செல்ல இவண் வந்தனன். இவர்கள் போய் பச்சா ஸக்கூவிடம் சொல்லி அங்கிருந்து தங்களில்லத்துக்கு சிப்பாய்கள் வருவதற்குள் நம்மவர்களை நாம் தற்காத்துக் கொள்ளுவது முன் காப்பதாகுமன்றோ?

வாலிபன்:—"சோதர! நீர்கூறியதெல்லாம்உண்மையே. நமது முதல் ஆளான பச்சை முக மூடி யணிந்தவனைக் கண்டு அவர்கள் நிச்சயமாய் சந்தேகங் கொண்டே இருப்பார்கள். சரி! அவர்களின் செயல்களை அவர்கள் புரியட்டும். நமது காரியாதிகளை நாம் கவனிப்போம்."

குதிரை வீரன்:—"ஐயன்மீர்! தங்கள் மேலான ஆக்ஞைப்படி வழுவாது நடந்து கொள்ள நாங்களெல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறோம்."

வாலிபன்:—"இதற்காக அவசரமாய் செய்ய வேண்டியது ஒன்றுண்டு. எனது கிரகத்தில் அடைக்கலமாயிருந்து வரும் குல்செஹ்ராவும் அவளது அன்னையாரும் அதிகமான சிரமத்தைத் தாளமாட்டார்கள். அவர்களை வெளியேற்றி ஆரண்யங்களிலிருக்கச் செய்வதெனில், இரவில் நித்திரா பங்கம் ஏற்பட்டால் அவர்கள் தேகசுகம் கெட்டுப்போகும். எனது தங்கை பரீபானுவைப் பற்றி விசனம் வேண்டியதில்லை. என்னைப்போன்று அவள் எத்துணைக் கஷ்டம் வருமாயினும் சகித்துக் கொள்வாள். ஆகவே பச்சா ஸக்கூவின் வேவுகாரர்களுக்கும் சிப்பாய்களின் அக்கிரமத்துக்குமஞ்சி அவர்களை இவ்வில்லத்தை விட்டு வெளியே அழைத்துச் செல்வதெனில், இராக்காலங்களிலும் பகற்காலங்களிலும் அவர்களை எங்கே இருத்துவதென்பதுதான் புலப்படவில்லை. என்னைப்பற்றி கவனிப்பு உங்களுக்கு வேண்டாம். நான் காடுகளிலும் மரங்களிலுங்கூட இரவு காலங்களை கழித்துவிடுவேன். ஆனால் பெண்களுக்குத்தான் ஒரு பாதுகாவலான இடம் வேண்

டற்படுகிறது. ஆகவே இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசனைப் புரியவேண்டும். நீவிர் சீக்கிரம் சென்று நமது சகாக்களெல்லோரையும் பச்சை முகமூடியோடு அழைத்துவா?" என்று கூறிமுடித்தான்.

பச்சை முகமூடிய அந்த குதிரை வீரன் "அப்படியே செய்கிறேன்" என்று மொழிந்துவிட்டு, தன் குதிரையைத் தூண்டி வேகமாய் எங்கோ ஒரு பக்கம் சென்று மறைந்தான். நமது வாலிப வீரன் தன் வீட்டுள் நுழைந்தான். அங்குள்ள பெண்மணிகளெல்லோருக்கும் இச்சங்கடத்தைப்பற்றி அறிவித்தான். அப்பேதைப் பெண்களெல்லோரும் மனங்குழைந்து போனார்கள். இவர்கள் அதைரியத்தைப்போக்கி, அபயத்தைப் புகட்டுவான் வேண்டி நம் வாலிபன் கூறலானான்:—

வாலிபன்:—சகோதரிகாள்! எதை முன்னிட்டும் தாங்கள் ஒரு சிறிதும் சஞ்சலமுற வேண்டாம். அல்லாஹ்வின் கிருபா கடாக்ஷத்தால் நம் போன்ற குற்றமற்றவர்கட்கு ஆபத்தொன்றும் நேராது. எனினும் இந்த வீட்டில் நாம் வாழ்க்கைப்புரிவது இனி இடைஞ்சலாய் முடியும். பச்சா ஸக்கூவின் ஆட்கள் இவ்வீட்டைக் கண்டு கொண்டார்கள். ஆதலின் நாமெல்லோரும் இவ்வீட்டை விட்டு வேறிடம் சென்று விடவேண்டும். இதற்கு நீங்களெல்லாம் எந்தச் சமயமும் தயாராயிருங்கள்.

குல்செஹ்ரா:—"அப்படியானால், இவ் வில்லத்தை விட்டு வேறு எந்த இடத்துக்குச் செல்லவேண்டும்?"

வாலிபன்:—"அதைப்பற்றி இப்போது முடிவாக ஒன்றும் கூறமுடியாது. எனது சகாக்களெல்லாம் இன்னுஞ் சின்னேரத்தில் இங்கு வருவார்கள். அவர்கள் ஆலோசனைப்படி தான் முடிவு செய்ய வேண்டும் என்று கூறி முடித்தான்."

எனவே நங்கைமார்களெல்லோரும் அவ்வீட்டை விட்டுச் செல்வதற்காக வெகு துரிதமாக ஆயத்தமாகிக்

கொண்டிருந்தனர். நம் வாலிப வீரன் தனியேஉட்கார்ந்து கொண்டு மிகுந்த ஆலோசனைசத்திரத்தில் மூழ்கிதத்தளித்துக்கொண்டிருந்தான். இவ்வாறே இரண்டு மணி நேர காலங் கடந்து விட்டது. இன்னும் பச்சை முக மூடிய சகாக்கள் வந்து சேரவில்லை. ஆகவே மனங்குழைந்தவனுன நம் இளைஞன் வீட்டுக்கு வெளியே வந்து நின்று நாலா பக்கங்களையும் துருவித்துருவி நோக்கினுன். காபுல் நகர்த் திசையிலிருந்து பல நூற்றுக்கணக்கான குதிரை வீரர்கள் கடுவேகமாகத் தனதிருப்பிடத்தை நோக்கி வருவதைக் கண்டு கொண்டான். இவர்கள் பச்சா ஸக்கூவின் ஆட்களென்பதை தெரிந்து நமது வாலிப வீரன் திடுக்கிட்டுப் பதறினுன்.

அடுத்தபடியாக தனக்கு அறிமுகமான ஊதுங் குழலோசை யொன்று இடப் பக்கத்திலிருந்து கேட்டது. சட்டென இப்பக்கம் திரும்பினுன். மீண்டும் திகில் கொண்டான். ஏனெனின் பச்சை முகமூடி யணிந்த குதிரை வீரனொருவன் சற்று தூரத்திலிருந்து கொண்டே சிகப்பு (ஜண்டா)க் கொடி யொன்றை ஆட்டி விபத்துக்குரிய சமிக்ஞை காட்டிவிட்டு அடுத்த க்ஷணமே மறைந்து போனுன்.

இவற்றை யெல்லாம் ஒரே காலத்தில் கண்ட நம் வாலிப வீரன் மிகப் பேராபத்து தலைக்குமேல் நெருங்கி விட்டதென உணர்ந்தான். இன்னும் இந்நிலைமை மகா நெருக்கடியானதாகவும் பெருஞ் சங்கடத்துக்குரிய தாகவுமிருப்பதாலேயே தனது பச்சை முகமூடிய வீரனும் தூர நின்று சமிக்ஞை செய்து விட்டுச் சென்றுனென்பதை உய்த்துணர்ந்தான்.

மீண்டும் வாலிபன் தன்னில்லத்து வாயிற்படியருகவே இன்னுங் கொஞ்ச நேரம் நின்றுல் எதிர்க்க முடியாத பெருஞ் சங்கடத்தில் அவன் சிக்க வேண்டியது நேரிடும். ஆகவே அங்கிருந்தபடியே ஜன்னல் வழியாக குல்செஹ்ராவையும் பரீபானுவையும் அழைத்து பின் வருமாறு எச்சரிக்கை செய்தான்:—

வாலிபன்:—சோதரிகாள்! நீங்கள் யாதுக்கும் அஞ்சற்க. அதோ! அந்தக் காதக சிப்பாய்கள் நம்மவர்களைப் பிடித்து செல்வதற்கு வந்து விட்டார்கள். நீங்களெல்லோரும் விட்டுக்குட் சென்று பல திக்கிலும் ஒளிந்து கொள்ளுங்கள். கூடுமான பரியந்தம் உங்களை காட்டிக்கொள்ளாதிருக்க முயலுங்கள். அப்படி உங்கள் பிரயத்தனமும் பயன்படாமல் அந்தச் சிப்பாய்களிடம் நீங்கள் அகப்பட்டுக்கொள்ள நேரிட்ட போதிலும் சரியே! நீங்கள் கிஞ்சித்தும் மனங்குழைய வேண்டாம். (இன்ஷாஅல்லாஹ்) அல்லாவினது கருணையால், அந்த பச்சா ஸக்கூவின் அக்கிரம ஆதீனத்தால் உங்களுக்கு எள்ளத்துணை தீவினையும் நேரா முன்னமே நான் உங்களை விடுவித்து அழைத்துக் கொண்டு வந்துவிடுவேன். நான் உங்களுக்கு அறிவிக்க வேண்டியவை தற்போது இத்துணையே. அதோ அக்கொடிய சிப்பாய்களும் நெருங்கி வந்து விட்டார்கள். நான் போகிறேன். நீங்கள் ஜாக்கிரதையா யிருந்து கொள்ளுங்கள்.

என்று சாந்த மனத்தினனாய் நம் இளங்காளை வீரன் சமாதானம் கூறிவிட்டு அங்கிருந்து தாண்டிக் குதித்து பாய்ந்து சற்றுப் பக்கத்திலோர் மரத்தடியில் கட்டப்பட்டிருந்த தன் அசுவத்தின் மீதேறித் தாண்டி அடுத்த கணக்கில் யாவர்களுக்கும் புலப்படாது மறைந்து விட்டனன்.

அத்தியாயம் 7.

பச்சா ஸக்கூவின் மூர்க்க சிப்பாய்கள் ஏமாற்றம்

வீட்டினுள் பரீபானுவும், குல்செஹ்ராவும் மற்றும் மூன்று பெண்டிரும் மூலை முடுக்குக்கொருவராய்ப் பதுங்கித் தம் உடலங்களை காதகர் பார்வைகளை விட்டும் ஒளித்துக் கொள்ளத் தலைப்பட்டனர். நம் இள தீர வாலிபன் சென்று விட்ட சிறிது நேரத்துக்குள், பச்சா ஸக்கூவின் மூர்க்க சிப்பாய் பட்டாளக் குழுக்கள் அவ் வில்லத்தை

வேட்டைநாய்கள் தட்டுக்கெட்ட மானை சூழ்வதே போல் வளைத்துக் கொண்டனர். (இந்த சிப்பாய்க் கூட்டங்கள் முன்னொரு சமயம் மரத்தடியில் ஒளிந்து கொண்டு பச்சை முகமூடிய (வாலிபனின்) ஆட்களையும் இந்த இல்லத்தையும் பதுங்கிப் பார்த்து விட்டுச் சென்ற வேவுகாரனின் அறிக்கையின் பேரிலேயே பச்சா ஸக்கூவால் அனுப்பப்பட்டவர்களாவர். இந்த சிப்பாய்க் குழுக்களின் மொத்தத் தொகை மூன்று நூறுகளிருக்கும். ஒவ்வொருவர்களும் இரக்கம் கருணை யென்பன இன்னதென்பதை தம் ஜன்மத்திலும் உணராதவர்கள்.) இவர்களுக்கெல்லாம் தலைவனாய் அனுப்பப்பட்ட ஸர்தார் ஒருவன் மகா ஆக்ரோஷத்தோடு வீட்டு வாயற்படியருகே சென்று கதவைத் தட்டினான். உள்ளிருந்து எத்தகைய மறுமொழியும் எவராலும் கொடுக்கப்படவில்லை. மீண்டும் பலமாகக் கதவைத் தட்டினான். எனினும் ஒரு பதிலுமில்லை. ஆகவே அந்த இராணுவத் தலைவனுக்கு மனம்புழுங்கி கோபத்தணல் மூண்டது. ஆகவே நாலைந்து முரட்டு சிப்பாய்களும் அவனுமாக சேர்ந்து ஒருமிக்க அந்தக் கதவைத் தமது வலுத்த புஜங்களால் முட்டி வேகமாய்த் தள்ளினர். அந்தோ! வெட்கம்!! வெட்கம்!!! அந்தக்கதவு கபாடமிடப்படாமல் வெறுமனே தான் சாத்தப்பட்டிருந்தது. இவர்களின் ஒருங்கே முட்டித்தள்ளிய வேகத்தால் அது படாரெனத் திறந்துகொண்டது. இவர்கள் தங்களுடைய வேகத்தாலேயே வீட்டுக்குள் தலைகளையும் வெளியில் கால்களையும் மோதிக்கொண்டு வேரற்ற மரங்களேபோல் பூமியில் வீழ்ந்து மண்ணைக் கௌவினர். சர்தாருடையவும் மற்றவர்களுடையவும் முட்டுக்கால் சிப்பிகளும் நெற்றித் தோல்களும் பிய்ந்து பலமான காயங்கள் பட்டன. அவர்கள் தமக்கேற்பட்ட வெட்கத்தை தமக்குண்டான அளவைக் கடந்த கோபாவேசத்தால் ஒளித்துக்கொண்டனர். காயங்களையும் பொருட்படுத்தாது எழுந்துக்கொண்டனர்.

பிறகு உடனே அந்த சிப்பாய்கள் தலைவனான சர்தார் தனது ஆட்களை நோக்கி, "ஏ சிப்பாய்காள்! உளவாளி நம் மவர்க்கு அறிவித்த வீடு இதுதான். ஒரு சிறிதும் தயங் காது உள்ளே நுழையுங்கள். அந்தச் சிறுக்கி குல்செஹ்ராவையும் மூர்க்கன் வாலிபனையும், இன்னுமந்த திருட்டுக் கிழவியையும் தேடிப்பிடித்து கட்டி இழுத்து வாருங்கள். யாரைவிட நேர்ந்தபோதிலும் சிகப்பு முகமூடி யணிந்த அந்தப் பயங்கர வாலிபனை மட்டும் விடாதீர்கள்" என்று கட்டளையிட்டான். ஆதலின் உடனே மூர்க்கச் சிப்பாய்க ளெல்லோரும் முரட்டாட்டு மந்தைகளேபோல் துராகிருத மாய் உள்ளேப்பிரவேசித்து தம் கண்களுக்குப்பட்ட இடங் களை யெல்லாம் தேடிப்பார்த்து விட்டனர். ஒருவரும் அவர்களிடம் சிக்கவில்லை. இவற்றைத் தெரிந்த அந்த சர்தார் வெறி கொண்ட காண்டா மிருகத்தைப்போல் சீறினான். மீண்டும் தன் சிப்பாய்களை "ஏன் தயங்குகிறீர் கள்" மரஞ் செடிகளிலுள்ள சுள்ளி விரகு கட்டை களை யெல்லாம் கொண்டு வந்து இந்த வீட்டை சுற்றிக் குவித்து மண்ணெண்ணெயை ஊற்றிக் கொளுத்தி விடுங் கள்." என்று கட்டளை யிட்டான். அவ்வாறே அந்த சிப்பாய்களெல்லாம் வீட்டருகே சத்தைச் சருகுகளை கொண்டு வந்து போட்டனர். தீவைக்கத் துணிந்தனர்.

அதற்குள் பச்சா ஸக்கூவின் ராணுவ உடையும் சின்ன மும் பூண்ட வேறு சிப்பாயொருவன் கடு வேகமாய் தன் குதிரை மீது இங்கு வந்துநின்றான். இங்குள்ள சர்தாரை நோக்கிக்கூறலானான்:—

குதிரை சிப்பாய்:—ஜனாப்! அவசரம்! அவசரம்! நமது பிரதம மந்திரியார் இந்த க்ஷணமே ஒரு கணமும் தாமதி யாது உங்களெல்லோரையும் தர்பாருக்கு வந்து சேருமாறு ஆக்ஞாபித்தார். குல்செஹ்ராவும், அவளுடையத் தாயும், அந்த செம்முக மூடி வாலிபனும் பிடிபட்டு விட்டார்கள். இவர்களெல்லாம் இப்போது பிணைக்கப்பட்டு அமீர் முன்

னிலையில் விசாரிக்கப்படுகிறார்கள். நீங்களெல்லோரும் இங்கிருந்து சீக்கிரம் புறப்படுங்கள்.

சிப்பாய்த்தலைவன்:—(வியப்புடன்) என்ன சொன்னீர்! அம்மூவரும் கைது செய்யப்பட்டு விட்டார்களா? வெகு சந்தோஷம். மர்ஹபா! இவர்கள் எங்ஙனம் பிடிப்பட்டார்கள்? எங்கு அகப்பட்டார்கள்?

குதிரைச்சிப்பாய்:—இந்த மூவரும் மாறுவேடம் பூண்டுக்கொண்டு காபுல் நகர் மத்தியிலேயே திருட்டுத் தனமாய் அலைந்து கொண்டிருந்தார்கள். நமது பிரதம மந்திரியவர்களால் நியமிக்கப்பட்ட (மூலை முடுக்குகளையெல்லாம் அளவளாவிக் கொண்டிருந்த) பல உளவாளிகளில் ஒருவர் இம்மூவரின் அந்தரங்கப் பான்மையைத் தெரிந்து கொண்டு சிப்பாய்களைக் கொண்டு கைது செய்து தர்பாரில் கொண்டு வந்து சேர்த்து விட்டார்கள்.

சிப்பாய் தலைவன்:—ஷாபாஷ்! அவர் மகா கெட்டிக்காரர். (தனக்குள்) அப்படியானால் இந்த வீட்டை தீக்கிரையாக்குவது வீண் பிரயத்தனம் தான். (தீ வைக்க முயன்று கொண்டிருந்த சிப்பாய்களை யெல்லாம் அழைத்து) நில்லுங்கள். வீட்டைக் கொளுத்த ஏன் வீண் சிரமப்படுகின்றீர்கள். வேண்டாம். மந்திரியார் கட்டளை வந்து விட்டது. கைதிகளெல்லாம் பிடிபட்டு விட்டார்கள். நாம் தர்பாருக்குப் போய் சேரவேண்டும். புறப்படுங்கள்.

குதிரைச் சிப்பாய்:—ஆமாம்! சீக்கிரம் புறப்படுங்கள். தாமதிக்காதீர்கள். நீங்களெல்லாம் புறப்பட்டுச் செல்லுங்கள். செம்முக மூடியணிந்த வாலிபனின் ஆட்களில் சிலர் அங்கொரு இடத்தில் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அதன் உளவறிந்துவர நான் அங்குப் போகின்றேன். என்று கூறிவிட்டு இந்த அநாமதேயச் சிப்பாய் தனது துணிச்சலான குதிரையை தூண்டிவிட்டு எங்கோ ஒருபக்கல் சென்று மறைந்து விட்டான்.

வாலிபனையும் பெண்களையும் பிடிக்க வந்த இம் முன்னூறுச் சிப்பாய்களும் தமது சர்தாரைப் பின்பற்றி உடனே தம்தம் குதிரைகள் மீதேறி காபுல் தர்பாரை நோக்கி வேகமாய் ஓடினர். இங்ஙனம் வழியின் ஒரு பகுதி தூரமே தான் சென்றிருப்பர். அங்கொரு மரத்தில் ஒரு மனுஷ்யன் கட்டப்பட்டு அபயக் கூச்சலிட்டுக் கொண்டு கிடந்தான். இவனது ஓயாக் கூச்சலை யுன்னி சிப்பாய்களின் சர்தார் குதிரையை நிறுத்தி அந்த மனுஷ்யனருகே சென்று வினவலானான்:—

சிப்பாய் தலைவன்:—அடே நீ யார்?

அம்மனிதன்:—அய்யா! தற்போதிய காபுலின் அமீர் ஹபீபுல்லா (பச்சா ஸக்கூ)வுடைய உங்களைப் போன்ற சிப்பாய்களில் நானுமொருவன். உங்களிடம் அவசரமாக ஒரு விஷயத்தைத் தெரிவிக்கவே நமது பிரதம மந்திரியால் அனுப்பப்பட்டேன். அவ்வுத்தரவு யாதெனின், குல்செஹ்ராவையும், அவளன்னையையும், முகமூடி வாலிபனையும் அவர்கள் எங்கிருந்த போதிலும் விடாது பிடித்து தர்பாருக்குக் கொண்டுவர வேண்டுமென்பதும், அவர்களிருப்பதாய் கூறப்பட்ட வீட்டை பொசுக்கிச் சாம்பலாக்கி விட வேண்டுமென்பதுவுமாகும். என்னை அவிழ்த்துவிடுங்கள்.

சிப்பாய் தலைவன்:—ஐயையோ! அப்சோஸ்! மோசம் போனோம். எவனோ ஒரு அயோக்கியனே சிப்பாய் உடையுடன் வந்து நம்மை ஏமாற்றிச் சென்று விட்டான். (அம்மனிதனை நோக்கி) ஏ சிப்பாய்! நீ எவ்வாறு இக்கதிக்காளானாய்? உன்னை இங்ஙனம் மரத்தில் கட்டிப்போட்டவர் யார்?

அம்மனிதன்:—நான் நம் மந்திரியார் ஆக்ஞைப்படி தர்பாரிலிருந்து என் குதிரையை ஓட்டிக் கொண்டு வந்தேன். நடுப்பாட்டையில் பூரண ஆஜானுபாகுவான முரட்டு வாலிப வீரனொருவன் என்னை அப்பால் போகவொட்டாது தடுத்து விட்டான். அவனும் தன் குதிரையைவிட்டுக் கீழிறங்கி, என்னையும் என் அசுவத்தை விட்டும் கீழி

றங்குமாறு வற்புறுத்தினன். அவன் சொற்படி நான் நடந்து கொள்ள பின்னடைந்தேன். எனவே அந்த மூர்க்கன் என் காலைப் பிடித்திழுத்து குதிரையினின்று கீழே தள்ளி விட்டான். கீழே வீழ்ந்த நான் மேலெழுவதற்குள் அவன் தன் கைத்துப்பாக்கியை என் குரள்வளைக்குக்கெதிராக ஒட்டிப் பிடித்துக் கொண்டு, அவன் தன் மற்ருெரு கரத்தால் பலாத்காரமாக எனது மேலுடைகளை எல்லாம் கழற்றிக் கொண்டு என்னை இந்த கந்தலோடு இம்மரத்தில் கட்டி இரண்டுதையுங் கொடுத்து விட்டு எனது இராணுவ உடைகளை அவன் உடுத்திக் கொண்டு ஓடி விட்டான். நான் அப்போதே அவனை எதிர்த்து வெற்றிக் கொண்டிருப்பேன். ஆனல் அவனிடம் துப்பாக்கி ஒன்றிருந்ததற்கே பயந்து பின்னடைந்தேன். ஐனுப்! தயவு செய்து முதலில் என்னை அவிழ்த்து விடுங்கள்.

சிப்பாய் தலைவன்:—(அம் மனிதனைக் கட்டினின்றும் அவிழ்த்து விட்டு) இவ்வாறு உன்னையும் ஏமாற்றிச் சென்ற அயோக்கியன் எங்களையும் ஏய்த்துச் சென்ற காதகனுகவே இருத்தல் வேண்டும். அந்தசெம்முக மூடியப்பயலை இனி இலேசில் விடக்கூடாது. அவனையும் அவனைச் சேர்ந்தோரையும் சர்வ நாசப்படுத்தாது விடேன், விடேன்.

அம்மனிதன்:—(வியப்படைந்து) என்ன சொன்னீர்கள்? என்னை ஏமாற்றி என் உடையைப்பூண்டுச் சென்ற அவன் உங்களையுமா ஏமாற்றி விட்டான்! எப்படி?

சிப்பாய்த் தலைவன்:—ஆமாம்! அந்த நயவஞ்சகன் உன்னுடையில் எங்கள்பால் வந்து, முகமூடியும் குல்செஹ்ராவும், கிழவியும் உளவாளிகளால் பிடிபட்டு விட்டனரென்றும், பிரதம மந்திரியார் எங்களையெல்லாம் தர்பாருக்கு அழைக்கின்ருர் என்றுங் கூறி ஏமாற்றிவிட்டு, மற்ருெரு பொய்யையுங் கூறிவிட்டுத் தப்பிப்போய் விட்டான். அந்த வீட்டை தீவைத்துச் சாம்பலாக்க முயன்றுகொண்டிருந்தோம். அவனின் இவ்விபரீத விஷயத்தைக் கேட்டு அச்செயலையும் பிறழவிட்டோம். சரி! போகட்டும்.

இப்போதும் ஒன்றும் முழுகிப்போகவில்லை. அந்தக் கைதியர்களெல்லோரும் அந்தவீட்டில்தானிருக்கின்றனரென்பது இந்நிகழ்ச்சிகளால் ஸ்பஷ்டமாகின்றது. இவர்களைக் காப்பதற்கென்றே சிகப்பு முகமூடியவன் இந்தத் தந்திரத்தால் நம்மை ஏமாற்றினான். திரும்பப் புறப்படுங்கள்! சீக்கிரம் சென்று அவர்களைப்பிடித்து இழுத்துக்கொண்டுவருவோம். சீக்கிரம் சென்றால் அவர்கள் அகப்படாது போகார்கள். அங்ஙனம் அவர்கள் தப்பினாலும் அந்த வீட்டையேனும் கொளுத்திவிட்டு வருவோம், என்று கூறி முடித்தான்.

இந்த இறுதி ஆலோசனைப்படி அந்த முன்னூற்றொரு சிப்பாய்களும் அவர்கள் சர்தாருமாக திரும்ப கடுவேகமாய் வாலிபன் வீட்டைபோய் சூழ்ந்தனர். முன்போலவே தங்கள் வழமைப்படி வீட்டைச் சுற்றி ஆட்களை வரிசையாக நிற்க வைத்துவிட்டு, தலைவனும் மற்றவர்களும் கதவைத் திறக்க அதனிடம் சென்றனர். அந்தக் கதவு வெளிப்புற கபாடமே யிடப்பட்டிருந்தது. ஆயினும் அந்தக் கதவின் முன்புறத்தில் சிகப்புக் கடிதமொன்று எழுதப்பட்டு நான்கு மூலைகளிலும் ஒட்டப்பட்டிருந்தது. இதைக் கண்டு சர்தார் திகில் கொண்டான். மற்றொருச் சிப்பாய் அக்கதவினின்றும் மேற்படி இரத்த நிறக் கடிதத்தைக் கிழித்து தலைவனிடம் சமர்ப்பித்தான். சேனைத் தலைவன் அதில் வரையப்பட்டிருந்த வசனத்தை வாசித்து கண் தீப்பொரி பறக்க ஆக்ரோஷங் கொண்டான். அதில் பின்வருமாறு ஓர் எச்சரிக்கை வரையப்பட்டிருந்தது:—

"பேராபத்தின் எச்சரிக்கை"

ஏ. சேவகர்காள்! உங்கள் அக்கிரம ராஜ்ஜிய ஆதிக்கத்தின் கீழ் நீங்களெல்லாம் சூத்திர பொம்மைகளே போலிருந்து கொண்டு முழு மூடத்தனமாய் கண்களை மூடிக்கொண்டு குற்றமற்ற எம்எளியோர்களையும் உத்தமர்களையும் துராகிருதமாய் துன்புறுத்தி வருகின்றீர்கள். ஆகவே இதற்காக நீங்கள் கூடிய சீக்கிரம் பேராபத்துள் சிக்கித்

தவிக்கப்போகின்றீர்கள். இனியேனும் இவ்வெச்சரிக்கை யை கண்ணுற்ற பிறகேனும் நீங்கள் நற்புத்திப் பெற்று ஒழுக்கத்துடனிருக்க முன் வரமாட்டீர்களேல், பின்னர் நீங்களெல்லாம் அதோகதியாக்கப்பட்டு, சர்வ நாசப்படுத் தப்படுவீர்களென்பது திண்ணம். "என்றும் தர்மமே ஜெயம் பெறும், அதர்மம் வீழ்ச்சியடையும்." உங்கள் வாழ்க்கைக் குலையாதிருக்க வேண்டுமாயின் ஜாக்கிரதை யாய் நடந்து கொள்ளுங்கள்!

இங்ஙனம்,

சிகப்பு முக மூடி யணிந்தோன்.

(இந்த எச்சரிக்கைக் கடிதம் எதற்காக-யாரால்-எப் போது ஒட்டப்பட்டதென்பதை ஈண்டுத் தெரிந்து கொள் வோம்:—நமது இளஞ் சிங்க வீர சிகாமணியான செம்முக மூடி ஆப்கான் ராணுவ உடையில்வந்து சிப்பாய்த்தலைவனை யும் அவனது இராணுவங்களையும் ஏமாற்றித் துரத்தி விட்டதும், உடனே வீட்டுக்குள் சென்று குல்செஹ்ரா வையும், இவளது தாயையும், பரீபானுவையும்ஒருகணமும் தாமதியாது அந்த க்ஷணமே இல்லத்தைத் துறந்து வெளி யேற்றி அழைத்துச் சென்று விட்டான். தன்னால் ஏமாற் றப்பட்ட சிப்பாய்த் தலைவனும் ராணுவர்களும் மீண்டும் தம்மைத்தேடி பிடிக்க இவ்வில்லத்துக்கு வந்தே தீருவார் களென்பதை அவன் நன்குணர்ந்தான். இவர்களுக் கெல்லாம் தன் புறத்தினின்றும் கடுமையானதோர் எச்சரிக்கை செய்ய வேண்டுமென எண்ணியே மேற்படி செந்நிறக் கடிதமொன்றை எழுதித் தன் இல்லத்துக் கதவில் ஒட்டிச் சென்றான்.)

நிற்க, இங்கு பச்சா ஸக்காவின் சேனைத் தலைவன் அந்தக் கடிதத்தின் உள்ளுரையை படித்து விட்டு ஆற் றெணு சீற்றங் கொண்டான். உடனே தன் ராணுவங்களை நோக்கி "ஏன் தயங்குகிறீர்கள்? அந்த துஷ்ட வாலிபன் பல்லோரையும் அழைத்துக் கொண்டோடி விட்டான்

போதும்! தீயை மூட்டுங்கள். வீட்டைச் சாம்பலாக்குங்கள்" என்று கதறினான். இந்த சர்தார் உத்தரவுப்படியே சிப்பாய்களெல்லாம் விடுதியை அக்கினிக்கிரையாக்கினர். சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு பெரிய வீடிருந்த இடத்தில் நெருப்புக் கொள்ளிகளும் சாம்பற் குவியல்களுமே காணப்பட்டன! இவ்வீட்டின் இக்கதியானது புழுக்க மனத்தினனை ராணுவத் தலைவனுக்குச் சிறிது சந்தோஷத்தையும் செருக்கையும் தந்தது. பிறகு அந்தச் சிப்பாய்த் தலைவன் அவ்விடத்தை விட்டுத் திரும்பிச் செல்வான்வேண்டி, தனதெல்லா சகாக்குழுக்களையும் அழைத்துக்கொண்டு தங்கள் குதிரைகளை எல்லாம் ஒருமிக்க ஓட்டிக் கொண்டு, சாலைப் புழுதிகளெல்லாம் வானைப்பரவ, பத்திருபது அடி தூரமே சென்றிருப்பான். அதற்குள் தனக்குப் பின்திசையில் தங்களைச் சேர்ந்த வேறு குதிரை வீரனொருவன் ஓடோடியும் வந்து தலைவனை யணுகி கூறலானான்:—

குதிரை வீரன்:—பெரியீர்! ஒரு சந்தோஷச் செய்தி! அந்த சிகப்பு முகமூடிய வாலிபன் புதிதாய் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்து விட்டேன். அந்த வாலிபன் மட்டும் தற்போது அப்புது விடுதியில் இல்லை. ஆனால் அவனைச் சேர்ந்த பெண்களெல்லாம் அதிலே தான் இருக்கின்றனர். நாம் தேடியபொருட்கள் தானேகிடைத்துவிட்டன. ஆகவே உடனே தாங்களெல்லோரும் அங்கு வருவீர்களாக.

சிப்பாய்த் தலைவன்:—(சந்தோஷத்துக்குப் பதிலாய் பிரமையடைந்து) ஏய்! நீர் யார்?

குதிரை வீரன்:—காபுல் அரசாங்க பிரதம மந்திரியால் நியமிக்கப்பட்ட உளவாளிகளில் நானுமொருவனவேன். என்று மொழிந்தான்.

இந்த சிப்பாய்த் தலைவன் முன்னொரு முறையே நம் இளஞ்சிங்கத்தால் ஏய்க்கப்பட்டிருக்கிறான். ஆகவே குதிரைச் சிப்பாய் மீது சந்தேகங் கொண்டு தனது ராணுவர்

களை நோக்கி "ஏ சிப்பாய்காள்! இவனை நம்பக்கூடவில்லை. இவனும் நம்மை ஏய்க்கவே ஒருக்கால் வந்திருக்கலாம். இவனைப் பிடித்துக் கைது செய்து கொள்ளுங்கள். இவன் அறிவித்த விஷயம்உண்மையெனப் புலனுனல் விட்டு விடுவோம். இன்றேல், சிறைக்கனுப்பி தண்டிப்போமெ"ன்று ஏறுக்குமாருய் கட்டளையிட்டு விட்டனன்.

அந்த அரசியல் உளவாளி பெரிதும் திக்பிரமையடைந்து போனான். சிப்பாய்த் தலைவனுக்கு வெறி பிடித்து விட்டதோ என்று எண்ணினன். "சூடுண்ட பூனை அடுப்பங்கரை செல்லாது" என்பதும், "பாலின் சூட்டால் வாய் வெந்தவன் குளிர்ந்த மோரையும் ஊதி ஊதிக் குடிப்பான்" (இது உர்தூ பழமொழி) என்பதும், அவனுக்கென்ன தெரியும்? வாலிப முகமூடியினுல் இந்தச் சிப்பாய் தலைவன் முன்னெரு முறை ஏமாற்றப்பட்டானென்பதை இந்த உளவாளி கிஞ்சித்தும் உணரமாட்டான். இவன் தான் ஏமாற்ற வந்தவனல்லவென்றும், உண்மையான உளவாளி யென்றும், அவர்களைச் சேர்ந்தவனென்றும் எத்துணையோ முறை பலவிதத்திலும் எண்பிக்க முயன்றும் அவன் கூப்பாடு காட்டிலிட்ட இரைச்சலாயும், செவிடன் காதில் ஒலித்த சங்கீதமாயு முடிந்தது. பரிதாபம்!

முரட்டுச் சிப்பாய்களெல்லோரும் இந்தத் துப்பறியும் ஆசாமியை விடாது அடித்து அவனது குதிரையோடு கட்டி விட்டார்கள். பிறகு அவனது குதிரையையும் தம்முடன் இழுத்துக் கொண்டு அவன் காட்டிய வழியே ஒரு பக்கலை நோக்கி எல்லோருங் குழுமிச் செல்லலானுர்கள். குறுக்குப் பாதை வழியே சரியாக ஒரு மைல் தூரம் சென்றதும் ஒரு பெரும் மேட்டுப் பூபாகத்தில் ஏறினர். ஆங்கு அடர்ந்து வளர்ந்த பல மரங்களின் மறைவில் சிறு குடிசை யொன்று காணப்பட்டது. "அது தான் அந்த முகமூடியவன் தங்கியுள்ள வீடு. அதற்குள் அவனைச் சேர்ந்தோர்கள் இதுபோழ்து இருந்து வருகின்றுர்

கள்" என்று பிணைக்கப்பட்டிருந்த உளவாளி கை காட்டிக் கூவிச் சொன்னான். இந்த விஷயம் சிப்பாய்களின் சர்தாருக்கு மிகுந்த திருப்தியை தந்தது. எனவே அவன் அதிகம் சந்தடி செய்தல் கூடாதென குடிசைக்குச் சிறிது தூரத்திலேயே எல்லாரையும் நிறுத்தி, ஆறு முரட்டுச் சிப்பாய்களை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டு, சப்தஞ் செய்யாமல் வெகு ஜாக்கிரதையாகச் சென்று குடிசைச் சந்தில் எட்டிப் பார்த்தனன். வீட்டுக்குள் மனிதர்களிருக்கின்றன ரென்பதை யுணர்ந்து திடுமென துராகிருதமாய் உள்ளே புகுந்து விட்டனன்.

அச்சிறிய விடுதியினுள் ஒரு பக்கல் அழகிய காரிகையாள் குல்செஹ்ராவும், மூத்தப் பெரியம்மையரான அவளது தாயும் மிகச் சஞ்சலத்திலாழ்ந்தவர்களாயும் தங்கள் கதியையுன்னி வாட்டமுற்றமுகத்தோடு பணிந்துட்கார்ந்து கொண்டிருந்தனர். துக்கமேலீட்டால் வீட்டுக்குவெளியில் என்ன நிகழ்ந்ததென்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. உஷாராயிருக்கும் சுபாவமுடைய நமது இளங்கொடியாள் பரீபானுவோ, விருந்தினர் அருந்த ஜலம் கொண்டுவர குடிசையை விட்டு தண்ணீர் தடாகத்துக்குச் சென்றிருந்தனள். திடுமென காதகச் சிப்பாய்கள் வீட்டுள் நுழைந்த சப்தம் சட்டென ஆங்கிருந்த பெண்பாலார் செவிகளிற்படவே திடுக்கென இப்பக்கம் திரும்பினர் தங்களைப் பிடித்துச்செல்ல கொடிய ராக்ஷஸர்களேபோல் எதிரில் வந்து நின்ற சிப்பாய் தலைவனையும், வேறு ஆறு முரடர்களையும் கண்டு சித்தங்கலங்கி செய்வதின்னதென்றுத்தெரியாது கல்லாயிருந்து விழித்தனர். இந்தச் சமயத்தில் நமது இளவீரகேசரியான வாலிபன் இருந்திருந்தால் அப்பெண்மணிகள் இத்துணைவாட்ட முற்றிரார்கள். அந்த இளவீரனும் இம்மங்கை நல்லாருக்குரியசௌகரியங்களை செய்துகொடுத்து, ஜாக்கிரதையா யிருக்குமாறு தைரி

யமூட்டிவிட்டு, தனது பச்சை முகமூடிய சகாக்களை ஆயத் தப்படுத்தி சகல முஸ்தீப்புடன் அழைத்துவர எங்கோ சென்றுவிட்டான். அந்தக் குடிசைக்குள் வாலிபன் இல் லாமையைக் கண்ட சர்தார் மிகவும் தைரியங் கொண்டு செருக்கடைந்தான். தனக்கு பூரண ஜயம் கிடைத்து விட்டதென்றே புளகாங்கித மடைந்தான். களிபேறுவகை யால் அங்கிருந்தபடியே வெளியிலிருந்த சிப்பாய்களுக்குக் குரல் கொடுத்து "நமது காரியம் கைகூடிவிட்டது. அந்த உளவாளியின் வார்த்தை உண்மையாகி விட்டது. அவனது கட்டுகளை அவிழ்த்து விட்டு விடுங்கள். என்று கூறினன்.

இக்கடுந்தொனி காதிற்பட்டதும், குல்செஹ்ராவும் அவளது அன்னையுமெழுந்து சற்று மனத்துணிவுகொண்டு அப்பால் விலகியோட காலடியெடுத்து வைத்தனர். அதற்குள் அந்தக்கொடிய பைசாச் சிப்பாய்கள் ஆறுபேர் களும் தமது தலைவன் கட்டளைப்படி அப்பெண்கள் மீது மகா போக்கிரித்தனமாய் பாய்ந்து பிடித்து கொண்டனர். எனினும் அந்த இளங்கொடியாள் அம்முரடர்களின் ஆதிக் கத்தை விட்டு விலக எத்தனையோ திமிறித் துணிந்து தள்ளியும் அக்காதகர்கள் விடாது ஒரு நாழிகை நேரத்துக் குப் பின் மிகப் பிரயாசையின் பேரில் அவ்விருப்-பெண் களையும் கட்டிப் பிணைத்து விட்டனர். இரு மெல்லிய நல்லாள்கள் ஆறு கொடிய மூர்க்கர் முன் எங்ஙனம் எதிர்த்து நிற்க முடியும்? எனவே மீண்டும் கைது செய்யப் பட்டு விட்டனர். பிறகு சிப்பாய்த் தலைவன் ஆக்கினைப்படி முரடர்கள் அறுவரும் அவ்விரு பெண்களையும் தள்ளி இழுத்துக் கொண்டு வெளியே வந்தனர். தங்கள் குதிரை கள் மீது பெண்களையும் வைத்துக்கொண்டு புறப்பட எத்தனித்தனர்.

அத்தியாயம் 8.

குல்சேஹ்ரா அன்னையார் கொலை

இந்தச் சந்தர்ப்பத்தில் நமது இள வீர இளைஞனின் இளஞ் சகோதரியான பரீபானு தன் மெல்லிய இடுப்பின் மீது தண்ணீர் குடமொன்றை அழகுபெற வைத்தணைத் துக்கொண்டு மற்றொரு திசையிலிருந்து குறுக்கிட்ட சிப்பாய்களுக் கெதிர்ப்பட்டாள். சிப்பாய்க் கூட்டங்களின் ஆர்ப்பாட்டங்களைத் தனது குடிசையண்டை கண்டதும், சட்டென ஒரு புதற் செடியருகே பதுங்கிக் கொண்டாள். அவளது நல்லதிருஷ்டவசமாய் சிப்பாய்களில் ஒருவரும் அக்காரிகை நல்லாளை சிறிதும் கண்டு கொள்ளவில்லை. இவள் மாத்திரம் மரஞ்செடி சந்துகள் வழியாக சிப்பாய் களின் நடத்தைகளை ஆராய்ந்து நோக்கிக் கொண்டாள். மூர்க்கச் சிப்பாய்கள் எல்லோரும் தம் சர்தார் கட்டளைப் படி குல்செஹ்ராவையும் அவளது அன்னையையும் கவர்ந்து கொண்டு அவ்விடத்தை விட்டு குதிரையைத் தூண்டி வேகமாய் ஓடி மறைந்தனர். இவற்றையெல்லாம் திடுக் கிட்ட மனத்தோடு நமது பரீபானு பார்த்துக் கொண்டே இருந்தாள். காலடி சப்தம் காதிற்கேளாத தூரத்துக்கு அவர்களெல்லாம் ஓடிய பின் பரீபானு வெளியே வந்து வீடு சென்று நீர்ப்பாண்டத்தைத் தன் குடிசைக்குள் ஒரு மூலையில் போட்டு விட்டு, நிகழ்ந்த சம்பவத்தை யொட்டி தீராச் சஞ்சலங் கொண்டாள், தனது தமையன் தங் களை யாரும் கண்டுகொள்ள முடியாத பத்திரமான இவ்வி டத்தில் கொண்டு வந்து வைத்தும், இதையும் பச்சா ஸக் கூவின் சிப்பாய்கள் எங்ஙனம் கண்டு பிடித்துக் கொண் டனர்? என்று சிந்தனையை யோட்டினாள். சிப்பாய்கள் இங்கும் வந்து பிடித்துச் சென்றுவிட்ட தம் விருந்தினர்க ளைத் தப்ப வைத்துக் கொண்டுவர என்ன செய்வதென் றும் நெடு நேரம் யோசித்தாள். உலக அனுபவ ஆற்றல்

போதாத இவ்விளங்கொடியாளின் உள்ளத்தில் இதற்குரிய தீக்ஷண்ய மார்க்கம் எதுவும் புலப்படவில்லை. எனவே மனங்குழைந்து கண்ணீர் உகுத்துக் கொண்டு, தனது சகோதரனின் வருகையை வெகு அவசரத்தோடு எதிர் பார்த்துக்கொண்டு உட்கார்ந்து கிடந்தாள்.

பேதைப் பெண்டிர்களை எல்லாம் மூர்க்கத்தனமாய் கைது செய்து கொண்ட சேனைத் தலைவன், அவர்களை காபுல் நகருக்கு அழைத்துச் சென்றான். அவனடைந்து இச்செய்தியை பிரதம மந்திரிக்கு அறிவித்தான். இதை யுணர்ந்த அத்துன்மந்திரி தான் கோரிய கைங்கீர்யம் கை கூடி விட்டதென மட்டற்ற மகிழ்வடைந்து இறும்பூதெய் தினான். தற்காலிக அமீராக யிருந்து வந்த பச்சா ஸக்கூ வுக்குண்டான களிபேறு வகைக்கோர் அளவுமில்லை. கைதி களை காபுலுக்குக் கொண்டு சென்றபோது மாலை நேரமாய் விட்டது. பாஸ்கரன் மேற்றிசைச் சென்று மறைந்தானதை லால் அந்தகாரம் கம்மிக் கொண்டது. எனவே பிரதம மந்திரியின் கட்டளைப்படி அன்றிரவெல்லாம் குல்செஹ்ரா அவளன்னையும் தாதிமாரும் கொடிய காவற் கூட்டத்தில் அடைக்கப்பட்டனர். சிறையிலேயே இவ்வெளியோரின் இராக்காலம் கடந்தது. மறுநாட்டதிகாலைபொழுதுபுலர்ந்த தும் கைதிகளென கருதப்பட்ட இந்தக் குற்றமிழைக்கா பெண்களெல்லாம் பச்சா ஸக்கூவுடைய தர்பாருக்குக் கொண்டுவந்து முன்னிலையில் நிறுத்தப்பட்டனர். மந்தி ரிப் பிரதானிகளெல்லோரும் அமீரைப்புடை சூழ்ந்திருந் தனர். இது போழ்து பச்சா ஸக்கூ மிகப் பூரிப்படைந்து தன் பிரதம மந்திரியை நோக்கிப் புகழலாயினர்:—

பச்சா ஸக்கூ:—மந்திரி! உனது சாமர்த்தியம் மெச் சத்தக்கது. நீர் மகாபுத்திசாலியே. இந்தப் பெண்களையெல் லாம் ஒருமிக்க எங்கிருந்து—எங்ஙனம் பிடித்து வந்தீர்?

பிரதம மந்திரி:—ஐயன் மீர்! இத்தகவலை யுணர நான் படாத பாடுபட்டேன். பலவித ஏற்பாடுகள் செய்தேன்.

மூலை முடுக்குகளுக்கெல்லாம் ஆயிரக் கணக்கான உளவாளிகளை வைத்தேன். இதன் பொருட்டேதான், தங்களாசீர்வாதத்தால் வெற்றியடைந்தேன்.

பச்சா ஸக்கூ:—வெகு சந்தோஷம்! சரி! (பிறகு, எதிரில் நிறுத்தப்பட்டிருந்த குல்செஹ்ராவை நோக்கி) அழகிய ஆரணங்காய்! உனது ரூபலாவண்ய, ஸ்வர்ண சரீர, ஒய்யார தேஜோமய, சுந்திர சந்திர வதன விசாலத்தைப் பற்றி யான் அதிகமாக புகழ்ந்துரைக்கக் கேட்டுள்ளேன். நங்காய்! நீ யுனது முரண்பட்ட மனப்பான்மையை மாற்றிக்கொண்டு எனக் குடன்படுவையாயின், உன்னை எனது ஹாமுக்கு (அந்தப் புறத்துக்கு)த்தலைவியாகச் செய்து கொள்ள விரும்புகின்றேன்.

குல்செஹ்ரா:—(மிக்க கோபமடைந்து) ஏ! அதமா! உன்மீது ஆண்டகையின் லஅனத்தும் சாபமும் உண்டாகக் கடவது. பேதைப் பெண்ணை பிடித்து வந்து இங்ஙனம் மானஹீனப்படுத்துவது தான் உனது ஸ்தானத்துக் கழகோ?

பிரதம மந்திரி:—(குறுக்கிட்டு) ஏ! விஷமப் பெண்ணே! வாயை யடக்கு. அரசர் முன் கண்ணியமாய் உடன்பட்டு நடந்து கொள்.

பச்சா ஸக்கூ:—(கோபம் பூண்டு) ஏ நங்காய்! நான் அமீர் என்பதை உணராயா? நான் இடும் கட்டளைக்கு நீர் கட்டுப்பட்டுத்தான் தீரவேண்டும். இதைவிட்டுத் தப்ப உனக்கு வேறு வழியில்லை யென்பதை எண்ணிக்கொள்!

குல்செஹ்ரா:—உங்களையும் உங்களது அதிகாரத்தையும் யான் ஒரு சிறிதும் இலக்ஷியம் செய்யத் தயாராயில்லை. என் தேகத்தை விட்டு எனதாத்மா பிரிந்து விண்ணேக வாய்த்த போதிலுஞ் சரியே. ஒருபோதும் உங்கள் இஷ்டத்துக்கு உடன்படேன். எங்களது விசுவாசத்துக்குரிய அமீர் அமானுல்லாகானவர்களது கண்ணியமே எங்களுக்கு எங்கள் உயிரினும் சிறந்ததாகும்.

பச்சா ஸக்கூ:—ஏ பாவாய்! அந்த "அமானுல்லாவை காபிர்" என்று சொல்லு, இன்றேல் உன்னை இலேசில் விட மாட்டேன்.

குல்செஹ்ரா:—உங்கள் மிரட்டலுக் கெல்லாம் யான் ஒருசிறிதும்அஞ்சேன். என் ஆவி பிரிய நேரிடினும் அவ்வுத்தம அரசரான அமீர் அமானுல்லாகான் அவர்கள் விஷயத்தில் அபகீர்த்தியான வார்த்தை யொன்றும் என் நாவினின்று பிரவகிக்கா தென்பது திண்ணம். அதற்குப் பதிலாய் அக்கிரமத் தலைவனுன உன்னை "மோசக்காரன், நிம்மக் ஹராம், கொள்ளைக்காரன்" என்று தான் கடிந்து கூறுவேன்.

இந்தக் கொடும் பதங்கள் இள நங்கையின் நாவினின்று ஒலிக்கவே பச்சா ஸக்கூ வெட்கக் கடலுளாழ்ந்தான். அவனுக்கு ரோஷம் மூண்டெழுந்தது எனவே கொலைக்காரனைக் கூப்பிட்டு,

பச்சா ஸக்கூ:—ஏ கொலைஞ! அந்தக் கிழட்டுமாதைக் கட்டிப் பிணித்து மகளின் முன் நிறுத்து, நான் உத்தரவிட்டதும் அவளது கழுத்தை வெட்டி வீழ்த்தி விடு.

கொலைஞன்:—அரசே! அங்ஙனமே செய்கிறேன். என்று கூறிவிட்டு ஒரு குற்றமுஞ் செய்யாத அந்தப் பெரியம்மையை துராகிருதமாய் அம்முரட்டு மனிதன் பிடித்து பிணைத்து குல்செஹ்ராவின் எதிரில் நிற்க வைத்து விட்டு தனது கூரிய கொலைவாளையுருவி அம்மாதின் கழுத்துக்கு நேராய் ஓங்கிக்கொண்டு நின்றுன்.

இவ்விபரீதங்களைக்கண்டு மனங்குழைந்தகுல்செஹ்ரா தனதாருயிரினுமினிய தனது தாயைத் தாவி அன்புடன் கட்டித் தழுவி முத்தமிட்டு அழத் தொடங்கினுள்.

இதைக் கண்ட தாய் தன் செல்வக் குமாரியை நோக்கி:—என் செல்வமே! அயோக்கியர்களின் அதிக்கிரமத்தால் இறப்பதில் புண்ணியமுண்டு. இன்றைக்கிருப்பி

னும் என்றைக்கேனும் ஒருநாள் ஒவ்வொரு மனுஷ்யப் பிறவியும் இறக்கவேண்டியது தெய்வத்தின் இயற்கை விதியாதலால், என் குலக்கொழுந்தே! யான் உன்னை ஈரைந்து திங்கள் சுமந்துப் பெற்று பரிபாலித்தேனாயினும், இன்று யானும் ஆண்டவனது திருவடி நிழலையடையப் போகின்றேன். யான் இறப்பதைப்பற்றி நீ வருந்தாதே. ஆனால் இறுதிவரை இவ்வதமர்களின் பயமுறுத்தலுக்கஞ்சாது மனதைமாத்திரம் ஒரே நிலையில் வைத்திரு. இது நமக்கொரு பரிசோதனைக்குரிய காலமாகும். எத்தகைய இடர்கள் நேரிட்டாலும் நமதாப்த அரசர் அமானுல்லாகானுடைய விசுவாசத்தை மாத்திரம் கைவிடலாகாது. நாமெல்லாம் அச்சத்தியரால் பரிபாலிக்கப்பட்டோம். போஷிக்கவும்பட்டோம். அவராலிடப்பட்ட உப்புணவை உண்டுமுள்ளோம். அவர்பால் நாம் இறுதிவரை நன்றியுள்ளவர்களாயிருப்பதே நமது கடமையாகும். மகளே! இந்த பச்சாஸக்கூவால் உனக்கு எத்துணைத் தீமைகள் நேரிட்டாலும் ஒருபோதும் அமீர் அமானுல்லாவை வெறுத்துத் தூஷிக்க உடன்படாதே. இதுவே எனது இறுதிகால உபதேசமாகும்—என்று கூறி முடித்தார்.

அன்னையின் ஒவ்வொரு வசனமும் நங்கை நல்லாள் குல்செஹ்ராவின் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. இம்மங்கையின் மனத்துள் முன்னைய நிலைமை காட்டினும் அதிகமான தைரியமும் வீரமும் உற்சாகமும் உண்டாய்விட்டன. எத்துணைப் பெரிய ஆபத்து வருவதாயினும் அதை யெல்லாம் சகித்து நிலையாய் நிற்கத் தயாராகிவிட்டாள்.

பச்சா ஸக்கூ:—(மீண்டும் குல்செஹ்ராவை அதிகமாய் மிரட்டி கண்கள் பிதுங்க உருக்கிப் பார்த்து) ஏ பெண்ணே! அமானுல்லாவை காபிர் என்று கூறுகிறாயா! இல்லாவிட்டால் உன் அன்னையை ஒரே வீச்சில் கழுத்தை வெட்டி ஆவியைப் போக்க உத்தரவிடட்டுமா?

குல்செஹ்ரா:—(துணிவுடன்) நீ என்ன வேண்டு மானாலும் செய்து கொள். நான் உனது சொல்லையும் கொடுஞ் செயலையும் ஒரு சிறிதும் இலக்ஷியம் செய்ய மாட்டேன். இன்னும் எங்கள் ஆத்மாவுக்குரிய சத்திய மன்னர் காஜீ அமீர் அமானுல்லாகானவர்களை யான் ஒரு போதும் காபிர் என்று கூறவேமாட்டேன்.

பிரதம மந்திரி:—(குறுக்கிட்டு) ஏ! புத்தி யில்லாப் பெண்ணே! உன்னையீன்ற தாயின்பால் உனக்கு விருப்ப மில்லையா? தாயின் உயிரைக் காப்பாற்ற உனக்கு ஆர்வ மில்லையா?

குல்செஹ்ரா:—(மந்திரியை நோக்கி) உனது இதோப தேசத்தை யான் ஏற்கத் தயாராயில்லையாயினும், பதில் கூற மாத்திரம் முன் வருகின்றேன். பெற்றதாயின் மீது வாஞ்சைக் கொள்ளாத புத்திரி இவ்வுலகிலிரா ளென்பது திண்ணம். என் அன்னை மீது எனக்கு அளவற்ற ஆர்வ முண்டு. ஆயினும் எனக்கும் என் தாய்க்கும்இத்தேயத்து எல்லா உத்தமர்க்கும் மிக மிக விருப்பத்துக் குரியவரான அமீர் காஜீ அமானுல்லாகான் அவர்களுடைய இராஜபக்தி என் தாயின் வாஞ்சையை விட அதிகமாக மனத்துள் வேரூன்றியிருக்கின்றது. ஆதலின் ஒரு போதும் எங்கள் அமீரின் கண்ணியத்துக்கு ஈனமான விதத்தில் அணுவள மும் விகல்பமாய் நடந்து கொள்ள மாட்டேன். என்பது திண்ணம்.

பச்சா ஸக்கா:—(மங்கையை நோக்கி) அப்படியானால் உன் தாயை வெட்டி வீழ்த்தி விட உத்தர விடட்டுமா? இது உனக்கு விருப்பம் தானா?

குல்செஹ்ரா:—அதைப்பற்றி உன்னிடம் யான் ஆக்ஷேபனை செய்யமாட்டேன். நிச்சயமாகவே அரசர் அமானுல்லாகானவர்களின் கண்ணியத்துக்காகவும்சத்தியத் துக்காகவும் யானும் எனது தாயும் ஆத்மா அர்ப்பணமாய் விட சித்தமாக யிருக்கின்றோம்.

பிரதம மந்திரி:—(குறுக்கிட்டு) அறிவில்லாப் பெண்ணே! உனது தாய் இங்ஙனம் சிரச்சேதம் செய்யப்பட்டால் புண்ணியம் பெற்றுப் போவாளென்று கருதுகின்றாயா? உனது அன்னை மாண்ட பின்னருங்கூட அவள் எங்கள் அமீர் ஹபீபுல்லாவின் (பச்சா ஸக்கூவின்) மோசக்காரி என்றே அழைக்கப்படுவா ளென்பது உனக்குத் தெரியாதா?

குல்செஹ்றா:—எனதன்னை ஒருபோதும் மோசக்காரியாகாள். சத்தியத்துக்காக தன்னுயிரையும் தியாகம் செய்த வீர மாதராவாள். இன்னும் பரிசுத்த மரணமான ஷஹீதாகவுமாவாள். இதற்கு ஆண்டவனும் அவனது ரஸூலும் சாட்சியமா யிருக்கின்றனர். உண்மையில் எனது தாய் உத்தமியே யாவாள்.

பச்சா ஸக்கூ:—உனது கெர்வத்தையும் உன் அன்னையின் செருக்கையும் இதோ ஒழிக்கின்றேன். அவள் உத்தமியாவதைக் காட்டுகின்றேன். (கொலையாளியை அழைத்து) ஏ வீரா! ஆகட்டும் உன் வேலை! அக்கிழவியின் கழுத்தை வெட்டு!

அந்தோ பரிதாபம்! மகாக் கொடும்பாவியான தலைவனின் ஆக்கினைப்படி கொலையாளி குல்செஹ்றாவின் உத்தம தாயின் கழுத்தின்மீது கத்தியை வீசி இழுத்தான். இச்சமயத்தில் அவ்வன்னையார் சர்வமும்வல்ல அல்லாஹ்வை தியானித்து, "ஆண்டவனே! உத்தம அரசரின் கண்ணியத்துக்காக உனது சத்தியப் பாதையில் என் ஆவியை நீத்துகிறேன். இதற்கு நீயே சாட்சியாயிருப்பாயாக!" என்று கூறி முடித்தாள். கொடிய வாளால் அக்கிரமமாய் வெட்டப்பட்ட சிரம் மகா கொரேக் காக்ஷியோடு தரையில் வீழ்ந்தது அந்த சத்திய உத்தமி இத்தரணியைவிட்டு உயிர் நீத்தாள். அவளது ஆத்மா சாந்தியடைய விண்ணேகிற்று. அந்தோ! இன்னாலில்லாஹிவ இன்னா இலைஹி ராஜிஊன்.

பிரதம மந்திரி:—பெண்ணே! பார்த்தனையா? உன் அன்னையின் கதி எவ்வாறு முடிந்தது.

குல்செஹ்ரா:—(சகிக்கமாட்டாத துக்கத்தால் கண்ணீர் வடிய நாக்குழறி,) சர்வமும்வல்ல ஆண்டவன் எனக்கும் என்னைச் சேர்ந்தோருக்கும் இங்ஙனம் ஷஹீதான மரணத்தையே தந்தருள்வானாக. ஆமீன்! என்று கூறி முடித்துத் தாயின் கோரக் கொலையை கண்ணால் காணமாட்டாது மூர்ச்சையாகி கீழே வீழ்ந்துவிட்டாள்.

பச்சா ஸக்கூ:—(சற்றும் இரக்கமற்றவனாய் காவலாளிகளை நோக்கி) ஏ சேவகர்காள்! இந்த போக்கிரிப் பெண்ணையும் அந்தத்தாதிப் பெண்களையும் இழுத்துச் சென்று சிறைச்சாலையில் அடைத்துவையுங்கள். இருக்கட்டும்! பலாத்காரத்திலேனும் இவளை நாளைய தினமே எனது அந்தப்புறத்துக் குரியவளாய் செய்துவிடுகின்றேன்—என்று கூறி முடித்தான்.

50 காவலாளிகள் இம்மூன்று ஸ்திரீகளையும் சிறையிலிட காவற்கூட்டத்துக்குஇழுத்துச் சென்றுவிட்டனர். மற்றைய மந்திரிப்பிரதானிகளும் பச்சா ஸக்கூ அனுமதிப்படி சபைக் கலைய வெளியேறினர். பச்சா ஸக்கூவும் இரக்கமற்ற மனத்தினனாய் தனதிருப்பிடம் சென்றனன்.

அத்தியாயம் 9.

சதியாலோசனைக்காரர் சூழ்ச்சி பலிக்கவில்லை

வீரந்திகழும் செம்முக மூடியணிந்த நம் இளைஞன், இனி தான் செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றி யாலோசித்தவண்ணம் தனது சகாக்களைத் தேடித்திரிந்து கொண்டிருந்தான். இவன் ஒரு குறுக்குவழியே செல்ல முயலுங்கால், திடுமென தனக்குப் பிறகே ஊதுகுரலோசை யொன்றிருப்பதைக் கேட்டான். திரும்பி அப்பக்கலை நோக்கினன்.

சற்று தூரத்தில் காணப்பட்ட செழித்தோங்கி வளர்ந்த மரத்தினுச்சியில் தனது பச்சை முகமூடியணிந்த சகாக்களில் ஒருவன் சிகப்புக் கொடியொன்றால் நம் இளைஞனுக்குச் சமிக்ஞைச் செய்தான். இவனின் அழைப்பின்படி நம் வாலிபன் தன் குதிரையைத் தூண்டி வேகமாய் சென்று அவனடைந்தான். பச்சை முகமூடிய வீரன் மரத்தினின்று கீழிறங்கிவந்து வாலிபனுக்கு ஸலாம் செய்துவிட்டு மேலும் கூறலானான்:—

பச்சை முகமூடியவன்:—எங்கள் தலைவர்! காரியம் விபரீதமாய் முடிந்து விட்டது. அடுத்துள்ள குக்கிராமத்துத் தச்சனொருவன் நமது பச்சை முகமூடியணிந்த வீரர்களெல்லோரையும் எப்படியோ வஞ்சித்து கைது செய்து கொண்டிருக்கின்றான்!

சிகப்பு முகமூடிய வீரன்:—என்ன! தச்சனா கைது செய்து கொண்டான்? அதெப்படி?

பச்சை முக மூடியவன்:—ஆம்! இந்தத் தச்சன் எளியவனாயிருந்தமையால் இவன் அரசாங்க விஷய முணராதவனாகவே யிருப்பானென எல்லோரும் எண்ணி யிருந்தார்கள். இவனும் நம்மைச் சேர்ந்தோர்களுடன் ஸ்நேக பாவத்தோடே யிருந்து வந்தான். இன்று அவன் நம் பச்சை மூடி யணியும் வீரர்களுக்கெல்லாம் விருந்தளித்தான். விருந்துணவில் ஏதோ மயக்க மருந்தை கலந்தளித்து விட்டான் போலும்? பிறகு எல்லோரும் அவனால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நான் நம் நல்லதிருஷ்டவசமாய் அந்த விருந்துக்குச் செல்லவில்லை. எனவே இவ்விபரீதத்தை தங்களுக்கு அறிவிக்க தங்களை தேடியலைந்து இங்கு கண்டேன். அந்தத் தச்சனுடைய ஏழு புத்திரர்கள் மிகவும் தேக வன்மையுடையவர்களா யிருக்கின்றனர். இவர்களே இப்போது நம் ஆட்களை காவற்காத்து நிற்கின்றனர்.

சிகப்பு முக மூடிய வீரன்:—அந்தக் கிழத் தச்சன் எதற்காக இந்தச் சதிச் செயலைப்புரிந்திருப்பான்? இதனால் அவனுக்கென்ன நன்மை?

பச்சை முக மூடியவன்:—தலைவ! பச்சா ஸக்கூவுடைய புது மந்திரியின் தூண்டுதலின் பேரில் தான் இவன் இக் காரியத்தைச் செய்திருப்பான்.

சிகப்பு முக மூடிய வீரன்:—பச்சா ஸக்கூவுடைய ராணுவர்களும் அங்கு காவல் புரிகின்றனரா?

பச்சை முக மூடியவன்:—இன்னும் இச்செய்தி காபுலுக்குச் செல்லவில்லை. ஆதலின் ஸக்கூவின் சிப்பாய்கள் எவரும் அங்கில்லை.

சிகப்பு முக மூடிய வீரன்:—அப்படியானால்நாம்அஞ்ச வேண்டிய முகாந்தரமில்லை. உடனே புறப்படு. அவ்விடம் சென்று நம் சகோதரிகளை நாமே விடுவித்து வருவோம். என்று கூறினன்.

எனவே இரு தீரர்களும் தங்கள் குதிரைகளைத் தூண்டித் தச்சன் வசிக்கும் குக்கிராமத்தை யடைந்தனர். குதிரைகளை மரத்தண்டை கட்டி விட்டு கால் நடையாய் பதுங்கும் பூனைகளைப்போல் மெதுவாகச் சென்று தச்சன் வீட்டுப் பலகணி வழியே ஒளிந்து உள்ளே எட்டி பார்த்தனர். தமது சகாக்களெல்லோரும் கயிறுகளால் பிணைக்கப்பட்டுக் கிடந்ததைக் கண்டு மனம் வெதும்பினர். பிறகு அவ்வீட்டின் பின்புறம் சென்று உட் செல்ல மார்க்கமிருக்கின்றதா வென்பதைப் பார்த்தனர். ஏதும் காணப் படவில்லை. பச்சை முக மூடி யணியும் சகாக்களெல்லாம் அடைப்பட்டுக்கிடந்த அறைக்குட் செல்ல முன்புறம் மட்டுமே வழிகாணப்பட்டது. அத்துடன் ஏழு முரட்டு தச்சப் புத்திரர்களும் அவ்வறையின் கதவை பெரியதொரு பூட்டால் பூட்டி விட்டு வெளிபுறத்தில் ராக்ஷஸர்களைப் போல் காவல் காத்துக் கொண்டிருந்தனர். எனவே

நம் இளைஞன் சற்றுநேரம் ஆலோசித்தான். ஏதோ முடிவு செய்தவனேபோல்திருப்தியடைந்து, தனது பச்சை முக மூடியணிந்த வாலிபனை யழைத்து அவனுக்கு சில மொழி களை இரகசியமாய் மொழிந்தான். இந்நண்பனை வீட்டின் முன்புற மனுப்பிவிட்டு, வாலிபன் அவ்வில்லத்தின் பின் புறம் சென்று மறைந்து கொண்டான். நிற்க,

பச்சை முகமூடிய நண்பன், தனது முகமூடியை எடுத்துவிட்டு ஒரு எளிய பாமரனைப்போல் நடித்துக் கொண்டு வீட்டெதிரேவுள்ள பாதை வழியாக வீட்டை நோக்கிப் பரபரப்பாய் ஓடி வந்தான். உடனே வீட்டுக் குள் நுழைந்து ஆங்கிருந்த தச்சக் குமாரர்களை நோக்கி, அய்யா! சீக்கிரம்! சீக்கிரம்! அந்தச் சிகப்பு முகமூடிய ஆசாமி அகப்பட்டுக் கொண்டான். பாட்டையிலுள்ள மரத்தின் மீதேறி தன்னை ஒளித்துக் கொண்டிருக்கின்றான். நல்ல காலமாய் நான் அவனை கண்டுபிடித்து விட்டேன். அவன் என்னைப் பார்க்கவில்லை. ஆதலின் எனக்கு நீங்க ளெல்லாம் துரிதமாய் உதவி செய்ய வாருங்கள். அவனைப் பிடித்து உங்களிடம் ஒப்படைத்து விடுகின்றேன்.

தச்சக் குமாரர்கள் (சந்தோஷமடைந்து) அப்படியா! நீ பயப்படாதே. இதோ நாங்கள் உன்னுடன் வருகின் றோம். அந்தப் பெரிய விரோதியைப் பிடித்து விடுவோ மாயின் நமதரசர் அமீர் ஹபீபுல்லா (பச்சா ஸக்கூ) அவர் கள் நமக்குப் பெருத்த சன்மானமளிப்பார். சரி! புறப் படுங்கள். அந்த விரோதியின் இக்கூட்டத்தினர் இவ் வறையிலேயே பூட்டப்பட்டுக் கிடக்கட்டும் நாம் சென்று வருவோம்.

என்று அந்த எழுவரும் கூறிக்கொண்டு வெகு அவ சரமாய் வீட்டைவிட்டு வெளியே வந்தனர். சிகப்பு முக மூடியவனின் நண்பன் காட்டிய வழிப்படி அவ்வெழுவரும் ஒரு பக்கலை நோக்கி யோடி மறைந்தனர்.

இவற்றை யெல்லாம் வீட்டின் பின்புறத்தினின்று ஒளிந்து உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த நம் செம்முக மூடி யணிந்த வீர வாலிபன் மிகவும் பூரித்துத் திருப்தி யடைந்தவனாய் உடனே வீட்டின் முன்புற முற்றத்துக்குள் வந்தான். தனது சகாக்க ளெல்லோரும் அடைக்கப்பட் டிருந்த கதவில் பெரியதொரு பூட்டு இடப்பட்டிருந்ததைக் கண்டான். எனவே இளைஞன் பெருத்த கல்லொன்றை எடுத்து பலமாய் அப்பூட்டை நோக்கி அறைந்தான். அடுத்த க்ஷணமே அவ்விரும்புப் பூட்டு பல சுக்கல்களா யொடிந்து கீழே உதிர்ந்தன.

நம் இளைஞன் ஒரு வினாடியையும் வீணில் போக்காது உடனே கதவை உதைத்துத் திறந்து உள்ளே நுழைந் தான். தனது பச்சை முகமூடியணியும் சகாக்களெல்லோ ரும் தங்கள் தலைவரைக் கண்டு பூரித்தனராயினும், தாங் களெல்லோரும் ஒருமிக்க கேவலம் ஒரு தச்சனிடம் சிக் கிக்கொண்டமைக்காக வெட்கித் தலைகுனிந்தனர். இதை யொரு சிறிதும் நம் காளை வீரன் பொருட்படுத்தாது அவர்கள் கட்டுகளையெல்லாம் துரிதமாய் அவிழ்த்து யாவ ரையும் வெளியே அனுப்பினன். இக்குழாத்தினரெல்லாம் வீட்டுக்கெதிரில் வெளியே வரிசைப்பட நின்று தங்கள் தலைவருக்கு மரியாதைப் புரிந்து, ஆக்கினையை எதிர்பார்த் துக்கொண்டு நின்றனர். தன்னுடன் எல்லோரும் தங்கள் தங்கள் குதிரைகளில் புறப்படவேண்டுமென இளைஞன் உத்திரவிட்டான். உடனே பச்சைமுகமூடிய எல்லா சகாக் களும் பலவிதமாக வாயால் சீட்டியடித்தும், கத்தியும், சப் தம் செய்தும் குதிரைகளை அழைத்தனர். சமீபத்திலி ருந்த புல் பூமிகளிலும் புதர்களிலும் மேய்ந்துகொண்டி ருந்த அவர்கள் குதிரைகளெல்லாம் உற்சாகத்தோடு ஒடி வந்து தம் தம் எஜமானர்களை யணுகிவிட்டன. எல்லோ ரும் குதிரைகள் மீதேறிக்கொண்டனர். நம்வீர இளைஞன் தனது அச்சகாக்களெல்லோரையும் அழைத்துக்கொண்டு தனது இருப்பிடம் நோக்கி சென்றனன்.

நிற்க, தச்சக் குமாரர்கள் எழுவர்களையும் சிகப்பு முக மூடியை பிடித்துத் தருவதாய் அழைத்துச் சென்ற வீரன் சிறிதுதூரம் அழைத்துச்சென்று ஒருமறைவிடத்தில்நின்று அவ்வேழு தடியர்களையும் நோக்கி, அன்பர்களே! அதோ தெரியுமந்த மரத்தில்தான் அந்த செம் முகமூடியிருந் தான். நீங்களெல்லாம் இரண்டொரு நிமிஷம் இங்கேயே நில்லுங்கள். நான் மாத்திரம் மெதுவாக அங்குச் சென்று பார்த்து, பின்னர் சீட்டி யடிக்கின்றேன். உடனே நீங்க ளெல்லாம் என் இருப்பிடம் ஓடி வாருங்கள். ஒருமிக்க நாமெல்லாம் சேர்ந்து அந்த ஆசாமியை கட்டிப் பிணைத்து விடுவோம். ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். என்று சமாதானம் கூறி ஏழுவீரர்களையும் மறைவிடத்தில் நிற்க வைத்துவிட்டு அந்த தனித்த வீரன் மாத்திரம்தான் அவர்களுக்குக் காட்டிய மரத்தடியை நோக்கிச்செல்வதாய் பாவனை காட்டிவிட்டு, அவர்களுக்குப் புலப்படாமல் வேறு வழியாய் தன் குதிரையை கடுவேகமாய் ஓட்டி எங்கோ சென்று மறைந்துவிட்டான்.

இங்கு எழு காதகர்களும் மரத்தடியினின்று சீட்டி யடிக்கும் சப்தம் வரும், வருமென வெகுநேரம் காத்து நின்றனர். மணிக் கணக்காய் நேரம் வீணிற்போயிற்றே யல்லாமல் சப்தமொன்றும் கேட்கவில்லை. என் செய்வர்? பாபம்! புண்பட்ட மனத்தினராய் துணிந்து, அந்த பச்சை முகமூடியணியும் வீரன்சுட்டிக்காட்டியமரத்தடியைசென்ற டைந்தனர். அதைச் சூழ்ந்த சந்து பொந்து மரஞ்செடி புதர்களை யெல்லாம் தேடி யளாவிப் பார்த்து விட்டனர். தாங்கள் ஆவலாய் கோரிப் பிடிக்க வந்த செம்முக மூடிய வாலிபனும் கிடைக்கவில்லை. தங்களை அழைத்து வந்த பச்சை முகமூடிய வீரனும் அகப்படவில்லை.

எனவே இந்த எழு தச்சக் குமாரர்களும் ஏய்க்கப்பட் டவர்களாய் சந்தேகப்படலாயினர். இறுதியாய் தங்களை எவனோ ஒரு மோசக்காரன் ஏமாற்றிவிட்டு சென்றானெனக்

கருதி, வேண்டா வெறுப்போடும், மனத்தில் புழுங்கிய குறுங்குறுப்போடும் தங்கள் இல்லத்தை நோக்கித் திரும்பிச் செல்லலாயினர். வீட்டு வாயிற்படியை யடைந்ததும் முன்னர் தாங்கள் பூட்டி வைத்து வந்த இறுகிய இரும்புப் பூட்டு ஒடிந்து பல துணுக்குகளாய்க் கீழே சிதறிக் கிடத்தலைக் கண்டு பெருந்திகில் கொண்டனர். சிறிதும் தாமதியாது கதவுக்குள் நுழைந்து அறையின் உட்புறத்தைப் பார்த்தனர். தங்களால் அடைக்கப்பட்டுக் கிடந்த ஆசாமிகளில் ஒருவரையேனுங் காணாது இனியில்லா சஞ்சலமடைந்தனர். கோபாவேசத்தால் அவர்கள் வயிறுகள் எரிந்தன. கண்களில் தீப்பொறிக் கிளம்பின. உதடுகள் துடித்தன. கால்களை பூமியின் மீது உதைத்துக் கொண்டனர். இனி செய்வதின்ன தென்றுப் புலப்படாது விழித்தனர். (மீன் கண்டத்தைப் பறி கொடுத்தப் பார்ப்பனத்தியைப் போல் திண்டாடினர்.) இத்துணை விபரீதங்களுக்கும் தங்களது அவசரப் புத்தியும் அறிவின்மையுமே காரணமென உணர்ந்து மௌனமாய் நாணியிருந்து விட்டனர். மிகப் பிரயாசையோடு கிடைத்த வேட்டைப் பொருள் கைவிட்டு நொடிக்குள் போயிற்றே என்றும் பிரலாபித்துக் கொண்டுக் கிடந்தனர். இது இங்ஙன மிருக்க,

தச்சர்களால் மடக்கப்பட்டுக் கிடந்த தனது பச்சை முகமூடியணியு மாட்களையெல்லாம் விடுவித் தழைத்துச் சென்ற நம் இளைஞன்—வீரன் தன் புதிய இல்லத்தைச் சென்றடைந்தான். எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த யுவதி பரீபானு இவர்களெல்லோருக்கும்சலாம் செய்து நல்வரவு கூறினள். தனது தங்கை மிகவும் துக்க முகத்தோடிருப்பதைக் கண்ட இளைஞன் காரணத்தை வினவினன். அதற்கு அப்பெண்மணிபின்வருமாறுபதில்கூறினள்:-

பரீபானு:—சகோதரா! நமது நண்பி குல்செஹ்ராவின் அன்னையை அந்த துஷ்ட பச்சா ஸக்கூ அக்கிரமமாய் கொலை செய்துவிட்டதாய் தகவல் கிடைத்திருக்கின்றது. குல்செஹ்ராவையும் இவளது தாதிமார்களையும் சிறையில்

அழைத்து வைத்திருக்கின்றாராம். இன்னும் நாளை தினம் மீண்டும் பச்சா ஸக்கூ குல்செஹ்ராவை தர்பாருக் கழைத்து, எப்படியேனும், பலாத்காரத்திலேனும் தன் மனைவியாகச் செய்துகொள்ள முடிவு செய்திருக்கின்றாராம். என்ன செய்வது?

சிகப்பு முகமூடி:—தங்காய்! நீ வருந்தாதே. இதெல்லாம் நம்போன்ற குற்றமற்றோர்க்கு நேரிடும் சோதனைக் காலமாகும். சர்வமும் வல்ல அல்லாஹுத ஆலாவின் உதவியால் நாளையத் தினம் என் சகாக்களோடு காபுல் சென்று எவ்விதத்திலேனும் குல்செஹ்ராவையும் அவளது தோழிகளையும் காப்பாற்றி வந்து விடுகின்றேன்.

என்று வாலிபன் தன் சகோதரிக்குச் சமாதானம் கூறிவிட்டு, தனது பச்சை முகமூடி யணிந்த சகாக்களோடு சம்பாஷணையில் கலந்து கொண்டான். எனவே யாவருங் கூடி கைதியான பெண்களின் விடுதலைக்கான யோசனைகளைப் புரியலாயினர். இன்றிரவைக்கு எல்லோரும் ஏகமாய் சென்று சிறைச்சாலைக் காவலாளிகளை எதிர்த்து வென்று கைதிகளை ரக்ஷித்து வருவதென்று சிகப்பு முகமூடிய வாலிபனின் பச்சை முகமூடி யணிந்த சகாக்களில் பல்லோர் ஒருங்கே அபிப்பிராயங் கூறினர். நம் வாலிப வீரன் தனது அபிப்பிராயத்தை வெளியிட வாயெடுத்தான்.

அதற்குள், முன்னர் தச்சன் வீட்டு ஆட்களையெல்லாம் ஏமாற்றி விட்டொளிந்த பச்சை முகமூடிய வீரன் இவர்கள் சபையை நோக்கி தன்குதிரையை ஓட்டிக்கொண்டோடி வந்தான். மேலும் வெகு அவசரமாய் கூறலானான்:—“சோதரர்காள்! காபுல் சிறைச்சாலையில் இன்று முதல் பச்சா ஸக்கூ எழுநூறு சிப்பாய்களை கடுமையான காவலாளராய் நியமித்திருக்கிறார். அவர்களெல்லோரையும் நாம் எளிதில் தாக்கி விடுவதென்பது முடியாது. ஆதலின் நம் கைதிப் பெண்களை விடுவித்து வர வேறு வழியைத் தான் முடிவு செய்தல் வேண்டும்” என்றான்.

இதைச் செவியுற்ற நம் வாலிப வீரன் இன்னு மாழ்ந்த சிந்தனையிலாழ மூழ்கினன். அவனது ஹிருதயத்தில் நன்னீரருவிபோல் ஒன்றன்பின்னென்றய் பலவிதமான உபாயங்கள் ஒலித்து ஓடி மறைந்து கொண்டிருந்தன. தகவல் கொண்டு வந்துரைத்த பச்சை முகமூடிய வீரன் மீண்டும் தன் தலைவனை நோக்கி, "அன்பரே! என் உள்ளத்தில் ஒரு நல்ல யோசனை உதித்துள்ளது அதாவது:—சிறைக்கூடத்துக் காவலாளிகளை எதிர்ப்பதென்பது சிரம சாத்தியமாய் முடியும். ஆனல், நாளைக் காலையில் நம் கைதிப் பெண்களை விசாரிப்பதற்காக வேண்டி பச்சா ஸக்கூவின் சிப்பாய்கள் தர்பாருக்கு அழைத்துச் செல்வார்கள். அக்காலை நடு வழியில் நாம் ஒருமிக்க அக்காவலாளரை எதிர்ப்போமானல் நம் கோரிக்கை எளிதில் பூர்த்திப் பெறும், என்பதேயாம்" என்று கூறிமுடித்தான்.

அதற்கு நம் சிகப்பு முகமூடிய இளைஞன் அதிகத் திருப்தியடைந்து "நண்பா! இவ்விஷயத்தில் எனது ஆலோசனையைவிட உனது சிந்தனையே துரிதமாய் தீக்ஷண்யம் அடைந்து என்னுள்ளத்திலும் இம்மார்க்கம் புலன்பெற்றது. ஆயினும் நான் அதை வெளியிடுவதற்கு முன் நீரே முதலில் வெளியிட்டமைக்கு உம்மைப் போற்றுகிறேன். சரி! நேரமாகின்றது. அதுவரை நமது இதர காரியங்களை கவனிப்போம்" என முடிவு செய்து எழுந்து விட்டனர்.

—

அத்தியாயம் 10.

—

பச்சா ஸக்கோ மீது வெடிகுண்டு போட முடிவு

மறுநாட்காலை பொழுது சாய்ந்தபின், பச்சா ஸக்கூவின் ஆக்கினைப்படி காபுல் நகரச் சிறைக்கூடத்தினின்று குல்செஹ்ராவையும் அவளது தோழிகளையும் காவலாளிகள் பலர் பின் கட்டுகளுடனும் நான்கு பக்கப் பாதுகாப்புடனும் தர்பாருக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்த

னர். ஏற்கெனவே முன் ஜாக்கிரதையாக நடு வழியின் மறைவில் ஒளிந்து கொண்டிருந்த நம் சிகப்பு முகமூடிய இளைஞனும் அவனது ஆட்களும் ஒருமிக்க அந்தக் காவலா ளச் சிப்பாய்களை யெல்லாம் வழிமறித்தெதிர்த்தனர். மூன் றுப் பெண்களை அழைத்துச் செல்ல இருபத்தைந்து சிப் பாய்கள் மட்டும் காவலாளர்களாய் நியமிக்கப்பட்டிருந்தன ராதலால் வாலிபவீரனின் தீரபராக்கிரம சகாக்கள் ஒரு மிக்க கடுமையாய் அவர்களை தாக்கிவிட்டனர். எனவே, அவ்விருபத்தைந்தாட்களும் புறங்கால்பிடரியில்பட பயந்து விரண்டோடத் தலைப்பட்டனர். வாலிபனின் ஆக்கினைப் படி எவரும் அப்பதர்களை பின் தொடரவில்லை. மேலும் இவர்களால் காப்பாற்றப்பட்ட குல்செஹ்ராவினுடையவும் இவளது தோழிகளுடையவும் விலங்குகளை நம் வாலிப வீரன் அவிழ்த்தெறிந்தான். பச்சை முகமூடிய சகாக்க ளெல்லோரும் ஒரு பக்கல் பணிந்தவராய் ஒதுங்கி நின்ற னர். வாலிபவீரன் அப்பெண்பாலார் எதிரே சென்று தன தனுதாபத்தை தன் முகத்தோற்றத்தால் தெரிவித்தனன். வாலிபனின் முகார விந்த விசனத் தோற்றத்தைக் கண் ணுற்ற இளமங்கையான குல்செஹ்ராவின் கண்களினின் றும் பாஷ்பமானது உதிர்ந்த சிறுமணி முத்துக்களேபோல் தொடர்ந்துசிந்தின. நம்மிளைஞன்நங்கைக்கருகாமைசென்று துக்கத்தால் வாதனையுறவேண்டாமென்றும், பொறுமையே கைவல்யசாதனமென்றும்கூறி தேற்றினன். அன்னையின் கடுங் கொலையை கண்ணுற்கண்ட கண்ணுமணிக்கு ஆறுதல் எங்கிருந்து வரும்? எனவே மீண்டும் தேம்பித் தேம்பி யழுதுக் கொண்டே நேற்று பச்சா ஸக்கூவின் தர்பாரில் மகா கொடூரமாய் தனது தாய் கொலை செய்யப்பட்ட பரிதாபகரமானச் சம்பவத்தை ஆதியோடந்தமாய் எடுத் துரைத்து வெம்பினுள் நமது நங்கை நல்லாள். தாயைப் பிரிந்த இளமங்கை சஞ்சல முறுவதைக் கண்ட இளைஞ னும் பல துளிக் கண்ணீர் விட்டனன். மீண்டும் தனது

சிறிய துக்கத்தை யடக்கிக்கொண்டு மங்கையின் பெருந் துக்கத்தைத் தேற்றலானான்:—

"யாருந்துணையற்ற எமதருங் காரிகையே! அல்லாஹ்வுக்காகவென்றேனும் உன் கண்ணீரைத் துடைத்து எனக்கு தைரியம் புகட்டுவாயாக. இனி உன் விஷயமாய் இத்தரணியில் எனக்கும் என் சகாக்களுக்கும் நேரும் எல்லாவித வில்லங்கனங்களை சகித்து சத்தியத்துக் குழைக்க யாங்களெல்லோரும் தயாராயிருக்கின்றோம். அழகிய அன்னமே! உனது நேத்திர நீர் எனது தைரியத்தைக் குலைக்கும் போலிருக்கின்றது. ஆதலின் நீயதை நிறுத்துவாயாக. இன்னமும் உனது அருமைத் தாயின் பரிதாபக்கொலைக்கு யான் மிக மிக மனமுருகி வாடுகிறேன். எங்கள் அஜாக்கிரதையாலேயே அப்பெரியம்மை இறக்க நேரிட்டதென்பதற்கு வருந்துகின்றேன். பெண் பாவாய்! இன்று உன் முன் ஆண்டவன் மீது ஆணையாய் உறுதியிட்டுக் கூறுகின்றேன். உன் குற்றமற்றத் தாயைக் கொலைச் செய்த அப்படுபாவிகளை பழிக்குப் பழி வாங்காது விடேன்! விடேன்! இது திண்ணம்."

என்று இதன் இறுதிவாக்கியங்களை நம் தீர இளைஞன் மிகுந்த ஆக்ரோஷத்தோடு கர்ஜித்துக் கூறி தன் உடைவாளை யுருவி மேலே தூக்கிப் பிடித்தான். இவனின் பச்சை முக மூடியணிந்த மற்றைய சகாக்களெல்லோரும் உற்சாகம் பெற்றெழுந்தவர்களாய் ஒருமிக்க தங்கள் தங்கள் உடைக் கட்கங்களையும் உருவி உயரப் பிடித்துக்கொண்டு "நாங்களும் இக்காரியத்தில் தங்களோடு மனப் பூர்வமாய் ஒத்துழைப்போ" மென ஆரவாரித்துப் புகன்றனர்.

பின்னர் இளைஞன் தன் கத்தியை உறையில் சொருகினான். மற்றையோருஞ் சொருகிக் கொண்டனர். இந்தத் தாக்கும் முறைமையைப் பற்றி ஆலோசனை சொல்லிக் கொடுத்த வீரனை நம் இளைஞன் தன் முன் அழைத்து நண்பா! இந்த இளமாதின் (குல்செஹ்ராவின்) முன் என்

ஆற்றமற்ற முகத்தைக் காட்டவும் நாண வேண்டியவனு யிருக்கின்றேன். ஏனெனின் இதுகாறும் இம்மங்கையைச் சேர்ந்தோரை பல இடுக்கண்களை விட்டும் பாதுகாத்து வந்தும் சற்றே என் அஜாக்கிரதையின் காரணமாய் இம் மங்கையின் மாதாவை கொடிய பச்சா ஸக்கூ கொடுங் கொலை செய்துவிட்டான். ஆகவே அந்த பச்சா ஸக்கூவி டம் பழிக்குப் பழி வாங்காதவரை யான் சற்றும் ஓய்வு பெறுவதில்லையெனப் பிரமாணம் செய்துகொண்டேன். துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனனுன சர்வமும் வல்ல அந்த அல்லாவின் பெருங் கருணையும் தங்களெல்லோரின் சிற்றுதவியும் என் பக்கல் இருக்குமாயின் நிச்சயம் அப் படுபாவியின் கொட்டத்தை யானடக்குவேன். சரி, மற்றைக் காரியாதிகளை நான் கவனிக்கின்றேன். நீங்களெல்லோரும் இப்பெண்மணியை அழைத்துச் சென்று பாதுகாருங்கள். இன்னும்....................

குல்செஹ்ரா (வார்த்தையில் குறுக்கிட்டு) அன்பரே! தாங்கள் மீண்டும் இப்படிப்பட்ட தைரிய மொழிகளையே கூறி என் முகத்தில் கரியை பூசுகின்றீர். வேண்டாம், எங் கள் விஷயமாக தங்களுக்குச் சிரமம் வேண்யதில்லை. எனது அன்னையார் அவரது ஆயுட்காலம் முடிந்து, விதிப்படியே மாண்டார். இதில் தங்களுடைய யாதொரு அஜாக்கிர தையும் தவறுதலுமில்லை. இனியும் எனக்கு நேரிடும் விதி வசத்தைப்பற்றி தாங்கள் சிரமமேற்கொள்ள வேண்டாம். தங்களுக்கு இப்போது ஆக்ரோஷம் அதிகரித்திருப்பதா லேயே இப்படிப்பட்ட வார்த்தைகளை கூறுகின்றீர். உண் மையில் தற்போது காபுலுக்கு அமீராய் விளங்கும் பச்சா ஸக்கூ மிகுந்த அரசியல் திறனும் ராணுவ பலமும் உடை யவராயிருக்கின்றூர். அவரை யொழிப்பதென்பது உங்கள் போன்ருரால் ஒரு சிறிதும் முடியாது. ஆதலால் எனது விஷயமாய் நீங்கள் இனி வம்பில் தலையிட்டுக்கொள்ளல் வேண்டாமென வேண்டுகின்றேன்.

பச்சை முகமூடியவன்:—(ஒருவன் குறுக்கிட்டு வாலி பனை நோக்கி) "தலைவரே! இந்த அம்மணியார் கூறுவது வாஸ்தவமே. இனி தாங்கள் சிரமப்பட வேண்டாம். இப்படிப்பட்ட காரியங்களை பூர்த்திசெய்ய நானே சித்தமாயிருக்கின்றேன். எனவே இவ்வடியேன் இல்லத்தில் சாதாரணமான வெடி குண்டொன்று கைவச மிருக்கின்றது. என்னவாயினுஞ் சரியே; இப்போ அந்த வெடி குண்டை (பாம்) எடுத்துச் சென்று அவ்வநீத பச்சா ஸக்கூவின் ஆவியை சின்ன பின்னப் படுத்திவிட்டுவந்துவிடுகின்றேன்."

என்று வெகு ரோஷமடைந்தவனாய் கூறிவிட்டு, இந்த பச்சை முகமூடியோன் வாலிப வீரனின் முன் அனுமதியைவேண்டி தாழ்மையாக நின்றான்.

சிகப்பு முகமூடிய வாலிபன்:—(அவனை நோக்கி) நேயா! இந்த விபத்துக்குரிய காரியத்தை செய்துமுடிக்க உனக்குத் தைரியமும் விருப்பமு மிருந்தால் செய்து முடிப்பாயாக. பல குற்ற மற்றார்களையும் பேதைகளையும் மகா மூர்க்கத்தனமாய் கொலை செய்துவிட்ட கொலைக்கார மனுஷ்யாளை கூடியமட்டும் சீக்கிரமாய் வேலை தீர்த்துவிடுவது நன்றேயாம். ஆனால் நீரும் மற்றவர்களைப்போல் அக்கொடிய அதிகாரியிடம் அகப்பட்டுக்கொள்ளாதிருப்பதே உனது வாழ்க்கைக்குரிய முக்கிய காரியமாகும். ஜாக்கிரதை! என்று கூறி முடித்தான்.

பச்சை முகமூடிய அவ்வீரன் இவ்வளவு அனுமதிக் கிடைத்ததே போதுமென்றெண்ணி வாலிபத் தலைவனுக்கு இறுதி சலாம் கூறி விடை பெற்றுக்கொண்டு சந்தோஷத்தால் துள்ளிக் குதித்த வண்ணம் தன் குதிரை மீதாரோகணித்து தன்னில்லத்தை நோக்கிச் சென்றுவிட்டான் அவன் சென்ற பின் நம் செம்முக மூடியணிந்த வாலிப வீரன் அதன் பின் செய்வதின்ன தென்பதைப்பற்றி சிந்திக்க ஆரம்பித்து தலையை தாழ்த்திக்கொண்டான். இவ

னது சிந்தனையைக் கண்ணுற்ற இள மங்கையான குல் செஹ்ரா இளைஞனை நோக்கி வினவலானாள்.

குல்செஹ்ரா:—அன்பரே! எதைப்பற்றி இத்துணை ஆழ்ந்து யோசிக்கின்றீர்கள்?

வாலிபன்:—மாதே! உங்களை இனி வைத்து பாதுகாப்பதற்குரிய பந்தோபஸ்தான இடமெதுவென்பதுபற்றியே ஆலோசிக்கின்றேன். முன் நீங்கள் வசித்த இடத்தில் மீண்டும் வதிவதென்பது மற்றொரு சங்கடத்தையே விளைவிக்கும். ஏனெனின் அந்தக் குடிசை யிருப்பிடம் பச்சா ஸக்கூவின் சிப்பாய்களுக்குத் தெரிந்துவிட்டது.

குல்செஹ்ரா:—அந்தோ! துரதிருஷ்ட சாலியான என்னால் தங்களுக்கு எத்துணையோ சங்கடங்கள் நேரிடுகின்றனவே.

வாலிபன்:—நீவிர் இதைப்பற்றி வருந்த வேண்டாம். உம்போன்ற குற்றமற்றோர்க்கு உபகாரமும் ஊழியமும் புரியவேண்டியது என் மீதுள்ள சன்மார்க்க கடமையாகும்-என்று கூறி, மங்கை நல்லாளை சமாதானப் படுத்தினான்.

நிற்கத்திடுமென வாலிப வீரனின் உள்ளத்தில் ஆறுதலான புதிய மார்க்கமொன்று புலனாயிற்று. எனவே அதை தன் பச்சை முகமூடிய சகாக்களுக்குப் பின்வருமாறு கூறலானான்:—

அன்பர்காள்! தற்போது உங்களையெல்லாம் வஞ்சித்து சிறையிட்டுவைத்த தச்சன் வீட்டில்நாம் இருப்பதே நல்ல உசிதமானதாய் காணப்படுகின்றது. ஏனெனில் அதுதான் பச்சா ஸக்கூவின் சிப்பந்திகளால் எளிதில் கண்டு பிடிக்க வியலாத இடத்தில் அமைந்திருக்கின்றது. ஆகவே நீங்களெல்லோரும் இப்போதே புறப்பட்டு ஆங்கு சென்று அத் தச்சன் வீட்டை முற்றுகையிட்டுக் கொள்ளுங்கள். இன்னுமந்த தச்சக் குமாரர்கள் எழுவர்களையும்

கைதுசெய்து விடுங்கள். இதுதான் நல்லமுறை. (வாலி பன், மங்கை நல்லாள் குல்செஹ்ராவை நோக்கி) நங்காய்! தாங்களும் இந்த என் சகாக்களோடு செல்லுங்கள். நான் என் தற்போதிய இல்லம் சென்று தங்கை பரீபானுவை அழைத்துக்கொண்டு உங்களிடத்துக்கு வருகின்றேன்.

குல்செஹ்ரா:—நான் செல்ல மாட்டேன். எனது ஆப்தநண்பி பரீபானுவை அழைத்து வர நானும் தங்களு டன் வருகின்றேன். என்னைத் தனியே விட்டுத் தாங்கள் மாத்திரம் செல்வது சரியா?

வாலிபன்:—(சிரித்து) "அப்படியானால் உன் இஷ்டப் படியே செல்வோம்" என்றான். எனவே வீர இளைஞன் இளயுவதி குல்செஹ்ராவையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு, தன் தங்கை பரீபானு விருக்கும் குடிசையை யடைந்தான். மற்றைய பச்சை முகமூடி யணிந்த சகாக்க ளெல்லோரும் முற்றுகையிட தச்சன் வீட்டை நோக்கிச் சென்றனர்.

இஃதிங்ஙன மிருக்க, பச்சா ஸக்கூவின் மீது கொடிய வெடி குண்டை யெறிந்து அவ்விசித்திர மன்னனின் வாழ்க் கையை நாசப்படுத்திவிட்டு வருவதாய் அறுதியிட்டு உறுதி கூறிச்சென்ற பச்சை முகமூடி யணிந்த வீரன், உடனே தனதில்லத்துக்கேகி ஏற்கெனவே ஆயத்தமாய் வைத் திருந்த வெடி குண்டை யெடுத்து மறைத்துக் கொண்டு அங்கிருந்து காபுல் நகர் இராஜ தர்பாரை நோக்கிச் சென் றான். அரசக் கொலுமன்றத்தருகே ஏகியதும் தனதுமுக மூடியையும் வீரச் சின்னங்களையும் களைந்து விட்டு சாதா ரண உடை யணிந்துகொண்டு சர்வ சாதாரணமாக மற் றைய ஜனக் கும்பலில் இவனும் ஒருவனாகக் கலந்து தர்பா ருக்குள் ஒரு பக்கல் போய் நின்று கொண்டான். மேலும் கொலுமன்றப் பிரதானிகள் எப்போது ஏமாறுவார்கள். எப்போது பச்சா ஸக்கூ மீது வெடிகுண்டு எறியலாமென சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தான்.

அத்தியாயம் 11.

அஞ்சா நெஞ்சம் படைத்த மாணவன்

நிற்க, திடுமென சிப்பாய்களால் ஆப்கான் இளவாலிப எளிய மாணவனொருவன் பலாத்காரமாகக் கொண்டு வரப் பட்டு பச்சாஸக்கூவின் எதிரில் நிறுத்தப்பட்டான். பச்சா ஸக்கூ பின்வருமாறு அவனைப்பற்றி வினவலானார்:—

பச்சா ஸக்கூ:—(தலைமை சிப்பாயை நோக்கி) சர்தார்! இந்தச் சிறு பயல் என்ன குற்றம் செய்தான்? இவனை ஏன் பிடித்து வந்தீர்கள்?

தலைமை சிப்பாய்:—வருங்கால வினையை யுணரமுடியா இம்மாணவன் தங்கள் மீது அனுவசியமான பல அவதூறு களை கூறிக்கொண்டும், அமானுல்லாவின் மீது பல புகழுரை களைப் பாடிப்பினுத்திக் கொண்டுமிருந்தான். இன்னும் தங்களை பல வசைமொழிகளால் ஏசினன்.

பச்சா ஸக்கூ:—(கோபங் கொண்டு பல்லை யிளித்து ஏளனமாய் நகைத்து) இந்தமண்டூகமா? இந்தப்பொடியனு என்னை ஏசினன். (மாணவனை நோக்கி) ஏ பயலே! நீயுமா அந்தக் காபிர் அமானுல்லாவுக்கு ஆதரணையாளனு யிருந்து கெடுகின்றாய்?

மாணவன்.—ஆம்! உண்மையாகவே நான் எங்கள் அன்புள்ள அமீர் அமானுல்லாவையே நேசிக்கின்றேன். உத்தம குணமும் சத்தொழுக்கமும் மிளிர்ந்திலங்கும் உண்மை முஸ்லிமாகிய அமீர் அமானுல்லாகானை காபிர் என்று கூற உமக்கு வெட்கமில்லையா?

பச்சாஸக்கூ:—ஏ துஷ்டச்சிறுவா! அந்த அறிவில்லா அமானுல்லாவை முஸ்லிம் என்று கூறுபவன் எனது ராஜ்ஜியத்தில் குற்றவாளியாவா னென்பது உனக்குத் தெரியாதா?

மாணவன்:—ஈதேன் குற்றமாகும்?

தலைமை சிப்பாய்:—(குறுக்கிட்டு) அதன்காரணத்தை நான் கூறுகின்றேன் கேள். அந்த அமானுல்லா மேனாட்டு சுற்றுப்பிரயாணத்திற்கு தம் நாட்டில் வந்து செய்வித்த சீர்திருத்த மெனப்படுபவை யெல்லாம் மேனாட்டுக் கிறிஸ்தவ நஸாராக்களை பின்பற்றியவைகளென்பது உனக்குத் தெரியாதோ!

மாணவன்:—அப்படியானால், இலௌகீக சம்பந்தமான இச்சிறு காரணத்துக்காகவா உத்தம அமீர் அமானுல்லாவை காபிரென்று கழறுகின்றீர்கள்" என்னே உங்கள் அறியாமை! இது உங்களது தீர்க்கமான மௌட்டியத்தன மென்பதில் என்ன சந்தேகமுண்டு. இன்னமும் நமது சுத்த சத்திய தீனுல் இஸ்லாத்தில், "ஒரு உண்மை முஸ்லிமை காபிரென்று கழறுபவன் தானே காபிராவான்" என்பதை நீங்கள் படிக்கவில்லையா?

பச்சா ஸக்கூ:—(அதிகமான ஆக்ரோஷங் கொண்டு) ஏ வாயாடிப் பயலே! என்ன கொஞ்சமேனும் பயமும் மரியாதையுமில்லாமல் அதனப் பிரசங்கித்தனஞ் செய்கின்றாய்? இப்போது நீ எனது ராஜ்ஜிய தர்பாரில் நிற்கின்றாயென்பதை மறந்து விட்டாய்போலும்.

மாணவன்:—(தைரியத்தோடு) உனது ராஜ்ஜியத்தையோ, அதிகாரத்தையோ யான் ஒரு சிறிதும் இலக்ஷியம் செய்யத் தயாராயில்லை. சத்திய மொழிகளை எடுத்துக் கூறுங்கால் இவ்வுலகில் எனக்கு எப்படிப்பட்ட தீங்குகள் நேரிட்ட போதிலும் ஒரு சிறிதும் ஏசேன். எனது நாவை உண்மை யுரைப்பதினின்று தடுக்க அந்த ஒரே ஆண்டவனைத் தவிர்த்து வேறெவராலுமியலாதென்பது திண்ணம்.

பச்சா ஸக்கூ:—ஏ விஷமி! எனது அதிகாரச் சமிக்கையால் கொலையாளியின் வாளைக் கொண்டு உனது நாவையும் சுவாசத்தையும் அடக்கி ஒழித்து விடுகின்றேன் பார்க்கிறாயா" என்று கூறினார்.

அந்த இளம் மாணவன் இருந்தாற்போலிருந்து தேம்பித் தேம்பியழ ஆரம்பித்துக் கொண்டான். இந்நிகழ்ச்சி முறைகளை யெல்லாம் மற்றோர் பக்கத்திலிருந்துக் கொண்டு நமது பச்சை முகமூடி யணியும் வெடி குண்டு வீரன் விளித்து நோக்கியவண்ண மிருந்தான். மீண்டும் பச்சாஸக்கூ அந்த எளிய இள மாணவனை நோக்கி பரிகாசமாக "ஏ பயலே! என்ன சாவுக்குப் பயந்து கொண்டா இப்படி யழுகின்றாய்? ஹே! முன்னமேயே எனது ராஜ்யாதிகார அச்சம் உனக்கில்லாமற் போனதேன். பயங் கொள்ளிக்கு இத்துணை பேச்சா?

மாணவன்:—(கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு) அன்று, அன்று கேவலம் மரணத்துக்காக பயந்து நான் ஈண்டு ஒருபோதும் அழுகவில்லை. இப்படி யெல்லாம் அஞ்ஞானிகளாகிய நீங்கள் அந்த உயரறிஞரான மகான் அமீர் அமானுல்லாகானை காபிரென்றும், அறிவிலியென்றும் இளித்துக் கூற அவருக்கு இத்துரதிர்ஷ்டக் காலம் வந்து வாய்த்ததே யென்று தான் நொந்தழுகின்றேன். என்னே! அம் மன்னர்ப் பெருமானின் பேராற்றல்! அந்த ஆப்கான் தேச மாசிலாமணியான வீரகேசரியின் உள்ளத்தில் சமூகாபிமானமும் தேச பக்தியும் குடிமக்கள் வாஞ்சையும் பரிபூரண நவீனக் கலா ஞானமும் விரதீரப்போக்கும் இத்தியாதித் திறமையும் ஒருங்கே அமைந்திருந்த தென்னே! என்னே!! அந்தப் பெருமானார் தமது சுற்றுப் பிரயாணத்துக்குப் பின் தமது ஆப்கானை சீர்வளம் பெற்றநந்நாடாக்கினார். கல்வியைப் பரத்தினார். இளைஞர் குழாத்தினரை யெல்லாம் தட்டி யெழுப்பினார். எல்லா தேச அரசாங்கங்களும் மூக்கில் விரல்வைத்து திக்பிரமை யடைந்து வியக்குமாறு தம் அரசியலை அதி தீவிர முன்னேற்றத்துக்குக் கொண்டுவந்தார். இவரது இத்தகைய முற்போக்கைக் கண்டு நவ நாகரீக நாடான ஐரோப்பாவே சிரஞ்சாய்த்து நாணிற்றென்றால் வேறெவ்விதம் விளம்புவது? இம்மன்னரே எம்போன்ற

மூட சிகாமணிகளை ஞானச் சுடர்மணிகளாக்கினர். ஆதலின் என்றென்றும் எம்போன்ருர் அம்மன்னர்ப் பெருமானுக்கு சிரஞ் சாய்த்து வந்தனைபுரிய கடமைப்பட்டுள்ளோம். ஆ! அப்படிப்பட்ட புருஷோத்தமரை இப்போதிய அதமர்களெல்லாம் நீசத்தனமாய் தூஷிக்கும் காலம் வந்து வாய்த்தமைக்கு என்னென்று கதறியழுவேன்! அழுவேன்!! என்றுக் கூறி மீண்டும் அச்சிறிய இளமாணவன் தேம்பி அழலானன்.

தலைமை சிப்பாய்:—(மாணவனை விளித்து) ஏ அறிவிலாச் சிறியோய்! இங்ஙனம் நீ வீணே புலம்பி அழுவதினல் இங்கு என்ன சாதித்து விடப்போகின்ருய்? எங்களை மிரட்டுகிருயா?

மாணவன்:—நான் சாதிப்பது ஈண்டொன்று மில்லையாயினும், அப்படிப்பட்ட உயர்குண நலம்படைத்த புருஷோத்தமச் சீலர் செங்கோச்சிய இந்த ஆப்கானிஸ்தான் அரசு மன்றத்தில், கேவலம்! கல்விஞான மற்றவரும் அரசியல்திறமையில்லாதவரும், குரோதமும் பகைமையும்மூர்க்கமும், ஒருங்கேஅமைந்தவரும் பிறருடைய உதவியின்மீதும் தூண்டுதல்மீதும் இவ்விதம் ஆப்கானிஸ்தான் நாட்டையும் இஸ்லாம்மதத்தையும் ஒருமிக்கக் கெடுத்து நயவஞ்சகமாய் நடந்துகொள்ளும்........அக்கிரம ராஜ்ஜியம் வகித்துதேசத்தை நாசப்படுத்துகிரு ரென்பதை உலகத்தார் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றே யான் இத்துணைப் பிரலாபித்துக்கதறுகின்றேன். இப்படிப்பட்டவரின் ராஜ்ஜியத்தில் இருப்பதை விட நஞ்சுண்டேனும் வெட்டுண்டேனும் இறப்பதே மேலாகும். அந்தோ! ஆப்கான்—என்று இவ்விளமாணவன் கூறிக் கொண்டு வரும்போதே குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு வென்னுமாப்போல் பச்சா ஸக்கூவுக்கு ஆற்றெணுச் சீற்றம் மூண்டெழுந்தது. எனவே கொலையாளியை யழைத்து,

பச்சா ஸக்கூ:—அந்த அயோக்கியப் பொடியன், என் மீது எப்படிப்பட்ட பழியை சுமத்துகிறான் பார்த்தனையா? நான் அன்னிய அரசாங்கத்திடமிருந்து இலஞ்சத்தை பெற்று அவர்களின் தூண்டுதலால் நாட்டையும் இஸ்லாத்தையும்................வ கொலைஞ! என் தயங்குகின்றாய்? ஆகட்டும் உன் காரியம். வெட்டு அந்தச் சிறுவன் ஒரே வீச்சில் வீழ்ந்து........

என்று பச்சா ஸக்கூ இவ்வளவு மட்டும் தான் கூறினார். அதற்குள் நமது பச்சை முகமூடி யணியும் வீரன் தன் துடையில் மறைத்து வைத்துக் கொண்டிருந்த வெடிகுண்டைத் தூக்கி தூரயிருந்து கொண்டே பச்சா ஸக்கூ ஆசனத்தின் மீது வேகமாய் வீசி யெறிந்தான்.

பச்சா ஸக்கூவின் மேற்படி வாக்கியங்கள் பூர்த்திப் பெறுவதற்குள் இக்கொடிய வெடிகுண்டு "திடும்" என வெடித்தது. உடனே அந்த மருந்தின் வெந்த நாற்றப் புகை கொலுமன்றம் முழுதும் சூழ கம்மிக் கொண்டது. பச்சா ஸக்கூவின் நல்லதிருஷ்டவசமாக அவ்வெடி குண்டானது அப்புதியமன்னனின் மேல்படாது சிம்மாசனத்தின் மீது தாக்கிற்று. எனவே அவ்வாசனத்தின் ஒரு கால் சிறிதொடிந்தது. அதன் சில சிப்பிகளும் பெயர்ந்து உதிர்ந்தன. அக்குண்டு வெடித்த இடத்துக் கருகாமையில் வீற்றிருந்த பிரதம மந்திரிக்கு பலமான கொடியகாயமுண்டாய் விட்டது. வெடிச் சப்தம் காது செவிடுபடக் கேட்டதும் திடுமென பச்சா ஸக்கூ தன் சமயோசித புத்தியின்பயனாய் ஆசனத்தை விட்டெழுந்து அப்பால் தாண்டி குதித்துவிட்டார். எனவே அவருக்கொருகாயமும்படவில்லை. பச்சாஸக்கூவுக்கு அக்காலை ஏற்பட்ட மனத்திடுக்கத்துக்கும் பீதிக்குமோர் எல்லையேயில்லை. வெடி குண்டு வெடித்தவுடன் சபையோ ரெல்லோரும் எழுந்து கலைந்து விட்டனர். ஆனால் வெளியில் போகவில்லை. வெடி குண்டை யெறிந்த பச்சை முகமூடி யணியும் வீரன் கம்மிய புகையினுள்

நுழைந்து ஒரு பக்கல் பதுங்கி சென்று யாரும் அறிந்து கொள்ளா வண்ணம் சின்னெடிக்குள் ஒளிந்து மறைந்து வெளியேறி விட்டான். அடுத்த நிமிஷத்தில் மாணவ இளைஞனும் இதுவே நல்ல சமயமென்றெண்ணி எவ்வாரோ அங்கிருந்த பல காவலாளிகளேயும் ஏய்த்துவிட்டு அரண்மனையை விட்டு வெளியில் வந்து விட்டான்.

அத்தியாயம் 12.

பச்சா ஸக்கோ தர்பாரில் பீதி

நிற்க, தர்பாருக்குள் பெருத்த கிலேசம் பரவி யாவர் மனங்களும் குழைந்து கூழாயின. கம்மிய கரும் புகை சற்று வெளுத்ததும் வெளிச்சம் காணப்பட்டது. ஆங்கிருந்தோர்க்கு சற்றுத் தைரியமும் பிறந்தது. இவ்விபத்தின் காரணமாய் பச்சா ஸக்கூவுக்கு என்றுமில்லாத கோபம் இன்றே அபரிமிதமாய்க் கிளம்பி விட்டது. எனவே பாராக்காரர்களேயும் சேவகர்களேயும் கடுந் தொனியில் அழைத்து, இக்கொலு மன்றத்தில் எல்லா வாயல்களேயும் அடைத்து உள்ளிருந்து வெளியில் ஒருவரும் போகாதவாறு தடை செய்யும்படி ஆக்ஞாபித்தார். அவ்வாறே அந்த சிப்பந்திகளும் செய்தனர்.

உடனே பச்சா ஸக்கூ ஆண்டுக் குழுமியிருந்த கூட்டத்துட் புகுந்து எல்லோர் முகத்தையும் விழித்து விழித்துப் பார்த்தார். தமது குடாயுக்தியில்பட்ட வண்ணம் ஒரு சிறு குற்றமுமறியாத பேதையர்கள் ஐவரைப் பிடித்து அவர்களே வெடி குண்டை யெறிந்திருக்க வேண்டுமென்ற ஐயத்தால் கடுங்காவலில் வைக்குமாறு கட்டளேயும் பிறப்பித்தார். பாபம்! ஒன்றுமறியா இவ்வைவரும் சங்கிலிகளால் காற்கரங்கள் பிணேக்கப்பட்டு சிறைக்கூடத்துள் கிடத்தப்பட்டனர். மேலும் பிரதம மந்திரியாரை சேவகர்கள் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்று விட்டனர்.

மீண்டும் பச்சா ஸக்கூ எல்லாப் பிரதானிகளையும் அவரவர் ஆசனங்களில் வீற்றிருக்கச் செய்து பின்வருமாறு சீற்றத்துடன் கூறலானார்.

பச்சா ஸக்கூ:—இன்னமும் அந்தக் காபிர் (அமானுல்லா)வுடைய சகாக்கள் நம் இக்காபுலில்இருந்துகொண்டிருப்பதாய் தெரிய வருகின்றது. இருக்கட்டும், நானும் ஒரு கை பார்த்து விடுகின்றேன். அந்த அதம சகாக்களை ஒவ்வொருவராகப் பொறுக்கி நசுக்கி பழிக்குப் பழி வாங்கி விடுகின்றேன். இது திண்ணம். (மேலும் பிரதம சேனைத் தலைவனை யழைத்து) ஏ சர்தார்! நாம் சிறையில் அடைத்து வைத்திருக்கும் (?) அந்தச் சிறுக்கி குல்செஹ்ராவை உடனே சென்று என் முன்னே இழுத்துக்கொண்டு வந்து விடு. அவளையும் இலேசில் விடக்கூடாது.

பச்சா ஸக்கூ சிறையிலுள்ள குல்செஹ்ராவை அழைத்து வா? எனக் கட்டளையிட்டதும் சேனைத் தலைவன் நடுங்கித் திண்டாட்டத்திலாய் விட்டான். ஏனெனின் குல்செஹ்ராவையும் அவளது வேலைக்காரிகளையும் சிகப்பு முக மூடியின் ஆட்கள் நடுவழியில் விடுவித்துக் கொண்டு போய் விட்ட விஷயத்தை இன்னும் பச்சா ஸக்கூவுக்கு எவரும் கூறவில்லை. அதற்குள் வெடிகுண்டு விபத்தும் நேரிட்டு விட்டது. எனவே சேனைத்தலைவன் இரங்கிய குரலில் குளறிக் கூறினான்:—

சேனைத் தலைவன்:—மாட்சிமிக்க எங்கள் அமீர் அவர்களே! எனக்கு உயிர்ப்பிச்சை யளிப்பதானால் நடந்த விஷயத்தை ஒளியாமல் அப்படியே கூறி விடுகின்றேன். எனது குற்றத்தை மன்னிப்பீர்களென்று பெரிதும் பணிந்து வேண்டுகின்றேன்.

பச்சா ஸக்கூ:—உங்கள் போன்ற சனியன் பிடித்த உலுத்தர்களுக்கு இதே வேலை தானா? சரி! என்னத்தை உளறப்போகின்றாய்? அதை சீக்கிரம் பிதற்றித் தொலை.

சேனைத் தலைவன்:—ஹுஜூர்! ஐயன்மீர்! இன்று வெடிகுண்டு விபத்து நேரும் முன்னர், அதிகாலையில் குல்செஹ்ராவை தங்கள் கண்ணிய மிக்க தர்பாருக்குக் கொண்டு வர சிறைச்சாலையினின்று நாங்கள் அழைத்து வந்து கொண்டிருந்தோம். திடுமென நாங்கள் எதிர் பாராதவண்ணம் எண்ணற்றக் காதகர்கள்ஒருமிக்கஎங்களை வந்து தாக்கினர். இன்னும் எங்களை........அதன் பின் குல்செஹ்ராவும் காணப்படவில்லை. அந்த அதமர்களும் காணக்கிடைக்கவில்லை.

இதைக் கேள்வி யுறவே பச்சா ஸக்கூவுக்குக் கிளம்பிய ஆக்ரோஷம் நரசிம்ஹ அவதாரத்துக் கொப்பா யிருந்தது. அவர் பற்களைக் கடித்துக் கொண்டு கண்கள் சிவக்கத் தீப்பொறிப்பறக்க விட்டார். காலைத் தரையில் உதைத்துக்கொண்டார். இன்னமும் தனதாசனத்தை விட்டுமெழுந்து, அந்தச் சேனைத் தலைவனின் பிடரியில் கைபோட்டுக் கழுத்தை யழுத்திப் பிடித்துத் தள்ளி, "முழுதும் அறிவுகெட்ட பிசாசே! ஓடிப்போ! என்முன் நில்லாதே!! உடனே புறப்பட்டுச் சென்று தேடு, இன்னும் இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் அந்தக் குமரி குல்செஹ்ராவையும் அவ்வதம முகமூடிய கவசமிட்டப் பயல்களையும்நீபிடித்துவராமற் போவாயாயின், உன்னைக் கொன்று சித்திரவதை செய்துவிடுவேன். இது நிச்சயம். ஓடிப்போ" என்று கடுகடுத்து விரட்டிவிட்டார்.

தலை தப்பியது தம்பிரான் செய்த புண்ணியமெனக் கருதிய அந்த ஆற்றமாட்டாத தலைமை சிப்பாய், அக்கணமே தர்பாரைவிட்டு வெளியேவந்து குல்செஹ்ராவையும் முகமூடிய கவசமிட்ட ஆட்களையும் தேடிப்பிடிக்க எங்கெங்கோ அலைய ஆரம்பித்தான். இங்கு பச்சா ஸக்கூவேறொரு புதிய பிரதம மந்திரியை இன்னும் மூன்று நாட்களுக்குள் தேர்ந்தெடுக்க ஏற்பாடுசெய்து கொண்டிருந்தார். இன்னமும், அவர் தம்மீது ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தால் பெரிதும் திகில் கொண்டவராகி, தமது மெய்க்

காப்பாளர் (பாடீகாட்)களில் இன்னும் சிலரை அதிகமாக சேர்த்துக் கொண்டார்.

பச்சா ஸக்கூவின் சிப்பாய்களை எதிர்த்து குல்செஹ்ராவை விடுவித்தழைத்துச் சென்ற செம்முக மூடியுடன் சிகப்புக் கவசமுமணிந்த நம் இளவாலிப வீரன், குல்செஹ்ராவை தன்னுடனழைத்துக்கொண்டு, தன் தங்கையை தற்போதிய மலைக் கணவாயை யடுத்த குடிசைவிட்டும் வேறிடத்துக்கு அழைத்துச்செல்வதற்காக அவ்விடத்தை நோக்கிச் சென்றான். அங்குள்ள மலைக்குன்றின் மீதேறி அடர்ந்து வளர்ந்த பல புதர்களையுங் கடந்துகொண்டு தன் தங்கையிருந்து வருமில்லமான குடிசையுட் சென்று நோக்கியதும், திக்பிரமை கொண்டான். மனங்குழைந்தான். ஏனெனின் தன்னைப்போன்ற வீரம் மிக்கதன் தங்கை பரீபானூ ஆங்குக் காணப்படவில்லை. எனவே வெளியில் வந்து ஒரு மேட்டின் மீதேறி அங்கு மிங்கும் துருவிப் பார்த்தான். நமது இளமகள் நறுங்குழள் நங்கை குல்செஹ்ராவும் தனது ஸ்நேக சகோதரி பரீபானுவைக் காணாதுசித்தங் குழம்பியவளாய் யுவப் புருஷனைப்போல் தானும் நாலுபக்கங்களையும் பரக்க விழித்துப் பார்த்தாள். பரீபானூவின் தோற்றமோ பிரதிபிம்பமோ யாண்டும் இவர்கள் கண்ணோட்டத்தில் தென்படவேயில்லை.

67766

ஆனால் இருந்தாற் போலிருந்து மலைக் கணவாயினடியிலிருந்து ஒரு பெண்மணியின் அபயக் கூச்சலொன்று கீச்சென்று கேட்டது. கூக்குரல் ஆபத்திற் சிக்கியக்காலிடும் கூச்சொலியா யிருந்தமையால் வாலிபன் திடுக்கிட்டான். ஒரு விநாடியும் தாமதிக்காமல் சப்தம் வந்த திக்கை நோக்கி தாண்டி விரைந்தோடினான். குல்செஹ்ராவும் இளமான் குட்டிபோல் வாலிபனுடனேயே தொடர்ந்தோடினாள். ஆங்கொரு புதருக்கப்பால் வெளியில் பரிபானூ மிகவும் பேராபத்தில் சிக்கிக் கொண்டு தன்னுயிருக்குப் போராடுவதை இவ்விரு யுவபாலரும் கண்டு திடுக்கிட்டனர். ஏனெனின்,

ஆப்கான் தேச மலைப்பிராந்தத்தின் கொடிய கரடி யொன்று
பரீபானுவை மடக்கிக் கொண்டு தன் கூரிய நகங்களாலும்
விளிந்த பற்களாலும் அவ்விளங் கொடியாளை பீறிக் கிழித்
தெறிய எதிர்த்துக் கொண்டிருந்தது. பரீபானு இயற்
கையே சற்று தேக வன்மையும் தைரியமு முடையவளாத
லின், அருகே அகப்பட்ட தடியொன்றை எந்தி அக்கொ
டிய கரடியை அடித்துக் கொண்டு அது தன்னை நெருங்கி
வரவொட்டாது மிகக் கொடிய தற்காப்புப் போர் தொடுத்
துக் கொண்டிருந்தாள். எனினும் மலைகாட்டுக் கொடுங்
கரடியுடன் ஒரு மெல்லிய நல்லாள் எம்மட்டும்தான் சடை
யாது சண்டை செய்வாள்? அந்த நங்கை பரீபானு தனது
தண்டாயுதத்தினால் அக்கரடியுடன் வீரப் போர் வெகு
நேரம் தொடுத்தாள். துரதிர்ஷ்ட வசமாக அந்தத் தடியு
மொடிந்து போய்விட்டது. பெண்ணின் தாக்குதலால்
பொல்லாத மூர்க்கங் கொண்ட அக்காட்டு மிருகம் வாயை
பிளந்து கொண்டும் நகங்களைநீட்டிக் கொண்டும் பரீபானு
வின் மீதுப் பாய ஆரம்பித்து விட்டது. இப்படிப்பட்ட
பேராபத்தான சமயத்திலே இவ்விளமாது இட்ட அபயக்
கூச்சல் தான் அங்கு நம் வீரவாலிபனின் செவிகளுட்
புகுந்தது.

அந்த யுவவீரன் அங்கு தன்னருந் தங்கையை
இவ்வகோர நிலையில் கண்டதும் ஒரு வினாடியும்
தாமதியாது அந்த க்ஷணமே தன் மேற்சட்டையை (கோட்
டை) களைந்து அப்பால் எறிந்துவிட்டு கொடிய கரடியின்
முன்னிலையில் வீரகேசரியைப்போல் பாய்ந்து தன் சகோத
ரியை தன் முதுகுப்புறம் தள்ளி விட்டு கரடியின் கழுத்தை
நோக்கி தன் முரட்டு முஷ்டியால் பலமான இரண்டு குத்து
கள் விட்டான். அந்தக்கரடியும் பரீபானுவை விட்டுவிட்டு
வாலிபனை எதிர்த்தது. அக்காட்டு மிருகம் தன் கூரிய
நகங்களுடைய இரு முன் கால்களையும் உயரத் தூக்கிக்
கொண்டு மனுஷ்யனைப்போல் வாலிபன் மீது பாய்ந்தது.
நம் கட்டழக வீரன் தன் இரு கரங்களாலும் அதனிரு

கரங்களையும் தடுத்து விட்டு அதனடி வயிற்றில் பலமான உதையும் ஒன்று கொடுத்தான். அக்கரடி உதையின் தாக்கால் கீழே விழ்ந்ததாயினும், உடனே எழுந்து வாலிப னுடன் மல் யுத்தம் புரிய ஆரம்பித்துக் கொண்டது. எதற்கு மஞ்சா நம்மிளஞ் சிங்க வீரனும் தன்னுயிரை திரணைய் மதித்து கரடியுடன் கட்டிப் புரண்டு போர்த் தொடுத்துக் கொண்டிருந்தான்.

மிகுந்த பயத்தால் திக்பிரமை யடைந்துபோன பரீபானு அடுத்த நிமிஷத்தில் மூர்ச்சையாகி விட்டாள். மற்றொரு புறம் காபுல் கன்னிகை நல்லாள் குல்செஹ்ரா இக்கொடிய காக்ஷிகளை வியப்புக் கண்களால் பார்த்துக் கொண்டு நின்றாள். மீண்டும் கரடிக்கும் வாலிபனுக்கும் கடும்போர் அதிகரித்தது. அந்தக் கொடியக்கரடி எப்படி யேனும் வாலிபனை கீழே கிடத்தி அவனையமுத்தி அவனது மார்பு எலும்புகளை முறித்து குரள்வளையுதிரத்தை யுறுஞ்சி விட படாத பாடெல்லாம் பட்டது. நம் இளங்காளை வீரனோ அக்கரடியின் தாக்குதலையெல்லாம் எதிர்த்து கொண்டு, அதன் அகலமான வாயிற்கையிட்டு அவ்வாயின் இரு மோவாக் கட்டையும் கிழித்து உதறி விட மல்லாடிக் கொண்டு கிடந்தான். வாலிபனின் கால் கரங்களில்இரண் டோரிடத்தில் மாத்திரம் கரடியின் நகங்கள் பீறிவிட்டன. கரடிக்கோகளைப்புமேலிட்டுவாயில் நுரைஎடுத்துக்கொண்டு அக்கரடி திணரிக் கொண்டிருந்தது. குல்செஹ்ரா இக் கொடுங்கண்ணுறுவிக் காக்ஷியைக் கண்டு சகியாதவளாய் பதறிப் பிரலாபித்து, கிப்லாத் திசையை நோக்கி, தன்னிரு அழகிய கரங்களை மேலே தூக்கி, ஆபத் பாந்தவனை சர்வ பராபரன் அல்லாஹ்ூத ஆலாவின் திருச்சமுகத்தில் இறைந்து, தன் நேயன் இளவாலிபனுக்குவெற்றியை ரியத்தையும் அளித்தருள வேண்டுமாறு கெஞ்சி த்தனள். அவ்விளங்கொடியாளின் அபயப்பி ரார்த் வனால்ஏற்றுக் கொள்ளப்பட்டது போலும்! எதிர் ணம்நம்மிளங்காளைவீரனும் குல்செஹ்ராவை வகண்

அவளது பிரலாபத்தை நோக்கிய அந்த க்ஷணமே வாலிபனின்சரீரத்தில் புதுவித அபாரச்சக்தியுப் பூரணமானதைரிய பராக்கிரமும் உதயமாய் விட்டன. எனவே அவன் கரடியின் பிடியை விட்டுத் திமிறித் துணிந்தெழுந்தான். உடனே சிறிதுமஞ்சாது கரடியின் பின்னிரு கால்களையும் பற்றி தன் முழுப் பராக்கிரமத்தைக் கொண்டு மிழுத்து அதை சுழற்றி வீசினன். அக்கரடி தோல்வியுற்று வாலிபனின் வீச்சினல் தட்டுத் தடுமாறி பல அடிகளுக்கப்பால் சரிந்து வீழ்ந்து, கற்பாறை யொன்றில் மோதிக் கொண்டது. எனவே அக்கொடுங் கரடியின் உடலங்களில் பலப்படுகாயங்கள் பட்டதினூடே, அதன் வாய்ப் பற்களில் சிலவும் கீழேஉதிர்ந்து இரத்தம் ஒழுகிற்று. ஆதலின் அந்தப் பயங்கரக் காட்டுக்கரடி இளவீர சிங்கமான நம் மனுஷ்யக் கரடிக்குப் பயந்து விரண்டோடத் தலைப்பட்டதல்லாது வேறொன்றுஞ் செய்யவில்லை. மேலும் நம் வீர பராக்கிரம இளைஞன் மீண்டும் அந்த கரடியை பிடித்து ஹிம்சிக்கலாமென எழுந்து அதை துரத்திக் கொண்டோட முயன்றான். அதற்குள் நம் சௌந்திர யுவதி குல்செஹ்ரா ஓடி அக்காலைமனளனின் கரங்களைப் பற்றிக் கொண்டு, தன் மல்லிகை யரும்புப் போன்ற தந்த வரிசைகளை அழகு பெற சிறிது வெளிக்குக் காட்டி "வேண்டாம்" என தடுத்துக் கொண்டு மீண்டும் கூறலானாள்:—

குல்செஹ்ரா:—வீர புருடச்சிரேஷ்டரே! வேண்டாம் அந்த எளிய கரடியை விட்டு விடுங்கள். அது தன்னுயிரை காத்துக் கொண்டோடுகிறது. ஆண்டவன் தங்களுக்களித்த வீரப் பராக்கிரம பரிபூரண சக்தியைக் கொண்டு அதற்குச் சரியானத் தண்டனையை கொடுத்து விட்டீர்கள். போதும்.

வாலிபன்:—(கண்ணுமணியின் ஸ்துதிக்காக குறுநகைப்பூண்டு) உனக்காக வென்றே அக்கரடிக்கு உயிர் பிச்சையளித்தேன். இன்றேல்...............

அதன் பின் வாலிப வீரன் மூர்ச்சை யடைந்துகிடந்த தன் தங்கை பரீபானுவை சித்த சுவாதீனத்துக்குக் கொண்டுவர பிரயத்தனப்பட்டுக் கொண்டான். குல்செஹ்ரா அருகிலிருந்த தம் குடிசைக் கேகி சிறிது ஜலங் கொண்டு காளைப் புருஷனிடம் தந்தாள். வாலிபன் தன் கரத்தால் தன் தங்கை முகத்தில் நந்நீர்த் தெளித்து வஸ்திர முந்தானையால் விசிறினன். சிறிது பொழுதுக்குள் பரீபானு பூரண உணர்ச்சிப் பெற்றெழுந்தாள். சின்னேர மௌனத்துக்குப்பின் கண்களை கசக்கிக்கொண்டு அவள் தன் தமையனை நோக்கிக் கூறலானாள்:—

பரீபானு:—எனதருந்தமையா! தாங்கள் நல்லகாலமாய் ஈண்டுவந்து என்னை காத்ததற்காக நாமெல்லோரும் அப்பரம கருணா நிதியான அல்லாஹுதஆலாவுக்கு நன்றி செலுத்த (ஷுக்ருசெய்ய)க் கடவோமாக.

வாலிபன்:—என் தங்காய்! அஃதிருக்கட்டும் இந்த விபரீதச் சங்கடத்துக்கு நீ எப்படி இலக்கானாய் என்பதை முதலிற் சொல்லு.

பரீபானு:—எனதாருயிரண்ணா! நந்நீர் நிலையினின்று நான், நம்மவர் அருந்துவதற்கென்று ஜலமெடுத்து வந்து கொண்டிருந்தேன். (ஓரிடத்தை சுட்டிக்காட்டி) அஃதோ அந்தப் புதருக்குள்ளிருந்து அக்கொடுங்கரடி வெளிவந்து என்னை எதிர்க்கத் துணிந்தது. எனவே யான் திடுக்கிட்டலறி நந்நீர்ப்பாத்திரத்தை அங்ஙனமே கை நழுவப்போட்டு விட்டு நமது குடிசையை நோக்கி விரண்டோடலானேன். எனினும் அந்தக் கரடி என் முகத்துக்கெதிரே எதிர்த்து நின்று உறுமி, பல்லையுமிளித்தது. எனவே அந்தக் காட்டு மிருகத்தைக் கடந்தேகுவது முடியாதென்றுணர்ந்த யான், அங்கு அருகிற்கிடந்த தடியொன்றை கையிலேந்திக்கொண்டு என்னாலானமட்டும் அக்கரடியுடன் எதிர்த்து நின்றேன். அது என்னைத் தாவிக்கடிக்க வருந்தோறெல்லாம்

தடியாலதை யடித்துக்கொண்டு நின்றேன். அந்தப்பழைய தடியும் சின்னேரத்துக்குள் முறிந்து போயிற்று. உடனே கரடி என்மீது பாயத்துணிந்தது. அக்காலை யான் இட்ட கூச்சலைக்கேட்டுதான் தாங்கள் வந்து அத்துடன் கடும் போர்தொடுத்து என்னுயிரை காத்தீர்கள். இதுதான் அவ் வியத்தின் விபரம்.

வாலிபன்:—போனது போகட்டும். அதை யுன்னி இனி ஆவதொன்று மில்லை. இந்தப் புதர்சூழ்ந்த குடிசை நம் குடித்தனத்துக்கு இனி வேண்டியதில்லை. எல்லாவித பாதுகாப்பும், வசதியுமுள்ள வேறோரிடத்தை நம் வாசத் துக்காக ஆயத்தஞ் செய்துவிட்டேன். சீக்கிரம் பிரயா ணப்படு. ஆண்டுபோய் சேர்வோம்—என்று கூறி முடித் தான்.

——

அத்தியாயம் 13.

இளஞ்சுந்தரி குல்சேஹ்ராவின் வியப்பு

எனவே பரீபானு, குல்செஹ்ரா வாலிப வீரன் ஆகிய மூவரும் குடிசையிற்கிடந்த தம் சாமான்களை யெடுத் துக்கொண்டு புறப்பட்டுச் சின்னேரத்துக்குள் மேற்கூறப் பட்ட தச்சன் வீட்டை நோக்கிச் சென்றனர். அங்கு பச்சை முகமூடியும் கவசமுமணியும் வீரர்களெல்லோரும், நம் செம்முக மூடியும் கவசமுமணியும் வாலிபனின் ஆக் கினைப்படி அத்தச்சனின் வீட்டை முற்றுகையிட்டு எற் கெனவே தம் வயப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இன்ன மும் அவ்விட்டை காவற் காத்துக்கொண்டு கிடந்த தச்சக் குமாரர்கள் எழுவர்களையும் அவ்வில்லத்தின் மற்றோர் தனி யறையில் பிணைத்தடைத்து விட்டார்கள். அவ்வறையின் நாற்புறமும் இரும்புக் கம்பிகளால் பின்னப்பட்ட பலகணி கள் மாத்திரம் இடப்பட்டிருந்தன.

வாலிபனும், இருமங்கை யுவதிகளும் ஆங்குச் சென்றதும் பச்சை முகமூடிய சகாக்களால் வரவேற்கப்பட்டனர். மேலும் நம்மிளைஞன், அப்பெரிய வீட்டின் இரு அறைகளைத் தேர்ந்தெடுத்து குல்செஹ்ராவுக்கும் பரீபானுவுக்கும் இருப்பதற்கென ஒப்படைத்தான். வீட்டின் முகப்பிலமைந்திருந்த நல்லறையொன்றை தனக்கென வாசஸ்தலமாக அங்கீகரித்தான். இங்ஙனமும் எல்லோருக்கும் ஆண்டு திருப்திகரமான இருப்பிட வசதிகள் கிடைத்து விட்டன.

காபுல் நகர் சௌந்திரவதியான நம் குல்செஹ்ரா எப்போதும் பச்சை முகமூடியும் கவசமுமணிந்து கொண்டிருக்கும் வீரர்களை இன்றுதான் முதன் முதலாய் முகமுடியும் கவசமுமில்லாது அவர்களின் இயற்கை முகார விந்தை நடையுடைப் பாவனைகளைக் கண்டனள். இவளுக்கு இவர்களெல்லோரும் நல்ல செல்வந்தர்கள் வீட்டு செல்வ யுவர்களாய் காணப்பட்டனர். இன்னும் தங்கள் இளங்காளைப் பருவத்துக்கேற்ப விளையாட்டுச் சேஷ்டைகளிலும் தமாஷான சம்பாஷணைகளிலும் ஈடுபட்டு குதூகலமாய் அங்கு நகையாடிக்கொண்டு உல்லாசமாயிருந்தனர். ஆயினுமிவர்களெல்லோரும் மூடப்பட்டுப் பூட்டும் மாட்டப்பட்டிருந்த கைதிகள் அறையின் வெளிப்புறத்தில் காவற்புரிந்து கொண்டிருந்தனர். இவர்களெல்லோரும் சந்தோஷ சுபாவமுடையவர்களாயும், நவீனக்கலாஞானம் பூர்த்தியாய் பெற்றவர்களாயும் காணப்பட்டனர். நல்ல நாகரிகமும் நல்லாசாரமும் வைதிக ஒழுக்கமுமுடையவர்களாயும் புலனுயினர். இவர்கள் இதுகாலைப் புரிந்துவந்தது ஒரு அரசாங்கத்துக்கு எதிரிடையான இயக்கமேயாயினும் இன்னோர் இயற்கையில் கொள்ளைக்காரர்களாகவோ, குழப்பஞ் செய்பவர்களாகவோ, அக்கிரமிகளாகவோ ஒரு சிறிதும் காணப்படவில்லை. இவற்றை யெல்லாம் தன் விடுதி யறையின் பலகணி வழியே கண்டு ஆலோசித்துக் கொண்டிருந்த

நமது இளஞ் சுந்தரிக் கன்னிகையாம் குல்செஹ்ரா மிகவும் வியப்படைந்து கொண்டிருந்தாள். இக்காலை இவளுக்கு முதுகுப் புறத்தே பரீபானு மெதுவாக வந்து குல்செஹ்ராவின் கண்களை கரத்தால் மூடிக் கொண்டாள். அதன் பின் கரத்தை யெடுத்துக் கொண்டு பொங்கிய புன்முறுவலோடு வினவலானாள்:—

பரீபானு:—அன்புடையச் சோதரி! என்ன! அப்பக்கம் என்ன காக்ஷியை பார்த்துக் கொண்டிருக்கின்றாய்?

குல்செஹ்ரா:—(சற்று நாணமடைந்து) அன்பி ஒன்றுமில்லை. உனது தமையனாரின் இந்த சகாக்களெல்லோரையே பார்த்துக் கொண்டிருந்தேன். இதுவரை இவர்களை நான் முகமூடியும் கவசமுமில்லாமற் காணவேயில்லை. இன்றே அங்ஙனம் காணப் பெற்றேன். இதுகாறும் யான் இவர்களெல்லாம் சாதாரண விவேகமில்லா முரட்டு ஆசாமிகளாகவே யிருப்பரென்று எண்ணி யிருந்தேன். இன்று இவர்கள் முகாரவிந்தத் தோற்றத்தைக் காணவே எனது எண்ணம் தவறானதென்று உணர்ந்தேன்.

பரீபானு:—(ஒன்றுந் தெரியாதவளேபோல் நடித்து) அப்படியா? இப்போது இவர்களைப்பற்றி என்ன அபிப்பிராயப்படுகின்றாய்?

குல்செஹ்ரா:—இவர்களெல்லோரும் உயர் குடும்பத்து சிகாமணிகளாயும் உத்தமர்கள் புத்திரர்களாயும், ஆப்கானிஸ்தானத்தின் வீர யுவர்களாயுமிருக்க வேண்டுமென்று கருதுகின்றேன்.

பரீபானு இவ்வபிப்பிராயத்தைச் செவியிலேற்றுக் கொண்டு, தனதபிப்பிராயம் ஒன்றையும் வெளியிடாமல் புன்னகைப் பூண்டு மௌனமா யிருக்க முயன்றாள். குல்செஹ்ரா இன்னுஞ் சிறிது நேரம் அந்த வீரர்களின் தமாஷான செயல்களையே கவனித்துக் கொண்டு நின்றாள். பின்னர் பரீபானு, குல்செஹ்ராவை நோக்கி வினவலானாள்:—

குல்செஹ்ரா:—எனதருஞ் சோதரி! எத்தனை நாட்கள் வரை தான் உங்களைச் சார்ந்த மர்மங்களை எனக்குக் கூறாமல் பரம ரஹஸ்யமாய் ஒளித்து வைக்க முயல்வீர்கள்? ஆதலின் இன்றேனும் தயை கூர்ந்து, "உனது அண்ணா யார்? அவர் ஏன் சிகப்பு முகமூடியும் கவசமும் அணிந்து கொள்ளுகிறார்? அவருடன் இணை பிரியாது பெருந் துணைவர்களா யிருந்து வரும் இந்த வீரயுவப் புருடர்களெல்லோரும் யாவர்? இவர்களுமேன் பச்சை முக மூடியும் கவசமு மணிந்து வருகின்றனர்? தாங்கள் யார்?" என்பதை சுருக்கமாகவேனும் கூறிவிடக் கோருகின்றேன்.

(குல்செஹ்ரா இங்ஙனம் விநயமாய் வேண்டிக் கேட்டுக் கொண்டும், அந்த வீரயுவதியான பரீபானு பதிலொன்றையுங் கூறாது புன்னகைப் பூண்டு மௌனமா யிருந்துவிட முயன்றாள். இவ்விஷயங்களை எவ்வாறேனு முணர்ந்து கொள்ள வேண்டுமென்ற பேரவா குல்செஹ்ராவின் உள்ளத்தை உறுத்தியது. எனவே பரீபானுவின் இரு கரங்களையும் பற்றிக் கொண்டு புன்னகைப் பூத்து கொஞ்சி மீண்டும் வினவலானாள்:—)

குல்செஹ்ரா:—அக்கா! சிரித்துஎனது வேண்டலுக்கு விடையிறாது மௌனம் பூண முயல்கின்றீர் போலும்! வேண்டாம். ஆண்டவனுக்காக என்பால் கருணைப் பூண்டேனும் எனதுஇச்சந்தேகாஸ் பதங்களைநிவாரணிப்பீராக. விளக்காய் பதிலளிக்க விருப்பமில்லா விடினும், "இந்த யுவ வீர சகாக்களெல்லோரும் உமது தமையனாரின் ஆக்கினையை என் சிரமீது கொண்டு நடக்கின்றனர்? உமது அண்ணா இவர்களுக்கெல்லாம் என்ன சர்தாரா? அல்லது அதிபரா? இதன் உண்மை என்ன?" இதைமட்டுமேனும் விளக்கி விடுவீராக.

பரீபானு:—(ஒருவாறு முகம் பணிந்து) தங்காய்! இப்போது உனது வினாக்களுக்கு விடையளிக்க முடியா

மைக்கு யான் வருந்துகின்றேன். ஆயினும் உனது விஷயத்தில் யாங்களெல்லோரும் உண்மையான நேயர்களாகவும் உதவி புரிந்து தற்காப்பவர்களாகவு மிருக்கின்றோ மென்பது மட்டும் திண்ணம்.

குல்செஹ்ரா:—எனக்கு உபகாரம் புரிந்தீர்கள் இன்னும் புரிவீர்களென்பதில் எள்ளத்துணையும் ஐயமில்லை. உங்கள் அனுஷ்டான பூர்வமாக எனக்கு எண்ணற்ற பேருதவிகள் புரிந்திருக்கின்றீர்களென்பதை நான் ஒரு போதும் மறைக்கவும் மறக்கவும் மாட்டேன். உங்கள் போன்ற இப்படிப்பட்ட உண்மை நண்பர்களின் விருத்தாந்தங்களை நான் அவசியம் உணர்ந்து கொள்வது நலமல்லவா? ஆதலின்...............

பரீபானு:—சோதரி! நன்மைதான். இப்போதே யாங்கள் அவற்றை கூறி விடுவது இதமாகா. இப்போது பெரும் பிரயாசைப்பட்டு நீ கேட்டுணர முயலும் எங்கள் சம்பந்தமான விஷயங்களை கூடிய சீக்கிரம் ஒரு தினத்தில் நீயே அனுபவ பூர்த்தியாய் உணர்ந்து கொள்ளத்தான் போகின்றாய். ஒவ்வொரு காரியமும் நிகழ்ச்சிக்கு வருவதெனின் அதற்குரிய ஆகும் நாள் வந்த பின்னரே வருமென்பது இயற்கை விதி. தற்கால விகல்பமான நிலைமையை கருதியும் வேறு சில நன்மைகளை யுன்னியுமே இப்போது அவ்விஷயங்களை உன்பால் வெளியிடாமல் இருக்கின்றோம். இப்போதே அவசரப்பட்டு அதை யான் கூறிவிடுவேனாயின், இதனால் ஒருகால் இடர் நேரிடலும் கூடும்.

பரீபானு தமது விருத்தாந்தத்தை ஒரு சிறிதும் கூறாது பிடிவாதமா யிருப்பதைப் பற்றி நம் யுவதி குல்செஹ்ரா பெரிதும் வருந்தினாள். இவளுக்கு வருத்தத்தைக் காட்டினும் அவ்விஷயங்களை யுணர வேண்டுமென்ற அவாவே அபரிமிதமாய் மனத்துள் ஊடுருவிற்றாதலின் வாலிபனிடம் வினவலானாள்.

குல்செஹ்ரா:—(வியப்பும் பூரிப்புமெய்தி) தாங்களெல்லோரையும் ஏகபரம்பொருளான அல்லாஹுதஆலா நீடூழி வாழச் செய்வானாக. அஃதிருக்கட்டும். மற்றவர்களுக் கெல்லாம் பச்சைக் கவசங்களையும் முகமூடிகளையும் ஏற்படுத்தி விட்டு, தாங்கள் மாத்திரம் என் சிகப்பு நிறத்தை அங்கீகரித்துக் கொண்டீர்கள்.

வாலிபன்:—இதில் விசேஷ மொன்றுமில்லை. மற்றவர்களெல்லோரும் எனது ஆக்கினைப்படி நடந்து கொள்ள வேண்டுமாதலால் என்னை தூரத்தினின்றுங்கூட குறிப்பாய் தெரிந்து கொள்ள வென்றே யான் சிகப்பு முகமூடியையும் சிகப்புக் கவசத்தையும் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

குல்செஹ்ரா:—அஃது சரிதான். அந்த சகாக்கள் எல்லோரும் தங்களை யொரு பெரும் அரசரேபோல் பாவித்து தங்கள் உத்தரவுகளை மன்னராக்கினையைப் போல் ஏற்று வழுவாது நடந்து கொள்ளுகின்றனரே. இதற்குக் காரணம் யாதோ!

வாலிபன்:—இவ்வினா வசனத்தின் தாத்பரியத்தை யான் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. ஆதலின் இதன் கருத்தென்ன?

குல்செஹ்ரா:—அதாவது, தாங்கள் எந்த அரச வம்சத்தையேனும் சேர்ந்தவரா? அல்லது அரசாங்கத்தின் ராணுவத் தலைவரா? இன்றேல் அவர்களெல்லோரும் மனமுவந்து தங்களுக்கேன் கீழ்ப்பட்டு நடந்து கொள்ளுகின்றனர்?

வாலிபன்:—(பெரு நகைப் பூண்டு) மர்ஹபா! பெண்மணியே! என்னே உனது வாக்குச் சாகசம்! பச்சை கவச மணியும் எம் சகாக்களின் அந்தரங்கத்தை விசாரித்துணர்ந்து கொண்ட பின், என்னைப்பற்றிய மர்மத்தையும் உணர்ந்து கொள்ளவே இத்துணைத் தந்திரமாய் உசாவுகின்றனைப் போலும்!

குல்செஹரா:—(ஒரு சிறிது நாணமடைந்து தலை குனிந்து) சரி! போகட்டும். ஞாபகமில்லாது தங்களைப் பற்றியும் உசாவிவிட்டேன் என்னை மன்னித்து விடுங்கள்.

வாலிபன்:—நங்காய்! வருந்தற்க. நீவிர் இப்போது விடுத்த வினவுக்கு விடையிருப்பதெனின், எனது ஆந்திரீ கங்களையே விளக்க வேண்டி வருகின்றது. இங்ஙனம் இப்போதே எனது இரகசியங்களை ஈண்டெடுத்துக் கூறி விட நான் ஒருப்படாதிருப்பதற்கு வருந்துகின்றேன். இவ்வாறு கூறிவிடின் எம்மவர்க்கு இது அனுகூலமான தாகாது. ஆதலின் யான் கூறாமைக்கு என்னையே நீர் மன்னிப்பீராக.

குல்செஹ்ரா:—இந்தப் பிரஸ்தாபத்தை இனி முழுவதும் திரஸ்கரித்து விடுவோம். இஃதிருக்கட்டும். முன்னர் பச்சா ஸக்கூவின் மீது வெடிகுண்டை யெறிந்து நாசப் படுத்தி விட்டு வருவதாய் சென்ற வீரர், அவரைப்போன்ற மற்றெல்லா பச்சை முக மூடிகளை விட துணிச்சலுடையவராகவும் எக்காரியத்திலும் முன்னிற்பவராகவும் இருக்கின்றாரே அதன் காரணமென்ன? இதையேனும் சொல்ல மாட்டீர்களா?

வாலிபன்:—அவரது துணிவுக்கு விசேஷ காரணமொன்றுமில்லை. இந்த எமது பச்சை முகமூடியும் கவசமுமணியும் எழுபது சகாக்களும் நல்ல செல்வந்தருடைய குடும்பத்தில் ஜனித்தவர்களாவர். நீர் இப்போது விசேஷமாய் குறிப்பிட்டுக் கூறிய பச்சை முகமூடி யணிந்தவர் (ஸக்கூ மீது குண்டெறிந்தவர்) மற்றெல்லோரைவிட தீக்ஷண்ணிய அறிவும், திறமையும், பூரண அனுபவமுமுடையவராவர். அவருமொரு இள வாலிபரே யாயினும், மற்றைய எல்லா இளைஞர்களை விட அவரே சற்று வயதில் முதிர்ந்தவருமாவர். அதனால் தான் அவர் மற்றையோரை விட யாவற்றிலும் துணிந்து நிற்கின்றார். ஆதலின் அவரைச் சார்ந்து ஈண்டு ஒரு யோசனை செய்திருக்கின்றேன். அதாவது

அந்த துணிச்சலுடையவருக்கு மட்டும் வெள்ளை முகமூடியும் வெள்ளை கவசமு மளித்துவிடப் போகின்றேன். இங்ஙனம் அவருக்குத் தனியுடை யளித்தாற்றான் தூரத்தினின்றுங்கூட அவரை மற்றவர்கள் தனிப்படத் தெரிந்து கொண்டு மற்றைய விஷயங்களில் அவரைத் தொடர்ந் தொழுக ஹேதுவாகும்.

குல்செஹ்ரா:—ஆம்! இது நல்ல ஏற்பாடுதான். வெண்மை நிறக் கவசமும் முகமூடியும் அவருக்கு பொருத்தமானதே.

என்று கூறி முடிப்பதற்குள் எவரோ ஒருவர் அறையின் கதவைத் தட்டினர். உடனே நம் இளவாலிப வீரன் எழுந்தேகிக் கதவைத் திறந்தனன். கதவைத் தட்டியவன் பச்சாஸக்கூவின் மீது வெடி குண்டை யெறிந்த பச்சை முகமூடி யணியும் துணிச்சலான வீரனே யாவான். இவன் நம் வாலிபத் தலைமை வீரனை யணுகி பச்சாஸக்கூவின் தர்பாரில் நடந்தேறிய பூரா விருத்தாந்தங்களையும் தலைமுதல் கடைவரை யோதினான். வெடி குண்டை யெறிந்ததால் தான் காப்பாற்றி தன்னுடன் அழைத்து வந்த ஆப்கான் யௌவன மாணவனையும் இள வாலிபத் தலைமை வீரனின் முன் நிறுத்தினான். இன்னும் "இம்மாணக்கனையே பச்சாஸக்கூ கொன்றுவிட ஆக்ஞையிட்டு விட்டனன். நல்லகாலமாய் நான் அச்சமயம் அங்கிருந்து காப்பாற்றினேன்." எனவும் கூறினன். நம் செம்முக மூடியணியும் தலைமை வீரன் அம்மாணக்கனை தன் விடுதிக்குள் அன்பு கூறி யழைத்துச் சென்று ஆசனத்தி லிருத்தினன். இந்த யௌவன இளைஞனின் தீர மொழிகளையும் தியாக குணங்களையும் பெரிதும் மெச்சினன்.

நம் சிகப்புக் கவசமணிந்த தலைமை வீரனைக் கண்டதும் அம்மாணக்கனுக்கு அபரிமிதமான உற்சாகம் கிளம்பி விட்டது. எனவே இவன் அத்தலைமை வீரனை நோக்கி கூறலானான்:—"அன்புடையீர்! நீங்களெல்லோரும் என்னை

பாதுகாத்தவராவீர்கள். உங்கள் வீரச் செயல்களையும், நோக்கங்களையும் இச்சிறியேனாகிய யானும் பெரிதும் போற்றுகின்றேன். (இன்ஷா அல்லாஹ்) ஆண்டவன் சித்தப்படி, உங்களெல்லோருடன் நானுமொருவனாகி நம் விரோதிகளை அடியோடு கெல்லி எறிவதற்குரிய எதிர்ப்புத் துறையில் யானும் முயல்வேன். எனது ஆருயிர் நீங்குமளவும் ஒரு சிறிதும் பின்னடையாது முன்னின்று தற்போதிய காபுல் மூர்க்கரின் கொட்டத்தை யொழிக்கப் போர்த் தொடுப்பேன். தங்களுக்குக் கீழ்பட்டு இந்த எல்லா சகாக்களுடனும் மனப் பூர்வமாய் உழைக்க நான் சித்தமா யிருக்கின்றேன். இது திண்ணம்! உறுதி! சத்தியம்! சத்தியம்!

ஆப்கான் இளங்காளையின் இவ்வீரப்பராக்கிரம மனத் துணிவை யுணர்ந்து நம் சிகப்பு முகமூடியணியும் தலைமை வீரன் பெரிதும் மனத் திருப்தியடைந்தான். சபாஷ்! என்று அம்மாணவனைத் தட்டியும் கொடுத்தான்.

மேலும், பச்சை முகமூடியணியும் துணிச்சல் வீரனை யழைத்து, அன்பரே! உமது பச்சை முகமூடியையும் கவசத்தையும் களைந்து இம்மாணவ நண்பருக்கென என்னிடம் அளித்து விடுவீராக, எனக் கட்டளையிட்டனன். அதன்படியே உடை களையப்பட்டது. பிறகு இள வாலிப தலைமை வீரனின் ஆக்கினைப்படி, பச்சைக் கவசமும் முகமூடியுமணிந்த எல்லா சகாக்களும் வீட்டின் விசாலமான முற்றத்தில் ஒருங்குவந்து குழுமினர். எல்லோரும் அமைதியாக உட்கார்ந்தனர். எனவே நமது தலைமை வாலிபன் அத்துணிச்சல் வீரனையும் ஆப்கான் மாணவனையும் தன் பக்கல் நிறுத்திக்கொண்டு எழுந்து நின்று மற்றெல்லோரையும் நோக்கிப் பின்வருமாறு பிரசங்கிக்கலானான்:—

"என் கெழுதகை யன்புப் பூண்ட ஆப்கான் தேசத் தியாகிகாள்! சமூகத்தொண்டு புரிந்திடும் சத்திசாலிகாள்! உங்களெல்லோர்க்கும் முதலில் எனது சித்தப் பூர்வமான

வந்தனை யுரித்தாகுக. இப்போது நம் கூட்டத்து நிர்வாக முறையின் திறனையுன்னி ஒரு சிறிது மாறுதலைசெய்ய உத்தேசித்துள்ளேன். (ஆப்கான் மாணவர் தோள் மீது கைவைத்து) இதோ இந்த இளைஞரை அக்கிரமமாய் பச்சாஸக்கூ படுகொலைப் புரிந்துவிட இருந்தான். நல்ல காலமாய் (பச்சை கவச மணியும் துணிச்சல் வீரரை சுட்டிக்காட்டி) இந்த நம் அன்பர் பச்சா ஸக்கூ மீது வெடிகுண்டை யெறிந்து தர்பாரை குழப்பி விட்டு இவ்விளைஞரை காப்பாற்றி வந்து விட்டார். இந்த மாணவ இளைஞர் நாமெல்லோருடன் ஒரு உண்மையாளராய் சேர்ந்து உண்மையோடு வரம்பைக் கடவாது உழைப்பதாய் உறுதி கூறுகின்றார். ஆதலின் இவரையும் நம்மவர்களுடன் சேர்த்துக் கொண்டேன். இன்னமும் நம் துணிச்சல் வீரனின் பச்சை முக மூடியையும் பச்சைக் கவசத்தையும் இவருக்களித்து விடுமாறு உத்தரவு மிட்டு விட்டேன். இவ்விளைஞரோடு எப்போதும்போல் உங்கள் தொகை எழுபதாகவே இருக்கட்டும். அதன் பின் இது வரை பச்சை முக மூடியும் கவசமுமணிந்து தீரச் செயல்கள் புரிந்து வந்த துணிச்சல் வீரருக்கு வெள்ளை முக மூடியையும் கவசமும் அளிக்கின்றேன் (என்று கூறி முதலில் பச்சை முக மூடியையும் கவசத்தையும் மாணவ வீரனுக்களித்தான் அத்துடன் தான் ஏற்கெனவே தயார் செய்து வைத்திருந்த வெண்மை நிற முக மூடியையும் கவசத்தையும் துணிச்சல் வீரனுக் களித்தான்.) இரு சாராரும் தங்களுக் களிக்கப்பட்ட மாற்றுடைகளை மனமுவந்து பெற்று களிப்பெய்தினர்.

மீண்டும் தலைமை வாலிப வீரன் கூறலானான்:—அன்பர்காள்! உங்களெல்லோருக்கும் இன்னொரு விஷயத்தைக் கூறத் துணிகின்றேன். இனிமேல் நீங்களெல்லோரும் இப்போது பச்சை யுடையணிந்த மாணவ நண்பரைஉங்கள் சகோதரர்களில் ஒருவராகப் பாவித்துக் கொள்ளல் வேண்டும். இன்னும் இப்போது வெண்மை நிறவுடைப் பூண்ட

துணிச்சல் வீரரை சிரேஷ்டராய் நீங்கள் கருதிக்கொள்ளல் வேண்டும். மேலும் நான் உங்கள் முன்னிலேயிலில்லா காலங்களில் இவ்வெண்மையுடை வீரரை என்னிஸ்தானத்தின் தலைவராக நீங்கள் பாவித்து அவரது ஆக்கினைப்படி தவறாது நடந்துகொள்ளவேண்டும். .எனது இக்கோரிக்கையெல்லாம் உங்களெல்லோருக்கும் முழுத் திருப்திகரமானால் ஏகோபித்து எல்லோரும் சம்மதக்கரத்தை உயர்த்துங்கள் பார்க்கின்றேன்.

என்று தலைமை வீரன் கூறியதும் எல்லாப் பச்சை முகமூடிகளும் ஒருங்கே தங்கரங்களையெல்லாம் உயரத் தூக்கி "நாங்கள் முழுமனத்தோடு சம்மதித்துக் கொண்டோ"மென ஆரவாரக் கூச்சலிட்டனர்.

மீண்டும் சிகப்புக் கவசமும் முகமூடியுமணிந்த நம் தலைவன் தம் சகாக்களை நோக்கி, "அன்பாளர்காள்! நம்மவர் இயக்கத்தைச்சார்ந்த ஒரு முக்கியக் காரியத்தினிமித்தம் இப்பொழுது நான் வெள்ளை முகமூடியையும் பச்சை முகமூடியையும் அழைத்துக்கொண்டு காபுலுக்குச் செல்லப்போகின்றேன். பின்னர் எமது இந்த இல்லத்தை காவற்காக்க இங்கு ஐவர் இங்கிருந்தால் போதும், மற்றவர்களெல்லோரும் தங்கள் தங்களிருப்பிடங்களுக்குச் சென்றுவிடலாம். இனியும் நாம் எல்லோரும் ஒரே இடத்தில் குழுமிக் கிடப்போமாயின் நம் கோரிக்கையெல்லாம் வியர்த்தமாய் போகும். ஆதலில் பரவி விடுங்கள்" என்று கூறி முடித்தான்.

அத்தியாயம் 14.

சிகப்பு முகமூடி கைதியானன்

தலைவனுக்கிணப்படி ஐந்து வீரர்களைத் தவிர்த்து மற்றையரெல்லோரும் சென்றுவிட்டனர். பிறகு அந்த ஐவர்

களில் ஒருவன், தச்சக்குமாரர்கள் அடைப்பட்ட அறை யின் கதவண்டை காவற்புரிய நியமிக்கப்பட்டான். மற்ற நால்வரும் அவ்வீட்டின் நான்கு பக்கங்களிலும் பாதுகாவ லர்களாய் நியமிக்கப்பட்டனர். இந்த ஏற்பாடுகளை முடித் துவிட்டு, தலைமை வாலிபன், வீட்டினுட் சென்று குல் செஹ்ராவையும் பரீபானுவையும் கண்டு தன் பிரயாண நோக்கத்தைக்கூறி அனுமதி பெற்றுக்கொண்டான். அவ் விருயுவதிகளும் நிம்மதியோடு வீட்டில் நிர்வாகம் நடத்து வதாய் மறுமொழிக் கூறினர். எனவே மீண்டும் வாலிபன் தன் தங்கை பரீபானுவை வாஞ்சைமிக்கப் பார்வையாலும், காபுல் நகர் இளங்கொடியாள் குல்செஹ்ராவையும் அபரி மிதமான அன்பூறிய....பார்வையாலும் நோக்கிவிட்டு, வெளியே வந்து வெள்ளை முகமூடியும் கவசமுமணிந்த துணிச்சல் வீரனையும், பச்சை முகமூடியணிந்த இன்னொரு வீரனையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு புறப்பட்டான். எனவே இவ்விருவரின் குதிரைகளும் அதி வேகமாய் காபுல் சாலையை நோக்கி விரைந்தோடின.

பிற்பகல் நேரம், கதிரவன் மேற்குத் திசையை நோக்கி கவிழ்ந்தோடிக் கொண்டிருந்தான். நீல நிறவானில் கருநிற மேக மண்டலம் சூழ்ந்து பாஸ்கரனின் ஒளியை மறைத் துக்கொண்டிருந்தது. காபுலின் புதிய அமீரெனப்படும் பச்சா ஸக்கூ தனது அரண்மனையி னுப்பரிகையின்மீது ஆச னமொன்றில்இருந்துகொண்டு முறுக்கிய மீசையும்,கருத்த மேனியும், தடித்த தேகமும், பெருத்த பாகையுமுடையவ னாய் காணப்பட்டான். எளிதில் தனக்கு அரசப் பதவி கிடைத்து விட்டதென்ற களிபேறுவகையால் பூரித்தவனு யிருந்தான். இளந் தென்றல் வீசும் அம்மேற்றளத்தி லிருந்து கொண்டு, தூரதிருஷ்டிக் கண்ணுடி யொன்ருல் நாலு பக்கங்களிலுமுள்ள காடு, மலை, செடி, புதர், பாதை, நீர்நிலை பிராணிகள் பிரயாணிகள் முதலிய இயற்கைக் காக்ஷி களை களிகூர்ந்து கண்ணேட்டமிட்டுக் கொண்டிருந்தான். திடீகூருய் இவன் நோட்டம் வெளி எல்லைப்புறத்தினின்று

காபுல் நகரை நோக்கி வரும் ராஜபாட்டையில் சென்றது. சற்றே வியப்படைந்தான். ஏனெனின் மூன்று குதிரை வீரர்கள் தங்கள் அசுவங்களை அதிதுரிதமாக முடுக்கிக் கொண்டு காபுலை நோக்கி வருவதை கண்டுணர்ந்தான். இன்னு மவ்வீரர்களின் தோற்றங்களை கூர்ந்து நோக்கினுன். பெரிதும் திக்பிரமைக் கொண்டான். எனவே சுய உணர்வையும் பிறழவிட்டு நாக்குழறிய வண்ணம் "ஆ........ ஆ..........சிகப்பு முகமூடி...........வெள்ளை முகமூடி........பச்சை முகமூடி...........ஆ.....ஆ....சிகப்பு.......வெள்ளை............ பச்சை இன்னும் இந்த விஷப் பூச்சிகள் ஒழிந்தபாடில்லையா? எனது அரசாங்க ஆதிக்கம் இவர்களை ஒழிக்காதா? இருக்கட்டும்! அந்த அயோக்கியப் பூச்சிகளை இதோ நாசப்படுத்தி விடுகின்றேன். என்னே விந்தை! இதுவரை சிகப்பு முகமூடியவனை மட்டுமே கேள்வியுற்றிருந்தேன். இப்போது இவனுடன் வெள்ளை முகமூடியும் பச்சை முகமூடியும் முளைத்து விட்டனரே என்று கண்கள் தீப்பொறிக்க, மீசைத் துடிக்க, நாக்குழற பினுத்திவிட்டு, உடனே தன் சேனைத் தலைவனை யழைத்து பின் வருமாறு கட்டளையிட்டான்:—

"ஏ சர்தார்! அரைக்கணமும் தாமதியாது சீக்கிரம் போதுமான சிப்பாய்களை அழைத்துக் கொண்டு நகர் வெளிப்புற காபுல் பாட்டைக்கேகி, அதோ காணப்படும் அந்த மூன்று குதிரை வாகனர் தங்கள் முகங்களில் சிகப்பு, வெள்ளை, பச்சை ஆகிய மூந்நிற முகமூடி யணிந்திருக்கின்றனரன்றே? அம்மூவர்களையும் தப்ப விடாமல் கைது செய்து உடனே தர்பாருக்குக் கொண்டு வந்து சேர். ஜாக்கிரதை."

அந்த சேனைத் தலைவனும் தனது தூரதிருஷ்டிக் கருவியால் முக மூடிய வீரர்களின் வருகையைக் கண்டு விட்டு ஸக்கூவின் இராஜ கட்டளைப்படி உடனே ராணுவ கூடத்துக்குச் சென்று ஒரு நூறு முரட்டுச் சிப்பாய்களை ஆயுதபாணிகளோடு அழைத்துக் கொண்டு காபுலை விட்டு

வெளி எல்லை பாட்டையை நோக்கிச் சென்றான். சிறிது தூரஞ் சென்றதும் அந்நூற்றுவரில் இருபத்தைந்து சிப்பாய்களை வலப்புறமாயும் இன்னு மிருபத்தைந்து பேர்களை இடப்புறமாயும் மறைமுகமாய்ப் பதுங்கிச் செல்லுமாறு தந்திரம் சொல்லிக் கொடுத்து விட்டு எஞ்சிய ஐம்பதின்மர்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு நேர் பாட்டையைப் பிடித்துச் சென்றான். நிற்க,

சூரிய திருஷ்டியும் தீக்ஷண்ய அறிவும் அதிகம் பெற்ற செம்முக மூடியக் கவசமணிந்த நம் வாலிப வீரன் இந்த சிப்பாய்க் குழுக்கள் தங்களைப் பிடிக்கவே வருகின்றன வென்பதை உய்த்துணர்ந்து கொண்டான். எனவே தன்னுடனுள்ள வெள்ளை-பச்சை முக மூடியக் கவச மணிந்த இரு ஆப்த வாலிப சகாக்களையும் நோக்கி, அன்பர்காள்! ஜாக்கிரதை உஷார்! அதோ பச்சா ஸக்கூவின் சிப்பாய்கள் நம்மவர்களைப் பிடிக்கவே நெருங்கி வருகின்றனர். இப்பேதைகளுக்கு நாம் பயந்தோடுவது சரியல்ல. ஆதலால் திடசித்தத்தோடு நம்மவர் வீரத்தை உபயோகித்து எதிர்க்கவே வேண்டும். நம்மால் கூடிய வரைக்கும் போராடிப் பார்ப்போம். அங்ஙனம் அந்தக் காதகர்களுக்கே வெற்றிக் கிடைத்து, அன்னார் நம்மைத் தொலைக்க முற்படுவார்களானால் அப்போது தான் நாம் தப்பித்துப் பதுங்கிக் கொள்ள முயலல் வேண்டும்" என்று கூறினன். மேலும் இவ்விளைஞனின் உள்ளத்திலோர் உசிதமான எண்ணம் உதித்தது. சின்னேரம் இவ்வெண்ணத்தை தீர்க்காலோசித்து முடிவு செய்தான். அதினூடே ஒரு தந்திரத்தையும் கைக்கொண்டான். எனவே தனக் குட்பட்டனவற்றை தனது பச்சை, வெள்ளை முகமூடியக் கவசமிட்ட இரு சகாக்களுக்கும் இரகசியமாய் காதுள் மொழிந்தான். எனவே மூவரும் உடனே ஒரு பெரிய போர்வையை எடுத்து ஒருமிக்க தங்களை மூடிக் கொண்டனர். சில நிமிடங்கள் இவ்வண்ணமே சிறிது தூரம் சென்று மீண்டும் அப்போர்வையை எடுத்து விட்டனர்.

அதன் பின்னரும் முன்போலவே தம் குதிரைகளில் முன் சென்ற வழியாகவே சென்றுக் கொண்டிருந்தனர்.

இங்ஙனம் ஒரு பத்துகெஜ தூரம் சென்றதும் ஸக்கூ வின் ராணுவத் தலைவனும் சிப்பாய்களும் எதிர்ப்பட்டனர். முப்பக்கங்களினின்றும் ராணுவக் குழுக்கள் சத் வீரர் களும் இம்மூன்று யுவர்களை சூழ்ந்தனர். பராக்கிரமசாலி களான இத்திரி இளைஞர்களும் தம் தம் உடைவாட்களை உருவிக்கொண்டு, முழு சாமர்த்தியத்தோடும் கட்கங்கள் மின்னற் கொடிபோல் ஒன்றோடொன்று மோதிப் பிரகா சிக்க மிகக் கொடிய போர்த்தொடுத்தனர். தூதுச் சேவ கர்களில் பல்லோர் வெட்டுண்டனர். இவர்களெல்லோரை யும் முழுதும்வென்று விடுவது 3 பேர்களால் முடியாதா தலால், நம் யுவர்கள் தங்கள் முற்கூட்டிய யோசனைப்படி தப்பித்துக்கொள்ள சமிக்ஞை செய்துகொண்டனர். அத் துடன் பச்சை முகமூடியக் கவசமிட்ட வீர்யுவன் எச்ச ரிக்கை ஊதுங்குழலை யொலித்தான். அடுத்த கணத்தில் வெள்ளை முகமூடி, முதலில் ஸக்கூவின் ராணுவங்களை எங் ஙனமோ ஏய்த்துவிட்டு ஓடத்தொடங்கினான். அவனு டனே பின் தொடர்ந்து பச்சை முகமூடியும் பறந்தோடத் தலைப்பட்டான். இவ்விருவர்களை மடக்கிப் பிடிக்க முன்னே றிய சில ராணுவர்கள் யுவர்களால் தாக்கப்பட்டு தோற்றுத் தங்கள் பிரயத்தனம் வீண் போனவர்களாயினர். வெள்ளை முகமூடியும் பச்சை முகமூடியும் அடுத்த நிமிஷம் இருந்த விடமுந் தெரியாது மறைந்தொளிந்தனர். மீண்டும் இவர் கள் கண்களுக்கே படவில்லை.

இக்கடும் போர்முறைக் காக்ஷியையெல்லாம் பச்சா ஸக்கூ தான் முன்னிருந்த மாளிகையினுப்பரிகையின் மீதி ருந்துகொண்டு தூரதிருஷ்டிக் கருவியால் நோட்டமிட்டுக் கொண்டே யிருந்தான் இவ்விரு முகமூடியக் கவசமிட் டோர் தனது சேவகர்களையும் அவர்களது தலைவனையும் எளிதில் ஏய்த்துவிட்டுக் சென்றதைக்கண்ட அவ்வமீர்

கடுங்கோபத்தால் பல்லை நறநறவெனக் கடித்துக்கொண்டான். தனது சர்தார் மீதும் சிப்பாய்கள் மீதும் ஆற்றெணு கடுஞ்சீற்றங்கொண்டான். எனினும் ஸக்கூ அதிகமான அதிருப்தியடையவில்லை. ஏனெனின் முகமூடி யணிவோரில் முக்கியப் புருஷனுய்க் கருதப்படும் சிகப்பு முகமூடிய கவசமணிந்தவன் ஓடாது சிப்பாய்களால் மடக்குண்டு போர்த்தொடுத்துக்கொண்டு தானிருந்தான். இந்தக் சிகப்பு முகமூடித்தனித்து நின்றுத்தொடுத்த போர் முறையைக் கண்டு பச்சா ஸக்கூவே மூக்கில் விரல் வைத்து வியப்படைந்தான். ஏனெனின் இத்தனி யுவன் சடையாது தனது கட்கத்தை நாலுபக்கலும் வீசி நூறு சிப்பாய்களில் தொண்ணூற்ருரை மண் மீது மாண்டுருளச் செய்து விட்டான். துரதிருஷ்ட வசமாய் மறுகணமே கணக்கற்ற சேவகர்களும் சர்தாருமாக அத்தனி யுவன் மீது பாய்ந்து அவன் கரத்துக் கட்கத்தை பிடிங்கிக் கொண்டனர். ஒரு தனி மனுஷன் எத்தனைப் பெயர்களுடன் தான் மல்லாடி நிற்க முடியும். இறுதியாய் எல்லோரும் ஒருமிக்க கூடி சிகப்பு முகமூடிய அவ்விளைஞனை பக்கத்துக்கொருவராய்ப் பிடித்திழுத்து குதிரையை விட்டுக் கீழிறக்கினர். உடனே இளைஞனின் கால் கரங்கட்கு இறுகிய இருப்பு விலங்கிட்டு காபுலுக்கு அங்ஙனமே இழுத்துச் சென்றனர்.

இவற்றை யெல்லாமும் அந்தப்புழுக்கும் மனத்தினுன பச்சாஸக்கூ நிமைக் கொட்டாது கண்ணுற்றுக் கொண்டு தானிருந்தான். சிகப்பு முகமூடியும் கவசமுமிட்ட வீரன் தனது சிப்பாய்கள் வசம் சிக்குண்டதைக் கண்டதும், ஸக்ஸவுக்கு எழுந்த சந்தோஷப் பூரிப்பு இத்துணை யென்று வரம்பிட்டுரைக்கொணுது. அவன் தன்னையும் தாளாது மேலோப்பிக் கிளம்பிய குதூகலத்தாலவன் தன் கரத்திலிருந்த துரதிருஷ்டிக் கண்ணுடியையுங் கூடமேலிருந்து கொண்டு கீழே பந்துபோல் விட்டெறிந்தான். விலையுயர்ந்த அக்கருவி யுடைந்து பல சுக்கல்களாய் மண்மீது சிதறின.

இன்னுமந்த உடல் பெருத்த பச்சா ஸக்கூ உளம் நிறைந்த பூரிப்பினால் வெகு அவசரத்தோடு மேன்மாடியினின்று கீழ் தளத்திற்கு வர முடுகியோடி வந்தான். ஐயோ! பாவம்! அவனது கால் முதற்படியில் இடறி அவன் வீழ்ந்து, அறு பட்டு வீழ்ந்த பெருத்த பூசனிக்காயைப்போல் படிகளி னெல்லாம் தலை கீழாய் குப்புற உருண்டு அடிப்படி யண்டை வந்து சேர்ந்தான். அவனது முழங்கைத் தோல் களும் முட்டுக்கால் சருமங்களும் சிறிது பிய்ந்துப்போய் உதிரமும் கசிந்தது. அவனது அகலவாய்ப் பற்கள் பல ஆட்டங் கொண்டு இரத்தத்தை பிரவகித்தது. எனினும் சிகப்பு முகமூடி கைது செய்யப்பட்டு விட்டான் என்ற சம்பவச் செய்தியானது பச்சா ஸக்கூவின் இத்துணை காயங் களையும் தாக்குகளையும் உதிரங்களையும் பொருட்படுத்தச் செய்யவில்லை. சந்தோஷத்தால் பச்சா ஸக்கூ எல்லாவற் றையும் மறந்தான். தடித்த சரீரியான பச்சா ஸக்கூ பழுத்த முகிய பூசனிப்பழத்தைப்போல் சருகிவீழ்ந்ததைநல்ல கால மாய் வேறெவரும் அக்காலை கண்டுகொள்ளவில்லை. அவ னுக்கினியமனையாளுங்கூட அவனதுவெட்ககரமான வீழ்ச்சி யை அக்காலைகண்டு கொண்டிருப்பாளாயின் அவளும் அவன் மீதும்பொல்லாத க்ஷாத்திரங்கொண்டிருப்பாள். போனதெல் லாம்போக, இறுதியாய்ப் பச்சா ஸக்கூ தட்டுத் தடுமாறி முடுகிச்சென்று தனது கொலுமண்டப அரச ஸ்தானத் தில் உட்கார்ந்துகொண்டான். ஆட்டமுற்ற பற்கள் ஸக் கூவுக்குப் பெருத்த வாதனையைத்தர ஆரம்பித்தன. என் செய்வான்? பாபம்! மோவாய்க்கட்டையில் கையூன்றி தலை பணிந்துகொண்டு வாயற்படியை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

மிகப் போராட்டத்தினிறுதியில் கைது செய்து கொண்டுவந்த ராணுவத் தலைவன் தனது சேனைகள் சூழ சிகப்பு முகமூடிய ஒரு பிராணியை இழுத்துக்கொண் கொலு மன்றத்துட் பிரவேசித்து வந்து, சிகப்பு முகமூடியை

பச்சா ஸக்கூவின் முன் கவசத்தோடும் முகமுடியோடும் நிறுத்தினன்.

பச்சா ஸக்கூ அத்தனித்த இளைய செம் முகமூடிய வீரனை பரிகசித்தப் பார்வையால் ஏற இறங்கப் பார்த்து, சற்றும் மமதைப் பூண்டு கனைத்திருமிவிட்டு, ராணுவத் தலைவனை புன்முறுவலோடு பார்த்தான். அந்தப் பூச்சிப் பிடிக்கும் நல்லபிள்ளையான சர்தார், தான் ஏதோவானத்தை வில்லாய் வளைத்து, மணலை கயிருய் திரித்து கடலை வெளியாய் விரித்து வந்துவிட்டதாய், மட்டற்றப் பூரிப்பெய்தி தனது பதினாறு பற்களையும் அகல இளித்துக்கொண்டு ஸக்கூவுக்கு சிரம்பணிந்து ஆதாப் செய்தான். ஸக்கூவின் பல்வலி அம்மன்னவனை அதிகம் வருத்தியதாதலால் அவன் அதிக சிரமமேற்கொண்டு தனது சர்தாருக்கு இதமான மொழிகளால் பின்வருமாறு திருப்தியை தெரிவிக்கலானுன்:—

“உண்மையுள்ள சர்தாரே! உமது இந்த வீரஞ் செறிந்த காரியத்தை யான் பெரிதும் போற்றுகின்றேன். எனது மனப் பிராப்தத்தை நீரே இன்றுப் பூர்த்திச் செய்தவராவீர். ஆதலின் இன்று முதல் உமக்கு பிரதம ராணுவத் தலைவர் ஸ்தானத்தை யளிக்கின்றேன். மேலும் இந்த இச் சிகப்பு முகமூடிய துஷ்டனை அங்ஙனமே சிறைக்கூடத்துக்கிழுத்துச் சென்று இன்றிர வெல்லாம் அடைத்துவையுங்கள். நாளையதினம் காலை மீண்டும் இவனை எனது தர்பாருக்கு கொண்டு வாருங்கள். எல்லா சபையினர் முன்னும் இவனது முகமூடியையும் கவசத்தையும் களைந்துதான் இவனது செருக்கை செகுக்க வேண்டும். ஏ சர்தார்! மற்றெரு விஷயம்:—இன்றிரவு இவனது சிறையிடத்தில் அதிகமான கடுங் காவலிடுங்கள். இத்துஷ்டன் ஒருகால் தப்பித்தோடிவிடுவான். உஷார்!” என்று பச்சா ஸக்கூ அந்த ராணுவத்தலைவனுக்குக் கட்டளையிட்டான். காரியக் கூத்தாடும் அந்த ராணுவத் தலைவன் தனக்குக் கிடைத்த பதவிக்கும்

புகழுரைக்கும் பெருமகிழ்வெய்தியவனுய் "அமீரே! அங்ஙனமே செய்கின்றேன்." என நயந்து மொழிந்து விட்டேகினுன். படிகட்டின் வழியாய் உருண்டு வீழ்ந்தெழுந்த பச்சா ஸக்கூ தனக்குப்பட்ட காயங்களில் கசிந்த உதிரப் பிரவாகத்தை அங்கவஸ்திரத்தால் துடைத்துக் கொண்ட வண்ணம் ஆசனத்தைவிட்டு மெழுந்து மாளிகை யந்தப்புறத்தினுட் சென்று விட்டான்.

அத்தியாயம் 15.

பாச்சா ஸக்கோவின் ஏமாற்றம்

மறுநாட் பொழுது புலர்ந்து கதிரவனெளி குவலயமெங்கும் சற்றேறங்கிப் பரவியதும், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நம் பச்சா ஸக்கூ தனது தர்பாருக்கு வந்தான். உடனே ராணுவத் தலைவனை யழைத்து அந்தச் சிகப்பு முகமூடிய மனுஷ்யனை சிறையினின்று தன் தர்பாருக்கிழுத்து வருமாறு ஆக்கினையிட்டுவிட்டு தனதாசனத்திலமர்ந்தான். அடுத்த இரண்டு மூன்று நிமிஷங்களுக்குள் காற் கரங்களில் விலங்குச் சங்கிலியில் பூட்டி இறுக்கப்பட்டவனுய் கவசமும் சிகப்பு முகமூடியு மணிந்தவனுய் வீரனெருவன் சிப்பாய்களால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். அக்காலை தர்பாரில் ஆயிரக் கணக்கான மனிதர்கள் ஒருங்கே குழுமி யிருந்தனர். அவ்வொரு வீரனைச் சூழ்ந்து எண்ணற்றச் சிப்பாய்கள் ஈப்போல் மொய்த்துப் பற்றிக்கொண்டு நின்றனர். இதுகாறும் சிகப்பு முகமூடியும் கவசமுமணிந்த நம் வாலிப வீரன் பச்சா ஸக்கூவின் காபுல் அரசாக்ஷிக்கு விரோதமாய் வியப்புக்குரிய பலசெயல்களை யெல்லாம் செய்துள்ளானுதலால், குழுமிய ஒவ்வொருவரும் சிகப்புமுகள்ளமூடியவனை சுய உருவத்தோடுகண்ணுரக்காண வேண்டுமெனப்பேராவல்பூண்டிருந்தனர். எனவே

எல்லோரின்நேத்திர நோட்டங்களும் அந்தச் சிகப்பு முகமூடியவொருவனையேதாவிக்கொண்டிருந்தன. அந்தச் சிகப்புமுகமூடியோ எவரையும் இலக்ஷயஞ் செய்யாதவனாய் வீர இளங்கேசரியைப்போல் காணப்பட்டான். இவனது மனத்துணிவை உய்த்துணர்ந்த பச்சா ஸக்கூவுக்கு கோபாவேசம் மூண்டெழுந்தது. அக்காலை அவனொரு ராக்ஷஸனாகயிருந்திருப்பானாயின் உடனே அவ்விளைஞனைப் பீறி கிழித்து விழுங்கி விட்டிருப்பான். ஆனால் ஸக்கூ அத்தகைய கொடிய அரக்கனாயில்லாமல் பகுத்தறிவும் சினங்காக்கும் சகிப்புத் தன்மையுமுள்ள மனுஷ்யனாகவேயிருந்தான். எனினும் ஸக்கூவுக்கு சிகப்பு முகமூடியின்மீது அதிகமான கோபமே கிளம்பிற்று. எனவே தனதாசனத்தைவிட்டெழுந்துகொண்டு சிப்பாய்த் தலைவனை நோக்கி, “அந்தப் போக்கிரிப் பயலை இங்கே என் முன் கொண்டுவந்து நிறுத்துங்கள்” என்றான். உடனே அரசாக்கினைப்படி முரட்டுச் சிப்பாய்கள நால்வர் முன்னும் பின்னும் வலமும் புறமுமாய் சூழ்ந்து நெட்டித் தள்ளிக்கொண்டு வீர இளைஞனை பச்சா ஸக்கூவின் சிம்மாசனத்துக்கெதிரில் நிறுத்தினர். மற்றிரு சிப்பாய்கள் செம்முகமூடியின் இரு கரங்களையும் சங்கிலிகளுடன் இழுத்து இறுக்கிப் பிடித்துக்கொண்டனர். இவ்வாலிப வீரனிடம் பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணங்கொண்ட பச்சா ஸக்கூ சபையோர்களை நோக்கிக் கூறலானான்:—

“எனதினிய குடி மக்காள்! ஆப்கானிஸ்தானின் அமைதியை கெடுத்து, எனது ராஜ்ஜியத்துக்கு பலப்பெரும் துரோகங்களை இழைத்தவனும், அரசாங்கச் சிறைச்சாலையிலிருந்து ராஜீய குற்றவாளிகளையெல்லாம் விடுவித்து ஓடிப்போகச் செய்தவனும், நான் கோரிக்கொணர்ந்த அந்த இளமங்கை குல்செஹ்ராவையும் கவர்ந்தோடியவனுமான இச்சிகப்பு முகமூடியும் முழுக் கவசமுமணிந்த இவன் யார்? என்பதை இன்னுஞ் சின்னேரத்துக்குள் தெரிந்து கொள்வீர்களாக. இந்த துஷ்டனின் சிகப்பு முகமூடியை

இதோ யானே களைந்தெறிகின்றேன்." என்று ஸக்கூ கூறி விட்டு, இளவாலிபனின் எதிரில் நின்று, தான் ஏதோமாபெ ரும் வெற்றிப்பெற்று விட்டவனுய், ஏளனமாகச் சிறித்துக் கொண்டு, அவ்விளைஞனின் முகத்தில்மூடப்பட்டிருந்த சிக ப்பு முகமூடியைப்பற்றி வெடுக்கென்று இழுத்தெறிந்தான். இவ்வளவு தான். அவ்விளைஞனின் முகத்தை கண்ணுற்ற வுடன் ஸக்கூ முழுதும் தோல்வி யடைந்தவனுய் முகம் பணிந்து போனுன். ஸக்கூவின் முகத்தில் வெட்கக் குறியும் கோபத்தோற்றமும் ஒருமிக்க காணப்பட்டன. (ஏன்?) எனவே, மீண்டும் பச்சா ஸக்கூ கூறலானுன்.—

"இவனு?............நேற்றைய முன் தினம் தர்பாரில் வெடிகுண்டு விபத்து நேர்ந்தக்கால், தப்பித் தோடிவிட்ட வாலிப மாணுக்கனல்லவோ இவன். இவன் ஏன் சிகப்பு முக மூடியை இதுபோழ்து அணிந்துள்ளான். இதன் கருத்தென்ன"''

என்று உளறி கூறி விட்டு. பச்சா ஸக்கூ மிகுந்த வியப்படைந்தவனுனன். ஏனெனின் சிகப்பு முக மூடி யுடனும் கவசத்துடனும் பிடிப்பட்டவன், காபுல் அரசிய லையே வியப்புற ஆட்டி வைத்துக் கொண்டிருந்த உண்மை வாலிப வீரனென பச்சா ஸக்கூவும், சபைப் பிரதானிக ளெல்லோரும் கருதி யிருந்ததற்கு மாருக, பச்சா ஸக்கூ வால் களையப் பெற்ற முக மூடியுள் சிகப்பு முகமூடிய வீரனுடன் புதிதாய் போய்ச் சேர்ந்த ஆப்கானிஸ்தானின் வாலிப மாணவனே காணப்பட்டான். இவனே முன்னர் சிப்பாய்களால் கொண்டு வந்து தர்பாரில் தண்டிக்கப்படுங் கால் தேம்பி யழுதவனுமாவாண். ஆகவே எந்த விதமாக வோ உண்மை சிகப்பு முக மூடி தனதுடையை இவனுக் களித்து விட்டுத் தப்பித்தோடி விட்டானென சபையினர் எல்லோரும் நிச்சயித்துக் கொண்டனர். பச்சா ஸக்கூ தனது ஆர்வம் இழந்தவனுய்ப் பின்னடைந்து சென்ருன். அந்த ஆப்கான் மாணவனே எவரையும் பொருட்படுத் தாது, ஏளனமாய் சிரித்து ஸக்கூவை நோக்கிக் கூறலானுன்.

மாணவன்:—(சிரித்து) என்னைக்கண்டதும் இங்கு நம் எல்லோரும் மௌனமாய் பிரமித்து விழிக்கின்றீர்கள்? கழுவுக்கேற்ற கோமுட்டியென நீங்கள் வீணாக நம்பி வந்த உண்மை செம்முக மூடியணிந்த வீரர் தலைவர் கிடைக்க வில்லையென்றோ? பார்த்தீர்களா! அந்த கருணாகரக் கடவுளான "குதாவந்தெகரீம்" எவர்பக்கல் துணையாக இருக்கின்றானென்பதை! நீங்கள் குரோதங்கொண்டு பிறரைத் தொலைக்கத் துர்எண்ணம் கொள்வீர்களேல் அஃதொருபோதும் சித்தி படையாது. ராஜீயக் குழப்பக்காரர்களான உங்களுக்கே அபவாதமும் அவமானமும் வந்து வாய்க்குமென்பது திண்ணம். எங்கள் சத்தியத் தலைவரான உண்மை சிகப்பு முகமூடிய வீரப் புருஷரை நீங்கள் மாத்திரமல்ல உங்களைப் போன்ற அசக்தியர்கள் ஆயிரம் பேர் முனைந்து நின்று குட்டிக் கரணம் போட்டாலும் பிடிக்கவே முடியாதென்பது திண்ணம்.

பச்சா ஸக்கூ:—(கோப மடைந்து) அடே! முழு முட்டாள் பயலே! உனக்கு இத்துணை அதனப் பிரசங்கித்தனமா? தர்பாரிலுள்ளோரை அவமதித்துப் பேசியதற்காக இன்னுஞ் சிந்நேரத்தில் உன்னுயிரைப் போக்குகிறேன்.

மாணவன்:—ஏ! போலி அமீரே! உனக்கோ உனது ஆக்கினைக்கோ கிஞ்சித்து மஞ்சேன். ஆண்டவனுக்கே அஞ்சுவேன்.

பச்சா ஸக்கூ:—ஏ! வாலிபனே! என் வீணே மடிய இசைகின்றாய். உனது இளம் பிராயத்தைக் கண்டு எனக்கு தயை உண்டாகின்றது. நீ யுனது உயிரைக் காத்துக்கொள்ள விரும்புவாயாயின், இங்ஙனம் நீ சிகப்பு முக மூடியும் கவசமுமணிந்த விதத்தையும், அந்த உண்மை சிகப்பு முகமூடி தப்பியோடிவிட்ட வரலாற்றையும் விடாமல் எடுத்துக் கூறுவாயாக. உண்மையை உள்ளதுள்ள படிக் கூறினால் உன்னை மன்னித்து விடுகின்றேன்.

மாணவன்:—(சிறிது நேரம் ஆலோசித்து) சரி! அப்படியே கூறி விடுகின்றேன். நீவிர் என்னை மன்னித்து விடுவிப்பது நிச்சயம் தானே?

பச்சா ஸக்கூ:—ஆம்! நீ கூறுவது மிகைப்பட முரணாக கூறியதா யில்லாதிருப்பின் தான் நிச்சயமாய் மன்னிப்பேன்.

மாணவன்:—(மீண்டும்) அமீர்! அப்படியானால் சபையோர் முன்னிலையில் "மன்னிக்கின்றேன்"...............என்று மூன்று முறை தாங்கள் உறுதிமொழிக் கூறல்வேண்டும். சம்மதமா?

பச்சா ஸக்கூ:—(கடுங்கோபங் கொண்டு) ஏ! அதமப் பயலே! மூர்க்கனே! உனக்கென்ன! மன்னனான என் வாக்கில் உறுதியிருக்குமென்பதில் நம்பிக்கையில்லையா?

மாணவன்:—(அலக்ஷியமாய்) உன்னைப் போன்ற மோசக்கார—கொள்ளைக்கார—மன்னன் வாழ்க்கை நிச்சயமென நம்புவதானது பின்னைய ஏமாற்றத்துக்கே இலக்காவதாகும்.

பச்சா ஸக்கூ:—(கடுங்கோப மடைந்து) உனது விஷமத்தனம்! மிக்க நாவை யடக்கிப் பேசு. நடந்தவற்றை ஒளியாது உண்மையைக் கூறி விடு. இன்றேல், நான் சற்றே சமிக்ஞை செய்வேனாயின் அடுத்தக்கணமே நீ நாசமாகி மாண்டு மடிவாயென்பது திண்ணம்.

மாணவன்:—(மார்பை நிமிர்த்தி) சத்தியத்தை முன்னிட்டு ஈண்டு யான் மாண்டு மடிந்து மண்ணாவதற்கே வந்துள்ளேன். மனுஷ்யராய் இவ்வையகத்தில் ஜன்மமெடுத்தோரெல்லோரும் இன்றில்லாவிடினும் என்றேனுமொரு நாளில் ஆவிதுறந்து மாளுவரென்பது தெய்வ விதி. ஆதலில் தேவாக்கினைப்படி சாகும் முறை இன்றைக்கெனக்கு வந்தால் நாளை உனக்கு வரும். இது நிச்சயம்.

பச்சா ஸக்கு:—(முகஞ்சுளித்து) விலைக்கு வாங்கிய சனியனாக யிருக்கின்றாயே! சரி. உன் வேதாந்தத்தை நிறுத்து. உன் விருப்பப்படியே மூன்று முறை ஈண்டு நிச்சய உறுதி மொழிக் கூறுகின்றேன். சீக்கிரம் உண்மையைக் கூறிவிடு.

மாணவன்:—(சிரித்து) முதலில் நீவிரே உறுதிமொழி கூறி விடல் வேண்டும். சீக்கிரமாகட்டும்.

பச்சா ஸக்கு:—(மிகவும் வருந்தி சபையோரைநோக்கி எங்ஙனமேனும் உண்மை சிகப்பு முகமூடியின் தகவல் கிடைத்து விட்டால் போதுமென்றெண்ணி, உள்ளொன்று வைத்து புறமொன்றாகிக் கூறலானான்)சரி. இந்தக்காளையன் உண்மை சிகப்பு முகமூடி தப்பிச் சென்ற நிகழ்ச்சியை உள்ளபடி கூறிவிடுவானாயின், நிச்சயமாக இவனை யான் மன்னித்து விடுகின்றேன். இதற்கு எல்லோரும் சாக்ஷி யாயிருப்பீர்களாக.

மாணவன்:—(குறுக்கிட்டு சப்தமிட்டுச் சிரித்து) போலி அமீரே! இதினின்றேனும் நற்புத்திக் கற்றுக் கொள் வீராக. பார்த்தீரா! அகப் பெருமையும் வீண் செருக்கு முடையோரை எப்போது ஆண்டவன் கேவலப்படுத்து கிறா னென்பதை இனியேனும் உனதிவ்வுறுதி மொழிப்படி ஸ்திரமா யிருப்பீராக.

பச்சா ஸக்கு:—ஏ விஷமி! மீண்டும் ஏன் உனது வீண் வாசாமகோசரத்தை தொடக்கின்றாய்? சீக்கிரமாக, முன்னர் இங்கு வெடி குண்டு விபத்து நிகழ்ந்தக்கால் நீ எங்ஙனம் தப்பித்தோடினாய். அக்காலை என்மீது வெடி குண்டை யெறிந்தவன் யார்? நேற்று மாலை நீங்கள் மூவ ரும் பிடிபட்டக்கால் எங்ஙனம் உனது தலைவனான உண்மை சிகப்பு முகமூடியும் மற்றொருவனும் தப்பித் தோடினார் கள்? நீ எதற்காக எவ்விதம் அப்போது இந்த சிகப்பு முகமூடியையும் கவசத்தையும் அணிந்தாய்? என்பன யாவற்றையும் உண்மையாய் உள்ளதுள்ளபடி கூறிமுடித்

தால்தான் தப்பித்தாய். உன்னை மன்னித்தும் விடுவேன். இன்றேல் உன்கதி அதோகதியாகும். ஆகட்டும். சீக்கிரம் கூறு.

மாணவன்:—தடையில்லாமல் யாவற்றையும் கூறிவிடுகின்றேன். செவியமர்த்திக் கேளுங்கள். இத்தமியேனாகிய யான் அத்திரு உயர்வாளர் அமீர் அமானுல்லாகானவர்கள் மீது புகழ்க் கவிப் பாடினேன் என்பதை என்மீது கொடுங் குற்றமாய் சுமத்தித் தாங்கள் என்னை தர்பாருக்குக் கொண்டு வந்து என்னை கொன்றுபோட வேண்டுமென்று பிரயத்தனப்பட்டீர்களல்லவா? அத்தகைய எனது விபத்தான சமயத்தில் எனது புதிய உழுவலன்பரும் எங்கள் சிகப்பு முகமூடி யணியும் வீரத் தலைவரின் பிரதிநிதியுமான பஹாத்தூர் வீரர் முன் ஜாக்கிரதையாக தங்கள் மீது வெடி குண்டை யெறிந்து உங்கள் கும்பலை குழப்பிவிட்டு என்னைக் காப்பாற்றி அழைத்துச் சென்று விட்டார். என்னை முன்னிட்டு அவர் புரிந்த பிரதி நன்றி செய்தலரிதான அத்தகைய அரும்பெருபகாரத்துக்காக வென்று அவர்களுடனும் நானும் ஊழியம் புரிவதே உசிதமானதென்று யான் தீர்மானித்து அவர்களிடம் கோரினேன்.

விவேகமும்,பெருந்தன்மையும்,தியாகமும், பராக்கிரமமும்ஒருங்கேபூண்ட அவ்வீர சிகாமணிகள் என்னையும் தங்களில் ஒரு வீரனாகச் சேர்த்துக் கொண்டனர். அதன் பின் எங்கள் தலைவரும் பிரதிநிதியும் யானுமாக நேற்று மாலை நாங்கள் காபுலை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்த போது, வழக்கம்போல் எங்கள் வீரச் சர்தார் சிகப்பு முகமூடியுங் கவசமுமே யணிந்திருந்தார். ஆனல் அவரது பிரதிநிதி (பச்சை முகமூடிக்குப் பதிலாய்) வெண்மை முகமூடியும் கவசமு மணிந்திருந்தார். நான்தான் அக்காலை பச்சை முகமூடியுங் கவசமு மணிந்திருந்தவன். இந்நிலைமையில் நேற்று மாலை நாங்கள்காபுலைநோக்கிவிரைந்துவந்து கொண்டிருந்தபோது, வழக்கம்போல் எங்கள் வீரச் சர்ார் சிகப்பு முக மூடியையும் கவசமுமே யணிந்திருந்திரு

தார். ஆனால் அவரது பிரதிநிதி (பச்சை முக மூடிக்குப் பதிலாய்) வெண்மை முக மூடியுங் கவசமு மணிந்திருந் தார். நான் தான் அக்காலை பச்சை முகமூடியுங் கவசமு மணிந்தவன். இந்நிலைமையில் உனது தூண்டுதல் மீது உனது ராணுவக் குழுக்கள் திரண்டு எங்களைப் பிடித்துச் செல்ல எதிர்த்து நெருங்கி வரவே தற்காப்புக்குரிய மார்க் கத்தை யுன்னலானோம். கேவலம் உனது சிப்பாய்களுக்கு பயந்து முதுகைப் புறங்காட்டி ஓடுவது வீரத் தன்மையா காதென்பதைக் கருதியே வேறோர் அரிய தந்திரத்தைக் கையாளலானோம். எனவே நாங்கள் குதிரையில் சவாரி செய்த வண்ணமே பெரும் போர்வை யொன்றை எங்கள் மீது போர்த்திக் கொண்டோம். போர்வைக்குள்ளேயே எனது மேலுடையை எம் தலைவரும் அவரதுமேலுடையை யானுமாக மாற்றிக்கொண்டு விட்டோம். வெளிப் பார் வையில் ஊடுருவி நோக்கிய உங்கள் எவருக்கும் இத்தந்தி ரம் புலனாகவில்லை. அதன்பின் சின் நேரத்துக்குள் உங்கள் மூர்க்கச் சிப்பாய் கூட்டத்தார் மிலேச்சத்தனமாய் எங்கள் மூவரைத் தாக்க ஆரம்பித்தனர். எனவே நாங்கள் எங்கள் கட்கங்களை உரையினின்றுருவி எதிர்ப் போர்த்தொடுக்க லானோம். சிறிது நேரம் கடும் போர்த்தொடுத்த பின் வெற்றி எங்களுக்கப்போழ்து கிடைக்காதென்பது நிச்சய மென ஏற்படவே எங்கள் சர்தார் வீரரும், பிரதிநிதியும் முன்னாலோசனைப்படியே நழுவித் தப்பித்துச் சென்று மறைந்தனர். இறுதியில் யான் மட்டுமே போலி உடை யில் உங்கள் சிப்பாய்கள் வசம் வேண்டுமென்றே சிக்கிக் கொண்டேன். அதுவும், யான் குதிரை மீதிருந்தபோது இறுதி வரை போர்த்தொடுத்து எதிர்த்திருப்பார்களாயின் ஒருபோதும் உங்கள் எண்ணற்ற சிப்பாய்களும் இத்தமி யேனை பிடித்திருக்கவியலாது. ஆனால் சுருக்குக் கயிறு போட்டு என்னை வலித்துத் தள்ளியதாலேயே யான் அவர் களிடம் சிக்கினேன். சரி! அதன்பின் தான் சிப்பாய்கள் உனது சமுகத்துக்குக் கொண்டு வந்ததையும் சிறையி

லடைத்ததனையும் இன்று காலை நிகழ்ந்தவற்றையும் நீவிர் எல்லோருமே பிரத்தியக்ஷமாய் உணர்ந்திருக்கின்றீர்கள். ஈண்டு நான் சொல்ல வேண்டிய விருத்தாந்தம் இம்மட்டும் தான். ஈண்டு நான் கூறியனயாவும் உண்மையான மொழிகளாகும்.

இவற்றில் பொய் யொன்றுமில்லை. உமது விருப்பப் படியே யான் உண்மையை யொருசிறிது மொளியாது உள்ளன உள்ளபடி சொல்லி விட்டேனாதலால், உமது வாக்குறுதிப் பிரமாணப்படி என்னை மன்னித்து விட்டு விடுவீராக.

பச்சா ஸக்கூ:—(மாணவனைக் கடிந்து) என்ன! நீ கூறவேண்டியன யாவையும் பூர்த்தியாய் நீ கூற வில்லையே? சர்தாரண நிகழ்ச்சியைத்தான் எடுத்துக் கூறினாய். இவை எனக்கும் தெரிந்தது தானே. இவற்றை உன்னிடமிருந்து யான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் சிகப்பு முக மூடியும் கவசமு மணியும் அத்தலைமை வீரன் யார்? அவன் எங்கே இருக்கின்றான்? அவனது பிரதிநிதி எனப்படும் வெண்மை முகமூடியும் எங்கே யிருக்கின்றான்? இவர்களது சகாக்க ளாகிய மற்ற பச்சை முக மூடிகளெல்லோரும் ஏன் தலைமை வீரனின் கட்டளைகளை ஒருசிறிதும்பிறழாமல் எடுத்தனுஷ் டிக்கின்றனர்? இவர்களுடைய அந்தரங்க நோக்கமென்ன? இவர்களெல்லோரும் ஏன் முக மூடிகளும் கவசங்களு மணிகின்றனர்? இவைகளுக்கெல்லாம் நீ பதில் கூறித் தான் ஆக வேண்டும்.

மாணவன்:—(ஸக்கூவை சினந்து) இது தான் உமது பெருந்தன்மையோ? உண்மையில் எனக்கு எவ்வளவு தெரியுமோ அவையாவையும் ஒரு சிறிதும் யான் ஒளியாது கூறி விட்டேன். ஆதலின் உமது வாக்குப் பிரமாணப்படி என்னை ஈண்டு உடனே க்ஷமித்து விடுவிப்பதே உமது ருஷார்த்தமும் கடமையுமாகும். ஆகட்டும்.

பச்சா ஸக்கூ:—அது முடியாது. நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நீ விபரமான விடை யளித்தாற்றான் விடுவிப்பேன்.

மாணவன்:—(தைரியக் குரலில்) ஏ! சொன்ன சொற் பிறழும் மூர்க்கத் தலைவ! ஒருபோதும் அத்தகைய இரகசியங்களை யான் சொல்லப் போவதில்லை யென்பது திண்ணம்.

பச்சா ஸக்கூ:—ஏன் சொல்ல மாட்டாய்?

மாணவன்:—ஏனெனின், முகமூடி யணியும் எனது வீரத்தலைவர் யாரென்பதும், என்னைப்போன்ற மற்ற சகாக்களும் யாரென்பதும் உண்மையாகவே எனக்கொன்றும் தெரியாது. அன்றும் யானும் ஏன் முக மூடி யணிகின்றேமென்பதும் தெரியாது. முகமூடி யணிய வேண்டியது எங்கட் டலைவரின் ஆக்கினை யென்பதல்லாது அதன் உட் கருத்து எனக்குத் தெரியவே தெரியாது. இதுவே சத்தியம்.

பச்சா ஸக்கூ:—(சடைந்து) சரி! அந்த மர்மம் தெரியாவிடின் தொலையட்டும். அவர்கள் எங்கு வசித்து வருகிறார்க ளென்பதேனும் உனக்கு நன்றாய் தெரியுமல்லவா?

மாணவன்:—ஆம்! அவர்களிருப்பிடம் எனக்குத் தெரியும். இது நிச்சயம். நான் பொய்ப் புகலேன்.

பச்சா ஸக்கூ:—சந்தோஷம்! அப்படியானால் அவர்கள் தற்போது எந்த இடத்திலிருக்கின்றார்க ளென்பதையேனும் கூறிவிடு.

மாணவன்:—ஏ! அமீரெனப்படுபவரே! உமதிந்த நயந்துரைக் கெல்லாம் யான் பயந்து விடுவே னென்பது பகற்கனவேயாம். எனது ஆப்த சகாக்கள் வசிக்குமிடத்தை ஒருபோதும் யான் கூறவே மாட்டேன்.

பச்சா ஸக்கூ:—ஏன் கூற மாட்டாய்?

மாணவன்:—ஏனெனின், அந்த அருண்மிக்க நண்பர்களே முன் உனது கொடுங்கோன்மையினின்றும் எனதினிய

உயிரைக் காப்பாற்றினார்கள். இன்னமும் அவர்கள் தேச சத்தியத்துக்காக உழைக்கின்றார்கள். அப்படிப்பட்ட நன்றி புரிந்த உத்தமர்களின் நன்மைக்குத் துரோகமாய் நடந்து கொள்வதென்பது மகாப் பெரும் பாவமாகும். ஆதலின் நான் ஒருபோதும் கூறேன்.

பச்சா ஸக்கூ:— ஏ! விஷமச் சிறுவா! எனது அரசாக்கினையால் நேரிடும் தண்டனையைப்பற்றி உனக்கு அச்சமில்லையா?

மாணவன்:—(ஏளனமாய் சிரித்து) அச்சமா? உனது தண்டனைக்கா? ஹோ! அந்த எல்லாம்வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே யான் அஞ்சுவேனல்லாது உன் போன்ற புல்லர்களுக்கொருபோதும் மஞ்சேன். அஞ்சேன்.

பச்சா ஸக்கூ:—(கடுஞ்சினம் பூண்டு) ஓஹோ! ஏ துர்த்தா! உனது வாழ்நாள் இக்கணத்தோடு முடிந்து விட்டது போலும்!

மாணவன்:—மனுஷ்யரின் ஜீவியம் பூர்த்திப் பெறுவதுமோர் ஆச்சரியமா? மரணம் என்று வருமென்பதைத் தெரிந்தவர் யார்? மனித வாணுள் நீர்க்குமிழுக் கொப்பாகும். அது என்றும் நிலைத்திருக்கு மென்பது நிச்சயமா? அங்ஙனம் இவ்வினாடியில் எனக்கு மரணம் நேரிடுவதாயினும் அதை யுன்னி யானஞ்சிடேன்.

பச்சா ஸக்கூ:—(சிறிது நேரம் யோசித்து) அடே! இளைஞா! இதுவே இறுதி முறையாகக் கேட்கிறேன். அவர்கள் வசிப்பிடத்தைக் கூறுகிறாயா? மாட்டாயா?

மாணவன்:—ஏ! ஆற்றமாட்டாதவரே! மீண்டும் மீண்டும் யான் கூறிவிடுவேனெனக் கருதியிருப்பது உமது வீண் பிரயத்தனமேயாகும். ஆண்டவன் மீது பிரமாணமாய் யான் ஒருபோதுங் கூறேன்.

பச்சா ஸக்கூ:—அப்படியா! இதோ உன்னை என்ன செய்கின்றேன் பார், (என்று கூறிவிட்டு சிப்பாய்களை

அழைத்து) ஏ சேவகர்காள்! இந்தப் போக்கிரிப் பயலை அந்தக் கற்றூணிற் கட்டி இறுக்குங்கள். (பின்னர் ராணுவத் தலைவனை யழைத்து) ஏ! ஸர்தார்! தோற்சவுக்கால் இந்தப் போக்கிரியை சரியானபடி தாக்கு. உண்மை சிகப்பு முகமூடியவனுடையவும் அவனுடைய இதர சகாக்களுடையவும் இருப்பிடத்தின் உண்மையான தகவலை இவன் கூறுதவரையில் நன்றாகப் புடையும். சீக்கிரம் ஆகட்டும் என்றான்.

உடனே பல சிப்பாய்கள் ஒன்றுகூடி அவ்விளைய மாணவனைப் பிடித்து அருகிலிருந்த கருங்கற்றூணிற் பிணைத்து விட்டனர். மேலும் அவ்விளைஞனின் கீழ் வஸ்திரத்தைத் தவிர்த்து மேலங்கி யாவற்றையும் களைந்து வெற்றுடலாக்கி விட்டனர். பச்சா ஸக்கூவின் கட்டளைப்படி அந்த ராணுவத் தலைவன், முரட்டுச் சாட்டையை எடுத்துக் கொண்டு, மாணவ இளைஞனின் ஆடையற்ற மிருதுவான முதுகின் மீது முதலடியடிக்க கரத்தை வேகமாய்மேலே ஓங்கினான்.... ....இவ்வளவு தான்! இவனது கரம் சரியாக சிரசுக்கு மேல் கூட சென்றிராது. அதற்குள் துப்பாக்கி குண்டு ஒன்று காது செவிடுபட எங்கிருந்தோ வெடித்து வந்து இந்த முரட்டுச் சர்தாரின் பெருத்தப் பாகையைத் தாக்கி அப்பால் தூரத்தில் தூக்கி யெறிந்தது. அதன் அதிர்ச்சியாலும் பீதியாலும் ராணுவத் தலைவன் தட்டுத் தடுமாறி கீழே விழுந்தெழுந்தான். திக்பிரமைப் பூண்ட அந்த சர்தார் தனது தலையில் கை வைத்து தலை முழுதாய் இருக்கிறதா? அல்லது துப்பாக்கிக் குண்டால் நொறுங்கிப் போயிற்றா வென்று தடவிப் பார்த்தான்.

தூணிற் கட்டப்பட்டு, ஒரு சிறிது மஞ்சாதுவீறு கொண்டு நின்ற இள வீர மாணவன் சப்தமிட்டு கெக்கலித்துச் சிரித்து "ஏ! பேதை சர்தாரே! திடுக்கிடாதே! உன் தலை நல்லபடியாகத்தானிருக்கிறது. தீங்கொன்றும் நேரவில்லை. உன்னை ஜாக்கிரதைப்படுத்த வேண்டுமென்றே உன் தலைப்பாகையை தாக்கிப் போக்கப்பட்டது." என்று

வேட்டிக்கையாய்க் கூறினன். இடியோசையால் தாக்குண்ட நாகம்போல் மெய்சிலிர்த்துப்போன ராணுவத் தலைவன் தைரிய மிழந்தவனுய் நாலு பக்கமும் பறக்கவிழித்து தன் மீது சுட்டவன் யாரெனத்துருவியுணர முயன்றான். சாட்டையை பற்றிக்கொண்டிருந்த இவனது வலக்கரம் உதற லெடுத்துக் கொண்டிருந்தது. மீண்டுமந்த மாணவ இளைஞனை அடிப்பதற்குரிய தைரியம் அச்சர்தாருக்கு அணுவத் துணையும் எழவேயில்லை.

அத்தியாயம் 16.

பச்சா ஸக்கோ தர்பாரில் துப்பாக்கி வேடி

துப்பாக்கி யோசையை கேட்டு திடுக்கிட்டுப்போன பச்சா ஸக்கூ திக்பிரமைப் பூண்டு, மகா ஆக்ரோஷங்கொண்டவனானன். எனவே சிப்பாய்கள் பலரை யழைத்து தர்பாருக்குள்ளிருக்கும் நபர்களில் எவரெவர்மீது சமுசய முண்டாகின்றதோ, அவர்களையெல்லாம் கைது செய்துவிடுமாறு கட்டளையிட்டுவிட்டான். எனவே மௌட்டிய புத்திமிக்க முரட்டுச் சிப்பாய்கள் கூட்டத்துட் புகுந்து ஐயம் ஜனித்த ஒரு பத்துப்பேர்களை (குற்றமற்றார்களை) பிடித்து காற்கரங்களுக்கு விலங்குப்பூட்டி கைது செய்து விட்டனர். பிடிபட்ட பிழையற்றார்களில் சிப்பாய்களுக்கு ஆகாதவர்களும் பலரிருந்தனர். அதன் பின் பச்சா ஸக்கூ தனது உயிர்ப் பாதுகாப்புக்கென ஐந்து முரட்டுச் சிப்பாய்களை தன்னை சூழ்ந்து மெய்க்காவலாளர்களாய்நிற்குமாறுதாக்கீதுசெய்து கொண்டான். இவ்வைந்து மெய்க்காவலாளர்களை நோக்கி நீங்கள் இந்த தர்பாரிலுள்ள ஒவ்வொருவர்களையும் கூர்ந்துப் பார்த்துக்கொள்ளுங்கள்என்றுகட்டளையும் இட்டுவிட்டான். அதன்பின் சவுக்காலடிக்க நியமிக்கப்பட்ட ராணுவத் தலைவனை நோக்கிக் கூறலானன்:—

பச்சா ஸக்கூ:—ஏ சர்தார்! ஏன் தயங்குகிறாய்? அந் தப்போக்கிரிப் பயலின் முதுகுத்தோலை சாட்டையா லடித் துப் பிய்த்து விடு.

ராணுவத்தலைவன்:—(பிறர் எவரோ தன்னை நோக்கி துப்பாக்கியால் சுட்டு, தலைப்போவதற்குப்பதிலாய் தலைப் பாகைப்போனது தம்பிரான் புண்ணியமெனக்கருதி பெ ரும் பீதியடைந்து போயிருந்தான். மீண்டும் மாணவனை அடிக்க முயன்றால் நிச்சயம் தனக்கு மரணமே சம்பவிக்கு மெனப் பயந்துக் கிடந்தான். ஒரு பக்கம் துப்பாக்கிப் பய மும் மறுபக்கம் பச்சா ஸக்கூவின் கொடுங் கட்டளையும் அவனது உள்ளத்தை உறுத்தின. இருதலைக் கொள்ளி யிற்பட்ட எறும்பேபோல் தத்தளித்தான்.) ஸக்கூவின் தண்டனைக்குப் பயந்து மாணவனை சாட்டையால் அடிப் பதா அல்லது துப்பாக்கிக் குண்டுக்கஞ்சி அடிக்காதிருப்ப தாவெனத் தயங்கி நின்றான்.

பச்சா ஸக்கூ:—(சர்தாரை அதிகம் சினந்து) ஏ கோ ழை மனத்தினனே! பேடியே! ஏன் அஞ்சுகிறாய் அடிக்கி றாயா? அல்லது நீ அடிபடுகின்றாயா?

ராணுவத் தலைவன்:—ஐயன்மீர் அடிப்பதானால்..........

பச்சா ஸக்கூ:—அடே நிம்மக் ஹராம்! மடையா! என் கட்டளைப்படி செய்கின்றாயா? அல்லது நானே உன்னை என் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லட்டுமா? என் றான்.

எனவே ராணுவத் தலைவன் தன்னுயிருக்குப் பயந்து மெய்ச் சிலிர்த்து நடுங்கிய வண்ணம் மீண்டும் ஆப்கான் மாணவ வீரனருகே சென்று அடிப்பதற்காக சாட்டையை மேலே தூக்கினான். அம்மட்டே! ராணுவத் தலைவன் தூக்கிய கரம் மேலிருந்து இன்னும் சற்றும் கீழே சாய வில்லை. அதற்குள் படீரென துப்பாக்கியின் மற்றொரு சுடுஞ் சப்தம் கேட்டது. உடனே ராணுவத் தலைவனின் கரத்தில் குண்டுத் தாக்கி அவனது கரத்திலிருந்த சாட்டை

கீழே விழுந்தது. இவனது கரத்தில் பலமான படுகாயமும் பட்டது. பேதைத் தலைவன் என் செய்வான்? பாபம்? பொறுக்கமாட்டாத பாதையால் பலமும் உளமும் உணர்ச்சியும் தளர்ந்தவனாய் மூர்ச்சையாகி வேறற்ற மரமாகக் கீழே சாய்ந்தான்.

பச்சா ஸக்கூவுக்கு இந்த இரண்டாவது விபரீதச் சம்பவத்தால் மனம் எவ்வாறு துணுக்கப்பட்டிருக்குமென்பது விளக்கற்பாலதன்று. ராணுவத்தலைவன்பால்சினங்கொண்டபச்சா ஸக்கூ, சிப்பாய்களை யழைத்து, இந்தப் பேடித் தடியனை (ராணுவத் தலைவனை) என் முன்னிருந்து தூக்கிச் சென்று அப்பால் எறிந்து விடுங்கள் என்று கட்டளையிட்டான். அவ்வாறே சிப்பாய்கள் செய்து முடித்தனர். திடுக்கத்தால் ஹிருதய திடம் கூழான பச்சா ஸக்கூ நெடுக யோசிக்கலானான். அந்த ஆப்கான் மாணவ இளைஞனை இனி என்ன செய்வதென பலவாறு யோசித்தும் ஒரு மார்க்கமும் அவனது குழைந்த மனத்தில் உதிக்கவில்லை. எனினும் பச்சா ஸக்கூ தனது பழைய ராணுவத் தலைவனை அழைத்து வருமாறு சிப்பாய்களுக்குக் கட்டளையிட்டான். அங்ஙனமே மாஜீ சர்தார் ஸக்கூவின் எதிரில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

இந்த மாஜீ சர்தார் தான், முன்னர் அடுத்த இருபத்து நான்கு மணி நேரங்களுக்குள் நீ அந்த குல்செஹ்ராவை பிடித்துக்கொணர்ந்து என்முன் விடாவிட்டால் அடுத்த க்ஷணமே உனது சிரச்சேதஞ் செய்யப்படுமென்று பச்சா ஸக்கூவால் நிபந்தனையிடப்பட்டு பதவியினின்று பகிஷ்கரிக்கப்பட்டவனாவன். அதன் பின் இந்த ராணுவத் தலைவன் குல்செஹ்ராவைக் கண்டு பிடித்தலின் நிமித்தம் தேடாத இடமும் சுற்றாத பகுதியுமில்லை. எனினும் இறுதியில் இவன் அவ்விளங்கொடியாளைக் கண்டுகொள்ள முடியாமலேயே ஊக்கஞ்சிதைந்து தளர்வடைந்து போனான் அவனுக்களிக்கப்பட்ட தவணையான 24 மணி நேரமுங்

கடந்துவிட்டது. பச்சா ஸக்கூ சற்று மிரக்கமில்லா கொடுங் கோலதிபன் என்பதை இவன் பன்முறை பிரத்தியக்ஷப் பூர்வமாய் கண்டுள்ளானுதலால், இந்தச் சமயம் கட்டாயம் தனக்கு மரணதண்டனையே விதியுமென ஓர்ந்தான். எனவே இவன் சிப்பாய்களால் கொண்டுவந்து நிறுத்தப் படவே மெய்தளர்ந்து உணர்வற்று நடைப்பிணமானுன். ஸக்கூ சிறிது நேரம் அந்த மாஜி சர்தாரையும், ஆப்கான் இள வாலிப மாணவ வீரனையும் சிந்தனு வியாகூலத்தோடு நோக்கிவிட்டு, சிப்பாய்களை அழைத்து இவ்விருவர்களையும் மீண்டும் சிறைக்கூடத்தி லடைத்துவைக்குமாறு ஆக்கினை யிட்டனன். ஏனெனின் ஸக்கூவுக்கு தர்பாரில் துப்பாக் கிச் சுடப்பட்டது பெருத்த பீதியை உண்டாக்கிவிட்டது. தர்பாரின் எல்லோர் உள்ளங்களும் அக்காலை திகிலிலாழ்ந் தேயிருந்தன. ஆதலின் அன்று யாதொரு தண்டனையும் எவர்க்கும் விதிக்கப்படாமலேயே சீக்கிரமே சபை கலைந் தது.

நிற்க, ஜனக்குழுப்பெருத்த அம்மகாஜன சபையின் கண் அத்துணை வீரத்தோடு இருமுறைத் துப்பாக்கிச் சுட் டவன் யார்? என்பதை நம் வாசகர்கள் விளக்கமாய் அறிந் துகொள்ள ஆவலுறுவார்களன்றோ? ஆதலின் அம்மர்மத்தை கூறுவோம்:—சிகப்பு முகமூடியின்சகாக்களெல்லோரும்ஒவ் வொரு நாளும்எல்லோரிடத்திலும் சாதாரண மனிதர்களே போல் கலந்துநிலைமையை ஆராய்வது வழக்கம். அவ்வாறே அன்றும்ஸக்கூவின் தர்பாரில் நம் முகமூடியணியும்வீரர்கள் சிலர்மூலைக்கொருவராய் பராமர்த்தனமாய் கலந்திருந்தனர். இவர்களே தங்களை எவரும் அறிந்து கொள்ளா வண்ணம் ஜாக்கிரதையாய் அச்சபையில் துப்பாக்கிச் சுட்டனர். இறுதிவரை எவரும் இவர்களில் அகப்பட்டுக் கொள்ள வில்லை. அப்பால் சபை கலைந்து விடவே மற்றையவர்களே போல் இன்னவர்களும் வெளியேறிச் சென்று தங்களிருப் பிடமடைந்தனர். இளமாணவனை விடுவிப்பான் வேண்டி எல்லோரும் சென்று ஒருமிக்க சிறைக்கூடத்தை தாக்கலா

மாவென சிகப்பு மூகமூடி யணியும் தலைமை வீரனிடம் வினவினர்.

அதற்குத் தலைமை வாலிபன், சோதரர்காள்! வீணே நாமெல்லோருமேன் சிரமப்பட்டுச் சங்கடத்துக்குள்ளாதல் வேண்டும்? நாளையதினம் யான் ஒருவனே காபுலுக்குச் சென்று நம் சகோதர மாணவனை எவ்வாற்றாலேனும் விடுவித்துக் கொண்டு வந்து விடுகிறேன். நீங்களெல்லோ ரும் நிம்மதியுடனிருங்கள் என்று சமாதானங் கூறினான். அவ்வாறே தங்கட்டலைவனின் விருப்பத்தை யெல்லோரும் சம்மதித்திருந்து விட்டனர்.

மறுநாட் டதிகாலை பொழுது புலர்ந்ததும் நம்மிளங் காளைத் தலைமை வீரன் தன் காலைக் கடன்களை யெல்லாம் செவ்வனே பூர்த்திப்படுத்திக் கொண்டு, ஆகார முண்டு புறப்பட ஆயத்தமானான். எனவே இச் செம்முக மூடி யணிவோன் தன் தங்கை பரீபானுவும் இளங்கொடி யாளான குல்செஹ்ராவு மிருக்கும் விடுதிக்குட் சென்று ஸலாம் கூறினன். அதன்பின் தனது முக மூடியையும் கவசத்தையுங் களைந்து தனது தங்கை பரீபானு விடந்தந்து, சோதரி நான் வெளியே செல்கின்றேன். நான் திரும்பிவரத் தாமதமானபோதிலும் நீங்கள் எந்தவிதமான அதைரியமுங் கொள்ளலாகாது. ஆதலின் நீங்களிருவரும் ஒருமிக்க நான் போய்வர அனுமதி தருவீர்களாகஎன்றான்'

இளைஞன் திடுமென வெளிப் போவதைக் கேட்ட தங் கை பரீபானு வியப்படைந்து "தாங்கள் எங்கே செல்லப் போகிறீர்கள்?" என்று பிரமையோடு வினவினாள். சற்று தூரத்திலிருந்த குல்செஹ்ராவும் ஆவலோடு வாலிப வீரன ருகே வந்து எங்கே-எதற்காகச் செல்லுகிறீர்கள்? எப் போது வருவீர்கள்? அவசியம்போய்த்தான் தீர வேண்டுமா?" என பல கேள்விகளையும் தொடர்பாய் வினவினள்.

வாலிப வீரன்:—நங்கையரே! நமது புதிய அன்பர் ஆப்கன் மாண்வர் பச்சா ஸக்கூவிடம் சிறையிடப்பட்டுள்

ளாரன்றோ? அவரை விடுவித்துக் கொண்டு வரவே செல்லுகின்றேன் (என்று சிரித்த வண்ணம் பதில் கூறினன்.)

குல்செஹ்ரா:—(வியப்படைந்தவர்களாய்) தாங்கள் தனியாகவா செல்லப் போகின்றீர்கள்? முகமூடியுங் கவசமுமில்லாமலா?

வாலிபன்:—ஆம்! இங்ஙனம் செல்வதே இச்சமயத்துக்கு உசிதமானதாயிருக்கின்றது. நான் அதிகம் ஈண்டு தாமதிப்பது அரிய நேரத்தை வீணாக்குவதாகும்.

என்று வீர தலைவன் புன்முறுவலோடு கூறி தன் தங்கையுடையவும் தன்னருஞ் செல்வியுடையவும் வாடிய முகார விந்தத்தை உற்று நோக்கியவண்ணமே வெளியிற் செல்லத் துணிந்தான். நங்கையரும் தங்கள் அழகிய சிரங்களை யசைத்து விடையளித்தனர். அடுத்த நிமிஷம் வாலிபன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

இன்று தான் பச்சா ஸக்கூ தனக்குப் புதியதொரு மந்திரியை தேர்ந்தெடுத்து நியமனஞ்செய்யும் நாளாயிருந்தது. காலை மணி எட்டுக்குச் சரியாக காபுல் அரசியல் தர்பார் கூடிற்று. பிரபல ஆப்கான் கனவான்களெல்லோரும் ஆண்டு விஜயம் செய்திருந்தனர். வணங்காமுடி மன்னனை பச்சா ஸக்கூ தனக்குரிய அரசாசனத்தில் ஆங்கார அசாசூரத் தோற்றத்தோடு வீற்றிருந்தான். நிற்க, சிகப்பு முகமூடியையும் அவனை சேர்ந்தோர்களையும் எவர் ஒரு மிக்க பிடித்துக் கொண்டு வந்து ஒப்படைக்க உண்மையான பொறுப் பேற்றுக் கொள்வரோ அவர் மாத்திரமே பிரதம மந்திரி ஸ்தானத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாமென சபையிலுள்ளோர்க்கெல்லாம் பொதுப்படையாய் அறிவிக்கப்பட்டது. மந்திரி ஸ்தானத்தை யடைய விருப்பமுடையோர் மேல்படி நிபந்தனையை ஒப்புக்கொள்ள முன் வரவேண்டுமென்று கோரப்பட்டனர். அம்மகா சபையில் மகாப்பெரிய நாமங்களையுடைய கான்சாஹிப்களெல்லாம் குழுமியிருந்தும், சிகப்பு முகமூடியை பிடித்துத் தர

வேண்டுமென்ற அசாத்தியநிபந்தனையுன்னி எவரும் மந்திரி ஸ்தானத்தைக் கோராது கோழையாய் வீற்றிருந்து விட்டனர்.

பச்சா ஸக்கூ சபையினர்களை நோக்கிப் பன்முறை சாலெஞ்சுச் செய்தும் எவரும் துணிந்தெழவில்லை. எனவே அந்நவ் அமீருக்கு கடுஞ்சினம் மூண்டது. ஆதலின் கடுங்குரலில் எல்லோரையும் விளித்து "ஏ மக்களே என்ன! நீங்களெல்லோரும் பேடிகளா? வீர ஆப்கானியரன்றோ? அப்படியாயின் ஆப்கானியர் பேடிகளா? ஹே!" என்று பரிகசித்துக் கூறினன்.

இவ்விழி மொழியைக் கேட்டுங்கூட சபையினோர் ரோஷஞ்செத்தவர்களாக தலைபணிந்து கிடந்தனர். ஆனல்,

"இல்லை! இல்லை!! இந்தச் சபையில் வீற்றிருக்கும் இச்சில வீணர்களே பேடிகளாவர். உண்மை ஆப்கானியரெல்லோரும் பஹாத்தூர்களே யாவர். ஆப்கானிஸ்தானமே வீரர்கள் வாச ஸ்தலமாகும்" என்று வெகு வீரப் பராக்கிரமத்தோடு மார் தட்டிக் கூறிக்கொண்டு, நன்முகத் தழகனன இளவாலிப வீரனெருவன் புன்முறுவல் பூத்து பச்சா ஸக்கூவின் சமுகத்தில் வந்து நின்ருன். பச்சா ஸக்கூ இப்புதிய விசித்திரப் பராக்கிரம குணத்தினன வாலிபனைக் கண்டு உள்ளம் பூரித்தான்.

அவ்விளைஞன் சக்கூவை நோக்கி மீண்டும் கூறலானன்:—"அதிபரே! இச்சபையில் வீற்றிருக்கும் என் தாய் நாட்டுச் சோதரர்கள் தாங்களிட்ட நிபந்தனைக்குப் பயந்து பின்னடைந்து, தங்கள் ஆற்ருமையை வெளியிட்டுக் கொண்டமைக்காக யான் வருந்துகின்றேன். எனினும் அவர்களுக்குப் பதிலாக யான் முன் வந்து தாங்களிட்ட நிபந்தனைக் காரியத்தைச் செய்து முடிக்கின்றேன். ஆதலின் தங்களின் மந்திரி ஸ்தானத்தை எனக்களிக்க வேண்டுமெனவும் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்" எனக் கூறி முடித்தான்.

தனது பிராப்தமெல்லாம் இன்று முதல் கைகூடி விடுமென்று வாலிபனின் கூற்றால் மதிமயங்கி மனோராஜ்ஜியங் கொண்ட பச்சா ஸக்கூ அவ்வாலிபனை அருகில் அழைத்து தட்டிக் கொடுத்து, "சபாஷ்! மர்ஹபா! உம்மைப் போன்ற வீரப் புருடச் சிரேஷ்டர்தான் எனக்குப் பிரதம மந்திரியாய் வாய்க்க வேண்டும். ஆப்கான் வீர வாலிபனாகிய நீர் இம்மகா பொறுப்பை ஏற்றுக்கொண்டமைக்காக யான் சந்தோஷிக்கின்றேன்" என்றுபுகழுரைப் புகன்றான்.

இதைச் செவியுற்ற வாலிப வீரன் தன் கோரிக்கை வெற்றிப் பெறுகிறதென உளம் பூரித்துப் புன்முறுவலும் பூத்து பச்சா ஸக்கூவுக்கு நன்றி காட்டுவதேபோல்பணிந்து அபிநயித்தான்.

பச்சா ஸக்கூவுக்கு இன்னும் அதிகமான சந்தோஷம் பொங்கிற்று. எனவே இளைஞனை நோக்கி மீண்டுங் கூறலானான்:—"அன்பா! நீவிர் இன்று முதல்எனதுபிரதம மந்திரியாக யிருப்பாயாக. மேலும் பராக்கிரமம் மிக்க நீவிர் உனது மந்திரி ஸ்தானத்தின் கடமையைச்செவ்வனே பூர்த்திச் செய்வீரென நம்புகின்றேன். இன்னமும் நீவிர் எனது நிபந்தனையை அங்கீகரித்துக் கொண்டமைக்கிணங்க அந்தச் சிகப்பு முகமூடியையும் அவனது சகாக்களையும் பிடித்து வந்து என் சமுகம் ஒப்படைத்தல் வேண்டும். இது தான் உமது முதல் வேலை."

வாலிபன்,—ஐயன்மீர்! தங்களுக்குஇனி வியாகூலம் வேண்டாம். நிச்சயமாய் யான் அக்காரியத்தைச் செவ்வனே பூர்த்திச் செய்துவிடுவேன். ஆனால் யான் இடும் கட்டளைகள் எவ்வண்ணமானதா யிருந்தபோதிலும் எனது கீழ் சிப்பந்திகளெல்லாம் சிரமேற்றேற்றாக வேண்டுமென முதலில் தாங்கள் கட்டுப்பாடு செய்துவிடுங்கள்.

பச்சா ஸக்கூ:—(வாலிபனை நோக்கி) "இஃதோ அங்ஙனமே ஏற்பாடு செய்து விடுகின்றேன்" என்று கூறி,

உடனே ராணுவத் தலைவன் முதல் கீழ்த்தர சிப்பாய்வரை எல்லோரையும் அழைத்து. "ஏ! சிப்பந்திகாள்! இன்று முதல் நீங்களெல்லோரும் நமது இந்தப் புதிய பிரதம மந்திரியாரின் கட்டளைகளுக்கு ஒரு சிறிதும் முரணிலாவண்ணம் நடந்து கொள்ளுவீர்களாக, என்று ஆக்ஞாபித்தனன். அவ்வசுர அரசனின் கட்டளைக்கு அச்சிப்பந்திகளெல்லோரும் சம்மதச் சிரம்பணிந்தனர். அதன்பின் இள வாலிபனுக்கு மந்திரிஸ்தானத்துக்குரிய உயர்தர ஆசனம் அளிக்கப்பட்டது. புதிய மந்திரியார் பெருத்த ஆரவாரத்தினூடே அவ்வாசனத்தில் அமர்ந்தார். உடனே மரியாதைத் தொனியை ஒலிக்கும் (ராஜபாண்ட்) மேளவாத்தியக் கோஷம் முழங்கப்பட்டது. சிப்பாய்கள் அணிவகுத்து மரியாதைக்குரிய அபிநயங்களும் புரிந்தனர்.

புதிய பிரதம மந்திரியார் நியமனஞ் செய்யப்பட்டுவிடவே, பச்சா ஸக்கூ தன்மீதிருந்த வியாகூல, சங்கடச் சுமைகளெல்லாம் நிவர்த்தியாய் விட்டனவென்று கருதிக்கொண்டனன். ஆகவே அன்றுகோபாவேசத்தை அதிகம்காட்டிக்கொள்ளாமல் தனது இராஜ அலுவல்களை சீக்கிரமாகவே முடித்துக் கொண்டு அரண்மனை யந்தப்புறத்துட் சென்றுவிட்டான். அதன் பின்னர் நமது வாலிபப் பிரதம மந்திரி தனக்குக் கீழ்பட்ட பிரதானிகளுக்கும், சிப்பந்திகளுக்கும் பலதிறப்பட்ட கட்டளைகளை பிறப்பித்துக் கொண்டிருந்தான். ராஜ்ஜிய விவகாரங்களைப்பற்றியும் பன்னாள் அனுபவமுடையவனேபோல் நிர்வாக முறைகளையும் தந்திர முறைகளையும் கற்பித்துக் கொண்டிருந்தான்.

மீண்டும் சிறிது நேரத்துக்குப் பின் நம் புதிய மந்திரி பச்சா ஸக்கூவின் இராணுவத் தளகர்த்தனை யழைத்து "நேற்றுச் சிறையிலடைப்பட்ட ஆப்கானின்இளமாணவனையும், பழைய ராணுவத்தலைவனையும் விடுதலைச் செய்துவிடு" என்றும், இன்னமும் ஏற்கெனவே துப்பாக்கிச் சுட்டதாய்

சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட இதர ஜனங்களை யும் சீக்கிரமாக விடுவித்து விடு" என்றுங் கட்டளை யிட் டான். இன்னமும் அக் கைதிகளிடம், "நீங்கள் உங்கள் உயிர்களை காத்துக் கொள்ள வேண்டுமாயின், எங்கேனும் சென்று மறைந்து போகும்படி சொல்லி விடு" என்றும், கட்டளைக் கூறியனுப்பினான்.

இக்கட்டளைகளை செவியேற்ற ராணுவத் தளகர்த் தன் திக்பிரமைக் கொண்டான். வாலிப மந்திரியின் மூரா ணை கட்டளைகளை யுணர்ந்து வியப்படைந்தான். ஏனெ னின், வாலிப மாணவனும், ராணுவத் தலைவனும், மற்றை யோரும் மிகப் பிரயாசைக்குப் பின்னால் கைது செய்யப்பட் டன ரென்பதை அவன் உணர்வான். ஆகவே வாலிப மந் திரியின் ஆக்கினைப்படி நடப்பதா? கூடாதா? என்று தயங் கினான் இவனது பிரமிப்பையும் மனங் குழைவையும் கண்டுணர்ந்த வாலிப மந்திரி அந்தத் தளகர்த்தனை அழைத்து, "சர்தாரே! என் தயங்குகின்றீர்? அதைரியப் படாதீர். நான் இக்கட்டளையை ஒரு பெரிய நன்மையை உத்தேசித்துத் தான் செய்திருக்கின்றேன். எவ்வாறேனும் இக்கைதிகள் மூலமாய் அந்தச் சிகப்பு முகமூடிய வீரனின் தகவல் தெரிய வரவேண்டு மென்பதே என் கருத்து. ஆத லின், நீர் தயங்காது சென்று அக்கைதிகளை எல்லாம் விடு தலைச் செய்து விடுவீராக. நான் பிறகு மாறு வேடம் பூண்டு அக்கைதிகளை பின்றொடர்ந்து அவர்கள் நடத்தை களிலிருந்து மர்மங்களை கண்டுணர்வேன்" என்று சமாதா னங் கூறினான்.

எருமாட்டறிவேபோன்று உலக்கைக்கொழுந்து புத்தி யமையப் பெற்ற அந்த ராணுவத் தளகர்த்தன், வாலிபன் கூறியவை யனைத்தும் உசிதமானவை யென்றே ஓர்ந்தான். புதிய மந்திரியின் கட்டளையை மறுக்காது அனுஷ்டிக்க வேண்டுமெனப் பச்சா ஸக்கூ கூறியதும் தளகர்த்தனின்

ஞாபகத்துக்கு வந்தது. எனவே தனது ஆலோசனையை சீக்கிரம் முடித்துக் கொண்டு உடனே சிறைக் கூடத்துக்குச் சென்று எல்லாக் கைதிகளையும் ஒருமிக்க விடுதலை செய்து விட்டான். வாலிப மந்திரிக் கூறியதையும் அக்கைதிகளிடம் கூறினன். எனவே கதிமோக்ஷம் கிடைத்ததெனப்பேறுபெற்ற அக்கைதிகளெல்லாம் தங்கள் தங்கள் உயிருடலங்களை காத்துக் கொள்வதின் நிமித்தம் காபுல் நகர் எல்லையை விட்டும் பலகாத தூரமேகி மறைந்தொளிந்தனர். நமது ஆப்கான் வாலிப மாணவன் தன்னை வேறெவரும் கண்டு கொள்ளாவண்ணம் ஜாக்கிரதையாய் தனதிருப்பிடம் சென்று சகாக்களை யடைந்தான். மாணவ சகாவைக்கண்ட பச்சை முகமூடி யணிந்தோரெல்லோரும் வியப்படைந்து, அவன் மூலம் அவன் எவ்வாறு யாரால் விடுவிக்கப்பட்டான்என பூராவிருத்தாந்தத்தையுமுணர்ந்து ஆனந்தக்கூத்தாடி களிபேறுவகைப் பூண்டனர். நிற்க,

---

அத்தியாயம் 17.

சிகப்பு முகமூடியின் சொல்லொணு வெற்றி

காபுலில் கைதிகளெல்லாம் விடுவிக்கப்பட்ட பின், சிறிது நேரங்கழித்து நம் இளவாலிப புதிய பிரதம மந்திரி ராணுவத் தளகர்த்தனை யழைத்து (ஏற்கெனவே தான் எழுதி வைத்திருந்த) நீண்ட நிருபமொன்றை அவன் கரத்தில்கொடுத்து, "ஏ சர்தார்! நாளைக் காலை நமது அமீர் ஹபீபுல்லா அவர்கள் (பச்சாஸக்கூ) தர்பாருக்கு வந்ததும் அவரிடம் இதை ஒப்படைத்து விடு. இன்று இப்போதேயான் அந்தச் சிகப்பு முகமூடிய ஆட்களை கண்டுபிடிக்க விடுபட்ட கைதிகளைப் பின்பற்றிச் செல்கின்றேன். நீங்கள் நிம்மதியோடு மற்றைய விவகாரங்களை கவனித்துக்கொள்ளுங்கள்"

என்று கட்டளையிட்டு விட்டு தர்பாரை விட்டு வெளியேறி விட்டான்.

அன்று மாலை அஸ்தமனமாகுந் தருணம் நம் சிகப்பு முகமூடியுங் கவசமுமணியும் இளவாலிபத் தலைமை வீரன் தனது பச்சை வெள்ளை முகமூடிகளணிந்த சகாக்களிடம் காணப்பட்டான். தங்கட்டலைவரைக்கண்டமற்றையோரெல்லாம் பேராரவாரத்தோடு தலைவரை வரவேற்று குதூகலங் கொண்டாடினர். நமது வாலிபவீரன் தான்பச்சாசக்கூவின் தர்பாருக்குச் சென்றது முதல், மந்திரி ஸ்தானம் வகித்து-கைதிகளை விடுவித்து-கடிதத்தைக் கொடுத்து வெளியேறியவரை நகைச்சுவையோடுகூறி முடித்தான். இவற்றைச்செவியுற்றபச்சை முகமூடியவர்க ளெல்லோரும் மட்டிலடங்காப் பெரு நகைப்பூண்டு ஆரவாரக் கோஷமிட்டு தங்கள் தலைவரை மிகமிகப்போற்றி மெச்சினர். இச் சந்தோஷக் கூச்சல் காதைத் துளைக்கக் கேட்ட நங்கை நல்லார் பரீபானுவும், தங்கை குல்செஹ்ராவும் தம் இருப்பிடத்தினின்று வெளியில் வந்தனர். தலைமை வீரனை மற்றைய சகாக்களெல்லாம் சூழ்ந்துக்கொண்டு மட்டற்ற கொண்டாட்டமடித்தலைக் கண்டு இவர்களும் உளம் பூரித்துச் சிரித்தனர். சிறிது நேரத்துக்குள் நம் வாலிப வீரன் நங்கையரிடம் வந்து நின்றான். பெரிய மங்கை பரீபானு, சிகப்பு முகமூடியையும் கவசத்தையுங் கொணர்ந்து தன் தமையனிடம் தந்தாள். வாலிப வீரன் காபுல் சென்று புரிந்து விட்டு வந்த சாதுர்யத் திருவிளையாடல்களை இரு நங்கையரும் கேட்டுணர்ந்து ஸக்கூ முதலிய மௌட்டியப் புத்தியுள்ளோரை இகழ்ந்தனர். சிரித்தனர். கொண்டாடினர்.

அதன் பின் நம் காபுல் நகர் இளங்கொடியாளான குல்செஹ்ரா தனது உளத்துக்கினிய வாலிப வீரனை வெகு நேரம் மட்டும் சிந்தித்த வண்ணம் கூர்ந்து நோக்கினுள். இளைஞனின் வீர தீரச் செயல்கள் அம்மாதரசியின் உள்

ளத்தை கொள்ளை கொண்டு விட்டன. எனவே அவள் உற்சாகம் மேலிட்டவளாய் இளைஞனை நோக்கிக்கூறலானாள்.

ஜுல்செஹ்ரா:—அன்பரே! நீவிரென்ன ஒரு விசித்திர மனிதராயிருக்கின்றீரே! ஒரு பெரிய ராஜ்ஜியத்தை சில அபிநயங்களாலும் போலி மொழிகளாலும் ஏமாற்றி வந்து விட்டீரே! அப்படியாயின் இனி தங்களை மிகைப்பவர் இக்காட்டில் எவருமேயில்லை யென்றே நினைக்கின்றேன்.

வாலிப வீரன்:—நங்காய்! என்னை நீ அளவுக்கதிகமாகவே ஸ்துதிக்கின்றாய். இவ்விபரீதத்தை யெல்லாம் உனது நன்மைக்காகவென்றே சாதிக்கின்றேன். இதற்காகவென்று புகழுரைப்பாக்கள் எனக்கு வேண்டாம். ஆண்டவனது கருணையும், உனதுஉண்மையான அன்புமிருந்தால் அதுவே எனக்குரிய பாக்கியம்.

என்று கூறிக் கொண்டே தனக்குரிய சிகப்பு முகமூடியையுங் கவசத்தையும் அணிந்து கொண்டு உட்கார்ந்தான். அதற்குள் தனது பச்சை முகமூடிய சகாக்கள் சிலர், தங்களைப்போல் போலி கருப்பு முகமூடியையும், கருப்புக் கவசத்தையுமணிந்த ஒரு புதியமனுஷ்யனை பிடித்துக் கொண்டு வந்து வாலிப வீரனின் முன் நிறுத்தி, "தலைவரே இந்த மனுஷ்யன் தங்களை தேடிக்கொண்டிருந்தார். அவர் தானே நம்மிடம் வந்து சிக்கிக் கொண்டார். இவர் யாரோ தெரியவில்லை. இவரது நோக்கம் யாதோ? தாங்கள் விசாரிப்பீர்களாக" என்று கூறி ஒருபக்கல் ஒதுங்கி நின்றனர்.

வாலிப வீரன்:—(கருப்பு முகமூடிய புதியவனை நோக்கி) அய்யா! தாங்கள் யார்? என்னை இங்கு ஏன் தேடிக் கொண்டு வந்தீர்? உமது நோக்கமென்ன? கூறுக!

கருப்பு முகமூடி:—அன்பரே! மன்னிக்கவும். இவ் விஷயங்களை இப்போதே விளக்கமாய்க் கூற யான் விரும்பவில்லை. இன்றிரவு சிரமபரிகாரஞ் செய்து கொண்ட பின்

நாளைக்காலை சாவகாசமாய் யான் யார்? ஏன் வந்தேன்? எனக்கென்ன வேண்டுமென்பதை விளக்குகின்றேன்.

வாலிபவீரன்:—அப்படியே ஆகட்டும். அதுவரை தாங்கள் எனது இவ்வறையிலேயே தங்கியிருக்கலாம். தங்கட்குவேண்டிய சௌகரியங்களையும் செய்துதர யான் ஏற்பாடு செய்கிறேன்.

அதற்கந்த புதிய மனிதர் ஒப்புக்கொண்டார். வாலிப வீரனும் தனது அறையை அவருக் கொப்படைத்தார். பின்னர் அவற்றை விட்டு வெளி வந்து தனது பச்சை முக மூடிய சகாக்களையெல்லாம் அழைத்து "சகாக்காள்! இந்த புதிய மனுஷ்யர் யாரென்பது தெரிய வில்லை. அவர் மீது நல்ல நம்பிக்கைக் கொள்வதற்கு இடமில்லை. ஒருக்கால் இவர் ஸக்கூவின் துப்பறிபவரா யிருப்பினுங்கூடும். ஆதலின் நீங்களெல்லாம் இன்றிரவுமுழுதும்ஜாக்கிரதையாய் காவல்காத்துக் கொள்ளுங்கள்" என்று கட்டளையிட்டான். அதற்கெல்லோரும் சம்மதித்தனர்.

அவ்வாறே அன்றிரவு கழிந்து பொழுதும் புலர்ந்தது. சிகப்பு முகமூடியணியும் நம் வாலிப வீரனும்அதிகாலை யெழுந்ததும், அன்றிரவெல்லாம் புதிய கருப்புமுகமூடியை காவல் புரிந்த தனது சகாக்களை யழைத்து "அப்புதிய மனிதரிடம் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான செயல்கள் காணப்பட்டனவா?" என வினவினன்.

சகாக்கள்:—அப்படி யொன்றும் விபரீதமாய் அப்புதியவர் நடந்து கொள்ள வில்லை. நாங்கள் மறைமுகமாய் நின்று இரவெல்லாம் கவனித்தோம். பாபம்! அவர் சென்ற பல இரவுகள் ஓயாது கண் விழித்தவரேபோல் அயர்ந்து பெருந்துயிலாழ்ந்து போனார்.

வாலிப வீரன்:—சரி! தற்போது அவர் என்ன செய்கின்றார்?

சகாக்கள்:—அவர் நல்ல தெய்வ பக்தியுமுடைய வைதிகராய் காணப்படுகின்றார். அதிகாலையில் எழுந்து ஒலுவு செய்து கொண்டு சுப்ஹூ தொழுகையை நிறைவேற்றி விட்டு தற்போது குர்ஆன் ஷரீப் (திலாவத்) பாராயணம் புரிகின்றார்.

வாலிப வீரன்:—அப்படியாயின் திருப்தி தான். ஆனால் அவர் யார் என்பது தான் தெரியவில்லை.

என்று கூறி முடிப்பதற்குள் எவரோ இவர்களை அழைத்த சப்தம் கேட்டது. திரும்பி நோக்க, மேற்கூறப்பட்ட கருப்பு முகமூடிய புதிய மனிதரே தம்மை அழைத்ததை கண்டு கொண்டனர். எனவே அவர்பால் சிலர் சென்றனர். எனவே அவர் தலைமைவாலிபனைநோக்கி கூறலானார்:—

அன்பரே! யான் இப்போது உங்களெல்லோர் முன்னிலையிலும் யான் யாரென்பதைக் கூறிவிட விருக்கின்றேன். ஆதலின் உங்களைச் சேர்ந்தோரை சேமிப்பீராக!

எனவே, சின்னேரத்துக்குள் வெள்ளை முகமூடி, சிகப்பு முகமூடி, உள்பட இதர எல்லா பச்சை முகமூடிய வீரர்களும் ஒருங்கே வந்து குழுமி விட்டனர். நமது சிகப்பு முகமூடி யணிந்த தலைமை வீரன் புதிய கருப்பு முகமூடியணிந்தவரின் பக்கலில் நின்றிருந்தனன். இவர்களுக் கெதிரில் தான் எல்லா பச்சை முகமூடிகளும் நின்றிருந்தனர். இவர்களுக்குப்பின்புறத்தில்நம்நங்கைநல்லாளான குல்செஹ்ராவும்வாலிபவீரனின்தங்கையாகியபரீபானுவும்நின்று கொண்டிருந்தனள்.இக்காக்ஷி அதுகாலைகாணுதற்கு மனோரம்மியமாய்இருந்தது.எனவேமுதலில் அந்தப் புதிய கருப்பு முகமூடியக் கவசமணிந்த மனிதர்தமதுமுகமூடியைக் களைந்து தமது முக விலாசத்தைப் பகிரதப்படுத்தினார். இவரது வதனத் தோற்றத்தைக் கண்ட நம் சிகப்பு முகமூடியும் பச்சை முகமூடிகளும் வியப்பும் பேரானந்தமும் பூண்டு தங்களையும் அறியாது “அல்லாஹூ அக்பர்! துரானியர் வம்சத்தார் நீடூழி வாழ்க!! அரசர் பிரதிநிதி நீடூழி வாழ்க!!! வல்லா

ஹூ அக்பர்!!!!' எனப் பெருத்த ஆரவாரக் கோஷம் முழங்கினர். சிகப்பு முகமூடிய நம் வீரனும் அந்தக் கருப்பு முகமூடிய அரசியல் பெரியாரும் கைலாகு கொடுத்து நேசம் பூண்டு க்ஷேமம் விசாரித்துக் கொண்டனர். எனவே அக்கருநிறக் கவசமணிந்த அப்பெருந்தகையார் சிகப்பு நிறக் கவசமணிந்த நம் இளவீரனை நோக்கிப் பின் வருமாறு கூறலானார்:—

"எனதாப்த உழுவலன்பீர்! முன்னொரு முறை நீவிர் காபுலுக்கு வந்து, தங்களின் சாமர்த்தியத்தால் என்னை பச்சா ஸக்கூவின் சிறைச் சாலையினின்று விடுவித்த பின் யான் மாறு வேடம் பூண்டு என்னை மீண்டும் கொடிய ஸக்கூவினாட்கள் எவரும் கண்டு கொள்ளா வண்ணம் மறைந்தொளிந்து அங்கு மிங்கும் பல பக்கமுமலைந்து கொண்டிருந்தேன். எனது துரதிருஷ்ட வசமோ, விதியோ யாதோ மீண்டும் நான் ஸக்கூவின் ஆட்களால் சந்தேகத்துக் கிடமான மனிதனெனக் கருதப்பட்டு சிறையிடப்பட்டு விட்டேன். எம்மட்டோ தப்பிக்க முயற்சித்தும் அக் கொடியவர்களாதிக்கத்தினின்றும் விடுதலைப் பெற முடியாதவனானேன். அதன் பின் நேற்றுத் தாங்கள் பச்சா ஸக்கூவின் தர்பாரில் மந்திரிப் பதவி ஏற்று என்னையும் மற்றக் கைதிகளோடு விடுவித்து விட்டீர்கள். அக் கைதிகளெல்லோரும் எங்கெங்கோ சிதறிச் சென்றனர். யான் அங்ஙனம் செல்லாது உங்களைத் தேடிப் பிடிக்க வேண்டுமெனப் பிரயத்தனப்பட்டேன்! இறுதியில் என் அதிர்ஷ்டவசமாய் உங்கள் சமுகம் வந்து சேர்ந்து விட்டேன். இதற்காக நான் சர்வமும் வல்ல ஆண்டவனுக்கு அனவரதமும் ஷுக்ரு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால் அன்பீர்! உங்களது உண்மை மாத்திரம் எனக்கொன்றும் தெரியவில்லை. நீவிர் சிகப்பு முகமூடியணியும் வீரரென்றும், அமீர் அமானுல்லாகானின் விசுவாசரென்றும், ஸக்கூவின் அக்கிரம ராஜ்ஜியத்துக்கெதிரிடையாய் காரியங்

கள் புரிகின்றீர் என்றும் மட்டுமே உணர்ந்துள்ளேன். எனினும் உண்மையில் நீவிர் யாரென்பதும், இந்த வெள்ளை. பச்சை முகமூடிகள் அணிந்தோர் யாவரென்பதும் சுயமே உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஆதலின் எனக்கு உங்களைப்பற்றி அறிமுகட்படுத்துவீர்களென்று வேண்டுகின்றேன்."

எனவே சிகப்பு முகமூடிய வீரர்த் தலைவன் அப்பெரியாரின் விருப்பத்துக் கிசைந்து தனது முகமூடியையும் கவசத்தையும் களைந்து விட்டான். மற்ற சகாக்களும் தங்கள் வெள்ளை, பச்சை முகமூடிகளை யெல்லாம் களைந்து புன்முறுவல் பூத்து நின்றனர். கருப்பு முக மூடி யணியும் அந்தப் பெரியார் நம் வாலிப வீரனின் முகத்தோற்றத்தை கண்ணுற்றதும் வியப்பும் பூரிப்பும் மிக வெய்தி, "ஆ! ஆ! தாங்களா? தங்களை ஆண்டவன் தீர்க்காயுசுடன் வாழச் செய்வானாக!" என்று வாழ்த்தினர். அதன் பிறகுவெள்ளை முகமூடி பச்சை முகமூடிகளணியும் மற்ற வீர சகாக்களையும் கண்ணுற்றார். "அன்பர்காள்! நீங்களெல்லோரும் எம் ஆப்கான் தேசத்தின் நக்ஷத்திரங்களும் இத்தலைவர் உங்களுக்கொரு சந்திரனு மாவீர்களெனக்கருதி யான்மட்டில்லா மகிழ்வெய்துகின்றேன். எங்களெல்லோருக்கும் ஆண்டவனின் கருணையும் திருவருளும் மிக மிக உண்டாவதாக! ஆமீன்! என்று கூறி விட்டு முறையே அவ்விளைஞர்களை யெல்லாம் பரிசுத்த மனத்துடன் கட்டித் தழுவி ஆசீர்வதித்தார்.

அதன் பின் அந்தப் பெரியார் நம் காபுல் நகர் வனித மணியான குல்செஹ்ராவின் வீர உள்ளத்தையும், தியாகச் செயல்களையும், அப்பெண்ணின் பரிதாப நிலையையுமுணர்ந்து மனம் நெக்குறுகியவரானர். எனவே அப்பேதை யிளங் கொடியாளை, தனது சொந்தக் குமரியைப் போல் பாவித்து அருகிலழைத்து தலையை தடவி கொடுத்து இரு துளி கண்ணீரும் விட்டார். மேலும் அக்கன்னிகையைத்

தன்னருகே நிறுத்திக் கொண்டு மற்றவரெல்லோரையும் நோக்கி பின்வருமாறு கழதழத்த குரலில் கூறலானார்:—

"எனதினிய சகோதரர்காள்! முதலில்உங்களெல்லோர்க்கும் ஆண்டவனருளும் எனது ஆசியும் உண்டாவதாக! இக்காலை நீங்களெல்லோரும் எம் தாய்நாடான ஆப்கானிஸ்தானின் வீரசிகாமணிகளாய் விளங்குகின்றீர்கள். உங்கள் வீரப் பராக்கிரமச் செயல்கள் ஆப்கானிய மக்கள் எல்லோரின் உள்ளத்தும் பசுமரத்தாணிபோல் இறுகப் பதிந்துவிட்டன. உங்களது வீரதீர தியாகச் சேவைகளை உலகம் மெச்சுகின்றது. உங்களெல்லோரின் இத்தகைய சேவைக்கெல்லாம் இந்த மங்கையே (குல்செஹ்ராவே)முதற்காரணமாயிருப்பதால் இம்மங்கையின் தியாகத்தையே சர்வ உலகும் போற்றக் கடமைப்பட்டிருக்கின்றது. உண்மையில் இந்நங்கைக் கரசியைப்போன்ற தியாகம்புரிந்த மாசிலாமாது சிரோமணி இத்தரணியில் இல்லையென்றே கூறுவேன். என்னே இப்பெண்ணின் நன்றி! உத்தம அரசர் காஜி அமீர் அமானுல்லா கானவர்களுடைய இராஜ விசுவாசத்தை இந்த மாது ஒருநாளும் தளரவிடவில்லை. அந்த உத்தம அமீரின் கண்ணியத்தைக் காப்பதை முன்னிட்டு தனது உயிருக்கினிய தாயையும் தன் கண் முன்னிலையில் கொடிய மூர்க்கர்கள் படுகொலைப் புரியக் கண்டு சகித்தாள். அப்போதுங்கூட அமீர் அமானுல்லாவின்மீது ஒரு தீயமொழியையும் சொல்ல இசையவேயில்லை. என்னே இம்மாதின் தியாகம்! இந்தச் சீர்குலைந்த ஆப்கானிஸ்தானில் பச்சாஸக்கூவின் கொடுங்கோலாக்ஷிக் காரணமாய் அடிக்கடி பல துன்பங்களில் இடர்ப்பட்டு சகித்துவந்த உத்தமி இம்மங்கையேயாவள். எனினும் இந்நல்லாள் பச்சாஸக்கூவின் ஆதிக்கத்தை ஏற்கவில்லை. ஸக்கூ இம்மங்கையை தன்பட்ட மகிஷியாக செய்துகொள்வதாய் ஆசை மொழிக்கூறியும் இம்மாதரசிஅக்கொடியானின் ஆர்வத்துக்குடன் படவில்லை. இதை முன்னிட்டு எண்ணற்றக் கஷ்டங்கள்பட்டாள். இச்சுந்தர

மணி நற்குணமும் நன்னடக்கையும் இணையிலாப் புகழும் வீரமும் தியாகப் புத்தியும் ஒருங்கே அமையப் பெற்றவளா யிருப்பதால், இச்சுந்தரியை "ஹூரே காபுல்" (காபுலின் கன்னிகை) என்று சிறப்புடன் அழைப்போமாக! இன்னு மொரு விஷயம்:—நமது சிகப்பு முக மூடி யணியும் வீரத் தலைவன் இம்மங்கை நல்லாள்பால் அளவற்ற அன்புகொண் டிருப்பது போல் இப்பாவையும் அவ்விள யுவன் பால் பிரீதி கொண்டிருப்பதை யானுணர்கின்றேன். இவ்விரு சாரா ரின் பரிசுத்த அன்பு வெறும் அன்பல்ல. இல்லற வாழ்க் கைக்கு முழுமுதற்படியான உள்ளன்பே யாகும். எனவே இருசாராரும் இறுதியில் ஒன்று சேர்ந்து வாழ்க்கைநடாத் தல் தெய்வ விதியாதலின்............

என்று அந்தப் பெரியார் இனிய நகையுடன் கூறி முடிப்பதற்குள், பச்சை வெள்ளை முக மூடிய சகாக்களெல் லோரும் கைதட்டி சந்தோஷ ஆரவார மிட்டனர். இப் பேரிரைச்சலினிடையே அப்பெரியார் தமது வார்த்தைகளை பூர்த்தியாக்கிக் கொள்ள முடியாது போயினர். எனினும் அவர் அடுத்தபடியாய் என்னகூறுவார்? என்பதைத்தங்கள் தீக்ஷண்ணிய அறிவால் உணர்ந்து கொண்ட காதலரிருவ ரும் மட்டற்ற நாணத்தால் சிரம் பணிந்து திரும்பிக் கொண்டனர்.

இவ்வளவு வேடிக்கைகளையும் உளம் பூரித்துப் பார்த் துணர்ந்து கொண்டிருந்த வீரயுவதி பரீபானு, அப்பெரி யார் கூற வியலாது தயங்கிய வாக்கியங்களை "............எனது இச்சகோதரருக்கும் இக்காபுல் கன்னிகை நல்லாளுக்கும் நாமெல்லோரும் சேர்ந்து திருமணம் முடித்து விடுவோம்" என்று சிரித்தவண்ணம் கூறிமுடித்தாள். மேலும் உடனே

அன்ன நடையாய் நகர்ந்து வந்து தன் ஸ்நேகி குல்செஹ்ராவின் மிருதுவான கரத்தைப் பற்றித் தனது அண்ணன் கரத்தில் கொடுத்தாள். அருகிலிருந்த புதிய பெரியார் இரு தம்பதியரையும் மங்களகரமாய் வாழ்த்தினர்.

முகமூடி யணியும் இதர சகாக்க ளெல்லாம் இனியில்லாப்பூரிப்பும் சந்தோஷமும் பூண்டு மட்டற்ற கொண்டாட்டத்தோடு ஆரவாரித்து,

“உண்மைக்காதலர்க்கு மங்களம் உண்டாகுக !எங்கள் சிகப்பு முகமூடியவர் நீடூழி வாழ்க! எங்கள் காபுல் கன்னிகை நீடூழி வாழ்க! அல்லாஹு அக்பர் !” என்று வெகு நேரம் இரைந்து வாழ்த்தினர். இங்கு நம் கதாநாயகரிடையே குதூகலம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

அதே சமயத்தில் காபுல் தர்பாரில் என்ன நிகழ்கிறதென்று உணர்வோம்:—காபுல் தர்பாரில் அக்காலை கொடுங்கோன் மன்னனை பச்சாஸக்கூ “நிருபம்” ஒன்றைக்கரத்திலேந்தி, மிகவும்ஆக்ரோஷத்தோடு திரும்பத் திரும்பப் படித்துப் பல்லைக் கடித்துக் கொண்டும் காலைத் தரையில் உதைத்துக் கொண்டு மிருந்தான். தனது பிரயத்தனம் யாவும் வியர்த்தமாய் மண்ணாய்ப் போனதைத் தெரிந்து தீராச் சஞ்சலத்துளாழ்ந்தான். அங்ஙனம் அவனது உள்ளத்தைக் குழப்பிய நிருபத்தில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:—

“வீண் பிரயத்தனப்பட்டு தோல்வி யடையும் போலி அமீரே! அக்கிரமமாய் நீ சிறைக்கூடத்தில் அடைத்து வைத்த எனது ஆப்த நண்பனை ஆப்கான் மாணவனை விடுவித்துச் செல்வதற்காகவே நேற்று உன் தர்பாருக்கு

நான் வந்து மந்திரிப் பதவியை ஏற்றுக் கொண்டேன். இப்போது உனது நோக்கம் பூர்த்தியடைந்து விட்டது. இனி எனக்கு எனது மந்திரி ஸ்தானம் அவசியமில்லை. ஆதலின் எனது பிரதம மந்திரி ஸ்தானத்தின் ராஜினாமாவை தயவு செய்து ஒப்புக் கொள்வீராக. இனியேனும் நற்புத்திப் பெற்று இதமாய் ஒழுகிக் கொள்வீராக!"

இங்ஙனம்,

உனது நன்றியுள்ள

சிகப்பு முகமூடி யணிந்தோன்.

(பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.)

அத்தியாயம் 18.

கொடுங்கோளுட்சி அழிவு

கொடுங்கோலாட்சி செலுத்தி வந்த பச்சா ஸக்கூ சிகப்பு முக மூடி யணிந்த இள வாலிபர்கள்போன்ற தேசாபிமானிகளால் கூறப்பட்ட புத்திமதிகளையும், செய்யப்பட்ட எச்சரிக்கைகளையும் சிறிதும் மதியாது கொடூர முறைகளில் ஆட்சி புரிவானுயினன். நல்லோர்களை இம்சிப்பதும், இள மங்கையர்களின் கற்பை யழிப்பதும், சாதாரணச் செய்கைகளாக மதித்து வந்தான். நல்லார்கள் பலரை தூக்கிலிட்டான். குடிப் பழக்கத்தை கைக்கொண்டான். சாராயம் காய்ச்சுவதற்கும் கம்பெனிகளை ஸ்தாபித்தான். இஸ்லாம் மார்க்க முரணனவும் இஸ்லாத்திற்கு அபகீர்த்தியுண்டாக்கக் கூடியவுமான செயல்களில் ஈடுபட்டான். இவனுடைய கொடூரங்கள் அழியுங்காலம் கடைசியாகசமீபித்து விட்டது. கொடுங்கோ லாட்சியிலிருந்து ஆப்கானிஸ்தா

னத்தை விடுவிக்க எல்லாம் வல்ல ஆண்டவன் நாடி வீரர் ஜெனரல் நாதிர்கான் அவர்களை அனுப்பி வைத்தான். அவர் 1929 வருஷம் அக்டோபர் மாதம் முதல் வாரத்தில், காபல் நகரை கைப்பற்றிக் கொண்டார்.

அடுத்த வாரம் 11ந் தேதி ஆப்கன் கஷ்ட நிவாரணக் கமிட்டியார் பிஷாவர் முழுவதிலும் வெற்றிக் கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடத்தி வைத்து காபல் தினம் கொண்டாடினார்கள்.

ஷா நாதிர்கான் காபல் நகரைக் கைப்பற்றியதும் ஹபீபுல்லா வென்ற பட்டமேற்று ஆட்சி புரிந்து வந்த பச்சா ஸக்கூ காபல் நகரின் ஒருகோட்டைக்குள் பதுங்கிக்கொண்டான். இக்கோட்டை மீது குண்டுகள் போட்டு பச்சா ஸக்கூவைத் தாக்க பச்சா ஸக்கோவின் சிப்பாய்களே தயாராகி விட்டனர். சிம்மாசனம் கிடைத்ததும் குடிகளின் நலனைக் கவனியாது சிற்றின்பத்திலும் குடியிலும் ஈடுபட்டு குடிகளைக் கொடுமையாக நடத்தி ஹிம்சை செய்ததாலும், சிப்பாய்களுக்கு சம்பளம் ஒழுங்காகக் கொடுக்காமல் கஜானாவில் இருந்த பணத்தையெல்லாம் சிற்றின்பத்திலும், மதுபானத்திலும் செலவழித்ததாலும், சிப்பாய்கள் குடும்பத்தைச் சேர்ந்த அழகு வாய்ந்த பெண்டீர்களை பச்சாஸக்கூ கற்பழித்ததாலும், சமயம் கிடைத்தபோது வஞ்சம் தீர்த்துக் கொள்ள அவனுடைய சிப்பாய்களே அவன் மீது குண்டுகள் போடமுற்பட்டனர். ஆனால் ஷா நாதிர்கான் கேட்டுக் கொண்டதன் மேல் பச்சாஸக்கூ அடைக்கலம் புகுந்த கோட்டை மீது குண்டுகள் போடப்படவில்லை. நாதிர்கானின் இவ்வீர வெற்றியைக் கேட்டதும் மாஜி அமீர் அமானுல்லா கான் பிஷாவரில் இருந்த ஆப்கன் வியாபாரி ஏஜெண்டுக்கு பின்வரும் தந்திச் செய்தியை அனுப்பி வைத்தார்.

"தயவு செய்து இந்த தந்திச் செய்தியை ஸிப்பா ஸாலார் காஜி நாதிர்கானுக்கு அனுப்பி வையுங்கள்.

"ஆப்கானிய தேசாபிமானி யென்ற முறையில் நான் உங்களையும் உங்களுடன்கூட நின்றுழைக்கும் சகாக்களையும் தாங்கள் கொண்டுள்ள இப்பெரும் வெற்றிக்காகப் பாராட்டுகின்றேன்."

பத்து மாத காலமாக ஆப்கானிஸ்தானத்தில் குழப்பமும், கலகமும் ஏற்பட்டு முஸ்லிம் உலகம் முழுவதற்கும் பெரும் கவலையையும் வருத்தத்தையும் கொடுத்து வந்தன. எல்லாம்வல்ல நாயன் அல்லாஹு த்தலாவின் அருளால் மீண்டும் அந் நாட்டில் அமைதி சமாதானம் நிலவி விட்டன.

சுயநலம் சிறிதும் கருதாது ஆப்கானிஸ்தானத்தின் நலனொன்றையே என்றும் கருதி வந்த வீரசிகாமணி நாதிர்கான் அவர்கள் உடனே ஆப்கானியப்பிரதிநிதிகள்கொண்ட ஜிர்கா கூட்டி ஆப்கான் சிம்மாசனத்திற்கு ஒருவரை தேர்ந்தெடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார். ஆப்கானியப்பொதுஜனப்பிரதிநிதிகள்ஏகமனதாகஅமீர்நாதிர்கானவர்களையே ஆப்கன் சிம்மாசனத்திற்குத் தெரிந்தெடுத்தனர். பொறுப்பான இவ்வுயர் பதவியை ஏற்று ஆட்சி பரிபாலனம் செய்வதற்கு தமக்கு தேக சுகம் இடங் கொடுக்கவில்லை யென்று நாதிர்கான் அவர்கள் வெகுவாக எடுத்துக் கூறியும் ஆப்கானியப் பொதுமக்கள் அனைவரும் ஷா நாதிர்கான் அவர்களையே அப்பதவியை ஏற்கும்படி ஏகமனதாக மன்றாடினர். ஆப்கன்குடிகளின் மனதுகோணாமல் நடக்கவேண்டுமென்பதில் கவலைகொண்ட நமதுநாதிர்கான் அவர்கள்அப்பொறுப்பை ஏற்றுக் கொள்ள இசைந்தார்.

காபல்நகருக்குள் ஆர்க்கோட்டையில் ஒளிந்து கொண்டிருந்த பச்சாஸக்கோ 13-10-29ல் சுவரொன்றில் துவாரம் செய்து கொண்டுஎப்படியோ வெளியேதப்பி ஓடிவிட்டதாக

வும், அவனிருப்பிடம் தெரியவில்லை யென்றும் பிஷாவரிலிருந்து அக்டோபர் 17-ல் வந்த தந்திச் செய்தி மூலம் தெரிய வந்தது.

ஷா நர்திர்கான் காபலைக் கைப்பற்றுமுன் இவரது சேனைகளுக்கும், பச்சா ஸக்கோவின் சேனைகளுக்கும் நான்கு முக்கிய சண்டைகள் ஏற்பட்டன. இந்நான்கு சண்டைகளிலும் பச்சா ஸக்கோ தரப்பில் சிப்பாய்கள் ஏராளமாக மாண்டனர். புறங்காட்டி யோடிய சிப்பாய்களிடமிருந்து நூற்றுக்கணக்கான துப்பாக்கிகளையும், ஷா நாதிர்கான் சேனையினர் கைப்பற்றிக் கொண்டனர். ஷாநாதிர்கான் படைக்கும், நாதிர்கான் கட்சிக்கும் பலம் வளர் பிறை போல் பெருகி வந்தது.

ஆர்க்கோட்டை விட்டு வெளியே யோடிய பச்சா ஸக்கோ தப்பிப் போக வழியின்றி கடைசியாக அவராகவே அக்டோபர் 24-ந் தேதியன்று திரும்பி வந்து சரணடைந்தார். பின்னர் சிறையில் வைக்கப்பட்ட பச்சா ஸக்கோ சூழ்ச்சியும் சதியாலோசனையும் செய்வதாகத் தெரிய வந்ததும், பச்சா ஸக்கோவும் அவருடைய சகாக்கள்பன்னிரண்டு பேர்களும் 1929 நவம்பர் 2-ந் தேதி யன்று காபூலுக்கருகிலுள்ள ஷெர்பூர் கண்டோண்டுமெண்டில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அமீர் அமானுல்லாகானின் ஆட்சியை அழிக்க வேண்டுமென்ற நோக்கங் கொண்டு சதியாலோசனைச்செய்த கூட்டத்தாருடன் சேர்ந்து கொண்டு காபல் மீது படையெடுத்த பச்சா ஸக்கோவின் வாழ்வு "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதை உள்ளங்கனி நெல்லிக்கனிக் கொப்ப நன்கு ருசுப்படுத்தி விட்டது. சொல்லுவார் பேச்சைக் கேட்டு பச்சாஸக்கூ தன்னுடைய உயிருக்கே உலை வைத்துக்கொண்டான்.

ஒருவருஷத்திற்குள் காபல் சிம்மாசனம் நான்கு மன்னர்களைப் பார்த்து விட்டது. அமீர் அமானுல்லாவுக்குப் பின் அவர் சகோதரர் இனாயதுல்லாகான் பட்டத்திற்கு வந்து இரண்டு நாள் அரசு செலுத்தினார். பின்னர் சிம்மாசனமேறிய பச்சா ஸக்கூ சின்னாள் வாழ்விற்குப் பின் பீரங்கி வாய்க்கு இரையானான். பின்னர் சிம்மாசன மேறிய காஜி அமீர் நாதிர்கான் ஆப்கன் குடிகளின் நலனை மதித்து நன்கு நீதி பரிபாலனம் செய்து வருகிறார். ஆப்கன் குடிகளின் கல்வி, செல்வம், சன்மார்க்கம் முதலிய துறைகளின் அபிவிர்த்திக்கு அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறார்.

எல்லாம் வல்ல நாயன் அன்னாருக்கு தேக திடகாத்திரத்துடன் நீண்டாயுள் கொடுத்து அருள்புரிவானாக! அவரது ஆட்சியின்கீழ் ஆப்கன் குடிகள் சுகமே வாழ அன்பாளனும் நிகரற்ற அருளாளனுமாகிய அல்லாஹுத்த ஆலாவை என்றும் பிரார்த்திப்போமாக! ஆப்கானிஸ்தானம் நீடூழி வாழ்க! ஆமீன்!! யாறப்பல் ஆலமீன்!!!

S. I. Press Madras.

இஸ்லாமும் உலகமும்

மகுடத்திற் கண்ட நாமந் தாங்கிய நூல் ஒன்று சென்னை "ஸைபுல் இஸ்லாம்" ஆசிரியர் அவர்களால் இயற்றப்பட்டு வெளிவந்துள்ளது. இந்நூலின்கண், உலக முழுவதிலும் இஸ்லாம் எவ்வாறு பரவிற்றென்பதைப் பற்றிய விவரம் உலக சரித்திர நிபுணர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டனவும், உண்மையானவையுமான சரிதைகளின் தக்க ஆதாரங்களைக் கொண்டு வரையப்பட்டிருக்கின்றது. இதில் எவரும் மறுக்கவோ, சந்தேகிக்கவோ இடங்கிடையாதென உறுதி கூறலாம்.

இச்சரிதையைக் கண்ணுறுவதால் "இஸ்லாம்" வாளாயுதத்தால் பரத்தப்பட்டதென அபவாதங் கூறும் நண்பர்கள் அவர்களின் அபவாதக் கூற்றுக்களை அடியோடு விட்டொழிப்பார்களென்பதில் ஐயமில்லை. இஸ்லாமானது ஒவ்வொரு தேசத்திலும் அதன் அரும் பெரும் அபூர்வ சக்தியாலேயே பரவிற்றென்பதை தக்க ஆதாரங்களுடன் இதில் ருஜுப்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஹிந்து-முஸ்லிமும் இந்நூலைப் படித்தறியவேண்டியது அத்தியாவசியமாகும். இஸ்லாம் பிரசாரநர்கள் இஸ்லாம் சரிதையை இலகுவில் ஞாபகம் வைத்துக் கொள்ளும் தோரணையில் வரையப்பட்டுள்ளது. இந்நூலைப் படித்துணரும் முஸ்லிம்களுக்கு இஸ்லாம் உணர்ச்சியும் பிரசார ஊக்கமும், இஸ்லாம் மீது கூறப்படும் அபவாதங்கட்கு தக்க பதில் கூறும் ஆற்றலும் உண்டாகுமென்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு தேசத்திலும் முஸ்லிம் அரசர்களின் ஆரம்ப ஆட்சி முதல் 20-ம் நூற்றாண்டு வரையுள்ள முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி முறையும், அன்னோரின் நாமங்களும் விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன.

இதன் விலை அணா 12.

வி. பி. சார்ஜுவேறு.

நபிகள் திலகம்

இந்நூல் நஞ்சிறுார்களுக்குப் பாடசாலைகளில் படிப்பி பான்வேண்டி "நபிகல்திலகம்" (ஸல்) அவர்களின் உண்மை சரிதையை 2 பாகமாகவும், நாயகம் (ஸல்) அவர்களின் குணாதிசயங்கள், நற்போதனை பரோபகாரம் அந்நிய மதத் தினரோடு நடந்து கொண்ட நேசபான்மை முதலியவை கள் ஒரு பாகமாகவும் ஸைபுல் இஸ்லாம் ஆசிரியரால் மட டத்தில் கண்ட பெயரைக் கொண்டு இயற்றப்பட்டிருக் கின்றது. முதற்பாகம் அணா 4. 2-ம் பாகம் அணா 4. மூன்றும் பாகம் அணா 5. வி. பி. சார்ஜ் வேறு.

ஹஜ்ஜு யாத்திரை

இந்நூல் "ஸைபுல் இஸ்லாம்" பத்திரிகை யாசிரியர் அவர்களால் தமிழ் பாஷை தெரிந்த ஹஜ்ஜு யாத்திரை களின் நன்மையைக் கருதி இயற்றப்பட்டது. இந்நூலில் ரயில், கப்பல் பிரயாணம் செய்ய வேண்டிய ஜாக்கிரதைப் பற்றியும், ஹஜ்ஜு யாத்திரையின் செலவு விபரங்களைப்பற் றியும், ஹாஜிகள் ஹஜ்ஜு உம்ரா முதலிய கடமைகளை நிறைவேற்றுவதிலுள்ள பர்ளு, வாஜிபு, சுன்னத்து, முஸ் தஹப்பு, ஹராம், மக்ரூஹு, முதலிய சகல ஹுக்முகளும் ஒவ்வொரு புண்ணிய ஸ்தலங்களிலும் ஓத வேண்டிய துஆக்களும் விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

இதன் கிரயம் அணா 4. வி. பி. சார்ஜ் வேறு.

ஸைபுல் இஸ்லாம் புக் டிபோ.

நமது புக் டிபோவில் இஸ்லாமிய நூல்களும் இத சகல புத்தகங்களும் கிடைக்கும். விபரம் தெரிய விரும் கிறவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு ஒரு அணா ஸ்டாம் அனுப்பி நமது புக் டிபோ கேட்லாக்கை தருவித்து தெரிந்து கொள்ளலாம்.

இப்படிக்கு,

மானேஜர்:--ஸைபுல் இஸ்லாம் புக் டிபோ

47, செம்புதாஸ் தெரு, சென்னை.